# கலங்கரை தீபம்


ஆவணி 2019

இதழ்-01



DELFT media

மண்ணை நேசிக்கும்
மக்களுக்கான இணையம்!




www.Delftmedia.com

விரைவில்

நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தினரால்
செயற்படுத்தப்படவுள்ளது.

நண்பர்கள் வட்டம்

நெடுந்தீவு


**தொலை பேசி இலக்கம் – 0094 – 771816052**

E-Mail Address - delftfriendsgroup@gmail.com

## சமர்ப்பணம்...


ஒன்றாய்க் கல்வி பயின்று அமரத்துவம் அடைந்த நண்பர்களுக்கு இச் சஞ்சிகை சமர்ப்பணம்



கந்தையா
ரகுலேஸ்வரன்



ஆலாலசுந்தரம்
சதீஸ்



கந்தையா
புவனேஸ்வரன்



அந்தோனிப்பிள்ளை
சுலமன்



* * * * * * * * *

# கலங்கரைத் தீபத்தின் உள்ளே....


1. நண்பர்கள் வட்டம் குறித்த ஓர் பார்வை - 01
2. கல்வியின் முக்கியத்துவம் - திரு.இரா.தர்மரட்ணம் ஆசிரியர் நெடுந்தீவு - 03
3. வடமாகணம் குறித்த தகவல்கள் - 05
4. நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள் - கே.பபிசன் - யா.நெ.சை.வித்தியாலயம் - 07
5. நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள் - க.அகிலவன் யா.நெ.சை.வித்தியாலயம் - 08
6. நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள் - அ.ஷாருணியா யா.நெடு.மகாவித்தியாலயம் - 09
7. நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள் - பி.ஐக்சன்ராஜ் யா.நெடு.மகாவித்தியாலயம் - 10
8. நெடுந்தீவில் 40 அடி மனிதனின் காலடியொன்று - திரு.வை.லோகநாதன் - 12
9. பசுந்தீவாம் - நெடுந்தீவு - த.சாருஜா யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 15
10. பசுந்தீவாம் - நெடுந்தீவு - அ.பிறின்சி யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 16
11. பசுந்தீவாம் - நெடுந்தீவு - பு.அக்ஷா யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 18
12. பசுந்தீவாம் - நெடுந்தீவு - க.லக்ஷனா யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 19
13. பசுந்தீவாம் - நெடுந்தீவு - யே.கேதிஸ்ராஜ் சீக்கிரியாம் பள்ளம் அ.த.க.பாடசாலை - 20
14. செங்கை ஆழியனின் வாடைக்காற்று ஒரு மீள் வாசிப்பு - அ.ரொனிராஜன் - 21
15. எனது கிராமம் - க.கேஜினா யா.நெடு.சீக்கிரியாம் பள்ளம் அ.தக.பாடசாலை - 28
16. எனது கிராமம் - த.துளசிகன் யா.நெடு.மகாவித்தியாலயம் - 29
17. எனது கிராமம் - அ.கரோலினி யா.நெடு.சீக்கிரியாம் பள்ளம் அ.த.கபாடசாலை - 30
18. எனது கிராமம் - ம.மனோதீப் - யா.நெடு.சை.வித்தியாலயம் - 31
19. நெடுந்தீவு மகாவித்தியாலத்தின் ஆரம்பத் தோற்றமும் வளர்ச்சியும் - 32
20. மனிதம் எங்கே போகின்றது - அ.அமல ஆன்ஸ் யா.நெடு.மகாவித்தியாலயம் - 34
21. மனிதம் எங்கே போகின்றது - அ.கியூறி யா.நெடு.மகாவித்தியாலயம் - 35
22. மனிதம் எங்கே போகின்றது - அ.மேரி அஸ்வினி யா.நெடு.றோ.கமகளிர் கல்லூரி - 36
23. மனிதம் எங்கே போகின்றது - அ.கபிலாசினி யா.நெடு.மகாவித்தியாலம் - 37
24. மனிதம் எங்கே போகின்றது - ஜி.றீபா நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 39
25. தொடர்பு சாதான அபிவிருத்தியும் எதிர்கால சவால்களும் - டா.மயூரராஜ் நெடுந்தீவு -08 - 41
26. தொடர்பு சாதான அபிவிருத்தியும் எதிர்கால சவால்களும் - செ.ராஜ்குமார் நெடுந்தீவு -14 - 43
27. நெடுந்தீவின் பழமையும் புதுமையும் - திருமதி ஜெ.கஸ்தூரி திலகம் நெடுந்தீவு - 11 - 45
28. தொடர்பு சாதான அபிவிருத்தியும் எதிர்கால சவால்களும் - திருமதி கி.தனுஷா நெடுந்தீவு - 04 - 47
29. சிகரம் நோக்கி - அ.நேரோஜினி நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 49
30. சிகரம் நோக்கி - ம.சபினா நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 50
31. சிகரம் நோக்கி - யோ.ஆன் வினுஸ்கா நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 52
32. சிகரம் நோக்கி - அ.ரதனிஸ்ராலினி நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 54
33. சிகரம் நோக்கி - ம.மேரி பிரிந்தா நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 55
34. சர்வதேச தினங்கள் - 57
35. நெடுந்தீவின் முடிசூடா மன்னன் நவரத்தின சிங்கம் (மீள் பதிப்பு) - 59
36. இலங்கை பற்றிய விஷேட தகவல்கள் - 68
37. பிளாஸ்ரிக் பாவனையும் அதை தடுக்கும் வழி முறைகளும் - ரீ.ஜெயக்குமார் யா.நெடு.மகாவித்தியாலயம் - 72
38. பிளாஸ்ரிக் பாவனையும் அதை தடுக்கும் வழி முறைகளும் - யே.மைக்கல் நெடு.மகாவித்தியாலயம் - 73
39. தொலை பேசியும் மாணவர் சமூகமும் - வி.டர்ஜினி சைவப்பிரகாச வித்தியாலயம் - 76

40. பிளாஸ்ரிக் பாவனையைத் தடுக்கும் வழிகள் - ஆ.கஜீபன் யா.நெடு.மகாவித்தியாலம் - 78
41. நெடுந்தீவு மக்களின் வாழ்வியல் கோலங்கள் - ஜோ.றீபா நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 80
42. விழித்தெழு எம் தீவே - கி.தனுஷா நெடுந்தீவு - 04 - 82
43. விழித்தெழு எம் தீவே - இ.கார்த்தீபன் ஆசிரியர் நெடு.மகாவித்தியாலயம் - 84
44. விழித்தெழு எம் தீவே - வி.ருத்திரன் நெடுந்தீவு - 13 - 86
45. எங்கே நிம்மதி - கு.இராஜேஸ்வரன் நெடுந்தீவு - 05 - 89
46. இலங்கையின் நதிகளின் வரலாற்றுப் பெயர்களும் இன்றைய பெயர்களும் - 92
47. இலங்கையில் முதலில் ஆரம்பிக்கப்பட்டவை - 92
48. இலங்கையின் முக்கிய நிலையங்கள் - 93
49. இலங்கையின் பிரதான உற்பத்திகளும் சேவைகளும் நடைபெறும் இடங்களும் - 93
50. இலங்கையின் பிரதான வீதிகளின் பெயர்கள் - 94
51. விழித்தெழு எம் தீவே - 96
52. மனநலமும் மனநோயும் - ஓர் நோக்கு - சி.குலேந்திரன் - 98
53. நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும் - றொ.சுலக்ஷினி நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 102
54. நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும் - ஜெ.ஜிவிர்த்தனா நெடு.சைவபிரகாச வித்தியாலயம் - 103
55. நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும் - கு.நிஷாந் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் - 105
56. பசுந்தீவாம் நெடுந்தீவு - ச.தயானந்தன் யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் - 108
57. நெடுந்தீவின் தனித்துவம் - க.தக்ஷாயினி நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 109
58. தாகம் - ஜோ.றீபா யா.நெடு.றோ.க.மகாவித்தியாலயம் - 111
59. நெடுந்தீவின் தனித்துவம் - யோ.குயின்றோயினி நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 113
60. தாகம் - தமிழ்த் தாகம் - ச.மதுஷா நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் - 114
61. இலக்கியம் காட்டும் வழிகள் ம.மேரி பிரிந்தா - யா/நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 116
62. பூகோளமயமாதலின் விளைவுகள் - ச.மதுஷா நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் - 119
63. சூழலும் நாமும் - ம.மேரி பிரிந்தா - யா/நெடு.றோ.க.மகளிர் கல்லூரி - 121
64. பூகோலமயமாதலின் விளைவுகள் - ச.மதுஷா நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் - 122

* * * * * * * * *

# இணைப்பாளரின் உள்ளத்திலிருந்து



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 1998ம் ஆண்டு க.பொ.த சாதரண தரக் கல்வியினையும் 2001ம் ஆண்டு உயர்தரக் கல்வியினையும் நோக்கி கல்வி கற்ற மாணவ நண்பர்கள் இணைந்து உருவாக்கிக் கொண்டதே இவ் நண்பர்கள் வட்டம் எனும் அமைப்பு.

இவ் அமைப்பின் செயற்பாடுகளில் ஒன்றாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆளுமை, ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்து கொள்வதுடன், அவர்களது கல்வி நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகளில் ஒவ்வொரு தவணைப் பரீட்சை முடிவிலும் போட்டி நிகழ்வுகளை ஏற்படுத்தி அவர்களிடம் இருந்து கிடைக்கும் ஆற்றல்களை சமூகத்திற்கு கொண்டு வருவது கலங்கரை தீபம் எனும் சஞ்சிகையின் முதலாவது நோக்கமாக காணப்படுகின்றது. பிள்ளைகளது பெயர்களுடன் ஆக்கங்கள் உருவாகும் போது ஆவணப்படுத்தப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு கடத்தப்படுவதுடன் பிள்ளைகளும் அதனைப் பார்க்கின்ற போது மகிழ்வுறுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படும். அதனூடாக கல்வி நிலையின் அடைவு மட்டத்தினை அதிகரிக்க செய்வதும் முக்கிய நோக்கமாகும்.

இரண்டாவது நோக்கமாக எமது தீவகத்தின் வரலாற்று நிகழ்வுகளை சேகரித்து ஆவணப்படுத்துவதுடன், கடந்தகால வரலாறுகளை எமது தற்கால, எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சொல்வதும் முக்கிய கடமையாக காணப்படுகின்றது, இதன் கீழ் நாம் நெடுந்தீவு பாடசாலைகளின் வரலாறுகள் பாடசாலைகளில் கல்வி கற்பித்து மறைந்த அதிபர், ஆசிரியர்கள் தீவகத்தின் மத வழிபாட்டுத் தலங்கள், புரதான சின்னங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், போன்ற விடயங்கள் உள்வாங்கப்பட்டு எதிர்காலங்களில் மிக சிறப்பாக கலங்கரை தீபம் எனும் இச் சஞ்சிகையின் தொடர்ச்சியான இதழ்களில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் மட்டுமல்ல நெடுந்தீவிற்கு வெளியில் வாழ்பவர்களும், நெடுந்தீவை சொந்த இடமாக கொண்ட போதும் பல நோக்கங்களால் நெடுந்தீவிற்கு வெளியில் வாழ்ந்து வரும் ஆற்றல் உள்ளவர்களுக்கு அவர்களது திறமைக்கு களம் அமைத்துக் கொடுப்பதும் இக் கலங்கரை தீபம் சஞ்சிகையின் நோக்கமாக காணப்படுகின்றது. நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை எனும் வீதம் வருடத்திற்கு 03 சஞ்சிகைகள் வெளியிடப்படும்.

கலங்கரை தீபத்தின் முதலாவது இதழில் பல்வேறு விடயங்களைத் தொகுத்து நல் முறையில் இச் சஞ்சிகை வெளிவருவதற்கு உற்சாகத்தோடு போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கும், மேலதிகமான ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும், இதற்கான அனுமதியினை வழங்கிய பிரதேச செயலாளர், மற்றும் நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கட்கும், நண்பர்கள் வட்டம் அமைப்பிற்கு சரியான முறையில் ஆலோசனை வழங்கி அனைத்து விடயங்களிலம் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வரும் எமது அமைப்பின் ஆலோசகர் திரு.A.F ஜேக்கப் அவர்கட்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

**திரு. கு.ஜனேந்திரன்**
**இணைப்பாளர் நண்பர்கள் வட்டம்**

* * * * * * * * *

# தலைவரின் இதயத்திலிருந்து



யாழ். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஒன்றாய் கல்வி பயின்ற நண்பர்கள் நாம் பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்து சமூகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த வந்தாலும் எமது நட்பு வட்டத்தினை தொடர்ச்சியாக பேணும் நோக்கிலும் அதற்கூடாக எம் தீவகத்தின் கல்வி, கலை கலாச்சார, பொருளாதார அபிவிருத்திப் பணிகளில் எம்மை ஈடுபடுத்தும் நோக்குடனும் உருவாக்கப்பட்டதே நண்பர்கள் வட்டமாகும்.

இடர்கள் பல சூழந்த போதும் எமது நண்பர்கள் வட்டம் ஆரம்பிக்கப்பட்டு குறிப்பிட்ட 03 மாத காலப்பகுதிகளில் இலக்கியப் போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள் என்பவற்றை அயராத முயற்சியினால் ஒழுங்கு படுத்தியுள்ளோம். எம்மால் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் திறமையான ஆக்கங்களை முன்னிலைப்படுத்தி வெளிவருகின்றது கலங்கரைத் தீபம் எனும் முதலாவது இதழ்.

தொடர்ச்சியாக நாம் ஒவ்வொரு பாடசாலைத் தவணைப் பரீட்சைகள் முடிவிலும் போட்டி நிகழ்வுகளை நடாத்தி. போட்டியாளர்களை உற்சாகப்படுத்துவதோடு, அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து அதனை ஆவணப்படுத்தும் நோக்குடன் வருடத்திற்கு 03 சஞ்சிகைகள் வெளியிடுவதற்கான முதற்படியே இது. எனவே இவ் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்

"கறையான்களால் கட்டப்படுகின்ற புற்றுக்கள் ஒரு போதும் மழை நீரில் கரைந்து விடாது" என்கின்ற உறுதியான நம்பிக்கையில் எமது நண்பர்கள் வட்டத்தினது பயணம் ஆரம்பித்திருக்கின்றது. எமது முதல் முயற்சிக்கு எம்மோடு கரம் சேர்ந்துள்ள அனைத்துள்ளங்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ச்சியாக எமது கலங்கரைத் தீபம் தனது ஒளியினைப் பரப்பவும் அதற்கு அனைவரது ஒத்துழைப்புக்களும் தொடர்ந்து கிடைக்கும் என்ற தீராத வாஞ்சையுடன் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

நன்றி

**திரு.பா.அன்ரன் கிறிஸ்ரியன்**
**தலைவர்**
**நண்பர்கள் வட்டம்**
**நெடுந்தீவு**

* * * * * * * * *

பிரதேசசெயலகம்,நெடுந்தீவு.
ප්‍රාදේශීයලේකම් කාර්යාලය,ඩෙල්ෆ්ට්.
**Divisional Secretariat, Delft.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ප්‍රාදේශීයලේකම් Divisional Secretary | 021 221 5201 | ගණකාධිකාරී Accountant | 021 221 5203 | සහකාරඅධ්‍යක්ෂ සැලසුම් Asst. Director of Planning | 021 221 5205 |
| සහකාරප්‍රාදේශීයලේකම් Asst. Divisional Secretary | 021 221 5202 | දිවිනැගුම කළමනාකරු Divineguma Manager | 021 221 5204 | පරිපාලනනිලධාරී Administration Officer | 021 221 5206 021 221 5207 |
| දිවිනැගුම බැංකුව Divineguma Bank | 021 221 5221 | ෆැක්ස් Fax | 021 221 5206 | විද්‍යුත් තැපෑල E-Mail | dsdelft@gmail.com |
| எனது இல. මගේ අංකය My No | D/DS/SCB/CUL LE/2019 | உமது இல. ඔබේ අංකය Your No | | திகதி දිනය Date | 2019.08.21 |

# நெடுந்தீவு பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் முதல் நூலாக வெளிவருகின்ற கலங்கரைத் தீபம் இதழ் 01ற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 1998ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரம் படித்தவர்களும், 2001ம் ஆண்டு க.பொ.த உயர்தரம் படித்தவர்களும் பயனுள்ள வகையில் நெடுந்தீவின் வளர்ச்சிப் பாதையில் ஒன்றிணைந்து செயற்படுவது என்பது தற்போதைய நவீனப் போக்கில் சாதாரண விடயமல்ல இருந்த போதும், இப்படி ஒரு செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்பட்டமைக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பாடசாலைக் கல்வி முடிவுற்று பல பொறுப்புக்களில் இருக்கும் இவர்கள் சமூக அக்கறையின் பால் ஈர்க்கப்பட்டு இலக்கியப் போட்டிகள், நாடகப் போட்டிகள், விளையாட்டு நிகழ்வினை நடாத்தி செயலாற்றுவது பராட்டத்தக்தாகும். இதன் மூலம் படிக்கின்றவர்களுக்கும் இளைஞர்களுக்கும் திறமையின் அடிப்படையில் தங்களை வளர்த்தெடுப்பதற்கு சிறந்த களத்தை நண்பர்கள் வட்டம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்நூலில் இடம் பெறும் ஆக்கங்கள் பெரும்பாலனவை பிரதேச மட்டத்தில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவையாகும். இவையனைத்தும் சிறந்த ஆக்கங்களாக இருக்கும் என்பதுடன் இவை நூல் வடிவில் வருவது பாராட்டுக்குரியதாகும். இவர்களது முயற்சியால், நெடுந்தீவு பிரதேசத்தில் கலை, கலாச்சாரம், விளையாட்டுத் துறையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். என்பதுடன் தொடர்ந்தும் இந்தப் பாடசாலை நண்பர்களின் செயற்பாடுகள் இப்பிரதேசத்திற்கு தேவை என்பதுடன், இந்நூல் வெளிவர காரணமான நூலாசிரியர் மற்றும் குழுவினருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**உலகம் உன்னை அறிவதை விட உன்னை உலகுக்கு அறிமுகம் செய்து கொள்**

**நன்றி**

**திரு.F.C.சத்தியசோதி**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம்**
**நெடுந்தீவு**

* * * * * * * * *

# முயற்சி திருவினையாக்கமாக வாழ்த்துகின்றேன்



கற்றனைத் தூறும் அறிவு வளர்சிக்கு தோண்டுதல், தேடுதல், விழிப்புணர்வு, ஊக்கத்தை ஏற்படுத்தி வினைத் திறனுடையதாக மாற்றி விளைவுப் பயனை நிறைவாக பெறவேண்டுமென்ற பெருநோக்கோடு புறப்பட்டிருக்கும் "நண்பர்கள் வட்டம்" (DMV 0/L – 1998 & A/L 2001) குழுவினரை முதற் கண் பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைந்த கலைத்திட்ட செயற்பாடுகளான மொழி விருத்தி, கலை விளையாட்டுத் திறன்கள் மேம்படவும் முயற்சித்து செயல்முறைப் படுத்தும் பணிக்கூறுகளுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

விசேடமாய் மாணவர்களது ஆளுமை ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்குடன் போட்டி நிகழ்வுகளை ஏற்படுத்தி திறமையான ஆக்கங்களை முன்னுரிமைப்படுத்தி வெளிவரும் கலங்கரை தீபம் எனும் சஞ்சிகை இதழ் - 01 ஊடாக மேற்கொள்ளும் இவர்களது முயற்சி இன்னும் பாராட்டப்படவேண்டியதே இவர்களது இச் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவரவும் அதற்கூடாக அவர்களது செயற்பாடுகள் நோக்கங்கள் நிறைவடைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**"நண்பர்கள் வட்டம் நாளைய சமூகத்தை**
**நற்புகழ் பெற்றிடும் சாதனையாளராக்கிட**
**நீண்ட பயணமாய் நிலைத்திட என்றும்**
**ஆண்டவன் பாதமது பணிந்தே வேண்டுகின்றேன்"**

**திரு.கெ.அன்ரன் மரியதாஸ்**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்**
**நெடுந்தீவு**

* * * * * * * * *

# வாழ்த்துரை



நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்படுகின்ற கலங்கரைத் தீபம் எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்சி அடைகின்றேன். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 1998ம் க.பொ.த சாதரண தரம் நோக்கியும் 2001ம் ஆண்டு க.பொ.த உயர்தரம் நோக்கியும் கல்வி கற்ற பழைய மாணவர்களாகிய இவர்கள் கூட்டாக இணைந்து உருவாக்கிக் கொண்டுள்ள நண்பர்கள் வட்டம் எனும் கட்டறுந்து போகாத அமைப்புக்கூடாக வெளியிடப்படுகின்ற இச் சஞ்சிகையானது மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டிகளுக்கூடாக பெறப்பட்ட சிறந்த ஆக்கங்களையும், ஏனைய விடயங்களையும் தாங்கி வருகின்றது.

இம் முயற்சியினால் மாணவர்களின் எழுத்தாற்றல் தூண்டப்பட்டு அதிகப் படைப்புக்களான ஆக்கத் திறன் வெளிக்கொணரப்படுகின்றது. இவர்களின் இம் முயற்சியை பாரட்டுவதோடு தொடர்ந்தும் இச் சஞ்சிகை வெளிவர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

* * * * * * * * *

# நன்றிகள் பல



நண்பர்கள் வட்டம் எனும் அமைப்பு நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்டு 03 மாத காலப்பகுதிக்குள் தனது முதலாவது செயற்பாடாக நெடுந்தீவு பிரதேச பாடசாலைகளிலும் மற்றும் நெடுந்தீவு பிரதேச மட்டத்திலும் காணப்படும் எழுத்தாளர்களது ஆளுமை ஆற்றல்களை மேலும் வளப்படுத்தும் நோக்குடனும் அவர்களது திறமைக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்குடனும், கவிதை, கட்டுரை போன்ற எழுத்தாக்கப் போட்டிகள் இடம் பெற்றன.

நடாத்தப்பட்ட போட்டிகளுக்கூடாக பெறப்பட்ட திறமையான ஆக்கங்கள் அவர்களது பெயர்களில் இச் சஞ்சிகையில் வெளி வருவதுடன், மேலும் சில ஆக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன. வருடத்திற்கு 03 சஞ்சிகைகள் வெளியிடும் நோக்குடன் கலங்கரை தீபம் இதழ் - 01 தற்போது வெளி வருகின்றது. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பர்களாகிய நாம், நண்பர்கள் வட்டம் எனும் பெயருடன் இணைந்து கொண்டமையுடன் இவ்வாறன செயற்பாடுகளை மேற்கொண்டு எமது நட்பு வட்டத்தினை பேணுவதற்கும் நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

எம்மால் நடாத்தப்பட்ட போட்டிகளில் உற்சாகத்தோடு பங்கு பற்றிய மாணவர்களுக்கும் ஏனைய போட்டியாளர்களுக்கும் நன்றிகளையும் பாரட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இப் போட்டிகளை குறிப்பிட்ட காலத்தில் நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நெடுந்தீவு கோட்டக்கல்விப்பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர்கள், நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஆகியோருக்கு எனது நன்றிகள். போட்டிகளில் வெற்றி பெற்ற திறமையான ஆக்கங்கள் பெறப்பட்டு அதனை சஞ்சிகையாக வெளியிடுவதற்கு பொறுப்பாக இருந்து செயற்பட்ட நண்பர்கள் வட்டத்தினது இணைப்பாளர் திரு.கு.ஜனேந்திரன் மற்றும் உறுப்பினர்களுக்கும், இச் சஞ்சிகையினை சரியான முறையில் ஒழுங்கு படுத்தி திருத்தம் செய்து கொள்வதற்கு மட்டுமன்றி எமது செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி எம்மை வழி நடாத்தி வருகின்ற எமது அமைப்பின் ஆலோசகர் மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு.A.F ஜேக்கப் அவர்களுக்கு எமது நன்றிகள்

மேலும் இந்தச் சஞ்சிகையினை வெளியிடுவதற்கும் எமது ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உறுதுணை புரிந்து வருகின்ற அனைத்துள்ளங்களுக்கும், விசேடமாக இதனை சிறந்த முறையில் வடிவமைத்துக் கொள்வதற்கும் புத்தகத்தினை அச்சடித்துக் கொள்வதற்கும் உறுதுணை புரிந்த 'சிவசண்முக சிமாட் சொப்' அச்சகத்தின் உரிமையாளர் என்.ஜெகாதரனுக்கு எனது நன்றிகள்.

எமது முதற் படைப்பாக வெளிவருகின்ற கலங்கரை தீபம் சஞ்சிகையின் முதல் இதழைத் தொடர்ந்து பல இதழ்களை வெளியிட அனைவரது ஒத்துழைப்புக்களையும் வேண்டி நிற்கின்றோம். எமது முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி எங்களை ஊக்குவிக்குமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**நன்றி**

**திரு.யே.டானியல் பிராங்கன்**

**செயலாளர்**

**நண்பர்கள் வட்டம் - நெடுந்தீவு**

* * * * * * * * *

# நண்பர்கள் வட்டம் குறித்த ஓர் பார்வை...

## அறிமுகம்:-

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 1998ம் ஆண்டு க.பொ.த.சாதரண தரம் நோக்கியும் 2001ம் ஆண்டு க.பொ.த. உயர்தரம் நோக்கியும் கல்வி கற்ற மாணவ நண்பர்கள் இணைந்து உருவாகிக் கொண்டதே நண்பர்கள் வட்டம் எனும் அமைப்பு. சமய சமூக வேறுபாடுகளின்றி நாம் எல்லாம் நெடுந்தீவு மகாவித்தியலயத்தில் கல்வி கற்ற வகுப்பு நண்பர்கள் என்ற உயரிய நோக்கத்தில் செயற்படல்.

**நோக்கம்:-**

- மகாவித்தியாலயதில் கல்வி கற்ற நெடுந்தீவு நண்பர்களாகிய நாம் தொடர்ச்சியாக எமது நட்புறவினை ஐக்கியத்தினை வளர்த்லும் ஊக்குவித்தலும்

- எம்மால் இயன்றளவு நெடுந்தீவின் கல்வி, கலை விளையாட்டுத்துறை மற்றும் பொருளாதரத்துறை அபிவிருத்தியில் இணைந்து பங்களிப்பு வழங்கல்

- எமது நண்பர்களுக்கு உதவி செய்ய வேண்டிய தேவைகள் ஏற்படும் பட்சத்தில் இயன்றளவு அவர்களது தேவைகளை இனம் கண்டு உதவி செய்தல்.

## நாம் மேற்கொள்ளத் தீர்மானித்த திட்டங்கள்

1. மாணவர்களது ஆளுமை ஆற்றல்களை வளப்படுத்தும் நோக்குடன் நெடுந்தீவு கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் அனைத்து விதமான போட்டி நிகழ்வுகளையும் நடாத்தி அதற்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தல்.

2. போட்டிகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு தவணை முடிவிலும் நடாத்தப்பட்டு திறமையான ஆக்கங்களை முன்னிலைப்படுத்தி பிள்ளைகளது பெயர்களுடன் எம்மால் வெளியிடப்படும் சஞ்சிகையான கலங்கரை தீபம் இதழினை வருடத்திற்கு 03 தடவைகள் வெளியிடுதல்.

3. இச் சஞ்சிகையின் ஊடாக நெடுந்தீவின் வரலாற்று இடங்கள் மத வழிபாட்டு தலங்கள், பாடசாலைகள், பாடசாலைகளில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் பற்றிய குறிப்புக்கள் போன்றவற்றை தொகுத்து ஆவணப்படுத்தல்.

4. எம்மோடு ஒன்றாக கல்வி கற்று அமரத்துவம் அடைந்த நண்பர்களான ஆலாலசுந்தரம் சதீஸ், கந்தையா புவனேஸ்வரன், கந்தையா ரகு, அந்தோனிப்பிள்ளை சுலமன் ஆகியோர்கள் ஞாபகார்த்தமாக விளையாட்டு நிகழ்வகள் நடாத்துவதன் ஊடாக ஐக்கியத்துவத்தினையும் ஆற்றலையும் வளப்படுத்தல்.

5. கல்விசார் நடவடிக்கைகளில் பங்கு கொண்டு மாணவர்களது ஆற்றல்களை மேம்படுத்தும் நலத்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

6. ஆரம்ப பிரிவு மாணவர்களின் கல்வியிலும் ஆங்கிலம் மற்றும் கணணிக் கல்வியின் முக்கியத்துவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தல்.

7. நெடுந்தீவின் தகவல்களை ஆவணப்படுத்தல.

8. நெடுந்தீவின் அபிவிருத்தி செயற்பாடுகளில் பங்கு கொள்ளலும் பரிந்துரை செய்தலும்.

9. எதிர்காலங்களில் நெடுந்தீவில் கல்வி கலை விளையாட்டுத் துறைகளில் மாற்றங்களை

ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை உருவாக்கி அதற்கான நிதியினை பெற்றுக் கொண்டு அதன் ஊடாக உதவுதல்

10. நெடுந்தீவு மட்டுமன்றி தீவகத்தில் நடைபெறும் விடயங்களை வெளி உலகுக்கு கொண்டு செல்லவும் ஆவணப்படுத்தும் நோக்குடனும் www.Delft media.com எனும் இணையத் தளத்தை 20.09.2019ம் திகதி தொடக்கம் நடாத்துதல்

**குறிப்பு:- நெடுந்தீவின் கல்வி, கலை விளையாட்டு மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிப்போர் எம்மோடு தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களூக்கூடாக சிறந்த செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நண்பர்கள் வட்டம் என்றும் ஒத்துழைப்பு வழங்கும்.**



* * * * * * * * *

# கல்வியின் முக்கியத்துவம்

எமது யா/நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற 1998 க.பொ.த.சாதரண தர மாணவர்களும் 2001 க.பொ.தஉயர்தர மாணவர்களும் இணைந்து நண்பர்கள் வட்டம் எனும் அமைப்பினை உருவாக்கியமை பாரட்டத்தக்க விடயமாகும்.

இவர்களின் முயற்சியினால், வெளி வருகின்ற கலங்கரை தீபம் இதழ் -01க்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைவதோடு, மேலும் இவ்வாறான இளைஞர்கள் முன் வந்த எமது தாயகத்தின் கல்வி பொருளாதார வளர்ச்சிக்கு கை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

"படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு" என்று போற்றப்படுகின்ற தமிழ் நாட்டின் முன்னை நாள் முதல்வர் காமராஜர் அவர்கள் ஏழைக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களே, அவசியம் தேவை என்று முழக்கமிட்டு இந்தியாவில் கல்வியை மேலோங்க செய்தார்.

"கற்க நன்றே கற்க நன்றே பிச்சை புகினும் கற்க நன்றே" என்றும் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றும் கல்வியின் பெருமையினை உயர்த்தி நிற்கின்றார் ஔவைப்பாட்டி.

"காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு" என்று கல்வியோடு உடல் உள ஆரோக்கியத்தையும் பேண வேண்டும் என பா இசைத்தார் மகாகவி பாரதியார்.

"கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்கு தக" என்றார் பொய்யா மொழிப் புலவர் வள்ளுவர் பெருந்தகை. அல்லும் பகலும் ஆர்வத்தோடு கல்வி கற்று பட்டங்கள் பல பெற்றாலும், உலக மக்களோடு ஒத்து வாழப் பழக வேண்டும் என்று கூறினார் வித்துவான் க.வேந்தனார்.

படிக்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல் என்றார் பேரறிஞர் பிளேட்டோ.

இரவிரவாக இறைவன் பாதங்களைத் தொழுவதை விட ஒரு மணி நேரம் கல்வி கற்பது மேல் என்றார் நபிகள் நாயகம்.

உலகையே மாற்றக் கூடிய ஆயுதம் கல்வி தான் என்றார் நெல்சன் மண்டேலா.

அறியாமை வெட்கப்பட வேண்டியதொன்று அதனை அறியாமல் இருப்பது அதை விட வெட்கக் கேடா னது என்றுரைத்தார் பெஞ்ஞமின் பிராங்கிளின்.

பெற்ற பிள்ளை எம்மைக் கைவிட்டாலும் கற்ற கல்வி எம்மைக் கைவிடாது என்றார் மகாத்மா காந்தியடிகள்.

தூக்கு மேடைக்கு அழைத்து செல்லும் வரை படித்துக் கொண்டிருந்தார் பகவத் சிங் அவர்கள்.

படித்த புத்தகத்தை முற்றாக படித்து முடிக்கவில்லை என்பதற்காக தனது அறுவை சிகிச்சையே அடுத்தநாளுக்கு தள்ளி வைத்தார் பேரறிஞர் அண்ணா. படிப்பால் மட்டுமே பாரதத்தை பாதுகாக்க முடியும் என்று படித்துப் படித்துக் கூறினார் அண்ணல் அப்துல் கலாம்.

பயணத்தின் போது படித்துக் கொண்டிருப்பதையே தனது பழக்கமாக கொண்டிருந்தார் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு.

35 ஆண்டுகளாக ரஷ்சியாவின் மிகப் பெரிய நூலகமான மொஸ்கோ நூலகத்தில் இருந்து கற்றுப் பொதுவுடமைப் பொருளாதாரம் என்கின்ற நவீன அரசியல் தத்துவத்தை தந்தார் கால்மார்க்ஸ் எனும்


பொதுவுடமை தத்துவமேதை. கால்மாக்சின் பொதுவுடமைத் தத்துவத்தை இரவு பகலாக பன்னிரண்டு வருடங்கள் படித்து புதிய நவீன பொதுவுடமை அரசை உருவாக்கியவர் தோழர் லெனின் அவர்கள் ஆவார்.


இவ்வாறே சீனாவில் புதிய ஜனநாயக அரசை ஏற்படுத்த அயராது தினம் தினம் கற்றவர் பெருந்தலைவர் மாவோசெதுங் அவர்கள். "அன்னை தந்த பால் ஒழுகும் குழந்தை வாய் தேன் ஒழுக அம்மா" என்று சொன்னதும் தமிழன்றோ? என்னு இனிய தமிழை எங்கள் மனங்களில் விதைத்தவர் பாரதிதாசன் அவர்கள்.

இவ்வாறு பல அறிஞர்களின் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விடயங்களை உங்கள் முன் சமர்ப்பிப்பதன் நோக்கம் "ஒரு மனிதனை வளப்படுத்துகின்ற மூலதனம் கல்வியே" அதனை நாம் பெற்று நாம் உயர்வடைய முடியும் என்பதனலேயாகும்.

எனவே எமது சமூகம் உயர்வடைய ஒரு களத்தை ஏற்படுத்தியிருக்கும் "நெடுந்தீவு நண்பர்கள் வட்டம" அமைப்பினருக்கு எமது மனம் நிறைந்த பாராட்டுகளும் நன்றிகளும் ஆசிகளும் உரித்தாகட்டும்


**திரு.இரா.தர்மரட்ணம்**
**ஆசிரியர்**
**நெடுந்தீவு - 12**





# வடமாகாணம் குறித்த தகவல்கள்





1. வடமாகாண ஆளுநர் பெயர் - கலாநிதி சுரேன் ராகவன்
2. வடக்கில் சிறிய மாவட்டம் - யாழ்ப்பாணம்
3. வடக்கில் பெரிய மாவட்டம் - முல்லைத்தீவு
4. வடக்கில் கடற் பரப்பில்லாத மாவட்டம் - வவுனியா
5. வடக்கில் குளங்கள் அதிகமாக காணப்படும் மாவட்டம் - முல்லைத்தீவு
6. வடக்கில் சிலிக்கன் மணல் காணப்படும் இடம் - நாகர்கோவில்
7. வடக்கு மாகாணசபை அலுவலகம் அமைந்துள்ள இடம் - கைதடி
8. வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி கூடிய மாவட்டம் - யாழ்ப்பாணம்
9. வடமாகாணத்தின் பரப்பளவு - 8884 சதுர கிலோமீட்டர்
10. வடமாகாணத்தின் நிலப்பரப்பு - 8290 சதுர கிலோமீட்டர்
11. வடக்கில் எண்ணெய் வளம் உள்ள மாவட்டம் - மன்னார்
12. வடக்கில் சிறுவர் நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - குருநகர், யாழ்ப்பாணம்
13. வடக்கில் அல்லது இலங்கையில் நீளமான பாலம் - வேலணை - புங்குடுதீவு
14. வடக்கில் காணப்படும் நீரேரிகள் - கச்சாய் அல்லது கிளாலி, சுண்டிக்குளம், தொண்டமானாறு
15. இலங்கையின் வடக்கின் புராதனபெயர் - நயினாதீவு (நாகதீவு)
16. வடக்கில் இருந்து பாராளுமன்றம் சென்ற முதலாவது பெண் - 15 February 1989 24 June - 1994 - திருமதி புலேந்திரன் ராஜமனோகரி - வன்னி

**வடக்கின் தொழிற்சாலைகள்**

17. ஓட்டு தொழிற்சாலை - ஒட்டுசுட்டான்
18. உப்பளம் - ஆனையிறவு
19. சீமேந்து தொழிற்சாலை - காங்கேசன்துறை
20. இரசாயன தொழிற்சாலை - பரந்தன்
21. வட மாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட பறவைகள் விலங்குகள் காப்பகம் என அறிவிக்கப்பட்ட இடம் - சுண்டிக்குளம் (கிளிநொச்சி மாவட்டம்)
22. வேலணை தீவு அல்லது லைடன் தீவுகள் எனப்படுவது வடக்கில் பெரிய கூட்டிணைக்கப்பட்ட தீவாகும்
23. யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஒரே ஆறு - வழுக்கை ஆறு (பருவகால ஆறு)
24. இலங்கையில் காணப்படும் குளங்களில் மூன்றாவது பெரிய குளம் - இரணைமடுக் குளம்
25. "செங்கையாழியன்" என அழைக்கப்படும் வடமாகாணத்தின் எழுத்தாளர்- கலாநிதி க.குணராசா
26. அண்மையில் வடக்கில் தொடங்கப்பட்ட கைத்தொழில். பேட்டை - அச்சுவேலி
27. வவுனிக்குளத்தை கட்டுவித்தவன் - எல்லாளன்
28. பனைமரத்தின் விஞ்ஞான பெயர் - Borassus flabellifer
29. வடக்கிற்கான ரயில் சேவை 1989.01.19 பின் 13.10.2014 உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படடது.
30. வடக்கு ரயில் பாதையை புனரமைத்த இந்திய நிறுவனம் - இர்கொன்

31. இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு உதவி வழங்குவது - ஆசிய அபிவிருத்தி வங்கி
32. இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு மாற்றீடான மற்றுமொரு திடடம் - ஆறுமுகம் திட்டம்
33. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது - ஆகஸ்ட் 1,1974
34. வடமாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் மரம் நடுகை தினம் கொண்டாடப்படுகிறது - நவம்பர் 01 - 30 வரை
35. மருத மரத்தின் விஞ்ஞான பெயர் - Terminalia elliptica
36. வெண்டாமரை பூவின் விஞ்ஞான பெயர் - Nelumbo nucifera
37. ஆண் மானின் விஞ்ஞான பெயர் - Azis axis
38. சுன்னாகம் கழிவு ஒயில் தொடர்பான நிறுவனம் - நொதேர்ன் பவெர்
39. யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட ஆண்டு - 31.05.1981
40. யாழ்ப்பாண வரலாற்றை கூறு நூல்கள் - வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை
41. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் - சேர் பொன் இராமநாதன்
42. முறிந்த பனை என்ற நூலை எழுதியவர்கள் - ராஜினி திராணகம, ராஜன் ஹுல், சிறிதரன், தயா சோமசுந்தரம்
43. மன்னாருக்கான ரயில் சேவைகள் 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் யுத்தததின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது - 14.03.2015
44. மன்னார் - நாவற்குழி பிரதான பாதை A32
45. பரந்தன் - முல்லைத்தீவு பிரதான பாதை A35
46. மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதை A34
47. முல்லைத்தீவோடு இணைக்கப்பட்ட பிரதேசம் - மணலாறு (வெலிஓயா)
48. யாழ். நூலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1933ஆம் ஆண்டு
49. இலங்கையில் வறுமை கூடிய மாவட்டம் - கிளிநொச்சி
50. யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 1984 பெப்ரவரியில் கிளிநொச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டது
51. யாழ். கோட்டை போர்த்துகேயரால் 1625ல் கட்டப்பட்டது
52. தற்போது காணப்படும் யாழ். கோட்டை ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 1658 யூன் 23 ற்கு பின் கட்டப்பட்டதாகும்.
53. யாழ்ப்பாண அரசின் நாணயம் - சேது நாணயம்
54. யாழ்ப்பாண அரசின் பழைய சின்னமாக விளங்குவது - நந்தி
55. வன்னி இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1803ம் ஆண்டு
56. ஒல்லாந்தரால் சொத்துரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரித்தான சட்டம் - தேசவழமைச்சட்டம்
57. யாழ் நூலை எழுதியவர் - சுவாமி விபுலானந்தர் 1947
58. சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் - மயில்வாகனன் 1892
59. சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் ஆறுமுகநாவலர் (1822 டிசம்பர் 18 ஆறுமுகம்பிள்ளை)

இலட்சியம் இல்லாத வாழ்க்கை முள் இல்லாத கடிகாரம் போன்றது.
அது நின்றாலும் பயன் இல்லை. ஓடினாலும் பயனில்லை
இன்று நீங்கள் செய்ய இயலாததை
நாளை உங்களால் நிச்சயம் செய்ய முடியும்

# நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள்


நெடுந்தீவு என்பது இலங்கை தீவிலுள்ள பெரிய தீவாகும். இதில் வரலாற்று சிறப்பு மிக்க பல இடங்கள் உள்ளன. **புறாக்கூடு,** இது ஒல்லாந்தரால் அமைக்கப்பட்டது. புறாக்கள் தங்குவதற்கும் ஒல்லாந்தருடைய பொழுது போக்கிற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் வீடு போன்ற அமைப்புடைய கட்டடம் கட்டப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இது தவிர சில கோட்டைகளும் காணப்படுகின்றன. இவை இலங்கை மன்னர்கள் நெடுந்தீவிற்கு வந்து தங்கியிருந்ததாகவும், அதற்காகவே இந்தக் கோட்டைகள் அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதுவரை இவற்றிற்கு தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. இதனால் அரசாங்கம் நெடுந்தீவின் வரலாற்று சின்னங்களை பாதுகாப்பதற்கும், சுத்தமாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

### வெடியரசன் கோட்டை

நெடுந்தீவு வடக்கு பிரதேசத்தில் வெடியரசன் கோட்டை எனப்படுகின்ற வட்டமான அமைப்பில் கோட்டை இருந்ததாக கூறப்பட்டுள்ளது. தற்பொழுது அது இடிந்து அடித்தளம் மட்டுமே எஞ்சியுள்ளது எனது தாயின் தந்தையின் காலத்தில் வட்டமான கோட்டையாக இருந்ததாக எனது தாய் கூறுவார் அதை சுற்றி பாதுகாப்பு அரண் இருந்தற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இன்னும் அந்த அடையாளங்கள் அழியாமல் உள்ளது. இயற்கையாகவே **பெருக்கு மரம்** எனப்படும் மரம் ஒரு குடிசை போன்று அமைப்பில் நான்கு பேர் உள் இருக்கும் அளவிற்கு இடம் உள்ளது. இதில் யுத்த காலத்தில் விடுதலைப் புலிப்போராளிகள் வந்து தங்கியிருந்ததாக கூறப்படுகின்றது.

### குயின்ரவர்

நெடுந்தீவு கிழக்கில் குவிந்தா எனப்படுகின்ற நீள் வடிவிலான நான்கு செவ்வகங்கள் அடுக்கப்பட்டது போன்று அமைப்பு பெற்றுள்ளது குயின்ரவர். இது எந்த நோக்கததிற்காக அமைக்கப்பட்டது என்று விளக்கம் கிடைக்கவில்லை. இதன் மேலிருந்து கூரான அமைப்பு யுத்தத்தில் விடுதலைப்புலிகளுக்கும் கடற்படைக்கும் இடையேயான சண்டையின்போது வீழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இதனால் அதன் நடுவில் சதுரமான துளை காணப்படுகின்றது. இதனுள் காற்றில் பறக்கும் பொருளொன்றை போட்டால் அது மேலால் வருவதை காணலாம்.



### நாற்பது அடிமனிதனின் பாதச்சுவடு

இவை எல்லாவற்றை விடவும் நாற்பது அடி மனிதனின் கால் அமைப்பு நெடுந்தீவு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது அது மூன்று அடியில் உள்ளது. நாற்பது அடி மனிதன் கால் எனப்படுவது நெடுந்தீவின் ஆட்சியாளர்கள் போர் புரிய வரும் மற்றய ஆட்சியாளர்களை பயமுறச் செய்வதற்காக நாற்பது அடிமனிதன் நெடுந்தீவில் உள்ளதாகவும் அவனின் காலடையாளம் உள்ளது எனவும் கூறியருக்க வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகின்றது.

### குதிரைலயம்

பாதச்சுவட்டுக்கு அருகில் குதிரைலயம் எனப்படுகின்ற 80அடி நீளமுடை இடத்தில் ஒரு பக்கத்தில் பதினைந்து தூண்கள் உள்ளன இரண்டு பக்கங்களில் இத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன இதற்கு கூரை அமைப்பு இருந்ததற்கான சான்றுகள் உள்ளது. இத் தூண்கள் மன்னர்களின் குதிரைகளை கட்டுவதற்கு பயன்பட்டதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களுக்குப் பல கதைகள் உள்ளன இவற்றுள் எது உண்மை என்று அறியப்படவில்லை. நெடுந்தீவு வைத்திய சாலையின் அருகில் **மீகாமன் கோட்டை** எனப்படுகின்ற கோட்டை காணப்படுகின்றது. இதனுள் மரண தண்டனை வழங்குவதற்கு பள்ளம் தோண்டப்பட்டு அதைச்சுற்றி அரண் கட்டப்பட்டுள்ளது என்றும் அதனுள் மனிதர்களை இறக்கி

உணவு நீர் கொடுக்காமல் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுவர் எனவும் கதைகள் உள்ளன. இது உண்மையான வரலாறு என்று கருதப்படவில்லை. எனினும் இது போன்ற ஐதீகக் கதைகள் பலருக்கும் தெரியும். நெடுந்தீவு மேற்கில் **பதினாறு வட்டு பனை** இருந்ததாக கூறப்படுகின்றது. நெடுந்தீவில் பனைகள் பல உள்ளன இருந்தாலும் பதினாறு வட்டுப்பனை ஒன்றே இருந்ததாக கூறப்படுகின்றது. இது ஒரு பனை அடியைகொண்டு பதினாறு வட்டு உருவாகியுள்ளது. இது பல நாட்டவர்களால் பேசப்படுகின்றது வட்டுகள் பிரிந்து பிரிந்த வட்டுகளிலிருந்து வட்டுகள் உருவாகி யது போல இதன் தோற்றம் காணப்படுகின்றது. இதில் முழுதாக உள்ள வரலாற்றுச் சின்னங்கள் பெருக்குமரம் மற்றும் குயின்ரவரில் விடுதலைப்புலிகளின் தாக்குதலால் சிறிய பகுதி வீழ்ந்துள்ளது. மற்றைய சின்னங்கள் வெடி அரசன் கோட்டை அடித்தளம் மட்டுமே காணப்படுகின்றது. மீகாகன் கோட்டையில் மேற் கூரைகளும் சுவர்களில் சிறிய துண்டங்களும் காணப்படவில்லை. குதிரைலாயத்திலும் மேற்கூரை இல்லாமல் தூண்கள் சில விழுந்தும் காணப்படுகின்றது இவ்வாறு முக்கியமான சின்னங்கள் அனைத்தும் சிதைவடைந்துள்ளன. இவற்றுள் நாற்பது அடிமனிதனின் காற்பாதம் அடையாளமும் சிதைவுகள் கூட இல்லாமல் காணப்படுகின்றது. பதினாறு வட்டுப்பனை இருந்ததற்கு சான்றுகள் மட்டுமே உள்ளன. பனை அழிவுற்று சில வருடங்களாகின்றன. நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**கே.பபிசன்**
**தரம் - 09**
**யா/நெடுந்தீவு சைவபிரகாச வித்தியாலயம்**




# நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள்

யாழ். குடாநாட்டில் சப்த தீவுகளில் ஒன்றாக நெடுந்தீவு விளங்குகின்றது. நெடுந்தீவு, பசுந்தீவு, மூலிகைத்தீவு, பால் தீவு என்று வேறு பெயர்களால் அழைக்கப்படும் நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களாக கோட்டைகள், பெருக்கு மரம், 40 அடி மனிதன் கால் அடையாளம், 16 வட்டுப்பனை போன்றன காணப்படுகின்றன. இவ் வரலாற்றுச் சின்னங்களை பார்வையிட வெளி நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தந்து பார்வையிட்டுச் செல்வர். கோட்டைகள் ஒல்லாந்தர்களால் அமைக்கப்பட்டவையாகும். இவை நெடுந்தீவின் பாதுகாப்பிற்கும் கைதிகளை அடைக்கவும் ஒல்லாந்தர்கள் ஆட்சி செய்யவும் பயன்படுத்தப்பட்டன. பெருக்கு மரம் நெடுந்தீவில் மிகப்பெரிய மரமாகவும் வரலாற்றுச் சின்னங்களில் மிக முக்கியமான சின்னமாகவும் கருதப்படுகிறது. 16 வட்டுப் பனையானது ஒரு பனையில் 16 வட்டுக்கள் கொண்டதாக கருதப்படுகிறது. அது நெடுந்தீவில் ஒரு முக்கிய சின்னமாகவும் விளங்குகின்றது. நெடுந்தீவில் 40 அடி மனிதன் ஒரு காலை இங்கு பதித்ததாக கருதப்பட்டு அதையும் வரலாற்று சின்னமாக கருதிக் கொண்டிருக்கின்றனர். பனையும் நெடுந்தீவின் ஒரு வரலாற்றுச்சின்னமாகக் கருதிக்கொண்டிருக்கின்றனர். பனைக் கைத் தொழிலாக பாய் இழைத்தல், சட்டம் அடித்தல், பனங்கள்ளு உற்பத்தி, பனம்கட்டி உற்பத்தி, பனாட்டு பினைதல், பனங்கிழங்கு போன்றன பனை அபிவிருத்தி சங்கத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. வெடியரசன் கோட்டை வெடியரசன் எனும் தமிழ் மன்னனால் அமைக்கப்பட்டது. இக் கோட்டை அமைக்கப்பட்டதன் நோக்கம் வெளிநாடட்வர்களிடம் இருந்து தமிழர்களை பாதுகாப்பதற்காக கடற்கரையோரத்தில் இக் கோட்டை அமைக்கப்பட்டது.

நெடுந்தீவில் கல்வேலி அதிகமான வீடுகளில் காணப்படுகின்றன. மக்கள் தங்களது எல்லைகளை கல்வேலி மூலம் குறிப்பார்கள். இங்கு காணப்படும் குதிரைகள் ஒல்லாந்தர்கள் நெடுந்தீவை ஆட்சி செய்யும் போது கொண்டு வரப்பட்டன. அக்காலத்தில் குதிரைகளை பல தேவைகளுக்காக பயன்படுத்தினர். குதிரைகளில் ஒல்லாந்தர்கள் சவாரி செய்தார்கள். குதிரைகளை பாதுகாப்பதற்காக முற்காலத்தில் குதிரை லயம் அமைக்கப்பட்டது. அக் கட்டடத்தின் சிதைவும் இன்றும் நெடுந்தீவில் காணப்படுகின்றன. குதிரைகள் அக்காலத்தில் போர்களுக்கும் உதவி புரிந்தன. குதிரைகளை வைத்து இப்பொழுதும் பாரங்களை சுமக்க வைக்கின்றனர். சாராப்பிட்டியில் உள்ள நன்னீர்க் கிணறுகள் பல தேவைகளுக்காக நெடுந்தீவு மக்களுக்கு உதவுகின்றன. நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களின் பெருமை உலகிலுள்ள பல நாடுகளில் பேசப்படுகின்றன. நெடுந்தீவின் மற்றுமொரு சிறப்பம்சமாக இலங்கையிலே மிகப்பெரிய தீவாக கருதப்படுவது. நெடுந்தீவு தீவகத்திலேயே மிக வரலாற்று அம்சமாக கருதப்பட்டு வருகின்றது.

க.அகிலவன்
யா/நெடுந்தீவு சைவபிரகாச வித்தியாலயம்



## நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள்

யாழ் குடாநாட்டில் சப்த தீவுகளில் ஒன்றாக நெடுந்தீவு விளங்குகின்றது. இது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக காணப்படுகிறது. நெடுந்தீவு சிறப்பு மிக்க இடமாக காணப்படுகிறது இங்கு வரலாற்றுச் சின்னங்களாக குயிந்தா, வளரும் கல், வேரில்லா ஆலமரம், பெருக்குமரம், புறாக்கூடு, குதிரை லயங்கள் வெடியரசன் கோட்டை போன்ற இடங்கள் மிக சிறப்பு மிக்கதாக காணப்படுகின்றன. இதனை வரலாற்றுச் சின்னங்கள் என்று அழைப்பர். நெடுந்தீவு மக்கள் இதனை பாற்கடலில் உள்ள மீன்கள் இனிய பாலைப் பருகாது வேறு உணவுகளை உண்பது போல், நாமும் நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களை கண்டு இரசிக்காமல் சாதி, சமய சடங்குகளுக்குள் மூழ்கி கிடக்கின்றோம் என்பது இதில் வெளிப்படுகிறது.

இந்த தீவில் வாழும் பலர் மக்கள் இங்கு உள்ள வரலாற்றுச் சின்னங்களே தெரியாமல் வாழ்கின்றனர். இத் தீவில் பல் சமயம் சார்ந்த பிற மதத்தவர்கள் வாழ்கின்றனர். உதாரணமாக இந்து, கிறிஸ்தவம் போன்ற மதத்தவர் வாழ்கின்றனர். எமது தீவில் பல தேவைகள் இருந்தாலும் சில வேளைகளில் வரட்சியும் காணப்படும். நாங்கள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களை பார்த்தோம் ஆனால் நெடுந்தீவின் இடங்களைப் போல் அவை காணப்படாது.

நெடுந்தீவு பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. பசுமையான தீவு, அழகான தீவு சொர்க்கபுரி மூலிகைத்தீவு என்று இன்னும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களை பார்வையிடுவதற்காக வெளிநாட்டவர்கள், சிங்களவர்கள் போன்ற பலரும் குவியும் தீவாக தற்போது காணப்படுகிறது. வெளிநாட்டவர் எங்களுடைய இடங்களை பார்த்து சந்தோஷப்பட்டு திருப்தியாய் சொல்லிவிட்டு செல்கிறார்கள் என்றால் இவ்வளவு இடங்களும் மிக பிரசித்தி பெற்றதாகவே காணப்படுகிறன என்று நினைக்கத் தோன்றுகிறது. பனை வள அபிவிருத்தியும் இங்கு காணப்படுகிறது.


அதில் பனை அபிவிருத்தி என்பது பனம் பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணம் பனை ஓலைகள் மூலம் பாய்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கைவினைப்பொருள்கள் செய்தல் போன்றன மிக பிரசித்தி பெற்றதாக காணப்படுகிறது. இது மட்டுமல்ல எமது தீவில் கிடைக்கின்ற பொருட்களில் உதாரணம் சிரட்டை, சிப்பி, தேங்காய் மட்டை போன்றவற்றில் வர்ணம் தீட்டி விற்பனை செய்கிறார்கள். அதை வெளிநாட்டவர்கள் வந்து வாங்கிச் சென்று வேறு மக்களுக்கு காண்பிக்கின்ற போது அதன் அழகைக்கண்டு மகிழாதார் இல்லை எனலாம்.

இவ்வளவு திறமையுள்ள மனிதர்கள் எம் தீவில் உள்ளதை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எமது வரலாற்றுச் சின்னங்கள் இவ்வளவு அழகாக காணப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்குள்ள கோட்டைக்கு சென்ற போது அங்கே கேட்டார்கள், பிச்சைக்காரர் இல்லாத தீவு எது? என்று, பின்னர் அவர்களே சொன்னார்கள் பிச்சைக்காரர் இல்லாத தீவு “நெடுந்தீவு” என்று இவ்வளவுக்கு எமது நெடுந்தீவு பிரசித்தி பெற்றதாக காணப்படுகிறது.

**அ.ஷாருணியா**
**யா/நெடுந்தீவு மகா விததியாலயம்**
**தரம் - 09**

# நெடுந்தீவின் வரலாற்று சின்னங்கள்

நாம் ஒவ்வொருவரும் நாம் வாழும் நாட்டின் அல்லது பிரதேசத்தின் வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் எம் அடுத்த சந்ததிக்கு அதை எடுத்துக்கூற முடியும். எம் கிராமத்தின் வரலாற்று சின்னங்கள் என்றால் என்ன? வரலாற்றுக்கு சாட்சியாக உள்ள இடங்கள், சுவடுகள், சிலைகள், கட்டடங்கள் என்பவையே. நெடுந்தீவுக்கு பசுந்தீவு, மூலிகைத்தீவு என மறுபெயர்களும் உண்டு. ஏன் மூலிகைத்தீவு என்று பெயர் வந்தது எனறு தெரியுமா? சில வருடங்களுக்கு முன்பு கப்பலில் அந்நிய இனத்தவரில் சிலர் நெடுந்தீவுக்கு வந்தனர். அப்போது அவர்களில் ஒருவருக்கு சிறுநீர் கழிக்க வேண்டி வந்தது. அவர் ஒரு இடத்தில் சிறுநீர் கழிக்கச்சென்றார். அப்போது அவர் சென்ற இடமெல்லாம் வெவ்வேறு மூலிகைகள் இருந்தன. இதை பார்த்த இவர் அவ்விடத்தில் சிறு நீரைக் கழிக்காமல் தான் வந்த கப்பலில் ஏறி கடலில் சிறிது தூரம் சென்று கடலில் தான் சிறு நீரைக் கழித்தாராம் என்ற கதை இருக்கிறது. அவ்வளவு அளவு எம் தீவில் மூலிகைகள் நிறைந்து இருந்ததால் தான் மூலிகைத்தீவு என்று பெயர் வந்தது.



இனி எம் தீவின் வரலாற்றுச் சின்னங்களைப் பற்றிப் பார்ப்போம் ஆரம்ப காலத்தில் பல இனத்தவர்கள் கோட்டைகளை நிறுவினார்கள். அதில் எஞ்சியிருப்பது “வெடி அரசன்கோட்டை, மீகாமன் கோட்டை இரண்டும் ஆகும். அடுத்ததாக குதிரைகளை காப்பதற்காக காப்பகமும்” உள்ளது. ஆனால் இப்போது அதன் தூண்கள், கூரைகள் சிதைவடைந்து விட்டன. நாற்பது அடி “மனிதனின் காலின் சுவடு” மற்றும் “16 வட்டுப்பனை” என்பவையும் உள்ளன. இதைவிட சோழர் எம் தீவில் இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு விடையாக சோழர்கால கோவில் ஒன்று உள்ளன. “பெருக்குமரம்” மிகப் பெரிய மரம் ஒன்று உள்ளது. அதன் பழம் மிகவும் போசணை கூடியது. இதே போன்ற மரம் மன்னாரிலும் உண்டு. எங்கு பெருக்குமரம்

இருந்தாலும் எம் தீவில் உள்ளது எமக்கு பெருமையே. "மருந்துக்கிணறு" என்று ஓர் செவ்வக வடிவிலான கட்டிடம் உள்ளது. இதில் உள்ள நீரை விலங்குகள் அருந்தினால் விலங்குகளுக்கு பற்றியிருக்கும் நோய் விலகுமாம். அடுத்தது "வளரும் பாறை" அது ஒரு நாக வடிவமாக வளர்ந்துகொண்டு வருகின்றது. "குவிந்தா கோட்டை" இது கடற்கரையை அண்டிக் காணப்படுகின்றது. ஒல்லாந்தரால் நிருமாணிக்கப்பட்டது. வேறு இனத்தவர்கள் யாரும் கப்பல்களில் வருகின்றார்களா? என பார்ப்பதற்காக அது நிருமாணிக்கப்பட்டது. அதன் கீழே ஒரு சிறிய துவாரம் ஒன்று இதனுள் கடதாசியை இட்டால் கோபுரத்தின் மேற்புறத்தால் வரும். கோட்டையினுள் காற்றுள்ளதாலே இவ்வாறு நிகழுகின்றது. நெடுந்தீவு ஒரு தீவாக இருந்தாலும் பல வரலாற்று சின்னங்களை உள்ளடங்கிய வரலாற்று இடம் சார்ந்த தீவாகும். இந்த சின்னங்களை பார்வையிடுவதற்காக, பல வெளிநாட்டவர்கள் வருகின்றனர். நாம் வாழும் எம் தீவின் வரலாற்றை தெரிந்து வைத்தால் தான் வருவோருக்கு எம் தீவைப் பற்றிக் கூறமுடியும் அதை விட சின்னங்களை பாதுகாக்கவும் வேண்டும். இதற்காக பிரதேச சபையால் பல அபிவிருத்திவேலைகள் செய்யப்படுகின்றன. நாமும் எம் சின்னங்களை பாதுகாக்க வேண்டும். இதன் மூலம் பல வியாபாரங்களை மேற்கொள்ள முடியும் பொருளாதாரத்தை மேற்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

**பி.ஜக்சன்ராஜ்**
**தரம் - 09**
**யா/நெடு.மகாவித்தியாலயம்.**

**(தரம் 08, 09 மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டியில் முன்னணிக் கட்டுரைகள்)**




**வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற மூன்று வழிகள்**

1. **பிறரைக்காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள்.**
2. **பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்**
3. **பிறரைக் காட்டிலும் குறைவாக பிறரிடமிருந்து பெற முயலுங்கள்.**

**-அடால்ஃப் ஹிட்லர்-**


**இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள்.**

**-அன்னை தெரேசா-**

# நெடுந்தீவில் 40 அடி மனிதனின் காலடியொன்று

நெடுந்தீவில் 40 அடி மனிதனின் பாதச் சுவடு என்ற செய்தி வெளிவந்தது. அது பற்றிய விஞ்ஞான ஐதீக அனுமானங்களை இப்படிப் பேசிக் கொள்கிறார்கள் என்று தப்பித்துக் கொண்டீர்கள் என்றாலும், திடமான அறிவியற் பார்வையைத் தொலைக்க உதவும் செய்திகளைப் பிரசுரிக்காதிருப்பீர்களாக என்ற பணிவானதொரு வேண்டுதல். குவேனியும் - சிங்கமும் (மகாவம்சம்) கூழைக் கடாவும் - கொக்கும் (வாடகைக்காற்று) புணருவதால் புதிய தலைமுறையை உருவாக்க முடியும் என நம்ப வைத்த அறிவற்ற எழுத்துச் செயற்பாடுகள் ஏற்படுத்திய தொல்லைகளைக் கடந்து வர முடியாது திணறும் மக்களை ஐதீகக் கருத்துக்களை தவிர்த்து வடிக்கும் ஆக்கங்கள் ஊடகங்களுக்கு உவப்பானது.

வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக நெடுந்தீவின் இருப்பில் கற்கள் வகிக்கும் பாரிய பங்கு பற்றிய என்னாலியன்ற சிறிய அறிமுகம் ஒன்றை இச் சந்தர்ப்பத்தில் தருகிறேன்.



இலங்கையின் வடபகுதித் தீவுகள் அனைத்தும் இந்து மகா சமுத்திரம், வங்காளக் குடாக் கடல், அரபிக் கடல் எனும் முப் பெரும் பாரிய நீர்ப்பரப்புகளின் இடையே நிலை கொண்டவை வட தென்மேற் பருவக்காற்றுக்கள் ஓயாது நீண்ட தூரம் தள்ளிவரும் வேக மான அலைகளுக்கு முகம் கொடுத்தும் தொடர்ந்து வாழும் கரைக் கட்டுமான முடையவை.

இவை தமது இருப்பை இது வரை பேணுவது என்பது கற்களின் வலிமையால் மட்டுமே. அதிலும் கற்களின் வலிமையின் விசேடத் தன்மை அகமும் புறமும் நெடுந்தீவுக்கு சற்று அதிகமாகவே உள்ளது.

நெடுந்தீவின் அடித்தளப் பாறையும் மற்றத் தீவுகளை விட அகலமானதும் விரிந்து கிடப்பதுமாகும் நாற் புறமும் இறவட்டம் எனப்படும் கரைப்பகுதியே 500 மீற்றருக்குக் குறையாத தூரத்தைக் கொண்டது. கடல் நீர் வற்றும் போது இதைப் பார்க்கலாம். இறவட்டத்தில் பாரிய இயற்கை கற்கள் நாற்புறக் கடலிலும் நட்டுக் கொண்டும், பரவலாகவும் நிறைந்து அலைகளை எதிர்கொள்கின்றன.

தரைப் பரப்பிலும் மண் பரப்பை விடவும் கற்பரப்பு மிக மிக அதிகமானது. அங்கு வாழ் மக்களின் உடலுரம் எதற்கும் முகம் கொடுக்கும் நெஞ்சுரம் எனும் பண்புகளின் அடித்தளமே இப் பாறைகளோ என்ற கேள்வி எழுமளவுக்கு இந்தக் கடற்பரப்போடு மூதாதையர் போராடியிருக்கிறார்கள்.

நிலமட்டக் கற்பரப்பின் கற்களைக் கிளப்பியெடுத்து விவசாயத்துக்கு நிலமமைத்தார்கள். கிளப்பியெடுத்த அதே கற்களைக் கொண்டு பயிர்ப் பாதுகாப்புக்கு வேலிகள் அமைத்தார்கள். சரைப் பகிர் எனப்படும் சிறு கற்களின் அத்திவாரம் 20-30 சென்ரி மீட்டர் உயரமும் அழகாக அடுக்கப்பட்டு அதன் மேல் பெருங் கற்களின் உறுதியான அடுக்குகள் அடுக்கப்பட்டு அழகிய மதில் போல் காட்சிதரும் கற்களின் கட்டுமானம் 'கற் பகிர்கள்' என்றழைக்கப்படுகின்றன. பகிர் (வேலி) கட்டும் பயன் பாட்டுக்குரிய கற்கள் முருகைக் கற்கள் இவை நடுத்தரப் பாரமானவை: கல் வேலி இரட்டைப் பயன்: பல நூறு ஆண்டுகளுக்கு அழியாதிருக்கும்: எல்லை பேணும் சொத்து: இதைப் பார்க்கவும் நெடுந்தீவுக்கு உல்லாசப் பயணிகள் வருவதுண்டு.

"மென் முருகை" எனச் சற்றுப் பாரம் குறைந்த சுண்ணக் கற்கள் (காபனேற்கற்கள்) இவற்றின் பயன்பாடு ஒரு காலத்தில் நெடுந்தீவின் ஏற்றுமதிப் பொருளாதாரமாகவும் இருந்தது.

சுண்ணக் கற்களைச் சிறு சிராய்களாக உடைத்து பூவரசு, மஞ்சவண்ணா, வேம்பு கட்டை விறகுகளை அடுக்கி அந்த அடுக்குகளின் மேல் கற்சிராய்கள் அடுக்கி மாறி மாறிப் பல அடுக்குகள் குவியவிட்ட ஒரு பிரமிட் போன்ற வடிவத்தில் 40-50 அடி உயரத்தில் குவித்து எரியூட்டுவார்கள். சுண்ணாம்புச் சூளை எனப்படும் இது எரிந்து ஆறிச் சுண்ணாம்பாக எடுக்கும் காலம் ஒரு வாரத்தையும் தாண்டும். சீமேந்து தொழிற்சாலை வருவதற்கு முன் வட பிரதேசம் பூராகவும் கட்டுமானப் பணிகளுக்கு இந்த சுண்ணாம்பே உதவியது; ஏற்றுமதியானது.

இதைவிட ஒரு வகைப் பாறைகளாகக் கோளான்கல் அகழப்பட்டன. கிறனைற் எனப்படும் கருங்கற் தீப்பாறைகள் (மலைப்பாறைகள்) வகையைச் சார்ந்தவைகள் என்றாலும் இவற்றின் நிறம் வெண்மையை அண்டிப் போகும் மா நிறத்தைக் கொண்டவை. இவை தூக்கிக் கையாளமுடியாத அளவுக்குப் பாரமானதும் கடினமானதுமான கற்கள் என்பதால், அகழும் இடங்களில் வைத்து சிறுக உடைத்து ஏற்றிச் சென்று சல்லிகளாக அடித்து சிமென்ற் கற்கள் அரிவதற்குப் விற்பார்கள். கல்லுடைப்பதை வாழ் நாள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த பல குடும்பங்கள் அன்று ஊரில் இருந்தன. இன்று ஒருவர் கூட அந்தத் தொழிலோடு இல்லை.

இதே கோளான் கற்கள் தனித் தனிப் பாறைகளாக இல்லாமற் பெரிய பரப்புகளில் படர்ந்த பாறைகளாகவுமுள்ளன. இந்தப் பாறைப் படர்வுகள் சீமெந்தால் மெழுகியது போல அழுத்தமான மேற்பரப்பை அண்டிய தோற்றமுடையவை. இந்தப் பாறைப் படர்வுகளில் ஒரு புல் நுனியைக் கூடக் காணமுடியாது. கடப்பாரையோ அலவாங்கோ போட்டால் நெருப்புப் பொறி பறக்கும் அளவுக்கு கெட்டியானவை, இலகுவில் உடைவுக்குட்படாதவை.

நெடுந்தீவில் இப் படர்வு பெரிதாகவுள்ள இடங்கள் சாறாப்பிட்டியும், தொட்டாரமும். யாழ் குடாநாட்டிலும் திருநெல்வேலி, புத்தூர், காங்கேசன்துறை, வசாவிளான், கைதடி இன்னும் சில சில இடங்களில் இது போன்ற பாறைப்படர்வுகள் காணப்படுகின்றன. இப்படியான தோற்றமுள்ள நிலப் பகுதியைப் பொதுவாகக் கலட்டி என்ற பெயரில் அழைப்பார்கள். நெடுந்தீவில் பகுதிப் பெயரல்லாமல் காணப்படுகின்றது.

தொட்டாரத்தில் இடை விட்டு இடை விட்டு அதிக பரப்பிலிருந்தாலும், சாறாப்பிட்டியில் இந்தப் படர்வின் பரப்பு 10 அல்லது 12 ஏக்கர் அளவைத் தாண்டும் தொடர்பரப்பாகவுள்ளது. படர் பாறை களின் சராசரி ஆழமும் 12 அடிகளுக்குக் குறையாதிருக்கும்.

இப்போ உங்கள் கற்பனையைப் பறக்கவிடுங்கள் பத்து ஏக்கர் பரப்புள்ள, பத்தடி ஆழமான, இரும்பு போலக் கெட்டியான ஒரு பாறையில் 40 முழ மனிதன் மிதித் தாலோ 400 கோடி தொன் எடையை வைத்தாலோ சேற்றில் பதிவது போல ஒரு பதிவையோ தடயத்தையோ ஏற்படுத்த முடியவே முடியாது அப்படியிருக்க இந்த ஐதீக மனிதப் பாதம் எப்படி?

அங்கு அகன்ற மனிதப் பாத வடிவமொன்று காணப்படுகிறது உண்மை தான் பாதமோ மேல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ மூன்று அங்குல ஆழமாகப் பதிந்திருக்கிறது. இது மனிதன் மிதிப்பதால் சாத்தியமாகுமா?

## நம்பகத் தன்மையை முழுமையும் மறுதலிக்கின்றதான கீழுள்ள நான்கு அனுமானங்களையும் பார்ப்போம்?

1. நாற்பது முழத்தில் எப்போ மனிதனிருந்தான்? நான்கு முழ மனிதனையே பாதத்தின் அளவை வைத்து உயரத்தைத் துல்லியமாகச் சொல்லி விட முடியாது. ஒரே அளவை வைத்து உயரத்தைத் துல்லியமாச் சொல்லிவிட முடியாது, ஒரே உயரமான எல்லோருக்கும் ஒரே அளவாக சப்பாத்துக்கள் பொருந்துவதில்லை. அது போகட்டும் காலுள்ள இடம் நெடுந்தீவின் தென் மேற்குத் தொங்கல் வடகிழக்குத் தொங்கலுக்கு குறைந்தது 7 கிலோமீட்டர் தூரமிருக்கும். 40 முழ உயர மனிதனாக இருந்தாலும் 20 அடிக்கு மேல் கவடு எட்டி வைக்க முடியுமா? கவுண்டன் - செந்தில் வாழைப்பழப் பகிடி மாதிரி ஒரு கால் இங்க இருக்கு மற்றக்காலெங்க? சரி மண்ணில தான்

வைக்கப் பட்டாலும் இந்தக் கல்லில் இந்த அழுத்த மெண்டால் மண்ணில் ஒரு நிலாவரைக் கிணறு காணனுமே.

2. கற்பனைக் கதையின் கற்பனைப் பாத்திரங்களை நிஜமாக நம்பிக் கடவுளாக்கி மலையைத் தூக்கியது, கடலுக்கடியில் பாலமிருக்கிறது என்று கடைஞ்செடுத்த ராமாயண - பாரத முட்டாள் தனத்தில் அலையும் மக்கள் தானே இதையும் சில வேளை நம்புவார்கள்.

3. மனித பாதச் சுவட்டினைப் போன்ற கற்பாறைகள் அத்தீவெங்கும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று மற்றொரு செய்தியும் பிரசுரமாகியிருந்தது. இது முழுமையும் தவறான செய்தி நிலத்தில் கண்டெடுக்கும் கற்களை அண்ணளவாக ஒரு தோற்றத்தில் உருவகப்படுத்திப் பார்க்கலாமே தவிர மனித வேலைப்பாடுகளாலானவையை துல்லியமாகவோ புதைபாட்டுச் சிதைவுகளோடோ காண முடிந்த உருவப் பாறைகளா என்ற விபரங்கள் எதுவும் செய்தியில் கிடையாது


4. பௌதீகக் காரணங்களான வெப்பமும் நீரும் சிதைக்கலாம், கரிய நிறப் பாறைகளில் வெப்பம் உறிஞ்சப்படும் போது மேற்பரப்பு மட்டும் அதிக வெப்பமடையும் காரணத்தால் கற்கள் சிதைவதும் நீரால் கரைக்க முடியாத பொருளில்லை என்பதால், நீரரிமானத்தாலும் சிதைவுகள் ஏற்பட்டிருக்கலாம். அந்த வகை வாய்ப்புகளும் மிகக் குறைவு. இப் பாறைகளின் அழுத்தமான பரப்பும் வெள்ளை சார் நிறமும் ஒளித் தெறிப்புக்கு வாய்ப்பே தவிர அதிகம் உறிஞ்சாது. இத் தீவில் மழை நீரின் பொழிவு குறைவு அப்படி பொழிந்து மாரி வெள்ளம் வந்தாலும் ஓரிரு நாளுக்கு மேல் சாறாப்பிட்டி வெளியில் தங்குவதில்லை ஓடி வடிந்து விடும் இந்த இரு காரணிகளும் கூடச் சிதைவை ஏற்படுத்த வாய்ப்பற்ற போது விரல்களே துல்லியமாத் தெரியும் ஆழமான பாங்கான பாதத்தின் பதிவு எப்படி?

இந்த கிறனைற் பாறைகளின் 10 - 12 அடி ஆழத்தின் கீழ் 'கோறல்லைம்ஸ்ரோன்' என்ற கொத்தைக் கல்வியப் பாறைகளின் படிவுகள் காணப்படுகின்றன. காற்றுப் புகும் இடைவெளி கொண்ட இவையுள்ள இடமெல்லாமே அருமையான நன்னீர் ஊற்றுக்கள் வருகின்றன. இதையறிந்து கொண்டு சாறாப்பிட்டியில் முதலில் நான்கு நன்னீர்க் கிணறுகள் தோண்டப்பட்டிருந்தன. இது தாச்சாயின் மலைக் குகைகளைப் பொழிந்து பாதையமைத்தது போல் கல்லுளிகள் கொண்டு பொழியப்பட்ட கிணறுகள். இக்காலம் நெடுந்தீவினை ஒல்லாந்தர் வைத்திருந்த காலங்களாக இருக்கலாம் என்ற கணிப்பு.

இந்தப் பொழிதலுக்காக வரவழைக்கப்பட்டவர்கள் தங்குவதற்காக அமைந்திருந்த கூடாரமருகே இவர்கள் பொழுதுபோக்காகப் பொழிந்தெடுத்த ஒரு காலடிச் சித்திரம் தான் கதைமாறி நாற்பது முழ மனிதனின் பாதமாக இன்று சொல்லப்படுகிறது யாரும் சென்று பாருங்கள் விளம்பரப்படுத்துங்கள் வேண்டாமென்றில்லை பகுத்தறிவைத் தொலைக்காத பார்வையாளர்களாக.

**திரு.வை.லோகநாதன்**
**நெடுந்தீவு**

**நன்றி**



இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும்.
நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர் பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

-பான்னி ப்ளேயர்-

# நாட்டின் சொத்து

**கம்யூனிஸ்ட் தலைவரான ஜீவானந்தம் தொடக்கத்தில் காங்கிரசில் இருந்த போது காந்தியை சந்தித்தார்**



"உங்களுக்கு ஏதேனும் சொத்து இருக்கிறதா?" என்று கேட்டார் காந்திஜி
"தாய் நாடு தான் என் சொத்து" என்றார் ஜீவா
"இல்லையில்லை நீங்கள் தான் தாய் நாட்டின் சொத்து என்றார். காந்திஜி"

# பசுந்தீவாம் நெடுந்தீவு

வாடைக்காற்று வசந்தமாய் வீச
மேகம் சிலு சிலுத்து வீச
தென்றல் காற்று கல கலக்க
கடலலைகள் தாலாட்டும் தீவே
எம் தீவு நெடுந்தீவு

நான்கு பக்கமும் கடல் சூழ்ந்து
எம் தீவைப் பாதுகாத்து
தீவு அன்னையாய்க் கடல் நின்று
கிராமம் விளங்க வழி செய்தன
எம் தீவு அன்னையே போற்றி

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் கொண்டு
சுற்றுலாக் கைத்தொழில் சிறந்து விளங்கி
எம் தீவை அனைவருக்கும் வெளிக்காட்டி
தீவை உலகறியச் செய்யும்
எம் தீவு அன்னையே போற்றி

வட மாகாணத்திலே உள்ள
யாழ்ப்பாணம் என்னும் இடத்திலே
யாழ்ப்பாணத்தின் வட மேற்கிலே
நெடுந் தூரத்தில் அமைந்துள்ள
எம் தீவு அன்னையே போற்றி

பெருக்கு மரம் எனப் புகழ் பெற்ற
ஒரு பெரிய மரத்தை எமக்கு அளித்த
அந்த மரத்தின் ஊடாக
சிறந்த பெறு பேற்றைப் பெற வழி செய்த
எம் தீவு அன்னையே போற்றி

பல புறாக்களை எமக்களித்து
அவை வாழ நல் இருப்பிடம் அமைத்து
அதை அழகான இருப்பிடமாய் அமைத்து
அதற்கு புறாக்கூடு என்று பெயர் வரக்காரணமான
எம் தீவு அன்னையே போற்றி



பல குதிரைகளை எமக்குத் தந்து
அவைகளை வாழ நல் இருப்பிடம் தந்து
அவற்றைப் பாதுகாத்து வளர்த்து
அதற்கு குதிரை லயம் எனப் பெயர் வர வழி செய்த
எம் தீவு அன்னையே போற்றி

பனை எனும் கற்பகத் தருவை எமக்களித்து
அதில் மக்கள் பயன் பெறச் செய்து
அதிலும் பதினாறு வட்டை அமைத்து
எம் தீவு புகழ் பெறக் காரணமாகும்
எம்தீவு அன்னையே போற்றி

பல கைத்தொழில்கள் நிறைந்து
அதில் பல உருவகங்கள் அமைத்து
கைத்தொழில் விருத்தியடைந்து
நாடு முழுவதும் பரவக் காரணமான
எம் தீவு அன்னையே போற்றி

இவ்வாறு பல அற்புதங்கள் கொண்டதாய்
எமக்கு ஒரு தீவை அளித்து
அது அழியாது பாதுகாத்து
எமக்கு வளம் சேர்த்துக் தந்த
எம் அன்னையே போற்றி

**த.சாருஜா**
**தரம் - 07**
**யா/நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**




# பசுந்தீவாம் நெடுந்தீவு

நாற் புறமும் கடல் சூழ்ந்த
இனிய தென்றல் இசை வாய்ந்த
இன்னிசையால் அலை பாய்ந்த
எழில் மிகுந்த கன்னியாவாள்
எம் தீவின் பெருமை கொண்டாள்

இயற்கையுடன் இணை பிரியாள்
என்றுமிவள் நிலை குலையாள்
பசுமை மிக்க பருவப் பெண்ணாய்
பல இனத்தைக் கரு சுமந்தாள்

எழில் வளமும் பெருமரமாம்
பெருக்கடியின் பெருமையுடன்
பல இனங்கள் பார்வையிட்ட
பாதணியின் சுவடு கொண்டாள்

**வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள்.**

**-லியோ டால்ஸ்டாய்-**

பெரு வளமாய் குதிரை வளம்
பெருகுதுங்கே வெல்லையிலே
பெயர் சொல்லும் பசுந்தீவைப்
பேசவைக்கும் பெருமை கொண்டாள்

மனித வளம் வியக்க வைக்கும்
அடி மனித நாற்பதுவாம்
அதைப்பார்க்க வெளிநாட்டின்
அணியினரோ பல விதமாம்

கரு சுமந்த கன்னியினை
அரவணைத்துக் காப்பதற்கு
அவள் சுமந்த பிள்ளைகளே
பெருமை சொல்லும் செல்வரன்றோ

வெளி நாட்டவரும் வியக்கின்ற
விந்தை வளம் கொண்டவளே
பெரிய தலைவர்களைப் பெற்றெடுத்த
பேருவகை கொண்டவளே

கடல் மீன்கள் கதை சொல்லும்
கவிதையுந்தன் கண்களம்மா
கடன் பட்டோர் பலரே
பசுந்தீவில் கருவிலன்றோ


பசுமை மிக்க இவ்விடத்தில்
ஆட்சி செய்த ஆண்டான்கள்
ஆண்டழிந்த கோட்டையே
ஆயிரம் கதை சொல்லுதன்றோ

பசுமை மிக்க இவ்விடத்தில்
பல இழப்புக்கள் நடக்க
எம் மன்னையவள் தம்மவரை
எல்லை காத்து நின்றாளன்றோ

எழில் மிகுந்த இவ்விடத்தில்
பனை மரங்கள் பல விதம்
பல விதமாய் பனை மரங்கள்
பசி தீர்க்கும் பயன் பாடம்மா

இயற்கை வளம் நிறைந்த எம் தீவில்
இனிய தென்றல் ஊஞ்சலாட
வானத்துப் பறவைகள் உல்லாசமாய்
பறந்து திரிகின்றன
பிராணிகளின் ஒலிகள்
எம்தீவில் பலவிதம்

**அ.பிறின்சி**
**தரம் - 06**
**யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**






# பசுந்தீவாம் நெடுந்தீவு

மண்ணில் கால் வைக்கும்
மைந்தர்களே எம் தீவில்
நாளைய தலைவர்கள்
நீங்கள்

வாடை காற்றின் வசந்தமே
எம் பசும் தீவாம் நெடுந்தீவு
அதில் நீர் கால் வைக்கின்றீர்
எம் தீவில் உம்மை நாம் வரவேற்க

எம் தீவு நெடுந்தீவாம்
அதை காப்போம் என
உறுதி கொள்ளுகின்றோம்
மனதை ஒரு நிலைப்படுத்துவோம்
அதை மகிழ்ச்சியுடன் பாதுகாப்போம்

இன்பம் துன்பமும் காத்திடும்
எம் பசும் தீவு அதை
நாம் மதித்து நடப்போம்
என்றும் உணர்ந்திடுவோம்


அன்பின் தாய் என்று
எம் நெடுந்தீவை அணைத்திடும்
இயற்கை நிறைந்த தீவு
அதில் இயற்கை வளங்கள்
நிறைந்த தீவு

கனிய வளங்கள் எம் தீவில்
இயற்கை நிறைந்த அன்பு தீவாம்
எம் தீவை இணைக்கும் பல கைகள்
அன்பூட்டும் பல உள்ளங்கள்

ஆயிரம் கைகள் இருந்தாலும்
அவர்களை உருவாக்கி
ஒற்றுமையாக ஒன்று பட்டு
அத் தீவை கட்டி எழுப்புவோம்

எம் ஆனந்தத்தடன் மகிழ
அன்பு தரும் உள்ளமும் ஆசையை
மிக மிக மகிழ்வன்புடன்
கைகளை ஒன்றாக

அறிவுடனே கற்று மகிழ
அன்பான செல்வங்களே
எம் தீவில் கால் பதிக்கும்
செல்வங்களே வருக வருக



எம் பசும் தீவாம் நெடுந்தீவை
மதித்து நடந்து கொண்டு
நெடுந்தீவை ஆயிரம் கைகளால்
தூக்கி கொள்வோம்.

**பு.அகிஷா**
**தரம் - 06**
**யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**



தனிநாயகம் அடிகள்

# பசுந்தீவாம் நெடுந்தீவு

தெரிந்தவர்கள் சிந்திக்கலாம்
தெரியாதவர்கள் இரசிக்கலாம்
பசுந்தீவாம் நெடுந்தீவு
பார்ப்பதற்கு மிக அழகு

உட் சென்றால் வருக வருகவென
வரவேற்பு உரை
வரவேற்பார் தனிநாயகம் அடிகள்
மகிழ்ச்சியுடன்

கல் வேலிகளும் இனிய
கற்பகத் தரும் பனைகளும்
இங்கே காட்சியளிக்கும்
கனிவுடன் எமக்கு

குயின் ராணி பேரில்
ஒரு கோபுரம்
சிறிது தூரம் சென்றால்
கல் நாகம் ஒன்று

செய்திகளை பரிமாற
புறாக்களுடன் கூடு ஒன்று
வெடியரசன் பெயருடைய
கோட்டையும் உண்டு

வெள்ளையர்கள் நடமாட
குதிரைகளும் உண்டு
அவற்றை கட்டிக் காக்க
குதிரை லயங்களும் உண்டு

ஒல்லாந்தர் தங்கியிருக்க
கோட்டைகளை கட்டினான்
அவற்றுக்கு வெடியரசன், மீகாமன்
என பெயரும் இட்டான்

அடியற்ற ஆலமரம்
கிளைகளை பரப்பி
பெயருக்கு பெருக்கு மரம்
பேருடன் நிற்க




தனிநாயகம் அடிகள்
சிலை

சுற்றிவர ஆலயங்கள்
வழிபடுவதற்கு
நெடுந்தீவு எனும் ஊரிலே
பெருமையுடன்

தீவுகளில் பெரிய தீவு
நெடுந்தீவு எனும் ஊரு
நான்கு பக்கமும் கடலால்
சூழப்பட்ட தீவு

இடைக்கிடையே கால்வாய்கள்
கலந்த எங்கள் தீவு
கனிவுடனே எம்மை
மகிழவைக்கும் எம் தீவு

படகுகளில் வருபவர்களுக்கு பயம்
எமக்கோ பழஞ்சோற்றுப் பதம்
நன்றி மீண்டு வருக என
பெயருடன் எம் தீவு

க.லக்்னா
தரம் - 06
யா.்.நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி





# பசுந்தீவாம் நெடுந்தீவு

பசுந்தீவு என அழைக்கப்பட்டது நெடுந்தீவு
நெடுந்தீவில் பனை, தென்னை போன்றவை
உள்ளன. இங்கு பனையின் ஓலையெடுத்து
பாய் , கிடுகு போன்றவை செய்யலாம்.
தென்னை எமக்கு தாகத்தை தணிக்க
சுவையான பானம் கிடைக்கின்றது.
அதே போல தென்னையில் ஓலை எடுத்து
அதை பின்னி எமக்கு இருக்க வீடு
தருகின்றது நல்ல தேங்காய் கிடைக்கின்றது.

பசுந்தீவு நெடுந்தீவு முற்காலத்தில்
நெடுந்தீவில் பசுப் பாலாக இருந்தது
அப்பொழுது பாலை போத்தலில்
அடைக்கப்பட்ட யாழ்ப்பாணம், இந்தியா
போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது

அத்தோடு இது பசுந்தீவு என
அழைக்கப்பட்டது இந்த தீவு
பசும் பாலால் நிறைந்திருந்தது
இந்த தீவை பார்வையிட
எல்லோரும் இங்கு வந்தார்கள்

அப்போது இந்த தீவு செம்மையாக
இருந்தது இங்கு வாழ்ந்த மக்கள்
துன்பம் இல்லாமல் மகிழ்ச்சியாக
இருந்தார்கள் இத்தீவு பசுந்தீவாகக்
பெயர் வரக் காரணமாய் இருந்தது.
இங்கு கடல்வளமும் கலைவளமும்
சிறந்து பசுந்தீவாக விளங்கின.

**யே.கேதீஸ்ராஜ**
**தரம் - 06**
***சீக்கிரியாம் பள்ளம் அ.த.க.பாடசாலை***

**தரம் - 6,7 கவிதைப் போட்டியில்**
**முன்னிடம் பெற்ற கவிதைகள்**


**ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.**
**– ஆப்ரஹாம் லிங்கன் –**

# செங்கை ஆழியானின் "வாடைக் காற்று" ஒரு மீள் வாசிப்பு



ஈழத்து இலக்கிய உலகில் பலராலும் அறியப்பட்ட ஒரு நபர், க.குணராசா என அழைக்கப்படும் செங்கை ஆழியான் ஆவார். இவர்ஒரு புவியல் பட்டதாரி. புவியியல் பாடத்தில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்தவர். கொழும்பு பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர், ஆசிரியர், உயர் நிர்வாகசேவை அதிகாரி, பிரதிக்காணி ஆணையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர், உதவி அரசாங்க அதிபர் என பல்வேறுபட்ட உயர் பதவிகளை வகித்தவர். சிறுகதை, நாவல், பாடநூல் உருவாக்கம், கட்டுரை ஆக்கம், ஆய்வு நூல்கள், தொகுப்பு முயற்சிகள் என பல தளங்களில் தனது ஆளுமையைச் செலுத்தியவர். தனது எழுத்துக்களுக்காக பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர். அவருடைய 'பிரளயம்' 'காட்டாறு' 'மரணங்கள் மலிந்த பூமி' ஆகிய நாவல்கள் தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றன. இவை தவிர, வடக்கு - கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை பரிசு, அரசகரும கலாசார நிகழ்ச்சித் திட்டப் பரிசு, தமிழ் நாட்டின் இலக்கியப் பெருமன்றத்தின் பரிசு,என்பவற்றுடன் இந்து கலாசார அமைச்சு வழங்கிய 'இலக்கியச் செம்மல்' என்ற பட்டமும், கனடா சி.வை. தாமோதரம் பிள்ளை ஒன்றியம் வழங்கிய 'புனைகதைப் புரவலர்' என்ற பட்டம்,எனப் பல பட்டங்களைப் பெற்றவர். 1957 இல் 'கல்கண்டு' இதழில் எழுதிய ஒரு பக்க கதையுடன் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். 1963 இல் நந்திக் கடல், ஆச்சி பயணம் போகிறாள்,ஆகிய இரண்டு நாவல்களை எழுதினார். தொடர்ந்து இறுதி வரையில் தன்னை ஒரு முழுநேர எழுத்தாளராக நிலைநிறுத்திய அவர்,ஐம்பது நாவல்கள் வரையில் எழுதியுள்ளார்.

இதில் 1973 இல் நெடுந்தீவைக் களமாகக் கொண்டு வீரகேசரி வெளியீடாக 'வாடைக் காற்று' என்னும் நாவல் வெளிவந்தது. வெளிவந்து சிறிது காலத்திற்குள் பெருஞ் சர்ச்சைக்குரிய நாவலாக மாறியது. இந்நூலுக்கு எழுதிய முன்னுரையில்,செங்கை ஆழியான் 'ஈழத்து நாவல்களில் பெரும் சர்ச்சைக்கும் சிக்கல்களுக்கும் 'வாடைக் காற்று' நாவல் ஆட்பட்டது போன்று வேறு எந்த நாவலும் ஆட்பட்டதில்லை' என்று குறிப்பிடுகின்றார். அது மட்டுமல்ல 'என்னால் வாடைக் காற்றினையும் எழுத முடியும், காட்டாற்றினையும் எழுத முடியும்.' எனவும் குறிப்பிடுகின்றார். இது அவர் தன்னால் உருவாக்கப்படும் படைப்புக்களில் தனது படைப்பு ஆளுமையில் கொண்டுள்ள நம்பிக்கை,எனக் கொண்டாலும் இங்கு ஆய்வுப் பொருளாக அமையும் வாடைக் காற்று என்னும் நாவல் பல நிலைகளில் பிழையான தகவல்களைக் கொண்டு காணப்படுகின்றமையும் இந்த நாவல் பற்றி முன்வைக்கப்பட்ட மதிப்பீடுகளை நோக்கும்போது அவை நாவலின் கலைத் தன்மையை உச்சத்தில் வைத்துக் கொண்டாடுவதும் எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதனை மீள் வாசிப்புச் செய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.




**நாவலின் களம்**

இந்நாவல்நெடுந்தீவைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் எனக் கொண்டாலும் உண்மையில் நெடுந்தீவின் தெற்கு கடற்கரையை பகைப்புலமாகக் கொண்டு, அந்தக் குறுகிய பகுதிக்குள் நடைபெறும் ஒரு காதல் கதை யின் தோற்றம், வளர்ச்சி, முடிவு பற்றிப் பேசுகின்றது. ஆனால் இக்குறுகிய களம் பற்றிய எடுத்துரைப்புக் கூட நம்பகத்தன்மை கொண்டதாகக் காணப்படவில்லை. இங்கு கதையின் நகர்வுடன்,கடற்கரை, மயானம், கிணறு, ஆலடி

வைரவர் கோவில் என்பன தொடர்புபடுகின்றன. இதில் கடற்கரை என்பது பிரதான கதைக்களமாகக் காணப்படுகின்றது. தொழிலாளர்களின் குடியிருப்பு,அவர்கள் கடல் தொழிலில் ஈடுபடும் காட்சி, அவர்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாடும் போட்டியும் என்றவாறாக கடற்கரை முக்கியம் பெறுகின்றது. ஆனால், இந்நாவலில் நெடுந்தீவிற்கு வெளியில் இருந்துவரும் தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் மீனவர்கள் எந்தெந்த இடங்களில் வாடியமைத்து தொழில் செய்ய வேண்டும் என்ற தரவு பின்வருமாறு காட்டப்படுகின்றது.




'அதோ பார் கிழக்கே தெரியுதே ஆலமரம்... அதுக்கு முன்னால் நிற்கிற பனையிலிருந்து, உங்கே தெரிகிற பூவரசமரம் மட்டும் இருக்கிற கரை உள்ளூர் காரங்களுக்குச் சொந்தம்... அதிலேதான் உள்ளூர் சம்மாட்டி யூசுப்பினுடைய கட்டுமரங்கள் வந்து கரையேறும்... அதிலேயிருந்து மேற்கால அந்தப் புளியமரம் இருக்குமிடத்தில் வெளியூர்க்காரங்க யாரும் தங்கி மீன் பிடிக்கலாம்...'(வாடைக் காற்று, பக்:13) நெடுந்தீவின் தெற்குகரையில் 'வெல்லை' என்னும் பகுதியே இந்நாவலில் குறிக்கப்படும் முக்கிய நிலப் பகுதி, இது தீவின் தென்மேற்கு முனையிலிருந்து தென்கிழக்கு முனை வரை உள்ள பகுதியில் இடையில் அமையும் சிறு நிலப்பகுதி ஆகும். இங்கு முள்ளி, தாழை, இயங்கம் பற்றை,மற்றும் கண்டல் தாவரங்களும் சில இடங்களில் மாத்திரம் ஒரு சில பனைகளும் உள்ளன. ஆனால் இங்கு குறிப்பிடப்படும் புளிய மரம், பூவரச மரம் என்பன இப்பகுதிகளில் காணப்படுவதில்லை. அதேபோன்று இங்குள்ள பொதுக்கிணறு பற்றிச் சொல்லப்படுகின்றது. இக்கிணற்றுப் பகுதிதான் சிமியோன் - பிலோமினா ஆகிய இருவரினதும் காதல் வளரும் இடமாக இருக்கின்றது. அப்பிரதேசத்தில் கிணறு உள்ள இடம் பற்றி பின்வருமாறு சொல்லப்படுகின்றது.

'கடற்கரையில் வாழ்கின்ற ஒன்பது குடும்பங்களுக்கும் தங்களுக்குத் தேவையான குடி தண்ணீரைப் பெறுவதற்குக் கால் மைல் தூரம் வடக்கே செல்ல வேண்டும். அண்மையில் இரு கிணறுகள் இருந்த போதிலும் அவற்றின் நீர் உவர்ப்பாயிருந்ததால் குளிப்பதற்கும், பாத்திரங்கள் கழுவுவதற்குமே அவை உதவின. (வாடைக் காற்று, பக்:5) இங்கு குறிப்பிடப்படும் இரண்டு தகவல்கள் தவறானவையாகும். ஒன்று 'கடற்கரையில் இருந்து கால் மைல் தூரத்தில் நன்னீர்க் கிணறு உள்ளது. இன்னொன்று, கடற்கரைக்கு அண்மையில் உள்ள நீர் உவர்ப்பானது என்பது,ஆனால் கடற்கரையில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்திற்குள் குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றன. இக்கிணறுகளில் உள்ள நீர் உவர்ப்புத் தன்மை அற்ற தூய நீர் ஆகும். கோடை காலங்களில் நெடுந்தீவின் வடக்கு, மற்றும் மத்தியில் உள்ள மக்கள் குறிப்பாகப் பெண்கள் தண்ணீர் எடுப்பதற்காக நெடுந்தீவின் தென்பகுதிக்குத்தான் செல்வார்கள்.

இந்நாவலில் 'சுடலைச் சண்முகம்' என்றொரு பாத்திரம் இடம்பெறுகின்றது. இப்பாத்திரம் ஒழுக்கப் பிறழ்வு கொண்ட பாத்திரமாகவும் கதை நகர்வுக்கு அவசியமானதொன்றாகவும் காணப்படுகின்றது. எனவே இப்பாத்திரத்தை மயானத்துடன் தொடர்புபடுத்த மயானம் பற்றிய தரவு பின்வருமாறு அமைகின்றது.

'கிணற்றுக்கு வடக்கே இருநூறு யார் தூரத்தில் பெரியதொரு ஆலமரம் கிளை பரப்பிச் செழித்து வளர்ந்திருந்தது. அதனோடு இணைந்து சில பனை மரங்களும் காணப்பட்டன. அவ்வூருக்கான பொது மயானம் அங்கேயிருந்தது.' (வாடைக் காற்று, பக்:6) இங்கு குறிப்பிடப்படும் மயானம் ஆசிரியர் குறிப்பிடுவதைப் போன்ற பாங்கில் அமைந்திருந்த ஒன்றல்ல. மாறாக கடற்கரைக்கு மிக அருகிலேயே இருந்தது. இப்போதும் இருக்கின்றது. இக்கணிப்பும் தவறானதாகும்.
அடுத்ததாக 'ஆலடி வைரவர் கோவில்' என ஒரு இந்து ஆலயம் பற்றிய குறிப்பு வருகின்றது.

பிலோமினாவும், சிமியோனும் ஒருவரை ஒருவர் தனிமையில் சந்திக்கும் இடமாக இந்த ஆலயச் சூழல் இடம்பெறுகின்றது. ஆனால் நெடுந்தீவின் தென்கரையில் வைரவர் கோவில் என எவையும் இல்லை. மாறாக 'தெக்காட்டு அம்மன்' கோவில் என அழைக்கப்படும் ஒரு அம்மன் கோவில் கடற்கரையில் இருந்து சுமார் ஐநூறு மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்களை நாம் உற்றுநோக்கும் போது ஒரு விடயம் தெளிவாகின்றது, அதாவது ஆசிரியருக்கு இக்களம் பற்றிய பரீட்சயம் இல்லை என்பதாகும். தொடர்ந்து நாம் பார்க்கப் போகும் விடயங்களில் இது இன்னும் உறுதியாகும்.



## நெடுந்தீவிற்கு வரும் வெளியூர்த் தொழிலாளர்கள்

இந்நாவலில் சிமியோன் கரையூரிலிருந்து ஆண்டுதோறும் மீன் பிடிக்க வரும் மீனவனாகவும், மரிய தாஸ் முதன் முதலாக மன்னார் பேசாலையிலிருந்து தொழில் செய்வதற்கு வந்த மீனவனாகவும் காட்டப்படுகின்றனர். ஆனால் நெடுந்தீவில் இருந்து கிடைக்கப் பெற்ற வாய்மொழித் தரவுகள் மூலமும் நூல் மூல ஆதாரத்தின் அடிப்படையிலும் 'இங்கு காலத்திற்கு காலம் மயிலட்டி, தாளையடி, முல்லைத்தீவு, முதலிய இடங்களில் இருந்தும் மீனவர்கள் வந்து வாடி அமைத்து மீன் பிடிப்பது வழக்கமாகும்.' (நெடுந்தீவு மக்களும் வரலாறும்,விநாயக மூர்த்தி, பக்:55) வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலங்களில் இலங்கையின் வடகடல், கிழக்குக் கடல் என்பன கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே இக்கடல்களில் தொழில் செய்வது மீனவர்களுக்கு பெரும் சவாலாக அமையும். ஆகவே ஓரளவு கடல் கொந்தளிப்புக் குறைவான நெடுந்தீவுக்கு மீனவர்கள் வருவது வழமையாகும். ஆனால் இந்நாவலில் குறிப்பிடுவதைப் போன்று மன்னார், கரையூர் போன்ற இடங்களில் இருந்து மீனவர்கள் வருவதில்லை. காரணம் இந்த இரண்டு இடங்களும் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் ஒதுக்குப் புறத்தில் அமைந்துள்ளன. எனவே இங்கிருந்து அவர்கள் மீன் பாடுள்ள இடங்களுக்கு இலகுவாகச் சென்று வரலாம். எனவே ஆசிரியர் குறிப்பிடும் தரவு நம்பகத் தன்மை அற்றதாக உள்ளது.

## நெடுந்தீவில் கரைவலைப் பாடு

அதிக அளவிலான மனித வலுவைக் கொண்டு செய்யப்படும் தொழில்தான் கரைவலைத் தொழில். இதற்கு கற்பாறைகள் அற்ற மணல் பாங்கான கடல் அவசியம். நெடுந்தீவில் கரைவலைத் தொழில் செய்வதற்குப் பொருத்தமான இடம் நெடுந்தீவின் வடகடலில் சேமக்காலைக்கு அருகில் உள்ளது. மேலும் நெடுந்தீவின் தென்கடல் அதிகமான கற்பாறைகளைக் கொண்ட இடமாகும். ஆனால் இந்நாவலில் நெடுந்தீவின் தென்கரையில் மன்னாரில் இருந்து வந்த சம்மாட்டி மரியதாஸ் கரை வலைத் தொழில் செய்வதாகவும் பல முறை முயன்று,ஈற்றில் ஏனைய மீனவர்கள் வியக்கும் வண்ணம் பெருமளவிலான மீன்களைப் பிடிப்பதாகக் காட்டுவது நகைப்புக்குரியதொன்றாக இருக்கின்றது.

## பாத்திரப் படைப்பு

இந்நாவலில் இடம் பெறும் பாத்திரங்கள் யதார்த்தத் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளன. உதார ணமாக பெண்பாத்திரங்கள் அவற்றுக்கே உரிய நளினத்துடன் உருவாக்கப்பட்டுள்ளனர். இதே போன்று

மரியதாஸ், சிமியோன்,மற்றும்,உதிரியான ஏனைய பாத்திரங்களும் அவற்றுக்குரிய தனித்தன்மைகளைக் கொண்டுள்ளன. ஆனால் நாகம்மாவின் முறைப் பெண்ணாக வரும் 'விருத்தாசலம்' என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள தன்மையானது சினிமாக் கதாநாயகனின் சாயலைக் கொண்டு காணப்படுகின்றது. இதில் முக்கியமாக இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டலாம். விருத்தாசலம் எப்போதும் குதிரையுடனும், தடியின் முனையில் செருகப்பட்ட கத்தி போன்ற ஓர் ஆயுதத்துடனும் காணப்படுகின்றான். அக்கத்தி போன்ற ஆயுத்ததைக் கொண்டு முயல், கூழைக்கடா போன்றனவற்றை வேட்டையாடுகின்றான். 'அவனை ஏமாற்றிய அதே கூழைக்கடாக்கள் காடுமேடெல்லாம் அவனை அலைக்கழித்து, நாகம்மாவின் முன் வெறுங்கையோடு செல்ல வைத்த அதே கூழைக்கடாக்கள், விருத்தாசலத்தின் குறி தவறவில்லை. விர்ரென அவன் கரத்திலிருந்து புறப்பட்ட கூர்த்தடி சதக்கென கூழைக்கடாவின் மார்பில் பாய்ந்தது. அப்படியொரு மரண ஒலியை அவன் எப்போதும் கேட்கவில்லை.' (வாடைக் காற்று, பக்:104) இதே போன்று ஓடுகின்ற முயலையும் அதே கூர்த்தடி கொண்டு வேட்டையாடுகின்றான். நெடுந்தீவில் மழை காலங்களில் வேட்டை நாயின் துணையுடன் முயல் வேட்டையாடுவதும் கழிகளில் (நீர் நிலை) கண்ணி வைத்து கூழைக்கடா பிடிப்பதுதான் வழக்கமான செயல். கூர்த்தடி கொண்டு வேட்டையாடுதல் என்பது நெடுந்தீவின் பயன்பாட்டில் இல்லாத ஒரு விடயமாகும்.

## போனிக் குதிரை



நெடுந்தீவில் குதிரைகள் பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'தீவின் கரடு முரடான வண்டில் பாதைகளில் சிறுவர் முதல் வயோதிபர் வரை 'டக் டக்' என்ற ஒலி எழுப்பியவாறு குதிரைகளில் செல்வது இனிய காட்சிதான். ஒரு பழைய சாக்கினை மடித்துக் குதிரையின் முதுகில் போட்டிருப்பார்கள். ஒரு பலமான கம்பையோ, இரும்புக் கம்பியையோ குதிரையின் வாயில் கொடுத்து "சேணமாக்கியிருப்பார்கள்." '(வாடைக் காற்று, பக்:18) இதன் மூலம் குதிரை என்பது நெடுந்தீவில் உள்ள பொது மக்களின் போக்குவரத்துச் சாதனமாக ஆக்கப்பட்டிருப்பதுடன் நெடுந்தீவின் மக்கள், மேட்டுக்குடி உயர் மக்கள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இங்கு உள்ள குதிரைகள் வெளியிடங்களில் உள்ளவர்களுக்கு விற்கப்படுகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

'என்னுடைய குதிரையை யாழ்ப்பாணத்து ஆள் ஒருவன் வந்து விலைக்குக் கேட்டான்....''

'நல்ல விலை வந்தால் வித்திருக்கலாமே? காடெல்லாம் குதிரைதானே இருக்கு' என்றாள் அவள். விருட்டென விருத்தாசலம் திரும்பி அவளைப் பார்த்தான்.

'அதுக்கு நான் விசம் வைப்பேனே தவிர, பிறரிடம் விற்கமாட்டன்.' (வாடைக் காற்று,பக்:22) என்று கூறுகின்றான். நெடுந்தீவில் குதிரை விற்பனைப் பொருளாக ஒருபோதும் இருந்ததில்லை. அதுவும் சாதாரண ஒரு குடிமகன் குதிரையை விற்பது என்பது நடக்கின்ற காரியமில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும்.

## நாவலின் மொழிப்பிரயோகம்

இப்பகுதி படைப்பு மொழி பற்றிய வாசிப்பாக அமையாது,மாறாக,விபரிப்பு, பாத்திரங்களின் உரையாடல் என்பவற்றின் ஊடாக மொழி மண்வாசனை கொண்டதாக இருக்கின்றதா? என்பது பற்றிக் கவனம் செலுத்துகின்றது. பேச்சு மொழிதான் உயிர்த்துடிப்புள்ளது எனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பேச்சு மொழியின் தொனி, உச்சரிப்பு, மொழி வழக்குகள், இடக்கரிடக்கல் என்பன பிரதேச அடிப்படையில் சாதிக் குழுமங்களின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும். இந்த வேறுபாட்டை நெடுந்தீவு மக்கள் மத்தியில் தெளிவாகக் காணலாம். நெடுந்தீவின் மத்தி, மத்தி மேற்கு, மேற்கு, மத்தி வடக்கு இப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் பேசுகின்ற முறை, பேசும் தொனி, மொழி வழக்குகள் என்பனவற்றில் தெளிவான வேறுபாடு இருக்கின்றது. இந்த வேறுபாடு

நாவலில் கவனிக்கப்படவில்லை. நாவலில் இடம்பெறும் நெடுந்தீவைச் சேர்ந்த பாத்திரங்கள் தமது இயல்பிலிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. உதாரணமாக:

'ஒரு நாள் நல்ல நிலையில் நான் திரும்பி வருவன் அப்பு ....பணம்....பதவி.... செல்வாக்கு இவ்வளவையும் சம்பாதித்துக் கொண்டுதான் நான் இனி இங்கு வருவன்....! (வாடைக் காற்று,பக்:99) இங்கு ஆசிரியர் திருத்தமான எழுத்து மொழியினைப் பயன்படுத்துவதனைக் காணலாம். சில இடங்களில் ஆசிரியர் தமக்குப் பரீட்சயமான பேச்சையே பயன்படுத்துகிறார். 'என்ன தம்பி, ஏதோ கொழும்பாலே வந்ததுபோல ஊர்ப் புதினம், கேட்கிறீர்.... என்றான் கேலியாகச் சண்முகம். 'உந்தக் கொழும்புக்கு ஒருக்கால் நான் போகாமல் விடவாபோறன்...' (வாடைக்காற்று,பக்:56) ஆசிரியர் பிரதேசத்தின் தனித்துவமான மொழிநடைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சிறப்பான சொற்கள்,இடக்கரிடக்கல், மொழிவழக்குகள் என்பவற்றையும் சிறப்பாக எடுத்துப் பயன்படுத்தவில்லை.எனவே இங்கு நாவல் மொழிச்சூழலை விட்டு விலகி அந்நியப்பட்டு நிற்பதைக் காணலாம்.

## நாவலின் பின்னணி

இதுவரை நாவல் பற்றி நோக்கிய விடயங்களில் இருந்து இந்நாவல் ஒரு இலக்கியப் படைப்பை உருவாக்கத் தேவையான ஆழ்ந்த உழைப்பின் விளைவாக உருப்பெறவில்லை என்பதும்,ஒரு எழுத்தாளனுக்குரிய குறைந்தபட்ச நேர்மைகூட இதில் வெளிப்படவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றதொரு விடயமாகும். இந்நாவலில் இவ்வாறான தவறுகள் ஏன் உண்டாகின்றன என்பதை, ஒருவாறு நாம் ஊகித்துக் கொள்ளமுடியும். தொடக்கத்தில் வெளியூர்களில் இருந்து வரும் மீனவர்கள் நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் தான் வாடியமைத்து தொழில் செய்தனர். வாடியமைப்பதில் இருந்து அவர்களின் சகல தேவைகளையும் நெடுந்தீவின் உயர்சாதியினரே மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் நெடுந்தீவைச் சேர்ந்த உயர்சாதி வேளாளப் பெண் மயிலட்டியைச் சேர்ந்த சம்மாட்டியுடன் காதல் கொண்டு இருவரும் களவில் தப்பிச் சென்று விடுகின்றனர். அதன் பிறகு நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் இருந்து துரத்தப்பட்ட மீனவர்கள் தீவின் தெற்கு கரையில் தங்கி தொழில் செய்ய ஆரம்பிக்கின்றனர். 1990 வரை இந்த நிலை தொடர்ந்து இருந்தது. செங்கை ஆழியான் இந்தக் காதல் கதையினைத்தான் தனது நாவலின் கதையாகக் கொண்டுள்ளார். இங்கு அந்த சம்பவங்களை நேரடியாகக் கூறாது மறைமுகமாக குறிப்பிடுகின்றார். கதையில் சில மாற்றங்களை



உண்டுபண்ணுகின்றார். ஆனாலும் நாம் மேலே நோக்கிய விடயங்களை உற்று நோக்கும் போது நெடுந்தீவைக் களமாகக் கொண்டு ஒரு நாவலை உருவாக்கக் கூடிய ஆற்றல் அவரிடம் இல்லை என்பதுதெளிவாகத் தெரிகின்ற ஒரு விடயமாகும். அதேநேரம் இந்த நாவல் நெடுந்தீவுப் பெண்களை இழிவு செய்கின்றது என 'நெடுந்தீவு வாலிப இயக்கம்' மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நாம் இந்த களவுத் திருமணத்திற்கூடாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். இருந்தாலும் நெடுந்தீவின் புவியல் அம்சங்கள், மொழிப் பிரயோகம்,மரபு என்பவற்றினை உள்வாங்கி படைப்பை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஆசிரியருக்கு இல்லை என்பதும், சிமியோன் - பிலோமினா காதல், மரியதாஸ் - நாகம்மா காதல் இணைந்ததா? அல்லது பிரிந்ததா? என்ற புதிரை அவிழ்க்கும் முயற்சியில்தான் செங்கை ஆழியான் தனது ஆளுமையைப் பயன்படுத்தியிருக்கின்றார் என்பதும் இங்கு தெளிவாகக் காணக்கூடிய முக்கிய விடயமாக இருக்கின்றன.

## நாவல் பற்றிய மதிப்பீடுகள்

இப்பகுதி இந்நாவல் பற்றி ஏற்கனவே உள்ள அறிவினை மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. இந்நாவல் பற்றி,உதிரியாக எழுதப்பட்ட சில கட்டுரைகள் கிடைத்துள்ளன. அதில் இந்நாவல் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சரியான மதிப்பீடாக அமையவில்லை. ஒரு வகையில் அவை

வெறும் வெற்றுப் புகழ்ச்சியாகவே அமைந்துள்ளன. அதாவது,யாழ்ப்பாணம் சார்ந்த தீவுப்பகுதிக் கிராமமொன்றின் (நெடுந்தீவு) வாழ்க்கை முறையை மண் மணமும், கடல் வளமும் கமழக் காட்டுவது வாடைக் காற்று.' என்று நா.சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.(மல்லிகை,1988,பக்:5) ஆனால் நா.சுப்பிரமணியம் குறிப்பிடும் இரண்டு வாசனையும் இந்நாவலில் வீச வில்லை என்பது, நாவலை வாசிக்கும்போது தெரிகின்றது. செங்கை ஆழியான் நெடுந்தீவின் மண் வாசனை பற்றிச் சொன்ன விடயங்களை விட சொல்லாது விட்ட விடயங்கள் தான் அதிகம். தெற்குக் கடற்கரையில் ஒரு குறுகிய பிரதேசத்தில் நடக்கின்ற விடயமே நாவலில் உள்ளது.அதுவும் முழுமையாக இல்லை. இரசிகமணிகனக, செந்திநாதன்' 'ஈழத்து இலக்கிய உலகில் ஈழத்து பூதந்தேவனார் தொடக்கம் செங்கை ஆழியான் வரை ஒரு இலக்கிய வரலாறு உண்டு. 'வாடைக் காற்று' என்ற அந்த நவீனம் நாவல் துறையில் ஒரு மைல்கல்' என்று குறிப்பிடுகின்றார்.(செங்கை ஆழியான் வாழ்வும் படைப்பும்,2007,பக்:65) இது எவ்வளவுக்கு உண்மை என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம். பேராசிரியர் விசாகரூபன் 'பண்பாடு' என்னும் இதழுக்கு எழுதிய 'செங்கையாழியானின் வட்டாரப்பண்பு நாவல்களில் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் - ஓர் ஆய்வு' என்னும் கட்டுரையில், 'அமரர் கே. டானியலின் வெற்றிடத்தினை நிரப்பக் கூடியவராக எண்ணப்பட்டு வரும் செங்கையாழியான் தரமான பல நாவல்களைப் படைத்துள்ளார் என்பதனை விமர்சகர்கள் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். 'வாடைக்காற்று' 'காட்டாறு' முதலான நாவல்கள் இவரது படைப்பு நுட்பத்துக்கான மிகச்சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.' மேலும் 'காட்டாறு' முற்றத்து ஒற்றைப் பனை,'காவோலை','கிடுகு வேலி', என்ற நாவல்களின் வரிசையில் 'வாடைக் காற்று' நாவலும் வட்டாரப் பண்பு நாவல் என்று குறிப்பிடுகின்றார். (பண்பாடு,2009,பக்:49)ஒரு வட்டாரப் பண்பு நாவல் என்பது அந்தப் பிரதேசத்தின் மொழியோடும் பண்பாட்டு மரபுகளோடும் இரண்டறக் கலந்ததாக இருக்கவேண்டும். ஆனால்,இந்த நாவலைப் படிக்கும்போது இங்கு குறிப்பிடப்படும்,மொழி, பண்பாடு, மரபு என்பன யாருடையன? இதில் உள்ள நம்பகத்தன்மை எவ்வளவு? என்ற வினாக்கள் எழுகின்றன. எதுவும் மண்ணின் இயல்போடு பொருந்தவில்லை. அனைத்தும் செயற்கைத் தன்மை கொண்டு காணப்படுகின்றன. நாஞ்சில் நாடான் கூறுவதைப்போன்று 'நான் தூத்துக்குடியில் போய் ஒரு பத்து நாட்கள் தங்கியிருந்து, அங்கு உப்பளத் தொழிலாளர்களின் சொற்களை எல்லாம் சேகரித்து, பின்பு அதை வைத்து நாவல் எழுதிவிட முடியாது. அது நாவல் என்ற பெயரில் அழைக்கப்படுவது கிடையாது. வாழ்க்கையின் ஆணிவேர், பக்கவேர், சல்லிவேரைக் கண்டிராத நான் செய்யும் நாவல் போலியானதாகவே இருக்கும்' எனக் குறிப்பிடுகின்றார். (நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று, 2003,பக்:34,) இந்தக் கூற்று செங்கையாழியானுக்குப் சாலப் பொருந்தும். இதை மெய்ப்பிக்கும் வகையில் இருக்கிறது அவருடைய கூற்று, 'எனது நண்பன் க.பரமேஸ்வரன் (பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்) தனது பட்டப் படிப்பிற்காக நெடுந்தீவு பற்றிய ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தார். அவரோடு நெடுந்தீவில் சில நாட்கள் தங்க நேரிட்டது. யாழ்ப்பாணக் கச்சேரியில் நிர்வாக சேவைப் பயிற்சியை மேற்கொண்டிருந்தபோது சில தடவைகள் நெடுந்தீவிற்குச் செல்ல வாய்ப்பும் கிட்டியது. இவற்றினால் நெடுந்தீவின் அழகும் தனித்துவமும் என்னைக் கவர்ந்தன. அப்பின்னணியில் ஒரு நாவலை உருவாக்க விளைந்ததன் அவாவாக 'வாடைக் காற்றை' எழுதினேன்.'எனக் குறிப்பிடுகின்றார்.(மல்லிகை,1990,பக்:46,)இதை மெய்ப்பிக்கும் வகையில் உள்ளது செ.யோகராசாவின் கூற்று,'வாடைக்காற்றில் நெடுந்தீவு மக்களது வாழ்விற்கும் சுற்றாடலுக்குமிடையில் நெருங்கிய பிணைப்பைக்காண முடியவில்லை. குறிப்பிட்ட பிரதேசமொன்றில் பிறந்து, வளர்ந்த ஒருவருக்கும் சுற்றுலாவுக்குச் சென்று சில வாரம் தங்கநேருமொருவருக்கும் இடையிலான வேறுபாடே இவ்விரு நாவல்கட்குமிடையிலான தாரதம்மியமாகலாம். பல நாவலெழுதித் தேர்ந்த அனுபவமும், சரளமாகக் கதை பின்னும் திறமையும், புவியல் அறிவுமே வாடைக்காற்றாக வீசியுள்ளன. (அலை,1975,பக்:5)இவருடைய கருத்தைத் தவிர ஏனைய கருத்துக்கள் காய்தல் உவத்தல் அற்ற வகையில் அமையவில்லை என்பது தெரிகின்றது. படைப்பைக் கவனத்தில் எடுக்காமல் ஆசிரிய விம்பத்தை மையப்படுத்தி விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே படைப்பைப் போலவே விமர்சனமும் ஒரு வகையில் ஊனப்பட்டுள்ளது என்றே கூறத்தோன்றுகின்றது.

## மதிப்பீடு

வாடைக் காற்று என்ற பெயரில் ஒரு பிரதேசத்தின் ஆன்மா சிதைக்கப்பட்டுள்ளது. யதார்த்தம் என்ற பெயரில் கற்பனாவாதத்தை உள்வாங்கி, நாவல் படைக்கப்பட்டுள்ளது. நாவலில் பல்வேறுபட்ட தரவுகள், சித்திரிப்புக்கள் பொருத்தமற்றவாறு அமைந்துள்ளன. செயற்கைத் தன்மை அதிகமாக

உள்ளது. வணிக எழுத்தின் தந்திரங்களையே ஆசிரியர் அதிகம் பயன்படுத்துகின்றார். பெண்களின் அங்க அவயங்களை வர்ணிப்பதில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். ஆசிரியர் தாம் விரும்பியவாறு தரவு களைக் கையாள்கின்றார். எனவே அவருடைய ஏனைய படைப்புக்களிலும் இவ்வாறான பாணியைக் பயன்படுத்தியிருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. ஒரு தனி வீடு' என்னும் நாவலில் தளையசிங்கம் புங்குடுதீவு' என்னும் கிராமத்தைக் காட்டியது போன்று, சோபாசக்தியின் நாவல், மற்றும் கதைகளில் அல்லைப்பிட்டி என்னும் கிராமம் வெளிப்படுவதைப் போன்று, பாலமனோகரனின்'நிலக்கிளி' நாவலில் முல்லைத்தீவின் 'தண்ணீரூற்று' என்னும் பிரதேசம் வெளிப்படுவதைப் போன்று,வாடைக்காற்றில் நெடுந்தீவைத் தரிசிக்க முடியவில்லை.இந்த வகையில் இந்நாவலில்இத்தீவின் வாழ்க்கை முறை, பண்பாடு, மரபு,கலைத் திறன் என்பவற்றைத் தேடுவோருக்கு பெரும் ஏமாற்றமே எஞ்சும் என்பதனைத் துணிந்து கூறலாம்.

**அ.ரொனிராஜன்**
**நெடுந்தீவு**
**ஆசிரியர்**



**கண்ணெதிரே காணும் ஒவ்வொருவரையும் நம்புவது அபாயகரமானது. அதைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும் அபாயகரமானது.**

**–ஐன்ஸ்டைன்–**

**எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.**

**–சார்லஸ்–**

**ஒரு பொழுதும் வாழ்க்கையில் நம்பிக்கை, வாக்கு, சுற்றம், இதயம் இந்த நான்கையும் முறித்துக் கொள்ள முயலாதீர்கள். ஏனெனில் அவைகளனைத்தும் உடையும் பொழுது ஒலி எழுப்பாது போனாலும் பெரும் வலியை ஏற்படுத்தும்.**
**ஜாதிய மனிதர்கள் அச்சத்தினால் அடங்கி இருக்கின்றனர். நல்ல மனிதர்கள் அன்பினால் அடங்கி இருக்கின்றனர்.**

**–அரிஸ்டாட்டில்–**

**மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.**

**–மாத்யூஸ்–**


# எனது கிராமம்

எனது கிராமம் நெடுந்தீவாகும். அது "பசுந்தீவு" என அழைக்கப்படும் ஏனென்றால் முற்காலத்தில் நெடுந்தீவில் இருந்து இராமேஸ்வரத்து பால் கொடுத்ததால் இது "பசுந்தீவு" என்று அழைக்கப்படுகின்றது. நெடுந்தீவில் பல சுற்றுலா மையங்கள் உண்டு. இலங்கையில் மிகப் பெரிய தீவு நெடுந்தீவாகும்.

இங்கு ஒல்லாந்தர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. புறாக்கூடு, நாற்பது அடி மனிதனின் காலடி, ஒல்லாந்தர் கோட்டை, 16 வெட்டுப்பனை, கோரி எனும் பல சுற்றுலா மையங்கள் காணப்படுகின்றன இங்கு முக்கியமாக மீன் பிடித் தொழில் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றது இங்கு பல இயற்கை வளங்கள் உண்டு. உதாரணம் பனை, இதன் மூலம் ஓலையால் வேயப்பட்ட பாய், பனங்காய் இன்னும் பல வளமும் கிடைக்கின்றது.

இன்னும் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் எமது கிராமமான நெடுந்தீவு மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் எம் தீவில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் செல்வார்கள். இங்கு இரண்டு மதங்கள் உண்டு. கிறிஸ்தவர்கள், இந்துக்கள். இங்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் பல உண்டு. இந்துக் கோயில்களும் உண்டு. எம் தீவுக்கு பல சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள்.

அவர்கள் கடல் மூலமாக பயணத்தை மேற்கொண்டு எங்கள் கிராமத்தில் உள்ள சுற்றுலா மையங்களை பார்வையிட வருவார்கள். எமது கிராமத்தில் மிகப் பெரிய விருட்சமாக பெருக்குமரம் உள்ளது. சுற்றுலா பயணிகள் எம் தீவுக்கு வந்து ஆட்டோக்களில் ஏறி பல சுற்றுலா மையங்களை பார்வையிடுவார்கள். அவற்றைப் பார்த்ததும் அவர்கள் மனதில் ஒரு சந்தோசம்.




இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக மிகப் பெரிய கட்டிடங்கள் கட்டியிருக்கின்றனர். இங்கு 3 உயர்தர பாடசாலைகள் காணப்படுகின்றன. இங்கு 8 பாடசாலைகள் காணப்படுகின்றன. இங்கு முற்காலத்தில் ஒல்லாந்தர் கொண்டு வந்த குதிரைகள் தற்போது ஏராளமாக காணப்படுகின்றன. எம் தீவு 7 கிலோ மீற்றர் நீளமும் 05 கிலோ மீறற்ர் அகலமும் கொண்டது. எமது கிராமத்தில் பிரதேச வைத்தியசாலை உள்ளது. தேவானந்தா மண்டபமும் காணப்படுகின்றது வைத்தியசாலயைின் பின் ஒரு ஒல்லாந்தக் கோட்டை காணப்படுகின்றது. அதில் சுரங்கவழி உள்ளதாகக் கண்டு பிடித்துள்ளனர்.

இங்கு பிரதேசசபை, பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் போன்றவை காணப்படுகின்றன. எமது கிராமம் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. இங்கு பழைய ஆலயங்களின் இடி பாடுகளும் காணப்படுகின்றன. இங்கு மணல் கடற்கரை காணப்படுகின்றது. நெடுந்தீவில் இருந்து பார்த்தால் இராமேஸ்வரம் தெரியும் எமது கிராமம் மிக அழகான கிராமமாகும். இங்கு உப்பு விளையும் இங்கு பல வரலாற்றுச் சின்னங்கள் இன்றும் அழியாமல் உள்ளன.

**க.கேஜினா**
**தரம் - 07**
***சீக்கிரியாம் பள்ளம்***

# எனது கிராமம்

எனது கிராமம் நெடுந்தீவு ஆகும். இது வடமாகாணத்திலுள்ள யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது ஓர் கரையோரப் பிரதேசமாகும். இது பால் தீவு பசுந்தீவு என அழைக்கப்படுகின்றது. இதற்கு நெடுந்தீவு என பெயர் வரக் காரணம் பல இடங்களில் இருந்து நெடுந்தூரத்தில் இருப்பதாலே ஆகும். நெடுந்தீவுக்கு பால் தீவு எனப் பெயர் வரக் காரணம் இங்கு இராமேஸ்வரத்துக்குப் பால் கொடுத்ததால் ஆகும்.



நெடுந்தீவு பல பயணிகள் வந்து பார்வையிடும் ஓர் இடமாகும். இங்கு பல அற்புத இடங்கள் உண்டு. இங்கு குதிரைகள் உண்டு. இங்கு போர்த்துகேயர் ஆட்சிக்காலத்திலேயே குதிரைகள் கொண்டு வரப்பட்டன. இங்கு குதிரைகளைப் பராமரிப்பதற்காக நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டி எனும் இடத்தில் குதிரை லயம் கட்டப்பட்டன. அது 100அடி நீளமும் 10அடி அகலமும் கொண்டு பல தூண்களாக கட்டப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் 15 வட்டாரங்கள் உண்டு. நெடுந்தீவில் பார்வையிடக் கூடிய இடங்கள் பல உண்டு அவைகளில் :- மணல் கிணறு, புறாக்கூடு, பெருக்குமரம், குயின் ரவர், மீகாமன் கோட்டை, வெடி அரசன் கோட்டை, குதிரை லயம், நாற்பதடி மனிதனின் பாதம் மூலிகைக்கேணி என்பனவாகும். இங்கு 8 பாடசாலை கள் உண்டு. நெடுந்தீவிற்கு பயணம் செய்யும் கப்பல்கள் மூன்று உள்ளது. அது நெடுந்தாரகை, வடதாரகை, குமுதினி என்பனவாகும். நெடுந்தீவில் கப்பல்கள் அணைப்பதற்கு பாலம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

நெடுந்தீவில் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் மீகாமன் கோட்டை கட்டப்பட்டது. இது நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு பின்னால் கட்டப்பட்டுள்ளது. புறாக்கூடு புறாக்களை பராமரிப்பதற்காக பல அறைகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இது பிரதேச செயலகத்தில் அருகில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு அருகில் பழைய வைத்தியசாலை மற்றும் கோட்டை உள்ளது. இது முருகைக்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது 40 அடி மனிதனின் பாதம், இது நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டி எனும் இடத்தில் உள்ளது. அப் பாதம் ஒரு கல்லில் வைத்து பதிக்கப்பட்டுள்ளது. இப் பாதம் கிட்டத் தட்ட ஒரு அடி நீளமாக இருக்கும். வெடியரசன் கோட்டை நெடுந்தீவு மேற்கு பெரிய துறை எனும் இடத்தில் உண்டு. இது கடலுக்கு அருகில் உண்டு. பெருக்கு மரம் இது ஓர் குகை வடிவில் அமைந்துள்ளது. இதன் பழம் பல நோய்களுக்கு மருந்தாக பயன்படும். குயின் ரவர் இங்கு ராணிக் கோபுரம் என அழைக்கப் படுகின்றது. இது நெடுந்தீவில் தெற்குப் பகுதியில் கடலுக்கு அருகில் உள்ளது. மூலிகைக் கேணி உள்ளது. நெடுந்தீவு பல அற்புதங்கள் கொண்ட ஒரு தீவாகும்.

**த.துளசிகன்**
**யா/நெடுந்தீவு மகா வித்தியாலம்**
**தரம் - 06**

# எமது கிராமம்

எமது கிராமம் நெடுந்தீவு ஆகும். இவ் நெடுந்தீவு "பசுந்தீவு" எனவும் அழைக்கப்படும். பசுந்தீவு என்பது இராமேஸ்வரத்திற்கு பால் கொண்டு சென்றமையால் நெடுந்தீவு "பசுந்தீவு" எனவும் அழைக்கப்படுகின்றது. பசுந்தீவாகிய நெடுந்தீவு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இவ் "பசுந்தீவில்" ஏராளமான சுற்றுலா மையங்களும் உண்டு. அவையாவன: புறாக்கூடு, குதிரைகள் லயம், கோட்டைகள், 16 வட்டுப்பனை, கோரி, மணற்கடற்கரை, வைத்திசாலை, கோட்டை இன்னும் சில சுற்றுலா மையங்களும் காணப்படுகின்றன. இக்கோட்டைகளுள் ஒன்றாக கருதப்படும் ஒல்லாந்தர் கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்டது.





இங்கு மணல் கடற்கரையானது மணல் மண் நிறைந்த சம வெளியாக காணப்படுகின்றது. அங்கு விளையாட்டு மைதானமும் காணப்படுகின்றது இப் "பசுந்தீவில் காணப்படும் வைத்திசாலை, கோட்டையில் "சுரங்க வழி" காணப்படு கின்றது இச் சுற்றுலா மையங்கள் பார்வையிடுவதற்கு பல இன மத மொழி மக்கள்எங்களுடைய கிராமத்திற்கு வாகனம் வாகனமாக வந்து வந்து இறங்குவார்கள் இச் சுற்றுலா மையங்களால் தான் எங்களுடைய "பசுந்தீவு" சிறப்பிடம் பெறுகின்றது இங்கு ஏராளமான குதி ரைகள் காணப்படுகின்றன. இக் குதி ரைகளை ஒல்லாந்தர் எங்களுடைய கிராமத்திற்கு கொண்டு வந்தார்கள். இங்கு காணப்படுகின்ற சுற்றுலா மையங்களும் ஒன்றாக கருதப்படும் கோரி இது கீழ்ப்பகுதியிலிருந்து மேற் பகுதி மட்டும் முக்கோணி வடிவத்தில் காணப்படும்.

இக் கோரியில் கீழ்ப் பகுதியில் இருந்து ஒரு பொருளை அதனூடாக விடும்போது காற்றுடன் சேர்ந்து மேற்பகுதினூடாக வெளியே வருகின்றது. இது தான் இதனுடைய சிறப்பு ஆகும். நெடுந்தீவில் கிறிஸ்தவ தேவாலயங்களும் இந்து மத கோவில்களும் காணப்படுகின்றன. இங்கு கிறிஸ்வர்கள் தங்களுடைய விழாக்களையும் இந்து மத இனத்தவர்கள் தங்களுடைய விழாக்களையும் கொண்டாடுவார்கள். இந்து மத மக்கள் வெளியூர் சென்று கூட விழாக்களை சிறப்பிப்பார்கள். இதில் இருந்தே தான் "நெடுந்தீவு" சிறப்புப் பெறுகின்றது இலங்கையில் மிகப்பெரிய தீவாக விளங்கும்.


எமது கிராமம் சிறிய கிராமமாக இருந்தாலும், அதனை சிறப்பித்து எமது கிராமத்தை கட்டியெழுப்புவோம். சிறு வயது பிராயத்தில் எமது கிராமத்தை சிறப்பித்து பெரிய வயது பராயத்திலும் தலை நிமிர்ந்து பல சேவைகள் செய்து எமது கிராமத்தை சிறப்பிப்போம்.

நன்றி

**அ.கரோலினி**
**தரம் - 07**
**யா/நெடு.சீக்கிரியாம் பள்ளம் அ.த.க.பாடசாலை**

# எனது கிராமம்

எனது கிராமம் நெடுந்தீவு இது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. இங்கிருந்து இராமேஸ்வரத்திற்கு பால் ஏற்றுமதி செய்ததால் பால்த்தீவு, என்றும் பசுக்கள் நிறைந்து காணப்பட்டதால் பசுந்தீவு என்றும், கற்கள் நிறைந்து காணப்பட்டதால் கல்த்தீவு, என்னும் பெயர்களால் அழைக்கப் பட்டது இங்கு பெருக்குமரம் நாற்பது அடி மனிதனின் கால், ஒல்லாந்தர்கள் குதிரை கட்டிய லயம், குயின் ரவர், வெடியரசன் கோட்டை, மீகாமன்கோட்டை, பதினாறு வட்டுப்பனை, புறாக்கூடு என்பன இங்கு பிரசித்தி வாய்ந்தனவையாகும். இங்கு தமிழர், கிறிஸ்தவர், சிங்களவர் உள்ளனர். இத்தீவில் பொது இடங்களாக வைத்தியசாலை, அரச பாடசாலைகள், ஆலயங்கள் என்பன உள்ளன. நெடுந்தீவில் எட்டு பாடசாலைகள் உள்ளன. மூன்று பெரிய பாடசாலைகளும் அவற்றில் ஒன்று பெண்கள் பாடசாலையா-கவும் ஐந்து சிறிய பாடசாலையும் உள்ளன. இங்கு வழிபாட்டுத்தலங்களாக கோயில், தேவாலயம் உள்ளன.



நெடுந்தீவில் மீன்பிடி, விவசாயம் என்பன தொழில்களாகக் கூறப்படுகின்றது. இங்கு நன்னீர்க் கிணறான சாறாப்பட்டிக்கிணறும் உள்ளது. நெடுந்தீவில் குதிரைகள் நிறைந்து காணப்படுகின்றன. இங்குள்ள கைத்தொழில்களில் சில பாய் இழைத்தல், கிடுகு பின்னுதல், பனாட்டு போடுதல், பனங்கிழங்கு இடுதல், ஒடியல் பெறுதல், கடகம் பின்னுதல் என்பனவாகும். இத்தீவில் வெடியரசன், மீகாமன், போத்துக்கேயர், ஒல்லாந்தர், என்பனர் ஆட்சியாளர் ஆட்சிபுரிந்துள்ளனர். வாழ்ந்துள்ளனர். இங்கு இருந்து வேறு இடங்களுக்கு செல்வதற்கு கடல் தாண்டிச் செல்ல வேண்டும் இத்தீவில் கற்றாளை, பனை என்பன நிறைந்து காணப்படுகின்றன. இத்தீவில் ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளனர். இங்கிருந்து கடலில் வேறு ஒரு பிரதேசத்திற்கு செல்லும் போது கப்பலில் சென்றவர்கள் (குமுதினி) படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் ஞாபகார்த்தமாக மாவிலியில் தூபி ஒன்று கட்டியுள்ளனர். எமது தீவு வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இங்கு கூடுதலாக கல்வேலிகள் கட்டுவார்கள் இங்கு கிழக்கூர் முருகன் கோவிலில் கல் ஒன்று நாகபாம்பு போல வளர்ந்து வருகின்றது. எமது தீவைப் போல இன்னும் பல தீவுகள் உள்ளன. இங்கு கூடுதலாக மந்தை வளர்ப்பிலும் ஈடுபடுகிறார்கள். எமது கிராமத்தில் அடிக்கடி அயல் நாட்டவர்கள் வந்து போகிறார்கள். இதனால் எமது கிராமம் வருமானத்தில் வளர்ச்சியடைகிறது. இங்கு பனைகள் நிறைந்து காணப்படுவதால் கற்பகத் தீவு என்றும் அழைக்கப்பட்டது. நெடுந்தீவை மீகாமன், வெடியரசன் என்பவர்கள் ஆண்டனர். எம் தீவை வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றேன்.

**ம.மனோதீப்**
**தரம் - 06**
**யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்**

**தரம் - 6,7 கட்டுரைப் போட்டியில் முன்னிடம் பெற்ற கட்டுரைகள்**

# யா. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் ஆரம்பத் தோற்றமும் வளர்ச்சியும்

நீலத்திரைகடல் நான்கு பக்கமும் சூழ்ந்திருக்கின்றது. அதைப்பார்த்த கவிஞர்களின் உள்ளத்தில் கவிதை ஊற்றெடுக்கின்றது. கவிஞரது பாட்டுக்கு தாளம் போடும் இரசிகர் குழாம் போல கரையோரமாய் நிற்கும் பனை மரங்கள் தலையசைக்கின்றன காலம் பொய் என நினைந்து கற்றுணர்ந்தோர் தத்தம் இல்லங்கள் தோறும் உரைத்து ஊதியம் சேர்க்கும் இயல்போடு மக்களுக்கு அறிவுரை புகட்டி வருகின்றனர். இத்தகைய காட்சி வீரம் அறிவு தமிழ் மணம் ஒருங்கே விளங்கும் நெடுந்தீவில் அன்று வசதி படைத்த ஒரு சிலர் அறிவை மேம்படுத்தவும், ஆங்கிலக் கல்வி கற்கவும், யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளையே நாடினர். கி.பி. 1945ம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து வந்த இந்த நிலமை இன்னும் நீடிக்கவில்லை.

1946ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி நெடுந்தீவின் வரலாற்றில் ஒரு பொன் நாள். மக்களின் நெஞ்சத்தை விட்டகலாத மற்றொரு மறக்க முடியாத நாள். முன்னாள் சபாநாயகர் சேர். வைத்திலிங்கம், முன்னாள் நெடுந்தீவு கிராம விதானையாரும், நெடுந்தீவு கிராம சங்க முன்னாள் தலைவருமான திரு.சு.நாகேந்திரர் முன்னாள் அரசசபை கல்வி மந்திரி திரு.C.W.W கன்னங்கரா, நெடுந்தீவு பொதுமக்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் தீவிர முயற்சினால் 23 மாணவருடன் நெடுந்தீவு மத்தி "காரை வாளவில்" கனிஸ்ட வித்தியாலயம் ஆரம்பமானது. இவ் வித்தியாலயத்திற்கு திரு.எட்வேட் நவரத்தின சிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். அதிபரினதும், திரு.சு.நாகேந்திரரினதும் மாணவர் பெற்றோரினதும் தீவிர முயற்சியினால் பாடசாலை மேலும் வளர்சியடைந்து பின்பு அங்கிருந்து "பொட்றோல் வளவு" எனும் காணியில் கனிஸ்ட வித்தியாலயம் மாற்றப்பட்டது. மக்கள் மனமுவந்து நெடிய பனைகளை வெட்டிக் கொடுத்தும் சிரமதான முறையில் பாடசாலையை அமைத்தும் கொடுத்தனர். பொட்றோல் வளவில் அமைந்த கனி'ட வித்தியாலத்தில் திரு.நாகேந்திரர் தலைமையில் மகாத்மாகாந்தி அமரரான முதற் சிரார்த்த தினம் அதி விமரிசையாக 30.01.1948ல் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் பொட்றோல் வளவில் இருந்து பக்கத்தேயுள்ள "பத்தாக் கொல்லை" எனும் காணிக்குள் கனி'ட வித்தியாலயம் மாற்றப்பட்டது. பத்தாக் கொல்லைக் காணியை அரசாங்கம் சுவிகரித்து 17.04.1952இல் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் சேர்.ஜோன் கொத்தலாவலயினால் புதிய கட்டிடத்திற்கு அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. 17.10.1954இல் அப்போது இலங்கைப் பிரதம மந்திரியாக இருந்த சேர். ஜோன் கொத்தலாவலயால் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. அத்திவாரமிட்ட சேர். ஜோன் கொத்தலாவலாயால் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தமை போற்றுதற்குரியது. அவர் நெடுந்தீவு மக்களின் உள்ளத்தே நிலை பெற்றுள்ளார். முதல் அதிபரான எட்வேட் நவரத்தினசிங்கத்தின் தீவிர முயற்சியாலும், இடைவிடா உழைப்பினாலும், 01.01.1958இல் கனிஸ்ட வித்தியாலயம் மகாவித்தியாலயமானது. அதுவுமன்றி கைத்தொழில்களிலும் மாணவர் சிறந்து விளங்க வேண்டுமென்னும் பேரவாவினால் 1958ம் ஆண்டிலே மரவேலைப் பயிற்சி, நெசவு வேலைப் பயிற்சிப் பகுதிகளும் ஆரம்பமாகின. ஒவ்வொரு பகுதிக்கும் தனிக்கட்டிடப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. நெடுந்தீவு மாணவர்கள் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைக்கு வெளியிடங்களுக்கு சென்று தோற்றும் நிலை 1950இலிருந்து நீக்கப்பட்டது. நெடுந்தீவு மகாவித்தியாலயமும் பரீட்சை நிலையமாக்கப்பட்டது.



1960இல் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கும் மாணவர்கள் இவ்வித்தியாலயத்தில் இருந்து தோற்றினர்.

1950ம் 1960ம் ஆண்டுகளில் மகாவித்தியாலய முன்றலில் மாணவர்கள் வழிபடுவதற்கென இந்துக் கோவிலும், கத்தோலிக்க மாணவர்களுக்கென தேவ மாதவின் கோவிலும் அமைக்கப்பட்டன. 1957ம் ஆண்டில் திறந்த வெளி அரங்கும் மண்டபமும் நிறுவப்பட்டதுடன், 1968இல் விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டது. 1961இல் விஞ்ஞான ஆய்வு கூடமும் நிறுவப்பட்டது.

நெடுந்தீவு வாழ் மக்களின் நலமே தன்னலமெனக் கருதி உள்ளத்தாலும் செயலாலும் தொண்டாற்றி வந்த எட்வேட் நவரத்தின சிங்கம் 17.01.1946 தொடக்கம் 31.07.1964 வரை கடமையாற்றி தனது சொந்த ஊருக்கு மாற்றலாகிச் சென்றதும் 01.08.1964 தொடக்கம் 31.05.1965 வரை பண்டிதர் கலாயோதி ஆசி நாதர் அவர்கள் கடமையாற்றினார். 1.06.1965 திரு.நா.குருநாதர் பீ.ஏ (டிப்ளோமா) அதிபரானார். 1971இல் நவீன விஞ்ஞான அறை நிறுவப்பட்டதும், வர்த்தக வகுப்பு அமைக்கப்பட்டதும், தனித்தியங்கிய அமெரிக்கன் மி'ன் பாடசாலை மகாவித்தியாலயத்துடன் இணைந்ததும் வரவேற்கத்தக்க விடய மாகும். அமெரிக்கன் மி'ன் பாடசாலை இணைந்ததால், 1971ம் ஆண்டில் இருந்து தரம் 01 முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்றன. 31.12.1972 இல் திரு. நா. குருநாதர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதும், 01.01.1973 தொடக்கம் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் அதிபரானார். இப்பாடசாலையின் பழைய மாணவரான இவர் உப அதிபராகவும் விளங்கினார். பாடசாலையின் நிலவரங்களையும், மாணவரின் உளப்பாங்கினையும், நன்கு அறிந்தவரான இவர் புதிய கல்வி முறையினைப் புகுத்தி மாணவர் மனங்களில் நீங்கா இடம் பெற்ற ஒருவர் ஆவார். 23 மாணவர்களுடன் ஆரம்பித்த பாடசாலை 23 ஆசிரியர்கள் கடமையாற்றும் அளவுக்கு வளர்ச்சி பெற்றது. கற்பித்த ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் காணப்பட்டதுடன் அத்தனை ஆசிரியர்களும் மாணவர்களின் நல்லெண்ணத்தினை குறிக்கோளாக கொண்டு கல்வி கற்பித்து வந்தனர். பெற்றோர் ஆசிரியர் சங்கம், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் என்பன அதிபருடனும் பாடசாலை நிர்வாகத்துடனும் நல் முறையில் ஒத்துழைப்பு வழங்கி பாடசாலையின் வளர்ச்சியில் தங்களது பங்களிப்பினை அளித்து வந்தனர். இதன் மாணவர்களது கல்வி நிலையிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய நிலையினை கண்டு பெற்றோரும் பாதுகாவலரும் போற்றி நின்றனர். நெடுந்தீவில் இருந்து வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள் என பல்வேறுபட்டவர்கள் உருவாக காரணமாய் இருந்ததும் மகாவித்தியாலயமேயாகும். பிறந்த நாட்டின் மேல் பற்றுமிக்க பெற்றோரும் பழைய மாணவரும் பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மாலானவற்றை செய்துள்ளனர்.
இக்கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவரும் அதிபருமான திரு.இரா சின்னத்தம்பி அவர்களது அயராத உழைப்பும் விடாமுயற்சியும், இக்கல்லூரியை ஓர் உன்னத நிலைக்கு கொண்டு வந்துள்ளது. 1946ம் ஆண்டு உருவாக்கப்பபட்ட மகாவித்தியாலம் 1972ம் ஆண்டு கல்வி நிலையில் உயர்ந்து கலை, வர்த்தகம், விஞ்ஞானம் தொழிநுட்ப பாடநெறிகள் என்பன போதிக்கப்படும் அளவிற்கு வித்திட்டமை அதற்காக உழைத்த அனைவரையும் சாரும் அதற்காக அன்று உழைத்த அனைவரும் பாரட்டப்பட வேண்டியவர்களே....

**(தொடரும்....)**

(இக் கட்டுரை 1972.08.18 அன்று வெளியாகிய ஈழ நாட்டு பத்திரிகையில் யா/நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழாவினையொட்டிய சிறப்புக்கட்டுரை இங்கு மறு பதிப்பு செய்யப் படுகின்றது 1972ம் ஆண்டுக்கு பின்னரான செயற்பாடுகள் அடுத்த இதழில் தொடரும்)

**நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே.**

**-நியேட்சே-**

**வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேறத்தான் நம் திறமைகளின் வரம்புகளைத் தெரிந்து கொள்கிறோம்.**

**-பிராய்டு-**

# மனிதம் எங்கே போகிறது?



உலகில் தோன்றிய இறுதி இனம்
அதற்கு மட்டுமே உண்டு மனம்
செத்தால் அது வெறும் பிணம்
அதற்குள் இல்லை சிறு குணம்

பத்து மாதம் இருளில் இருந்து
பத்து நிமிடத்தில் வெளியே வந்து
பந்த பாசம் எல்லாம் அறிந்து
பதின்ம வயதில் போகிறான் தொலைந்து

கல்வி கற்கும் கையில் கற்கள்
கலஎரி போகும் பையில் கத்தி
கடினமாய் உழைக்கத் தொடங்கையில் கைதி
கஷ்டமாய் இருக்கும் ஊத்தை கந்தை

நாகரிகம் அது நாசமாய் போக
நன்மைகள் பல மோசமாய் ஆக
பச்சிளம் பாலகன் தொட்டிலில் சாக
பார்க்க பெரும் கூட்டம் வேடிக்கையாக

பத்து வயதில் பாலகனாய் இருந்து
பதின்ம வயதில் பாழாய்ப் போய்
பட்டப் படிப்பு எல்லாம் முடிந்து
சட்டம் பல கற்கச் செல்லும்

யுத்தங்கள் பல தொடர்ந்தாலும்
சத்தங்கள் பெரிதாக கேட்டாலும்
சொந்தங்கள் பல உண்டென்று
சொன்னது பெரும் பொய்யென்று

வீழ்ந்தவனை மிதிக்கத் துடிக்கும் மிருகம்
அதனிடம் சிறிதும் இல்லை புனிதம்
இருப்பது ஒரு சிறு இதயம்
அதற்குள் இருக்கும் எத்தனை வெறித்தனம்



நல்லவனாய் நடிப்பவன் நன்றாய் வளர
நண்பனாய் உயர்த்தியன் நாடு கெட்டுப் போக
நல்லவனாய் இருப்பவன் நாவு தொங்கிச் சாக
நாளுக்கு நாள் வளருது நாசகார வேலை

பூமியில் வெடிக்குது எரி மலைகள்
பரந்து பாயுது பெரும் அலைகள்
சுற்றித் திரியுது உயிர் இனங்கள்
கொடூர மனிதனை கொன்று போட

குமுறிக் காத்திருக்க தீ மலை
அதன் பொறுமை பொசுங்கும் வரை
ஆடி அடங்கும் இந்த நிலம்
ரத்த வெள்ளத்தை பூமியில் பாய்ச்சும்

கடவுள் படைத்த மனிதன் எங்கே?
அவனுள் வாழ்ந்த மனிதன் எங்கே?
போராடிக் காத்த இரக்கம் எங்கே?
மனிதம் போவது எங்கே எங்கே?



**அ.அமல ஆன்ஸ்**
**தரம் - 11**
**யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்**

# மனிதம் எங்கே போகின்றது?



மனிதனின் வாழ்வியல் கோலங்கள்
சொல்லொண்ணா வேதனைகள்
நச்சரிக்கும் நாய்களுடன்
இதயமான பஞ்சு நெஞ்சங்கள்
எத்தனை அடிமைப்படுத்தல்கள்
சொல்ல வார்த்தையில்லா கொடுமைகள்

நம்பிக்கை வைத்து ஏமாந்த மனிதர்கள்
துரோகங்களால் மூழ்கடிக்கும் நம்பிக்கை துரோகிகள்
வேதனை கொண்ட வாழ்வுகளால்
தம்மை அழிக்கும் அப்பாவிகள்
நேர்மையற்ற செயல்களால் செல்வத்தோடும்
மனதில்லா மனிதர்கள்
காமவெறி கொண்டு சிறுவர்களை
கற்பழிக்கும் காமவெறியர்கள்
மனிதம் எங்கே போகின்றது




தமது சுய விருப்புக்காக
தூசுவாக செல்லும் பெண்கள்
சிறு ஈவிரக்கமின்றி
அழிக்கும் ஓநாய்கள்
எந்தளவு வேதனைகளை அனுபவித்தும்
சுதந்திரமின்றி திரியும் மனிதர்கள்
கன்னியாக வாழ விரும்பும்
பெண்களை அப்பாவிகளாக
உருவாக்கும் வெறியர்கள்
மனிதம் எங்கே போகின்றது

சிறுவர்களை நேசிக்கும் பெற்றோர்கள்
போதை அடிமையால்
பெற்றோர்களை அனாதை ஆக்கி


அனாதை மடங்களில் வரும் சிறுவர்கள்
பெற்ற தாயை மதிக்கும் பிள்ளைகள்
அவள் பெற்ற நேரம் அனுபவித்த வேதனைகள்
இவை அனைத்தையும் உருவாக்கும்
போதை பொருளின் பயன்பாடு
மனிதம் எங்கே போகின்றது.

அன்புக்காக ஏங்கும் நெஞ்சங்கள்
பொய்யான அன்பால் ஏமாறும் நெஞ்சங்கள்
தமது கௌரவத்தை இழந்து
கயிற்றில் தொங்கும் அப்பாவிகள்
மாண்புடன் வாழ விரும்பி
சுயமரியாதை இழக்கும் நெஞ்சங்கள்
பிள்ளைகளின் வாழ்விற்காக
தம்மை விலை கொடுக்கும் பெற்றோர்கள்
மனிதம் எங்கே போகின்றது.

**அ.கியூறி**
**தரம் - 11**
**யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்**



# மனிதம் எங்கே போகின்றது?



மனிதா நீ இந்த
உலகில் மனிதனாய்தான்
வாழ்கின்றாயா? நீ எங்கே?
உன் மனிதம் எங்கே?

உன்னைச் சுற்றி
நான்கு மூலைகளும் - நான்கு
உப மூலைகளும் இருக்கின்றன
அதில் நீ எங்கே நிற்கின்றாய்?
சிந்தித்துப்பார்....?

மனிதனே நீ மனிதத்தை
தொலைத்துவிட்டு - எந்த
நாடகத்தில் என்ன வேசம்
போட்டு நடித்துக் கொண்டிருக்கிறாய்?

மனிதத்தை தொலைத்துவிட்டு - நீ
மண்ணுக்குள் மண் புழுப்போல
வாழப் போகின்றாயா? நினைக்காதே
அதுவும் சில நாட்களே தொடரும்...

மழை வந்தால் மண்புழு
வெளியேறுவது போல - நீயும்
மனிதம் நிலை கொண்டால் - வேசத்தை
கலைத்து வெளியில் வந்துதான் ஆக வேண்டும்.


மாண்பில்லாதவன் இறந்த
சடலத்திற்கு ஒப்பாவான் - ஆனால்
மனதில் மனிதத்தன்மை இல்லாதவன்
உயிரோடு இருந்தும் இறந்த
சடலத்திற்கு ஒப்பாவான்

ஆறறிவு படைத்த மனிதா?
உன்னிடத்தில் மனிதம் இல்லை
என்றால் நீ
ஐந்து அறிவு படைத்த விலங்கிற்கு
ஒப்பாவாய்

மனிதா ! நீ
மனிதனா? மிருகமா?
மனிதமா? மிருகத்தன்மையா?
நீயே முடிவெடுத்துக்கொள்
ஏனெனில் நீ வாழ்வது
உன்வாழ்க்கையை நீயே முடிவெடு


மனிதா நீ
மனிதத்தை ஏற்றுக்கொள்
உலகில் சிறந்த மனிதர்களாய்
வாழ முடி வெடு
மனிதனே உனது உயிர் மூச்சு
உன் வாழ்க்கை எல்லாம்
மனிதம் என்று முடிவெடு

மனிதமே எங்கேயும் தொலைந்து விடாமல்
மனிதனுள்ளேயே தங்கவிடு
உறங்காதே, விழித்துவிடு



**அ.மேரிஅஸ்வினி - தரம் 11**
**யா/நெடுந்தீவு**
**றோ.க.மகளிர் கல்லூரி**


# மனிதம் எங்கே போகின்றது?



மனிதம் எங்கே போகிறது - எனத்
தெரியாமல் வாழ்கின்றோம்
மனிதம் உலகை விட்டு தொலைந்து போகிறது
உண்மையும் உயர்வும் உயர்ந்து காணப்படுகிறது

போதை வஸ்துக்குள் மூழ்கிக் காணப்படுகின்றோம்
அமைதி போன்ற உலகில்
அழிவைத் தேடிச் செல்கிறோம்
உன்னதமான மனித மாண்பை வளமாக்குவோம்

உயர்வு தாழ்வு பாராது நண்பன் போல - வாழுவோம்
மனித வாழ்வில் உறவாடி மகிழ்வோம்
மனிதன் இறைவன் தந்த கொடை
அவர் தந்த வாழ்வை வாழுவோம்



மதம், சாதி பாராது உறவாடுவோம் - இங்கு
இனம், மொழி பாராது வாழ்வோம்
நம் வாழ்வை விட்டுக்கொடுக்காது வாழ்வோம்
வாழ்வை வளமாக்க வருவீர் மானிடரே

துன்பம் துயரம் பாராது - என்றும்
இன்பமாக வாழ்வோம்
மனிதவாழ்வு ஒரு புனிதமான வாழ்வு
நம் மனிதத்திற்காக உழைப்போம்

உயிர் ஊன்று கோலாக மாறும்
உண்மை வென்றே தீரும்
உண்மைக் குரல் கொடுப்போம்
உன்னை உயர்வடையச் செய்யும்.

இலஞ்சம், ஊழல் பாராது வாழ்வோம்
உயிர் எம் சொத்து என்று வாழாதீர்கள்
அவ்வாறான உயிர்களை பாதுகாரும்
அப்போது உலகமே மாறும்

கடமை வாழ்வில் தளரவிடாமல்
செய்வன செய்து முடிப்போம்
உலகே ஒன்றென வாழ்வோம்
உறவை தேடிப் பார்ப்போம்

மனித வாழ்வைக் காப்போம்
மனிதன் உயிர் வாழ்வே
கவலை உள்ள வாழ்வில்
கலங்கிப் போகாது வாழ்வோம்

மாறி மாறி வரும் உலகை
மறுத்து நின்று ஜெயிப்போம்
மனித நேயம் காக்க
மாண்புடனே உழைப்போம்

மனிதத்தை இருட்டில் வாழ வேண்டாம்
வாழ்வே மனிதம் ஆகும்
நின்று ஜெயிப்பது தேர்தல்
நீதி வாழ்வுடன் ஜெயிப்பது மனிதம்

**அ.கபிலாசினி**
**தரம் 10**
**யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்**

# மனிதம் எங்கே போகின்றது?



மனிதம் எங்கே?
புனிதம் அங்கே
மனிதம் எங்கே போகிறது
போதைக்கு அடிமையாகிப் போகிறது

மனித மாண்பே நீ எங்கே
புனிதமே நீ இருப்பது அங்கே
மனிதமே நீ ஒரு புனிதமே - ஆனால்
உன்னை மதிப்பவர் எங்கே?


உன்னைப் போல நல்ல நண்பனும்
உன்னைப் போல சிறந்த தேவனும்
எனக்கு உண்டோ மனிதமே
உன்னைக் கண்ட நாள் புனிதமே

உன்னையே கண்டேன் வாழ்வில்
ஒளிருதே என் வாழ்வே
உன்னையே மதித்தேன் வாழ்வில்
மாறுதோ என் வாழ்வே

மனிதமே உன்னைப் போல ஒரு
புனித வாழ்வு எங்கே?
என்பதைத் தேடிப் போகிறேன்
அதைத் தருவாயா என் வாழ்வில்

செல்வம் இருந்தென்ன
செல்வாக்கு இருந்தென்ன
உன்னைக் கண்டேன்
செழிப்பாய் வாழ்ந்தேன்.

மனிதம் பிறந்தது எங்கே?
புனிதம் வளருது அங்கே
மனிதம் இறப்பது எங்கே?
புனிதம் அழியுது அங்கே



உன்னை மதிப்பவர் தனது - வாழ்வை
இழந்ததாய் சரித்திரமே இல்லை
உன்னை மிதிப்பவர் தனது - வாழ்வை
உயர்த்தியதாய் சாத்தியமே இல்லை

மண்மேலே துளசிச் செடியாய்
மனதின் மேலே அன்பின் கொடியாய்
கண்ணோடு இமைபோல் உனைப்
பார்த்திருந்தேன் மரத்தின் கிளையாய்.

மனமே மனமே உனைத்
தேடுது மனமே - உனக்கு
இறப்பில்லை எனத் தெரிந்தும்
வாடுது என் வாழ்வே

பிரிவு எங்கு உண்டோ
அங்கு நீ இலை போல தெரிவாய்
பிரிவே இல்லை என்ற போது
மனிதமே நீ அங்கு தெரிவாய்

மனிதமே நீ எங்கே
உன்னைப் பார்த்த நாள்
என் வாழ்வின் பிறந்த நாள்
எனைப் பிரிந்த நாள்
என் வாழ்வை இழந்த நாள்

**ஜி.தீபா தரம் 10**
**நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**

**தரம் - 10,11 கவிதைப் போட்டியில்**
**முன்னிடம் பெற்ற கவிதைகள்**

**கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.**

**– முகம்மது நபி –**

**சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் தலையில் கூடுகட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம்.**

**– ஸ்டீலி –**

**மெதுவாகப் பேசு. அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும் நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.**

**– வள்ளலார் –**

**அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டு வாழ்வதை விட, அறிவுடன் ஒரு நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.**

**– புத்தர் –**


**இப்பொழுதே மகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இன்னும் துன்பங்கள் வரக் காத்திருக்கின்றன.**

**– பிரேண்டர்ஜான்சன்–**

**ஒரேயடியாக உச்சிக்கு ஏறிவிட வேண்டும் என்ற முயற்சிதான் உலகில் பல பெருந்துயருக்கும் காரணமாயிருக்கிறது.**

**– சாமுவேல் பட்லர் –**

# தொடர்புசாதன அபிவிருத்தியும்




# எதிர்கால சவால்களும்

நாம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இக்கால கட்டத்தில் தொடர்பு சாதன விருத்தியானது மிகவும் துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. அதாவது ஒருவருக்கு ஒருவர் அல்லது குழுக்களுக்கு இடையிலோ தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு பயன் படுத்தப்படும் மூலப் பொருளே தொடர்புசாதனம் எனப்படும். அக்காலம் தொடக்கம் இக்காலம் வரை தொடர்பு சாதன வளர்ச்சியானது ஒரு முன்னேற்ற பாதையை நோக்கியே நகர்ந்து கொண்டு வருகின்றது.

ஆதிகாலத்தில் மனிதன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக குதிரைகள், புறாக்கள் மற்றும் பறையடித்தல் போன்ற வழி முறைகளைப் பின் பற்றி தமக்கிடையே தகவல்களைப் பரிமாறி தொடர்புகளை மேற்கொண்டு வந்தான். பின்னர் ஒரு படி முறை வளர்ச்சியாக "தந்தி" முறையை அறிமுகப்படுத்தி அதன் மூலம் தொடர்புகளை மேற் கொண்டு வந்தான். இவ்வாறு தகவல்கள் பரிமாறப்படக் காலப் போக்கில் விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக தொலைபேசி, தொலை நகல், கணனி மற்றும் இணையம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே இதனை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது தொடர்பு சாதன அபிவிருத்தியானது ஒரு முற்றுப் பெறும் விடயம் ஆகக் கருதமுடியாது. காலத்தின் தேவைகருதி காலகாலமாக வளர்ச்சி அடைந்து வரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

தொடர்பு சாதன வளர்ச்சியில் குதிரைகள், புறாக்கள், பறையடித்தல் மற்றும் தந்தி முறை போன்றவற்றோடு நவீன தொடர்பு சாதனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நவீன தொடர்பு சாதனங்கள் சிக்கனமுடையதாகவும் வேகம் கூடியதாகவும் காணப்படுகின்றன. நவீன தொடர்பு சாதனங்களின் மூலம் தகவல்களை நாடு விட்டு நாடு கண்டம் விட்டு கண்டம் பரிமாறிக் கொள்வதோடு உடனுக்குடன் தகவல்களை அறிந்து கொள்ளவும் முடிகின்றது. தொடர்புசாதன அபிவிருத்தியானது வளர்ச்சியடைந்து வருவது மகிழ்ச்சிகரமான ஒன்றாக இருப்பதோடு இவ் வளர்ச்சியானது நன்மை மற்றும் தீமை என்ற இரண்டு முகத்தோடு வளர்ச்சியடைகின்றது. நவீன தொடர்பு சாதனங்கள் புராதன தொடர்பு சாதனங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது நன்மையுடையதாகக் காணப்படும் அதே வேளை இவ் வளர்ச்சியானது மனித சமூகத்தில் ஒருவித தீங்கினையும் கொண்டு சேர்க்கின்றது உதாரணமாக, மாணவ சமூகத்தை எடுத்து நோக்கினால் இக் காலத்தில் அனைத்து மாணவர்களின் கைகளிலும் பெரும்பாலும் தொலைபேசி காணப்படுகின்றது. இவர்களது பாடசாலை நாட்கள் பாடங்களுடன் அல்லாமல் தொலை

பேசியில் படங்களுடனே செலவாகின்றது. மேலும் மாணவ சமுகங்களுக்கு இடையே ஏற்படுகின்ற குழு மோதல்களுக்கு ஒரு காரணியாக நிச்சயம் தொலைபேசி காணப்படுகின்றது. மற்றும் தமது அறிவினை வளர்த்துக்கொள்ள தமது சொந்த புத்தியை பாவிக்காது கணினி மற்றும் இணையம் என்பவற்றை பயன்படுத்துகின்றனர் இதன் மூலம் மாணவர்களின் மூளையானது மழுங்கடிக்கப்படுகின்றது.

தொடர்பு சாதன விருத்தியால் மனிதர்களுக்கு இடையே காணப்பட்ட தொடர்புகள் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு வருகின்றது. முற்காலத்தில் மனிதர்களுக்கு இடையே காணப்பட்ட தொடர்பாடலினால் அவர்களது உறவுப்பாலமானது உண்மையானதாகவும், உறுதியானதாகவும் காணப்பட்டதோடு நம்பகத்தன்மை கொண்டதாகவும் காணப்பட்டது. அக்காலத்தில் அயல் நாடும் அயல் வீடு போன்றே மனிதர்களுக்கு இடையில் உறவுமுறை பேணப்பட்டது. ஆனால் இக்காலத்தில் ஒரு மனிதனுக்கு அயல் வீடு அயல் நாடாக மாறிவிட்டது. உதாரணமாக இக்காலத்தில் மனிதன் தனது வாழ்க்கைக்கான உழைப்பினைப் பெற்றுக் கொளவதற்காக நாடு விட்டு நாடு சென்று வேலை செய்து சம்பாதிக்கின்றான். இவ்வாறு கணவன் ஒரு நாட்டிலும் மனைவி ஒரு நாட்டிலும் காணப்பட்டால் அவர்களுக்கும் இடையேயான தொடர்புகள் தொலைபேசியின் மூலமோ அல்லது கணினியின் மூலமோ பேணப்பட்டு வருவதோடு இவை காலப்போக்கில் அப்படியே தொடருமானால் அவர்களுக்கு இடையேயான உறவு முறையில் சிதைவினை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு.

தொடர்பு சாதன அபிவிருத்தியினால் மனித சமுகத்திற்கு மட்டுமன்றி விலங்கினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதாவது நவீன தொடர்பு சாதனங்களுக்கு பயன் படுகின்ற அலை வரிசை அதாவது கதிர் வீச்சுக்கள் பறவை இனங்களின் செயற்பாட்டு திறனை பாதிப்படையச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. இதற்கு உதாரணமாக "எந்திரன் -2" எனும் இந்தியத் திரைப்படம் சான்று பகர்கின்றது. மேலும் யாழ்ப்பாணத்தில் இப்போது நடந்து வருகின்ற பிரச்சினையாகவும் ஒன்று காணப்படுகின்றது அதாவது "5ஜி" எனும் கதிர் வீச்சை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்த திட்டமிட்ட போது அக் கதிர் வீச்சினால் தாயின் வயிற்றில் இருக்கும் ஆறு மாத குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதால் இத்திட்டமானது ஒரு பிரச்சினைக்கு உரிய ஒன்றாக ஒத்திவைக்கப்பட்டு ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தொடர்புசாதன விருத்தியானது நன்மை பயக்கும் அதே வேளை மாணவ சமுகத்திற்கும் மனிதர்களுக்கு இடையேயான உறவு முறைக்கும் பாதிப்பை கொண்டு வருகின்ற ஒரு சவாலாகவும் காணப்படுகின்றது. எதிர் காலத்தில் அறிவுத் திறன் மிக்க செயற்பாடான ஒரு மாணவ சமுகத்தை கட்டியெழுப்புவதற்கு தொடர்பு சாதன விருத்தியானது ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. மேலும் விலங்கினங்களின் பெருக்கத்திற்கும் இவை சவாலாக உள்ளன.

புராதன காலம் முதற் கொண்டு தற்காலம் வரை பல்வேறுபட்ட தொடர்பு சாதன முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை இனி வரும் காலங்களிலும் மேலும் மேலும் வெவ்வேறு தொடர்பு சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பயன் படுத்தப்படும் என்பதை உறுதியாக கூறமுடியும். "உள்ளங்கையில் உலகு" என்பர் இக் கூற்றானது ஒரு வகையில் தொடர்பு சாதன வளர்ச்சியையும் சார்ந்து நிற்கின்றது. மனிதர்கள் இவ்வுலகில் உள்ளவரை தொடர்பாடல் என்ற ஒன்று காணப்படும். எனவே தொடர்பு சாதனங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி தொடர்பு சாதன அபிவிருத்தியினால் ஏற்படும் சவால்களை சாதனையாக மாற்றுவோம்.

**டா.மயூரராஜி**
**08ம் வட்டாரம்**
**நெடுந்தீவு மத்தி**

**வாழ்க்கையை ஏமாற்ற முடியாது. வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு புத்தகத்தின் இறுதிப் பக்கத்தில் விடை கிடையாது.**

**- கீர்கே கார்ட் -**

# தொடர்புசாதன அபிவிருத்தியும் எதிர்கால சவால்களும்

இன்றைய உலகில் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி காரணமாக உள்ளங்கையில் உலகை பார்க்க கூடிய வகையில் வியாபித்திருக்கின்றது. தொடர்பு சாதனங்கள் எனும் போது மனிதர்களுக்கிடையில் தொடர்பு படுவதன் காரணமாகவே தொடர்புசாதனங்கள் என அடையாளப்படுத்தப்படுகிறது. தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, தொலை நகல், கணினி, இணையம் என ஒரு சிலவற்றை வகைப்படுத்த முடியும். புராதன காலங்களில் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியானது தகவலை கொண்டு செல்வது தொடக்கம் அத் தகவலை பெறுவது வரை மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பு சாதனங்கள் மூலமாகவே இடம்பெற்றிருக்கிறது. பறவைகள், கடிதங்கள், முழக்கங்கள் மூலம் தொடர்பு சாதனம் இருந்தது

இன்று தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி என்பது உச்ச நிலை என்றே சொல்ல முடியும். அன்று பார்த்த கறுப்பு வெள்ளைப் படங்கள் இன்று பார்க்க முடிவதில்லை எல்லாமே நவீன மயப்படுத்தப்பட்டிருக்கின்றன தொடர்பு சாதனங்கள் மனிதர்களுக்கு தேவையாக இருக்கின்றது என்பது மறுப்பதற்கில்லை. அந்த வகையில் உள்ளூர் செய்திகளை அறிந்திடவும் வெளிநாட்டு நிகழ்வுகளை தெரிந்து கொள்ளவும் மனிதர்களின் திறன்களை புரிந்து கொள்ளவும் தொடர்பு சாதனங்கள் பயன்படுகிறது என்று பொதுவாக குறிப்பிட்டு விடலாம். ஆனால் இதன் பயன்களை மட்டுப்படுத்திட முடியாது. தொடர்பு சாதனங்கள் மூலம் இராணுவ நடவடிக்கைகள், விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள், அறிவியல் விடயங்கள் கடல் சார் விடயங்கள், ஆவணப்படுத்தல்கள், மருத்துவ முறைகள், தனிப்பட்ட தேவைகள், கல்விச் செயற்பாடுகள் என தேவைகள் அதிகரிக்கும் போது தொடர்பு சாதனங்களின் தேவைகள் அவசிய மாகிறது. இன்றைய சூழலில் இணையத்தின் வளர்ச்சியும், செல்போனின் வகைப்பாடும் பெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது என குறிப்பிடலாம். இணையத்தின் மூலம் பல நாட்டுச் செய்திகளையும் பல பொழுது போக்கு விடயங்களையும் அறியக் கூடியதாக இருக்கின்றது. அதே போல் அன்ரொயிட்



போன்களின் பெருக்கமும் அதிகரித்த வண்ணம் இருப்பதால் இளைஞர்கள் மற்றும் பெண்களின் எதிர் பார்ப்புகளும் இன்றைய சூழலில் கட்டாயத் தேவையாக எதிர் பார்க்கப்படுகின்றது என்பதே உண்மையாகும். தொலைபேசியை முதல் கதைப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது ஒளிப்படங்கள், வீடியோக்கள், விளையாட்டுக்கள் என பரந்துவிட்டது. கையில் போன் இருந்தால் போதும் என்று ஆகிவிட்டது.

போன்களின் நவீனத்துவத்தின் வளர்ச்சி காரணமாக 2ஜி , 4ஜி என கற்றைகள் மாறிவரும் சூழலில் ஐந்தாவது தலை முறை 5ஜியும் வர எத்தளிப்பது மனிதர்களுக்கு பெரும் சவாலையே தோற்றுவிக்கும்.

எனலாம். தற்போது தொலைத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சிக்காக தொலைபேசி கோபுரங்கள், அமைக்கப்படுகிறது. இத் தொலைபேசிக் கோபுரங்கள் காரணமாக மனிதர்களுக்கு பலவிதமான பிரச்சினைகளும் சூழல் தன்மையில் மாற்றமும் ஏற்படுகிறது என்றே குறிப்பிடலாம். தொலைபேசி கோபுரங்களின் கதிர் வீச்சு காரணமாக சூழலை சிட்டுக் குருவிகள் மரணிக்கின்றது. மனிதர்களுக்கு தோல் சம்மந்தப்பட்ட நோய்கள் ஏற்படுகிறது என ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

இணையத்தின் வளர்ச்சி மனிதர்களுக்கு அறிவுப் புரட்சியை ஏற்படுத்தி இருந்தாலும் மனிதர்கள் எல்லோருமே அறிவினைத்தான் நாடிச் செல்கின்றார்கள் என்றால் அது இல்லையென்றே குறிப்பிட முடியும்.

இணையத்தின் தொடர் பாவனை காரணமாக கண் நோய் மற்றும் பார்வைக் கோளாறுகள் ஏற்படுகிறது. தலையிடி, மயக்கம், உடல் மெலிவு, நரம்புத் தளர்ச்சி, புற்று நோய் ஏற்படுகிறது. மாணவர்கள் மத்தியில் இணையத்தின் பாவனையானது நன்மையை விட தீயதை அதிகம் விளை விப்பதாகவே இருக்கிறது. இணையத்தில் மாணவர்களின் தேடுதலானது தவறான வழி முறைகளை பின்பற்றி தம் பருவத்துக்கு ஒவ்வாத இணையமுகவரிகளை கையாண்டு பாலியல் சம்மந்தமான புகைப்படங்களையும், வீடியோக்களையும் பார்ப்பதன் காரணமாக இவற்றை தம் பருவத்திலேயே கையாள முயல்கின்றபடியால் கலாசார சீரழிவுகளும் துர் நடத்தைகளும் ஏற்படுகிறன. மேலும் குடிபோதை, புகைத்தல் என்பவற்றுக்கும் அடிமைப்படுத்தப்படுகிறார்கள் இதற்கு முக்கிய காரணம் தவறான வழி முறைகளை இணையத்தில் தேடுகிறார்கள்.

முகப் புத்தகம் மனிதர்களுக்கிடையில் நட்புறவை வளர்க்கவே மைக்கல் சூக்கர் பேர்க் கண்டுபிடித்தார் ஆனால் முகப் புத்தகங்கள் பல விதமான தீய விடயங்களை பரப்புவதுடன் பல மனிதர்களின் வாழ்க்கையை சீரழித்து தற்கொலை செய்து உயிரை மாய்ப்பது வரை சென்றிருக்கின்றது இதன் மூலம் பல மரணங்கள் சம்பவித்திருக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை. முகப்புத்தகத்தில் காதல் செய்வதும் புகைப்படங்களை பரிமாறுவதும் இதன்மூலம் தொடர்பு கொண்டு சந்தித்து கணவனுக்கு மட்டுமே காட்ட வேண்டிய உடம்பை முகப்புத்தகங்களில் இன்னொருவருக்கு அனுப்புவதும் மனக் கசப்புக்கள் விரோதங்கள் ஏற்படும் போது முகப் புத்தகத்தில் பதிவேற்றி உலகம் பார்க்கச் செய்வதும் இதன் காரணமாக பலர் மரணித்திருப்பதும் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினால் ஏற்படும் விபரீதங்கள் என்றே குறிப்பிட முடியும். இதனை பயன் சார்ந்த முறையில் பயன் படுத்தாமல் இவ்வாறான முறைகளில் பயன்படுத்தினால் பல எதிர் வினைச் செயற்பாடுகளையே தோற்றுவிக்கும் என்பது ஐயமில்லை.

தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி மனிதர்களுக்கு நன்மையளித்தாலும் நல்லதையும், தீயதையும் இனங்கண்டு எதிர் காலத்தினை கருத்திற் கொண்டு பயன்மிக்கதாக தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவோம்.

**செ.ராஜிகுமார்**


**நெடுந்தீவு - 14**

**நோய் வரும்வரை உண்பவன், உடல் நலமாகும்**
**வரை உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டிவரும்.**
**– தாமஸ் புல்லர் –**

**தன்னை விட அடுத்தவன் சுகமாக வாழ்கிறானே என்கிற எண்ணம்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது.**
**– டிரெட்ஸி –**

**இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள்**
**எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை.**
**– மகாகவி பாரதியார் –**

# நெடுந்தீவின் பழமையும் புதுமையும்



இலங்கை அன்னை ஈன்றெடுத்த சப்த தீவுகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது நெடுந்தீவு ஆகும். நெடுந்தீவு என்பதற்கு ஆன்றோரும் சான்றோரும் பல்வேறு பல விளக்கங்கள் கூறுகின்றார்கள். அந்த வகையில் இலங்கை நாட்டிலே நெடிய தூரத்தில் தனியாய் அமைந்துள்ளமையாலும் ஏழு தீவுகளிலும் நெடிய தீவாக உள்ளதாலும் நெடுந்தீவு எனப் பெயர் பெறுகின்றது எனக் கூறப்படுகின்றது. எம் தீவின் மறு பெயர்களை நோக்குவோமாயின் இலக்கியத்திலே பெரும் இடம் பெறும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது. ஏனெனில் நிறைய ஆவினங்கள் நிறைந்து பால் சொரிகின்றமையால் பால்த்தீவு என்றும் பசுந்தீவு என்றும் பெயர் சூட்டப்படுகின்றது. மூலிகைகள் நிறைந்துள்ளமையால் மூலிகைத்தீவு என்றும் கல்வேலிகள், கற்கள் காணப்படுவதனால் கற்தீவு என்றும் பல பெயர்கள் கொண்டு எம் தீவு மிளிர்கின்றது.

நெடுந்தீவின் பழுமை புதுமை பற்றி நோக்குவோமானால் மன்னராட்சிக் காலத்திலே பல மன்னர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். வெடியரசன் மீகாமன் போன்றோர் இங்கு வந்து தங்கியதாகவும் அவர்கள் இங்கிருந்து தென்னிந்தியாவிற்குச் செல்ல கட்டு மரத்தினை எம் தீவின் பனை மரங்களையும் பயன்படுத்தி இங்கேயே செய்து சென்று வந்ததாக வரலாற்றுக்கதைகள் கூறுகின்றன. இன்னும் மேற்கிலுள்ள வெடியரசன் கோட்டையும் மத்தியிலுள்ள மீகாமன் கோட்டையும் சான்றுதாரங்களாக இன்றும் உள்ளன. மேலும் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரம் எனும் திருத்தலத்திற்கு இங்கிருந்து பால், தயிர், நெய் முதலியன கொண்டு செல்லப்பட்டது. அதுமட்டும் அல்லாது நான்கடியில் கலியுகத்தில் வாழும் எமக்குச் சற்று முன் நாற்பது அடி மனிதர்களே வாழ்ந்தார்கள். அவர்களும் இங்கு வந்து சென்றுள்ளதற்கு எம் தீவின் மேற்குப் பகுதியிலுள்ள நாற்பது அடி மனிதனின் கால் தடயம் இன்றும் உள்ளது. இவ்வாறு எம் தீவின் பழமைகளைக் கூறலாம்.

இன்னுமாக எமது மூதாதையர்கள் சிறந்த வாழ்க்கையையே வாழ்ந்திருக்கிறார்கள் பனை வளம் செழித்த இத் தீவில் பனாட்டு, ஒடியல், சீடை, ஆலங்காய் பிட்டு என்று பல உணவுகளைத் தயாரித்து உண்டு மிகவும் போசாக்குள்ளவர்களாக வாழ்ந்து இருக்கின்றார்கள் அப் பழைய செயற்பாடு இன்று

பனை அபிவிருத்திச் சங்கங்கள் தோன்றி இவ்வுணவுப் பண்டங்களைத் தயாரிக்கவும், சாப்பிடவும், பொதிகள் செய்து பாதுகாக்கவும், வெளியூர்களுக்கு அனுப்பவும் துணைபுரிகின்றது. பனை உற்பத்திச் சுதேச பொருட்களும் நெடுந்தீவிற்கு வருமானத்தைத் தரக்கூடியதாகக் காணப்படுகின்றன. மூலிகைகள் நிறைந்துள்ளமையால் பழையகாலத்தில் வைத்தியமே மூலிகைகளாக இருந்ததை நாம் கதைகளில் கற்கின்றோம். இப் புதுக் காலத்திலும் ஆடாதோடை, வாதமடக்கி, பாலறுகு, பிரண்டை, கற்றாளை இவ்வாறு பல மூலிகைகள் ஊடாக நாம் எமது நோய்களைத் தீர்த்துக் கொள்கின்றோம். இவ்வாறு நெடுந்தீவின் பழமையும் புதுமையும் மிகவும் போற்றத் தக்கதாக உள்ளது என்றால் அது மிகையாகாது.

நெடுந்தீவின் மொழிப் பிரயோகத்தை நோக்கினால் தூய தமிழுடன் இணைந்து பேச்சுத் தமிழும் காணப்படுகின்றது. வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத சில பேச்சு வழக்குகள் பழைய காலத்திலும் சரி இப்போதும் சரி எம் தீவிற்கே உரித்தடையதாக இருப்பது அன்றும் இன்றும் போற்றக் கூடியது உதாரணமாக படலை, சங்கேனம், தோம்பு இவ்வாறு கூறலாம்.

தென்றல் தவழ்ந்திடும் தீங்கனிச் சோலையில் தேமாங்குயில் பாடும் எமது தீவானது பக்குவமான இல்லற வாழ்க்கையைக் கொண்டு விருந்தோம்பல் நிகழ்விற்கும் பெயர் பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இராம பிரான் "பிரமகத்தி தோசம்" பிடித்து இலங்கைக்கு வந்து முன்னேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஸ்டை செய்த பின்பு நெடுந்தீவிற்கு வந்து ஆவரசம்பூ உண்டதாகவும் முன்னோர்கள் அவருக்கு உணவு கொடுத்ததாகவும் பழமை கூறுகின்றது. இன்றும் விருந்தோம்பலுக்கு எம் தீவே பிரசித்தி பெற்றுள்ளது

நீலக்கடல் மோதி எழும் எங்கள் நெடுந்தீவில் பழைய காலத்தில் பல சுதேச வைத்தியர்கள் இருந்து பணி புரிந்துள்ளனர். பல துறைகளிலும் முன்னேறி இருக்கின்றார்கள். இக் காலத்திலும் எத்தனையோ வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் எனப்பல நபர்களை எம்தீவு பெற்றெடுத்துள்ளது. குதிரை கட்டும் இடம், புறாக்கூடு. இராணி கோபுரம், பெருக்கு மரம் போன்ற வரலாற்றுச் சின்னங்கள் பழைய காலந்தொட்டே இருந்து வருகின்றன. அவற்றைப் பேணிப் புனரமைத்து இப்போதும் பாதுகாக்கின்றோம். இவற்றைப் பார்வையிட பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் வந்து போகின்றார்கள். இதனால் எம் தீவின் வருமானம் உயரக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு எம் தீவின் பழமை, புதுமைகள் காணப்படுகின்றன.

இன்னும் வீதிகள் கூடுதலாக ஒற்றையடிப் பாதைகளாக பழைய காலத்தில் காணப்பட்டதாகவும் கால் நடைகளே பல பாதைகளை நடந்து உருவாக்கியதாகவும் வரலாற்றுக் கதைகள் சான்று பகர்கின்றன இப்போது பல வீதிகள் விசாலமானதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கட்டு மரத்திலே களைக்கக் களைக்கப் பயணம் செய்த நாம் இன்று இயந்திரப் படகிலே (வடதாரகை, நெடுந்தாரகை, குமுதினி) உல்லாசமாகச் சென்று வருகின்றோம். இவ்வாறு எம் தீவின் பழமை புதுமைகள் காணப்படுகின்றன.

பழைய காலத்தில் ஓலைக் குடிசைகள் அதில் சாணம் கலந்து கட்டிய நிலத்தளங்கள் காணப்பட்டன. இன்று மாட மாளிகைகள் காணப்படுகின்ற போதிலும் எம் மக்கள் சுவாத்தியமாக வாழ்ந்த முன்னோரைப் பார்த்து ஒரு அறையாவது மணலுடன் மாட்டின் சாணம் கலந்து கட்டுகின்றமையை அவதானிக்ககூடியதாக உள்ளது. எனவே ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து எம்தீவின் பழமைகள் பேணப்படுகின்றமையும் புதுமைகள் அதனையொட்டியே அமைகின்றன என்றும் வெள்ளிடை மலையாகக் கூறக் கூடியதாக உள்ளது. எம்தீவின் மக்கள் அன்றும் இன்றும் சிறப்பான வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றார்கள். நவீன காலமாதலால் பல விஸ்தரிப்புக்கள் புதுமையாக இருந்தாலும் பழமையும் உள்ளடங்கலாகவே காணப்படுகின்றன. இவ்வாறு நெடுந்தீவின் பழமையும் புதுமையும் மிகவும் போற்றுதற்குரியனவாகவே திகழ்கின்றன எனலாம்.

வளர்க எம் தீவு

வாழ்க எம் மக்கள்

**திருமதி கஸ்தூரிதிலகம் ஜெயானந்தராசா**
**நெடுந்தீவு - 11**

# தொலைத் தொடர்பு சாதனங்களின் அபிவிருத்தியும் எதிர்கால சவால்களும்

கொப்புமாறி கொப்புப் பாய்ந்து வாலறுந்து இலை கொண்டு உடையுடுத்து வில்லேந்தி அம்பேந்தி வேடுவனாய் வாழ்ந்த மனிதனின் சிந்தை மிகு செயல்களினால் விந்தை மிகு உலகமே விஞ்ஞான உலகாய் மாறிவிட்டது. அதன் பரிணாமம் தான் தொலைத்தொடர்புசாதனங்களின் வளர்ச்சி ஆகும். பண்டைய எம் முன்னோர் செய்திகளைப் பரிமாற புறாக்களைத் தூதனுப்புதல், பறையடித்து அறிவித்தல் (பிரசித்தம் போடுதல்), புகையூட்டி அறிவித்தல் என்பவற்றின் மூலம் செய்திகளை ஒருவரோடு ஒருவர் பரிமாறிக் கொண்டனர். கால வளர்ச்சியில் கடிதமும் ஒரு தொடர்பு சாதனமாக உருமாறிக் கொண்டது. ஆறாம் அறிவை ஆராய்ச்சியில் செலுத்திய விஞ்ஞான மனிதன் தன் சிந்தனை மேலீட்டினால் இன்னும் பல தொலைத் தொடர்பு சாதனங்களை உருவாக்கிக் கொண்டான். அவை தான் நம் கைகளில் இன்று தவழ்ந்து விளையாடும் இணையம், தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, மின்னஞ்சல் போன்ற இன்னோரன்ன சாதனங்கள் ஆகும்.

இத்தகைய சாதனங்களின் வருகை எத்தனையோ நன்மைகளை எமக்கு தந்த வண்ணமே இருக்கின்றன. எனில் அது மிகையில்லை. எமது தீவையே எடுத்துக்கொண்டால் "ஒரு குழந்தைப் பேற்றுக்காக பாய்மரக் கப்பலில் சரக்குப் பொருட்கள் வாங்கச் சென்ற தந்தை குழந்தை பிறந்து தவழும் வயதிலே தான் திரும்பி வருவார்" என எமது பாட்டிமார் சொல்லக் கேட்டிருக்கின்றோம். அத்தகைய நிலையில் இருந்த எம் சமூகம் இன்று கைநொடிப் பொழுதில் தகவல்களைப் பரிமாறக் கூடிய வகையில் முகநூல், Viber, இணையம், Google. குறுஞ்செய்தி (SMS) போன்ற வசதிகள் ஏற்பட்டு விட்டன. எங்கோ ஒரு மூலையில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள தொலைக்காட்சி, வானொலி போன்ற வெகுசன ஊடகங்களும் பத்திரிகைகள் போன்ற அச்சு ஊடகங்களும் எமக்கு உதவி புரிகின்றன. இவையெல்லாம் தொலைத் தொடர்பு சாதனங்களின் மலர்ச்சியினால் ஏற்பட்ட மலர்ச்சி என்றே கூறலாம்.

எமது தமிழ்ச் சமூகம் போரினாலும் இன முரண்பாடுகளாலும் தம் உறவுகளை கண் காணாத் தேசங்களிற்கு அனுப்பிவிட்டு படும் இன்னல்கள் எண்ணற்றவை. ஆயினும் இன்றோ முகம்பார்த்து அருகிருந்து உறவாடுவதைப் போன்ற நிலை உருவாகி அவர்களது இன்னல்களை களைந்தமைக்கும் இத் தொடர்பு சாதனங்களின் பங்கு அளப்பரியது. எனவே எங்கோ இருக்கும் ஒருவரை முகம்பார்த்துப் பேசும் அளவுக்கு தொடர்பு சாதனங்கள் வலுப் பெற்று விட்டன.

இவை மட்டுமன்றி பல அரிய புத்தகங்களைப் பார்க்க வேண்டுமாயின் இணையத் தளங்களிற்கு சென்று பார்க்க முடியும் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற உலக நிகழ்வுகள் யாவற்றையும் விரல் நுனியில் விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி எமக்குக் கிடைத்துள்ளது. ஒன்றாகப் படித்த பல்வேறு தேசங்களைச் சேர்ந்த நண்பிகள், நண்பர்களை ஒன்றிணைக்கும் உறவுப் பால மாகவும் தொலைபேசி முகநூல் போன்ற சாதனங்கள் திகழ்கின்றன எனில் அது மறுக்க முடியாத உண்மையாகும்.

இத்தகைய நன்மைகளை அள்ளி வழங்கும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மனித செயற்பாடுகள் காரணமாக பல தீமையான விடயங்கள் நிகழவும் இடமளிக்கின்றன. தொலைபேசிப் பாவனை யானது இன்றைய எம் தலை முறைகளிற்கு தவிர்க்க முடியாத ஒரு சாதனமாக மாறிவிட்டது. ஒரு தகவலை - செய்தியை விரைவாகக் கடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இச் சாதனம் இன்று சமூக சீர்கேட்டை அல்லது இளைய சமுதாயத்தை பாதை தவறிச் செல்ல ஊக்குவிக்கின்ற ஒரு சாதனமாக மாறி விட்டதை எண்ணும் போது வேதனைதான் மிஞ்சுகின்றது. ஆம்! நாளுக்கு நாள் வெளிவரும் செய்திகளை நாம் அவதானிப்போமானால் இதன் உண்மைத் தன்மை வெளிப்படும்.

இன்றைய மாணவர் சமுதாயம் தொலை பேசிப் பாவனையால் கல்வியில் நாட்டமின்றி நீலத்திரைப் படங்களைப் பார்வையிடுவதன் மூலம் தமது நல்லெண்ணங்களில் தளம்பலடைகின்றது. இது மிகவும் வேதனைக்குரியது. முகநூல் பார்ப்பதில் நேரத்தைச் செலவிடுதல், அறியாதவர்களுடன் தொடர்பிணைப்பு ஏற்படுத்தல், அதனூடாக காதல் வயப்படுதல், இளவயதில் திருமணம் அல்லது மன முறிவு இதனால் தற்கொலை போன்ற விபரீத முடிவுகளை எடுத்தல் என்பன இன்றைய சமூகத்தின் சவால்களாக உள்ளன. இது மட்டுமன்றி திருமணமானவர்கள் கூட இத் தொலைபேசிகளின் பாவனையால் விவாகரத்து முதற் கொண்டு மறுமணம் வரையில் செல்வதைக் காண்கின்றோம். இதனால் அவர் தம் பிள்ளைகளும் சமூகத்தில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது மறுக்க முடியாத நிதர்சனம் ஆகும்.

மேலும் இணைய வழியில் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்தி அவரது சொத்துக்கள் வங்கி விபரங்கள் என்பவற்றை அபகரித்து அதனூடாக நாச வேலைகளில் ஈடுபடுதலும் இன்றைய வர்த்தக உலகில் நாம் நித்தமும் காணுகின்ற செயற்பாடுகளாகும். அதிஸ்டம் விழுந்ததாகக் கூறி பணமோசடியில் ஈடுபடுதல், வேலைவாய்ப்புத் தருவதாகக் கூறி பணம் பெறுதல் என்பனவெல்லாம் இத்தொடர்புசாதனங்களின் வளர்ச்சியை தவறான வகையில் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமையே ஆகும்.

மேலும் இன, மத, சாதி ரீதியான முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுதல் இதனால் பிரச்சனைகளை பெரிது படுத்துதல் ஒருவரைப் பற்றி தவறான கருத்துக்களை வெளிப்படுத்துதல் இவை யாவும் இன்றைய சமூகத்தில் நடைபெறும் நாளாந்த நிகழ்வுகளே இதனால் எத்தகைய பாரிய விளைவுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. என்பதை எண்ணிப் பார்ப்போமானால் அவை சொல்லற்கரியனவாகும்.

மேலும் தொடர்பு சாதன வளர்ச்சியால் எம் இளைஞர்கள் மத்தியில் மொழி விருத்தியற்றுப் போவது மிகப்பெரிய சவால் எனலாம். அத்துடன் சிந்தனை ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றமை வேதனைக்குரியது. கடிதம் எழுதும் பழக்கம் அருகி இன்றைய சமூகம் தொலைபேசி வழித் தொடர்புகளைப் பேணுவதால் உறவுகளிடையே அன்பில் விரிசலும் எழுத்தாற்றல் வளர்ச்சியும் அற்றுப் போவது வருந்தத்தக்கது. அத்துடன் கணிதம் போன்ற செயற்பாடுகளை தம் சிந்திக்கும் ஆற்றலால் மேற்கொள்ளாது இலத்திரனியல் சாதனங்கள், மூலம் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதால் சிந்தனை வளர்ச்சி மழுங்கடிக்கப்படுவதும் பெரும் சவாலாகவே விளங்குகின்றது.

மேலும் பெண்களைக் கடத்துதல், விபச்சாரத்தில் ஈடுபடுத்துல், உயிரைக் கொல்லுதல், களவெடுத்தல், வன்முறையில் ஈடுபடுதல் போன்ற நற்பண்புகள் அற்ற செயல்களில் ஈடுபடுவதற்கும் தொலைத் தொடர்பு சாதனங்கள் ஊடகமாக உள்ளன. எனில் அதில் தவறேதுமில்லை. திரைப்படங்களைப் பார்ப்பதும் அவற்றில் இடம் பெறுவதைப் போல புகைப்பிடித்தல், மது பாவனையில் ஈடுபடுதல், தம்போன்ற மனிதன் உட்பட்ட உயிர்களை வதைத்தல் போன்ற நாகரிகமற்ற செயற்பாடுகள், நவ நாகரிக உடையணிதல் என்பவற்றை அச்சமின்றி, கூச்சமின்றிச் செய்வதனால் ஓர் பண்பற்ற சமூகத்தின் பண்பாட்டைச் சீர் குலைப்பதாகவே தோன்றும்.

எனவே இவ்வாறான சவால்களுக்கு இன்றைய சமூகம் முகம் கொடுக்கின்றது என்றால் அது தொலை தொடர்பு சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சியால் ஏற்பட்ட விளைவுகளே எனலாம். ஆகவே தான் பண்பட்ட எம் பழம் பெரும் சமுதாயம் சிதறிச் சீரழியாமல் இருக்க வேண்டுமாயின் இளம் தலை முறையினராகிய நாம் தொலைத் தொடர்பு சாதனங்கள் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டனவோ அவற்றுக்காக மட்டும் பயன்படுத்துவோமாயின் எமது எதிர்காலத் தலை முறைகள் நிம்மதியாக , சுதந்திரமாக நோயற்றவர்களாக, ஒழுக்க சீலர்களாக நாட்டை ஆள முடியும். இல்லையேல் எம் தலைமுறையும் அழிந்து மொழி, பண்பாடு என்பன அழிந்து போக நேரிடும் எனவேதான் விழித்தெழுவோம். தொலைத் தொடர்பு சாதனங்களை தொல்லை தரும் சாதனங்களாக மாற்றாமல் அவற்றின் பாவனையை குறைப்போம். இனியனவாக்குவோம்.

**திருமதி தனுஷா கிரிசாந்தன்**
**4ம் வட்டாரம், நெடுந்தீவு**

**திறந்தபோட்டியில் முன்னிடம் பெற்ற கட்டுரைகள்**

# சிகரம் நோக்கி....

சிறுவர் முதல் கல்வி கற்போர் வரை
இலக்கே இதயம் என
கல்வியை வாழ்க்கை படகில் ஏற்றி
எதிர் காலத்தில் வைத்தியரோ தாதியோ
ஆசிரியரோ அலுவலக பணியாளரோ
ஆவோம் எனும் இலக்கு பயன்
வேண்டுமானால் தீமையை விலக்கு


பட்டப் படிப்புடன் ஆசிரியர் ஆக
விரும்பி செல்வேன் அந்தப் பாதை
பெற்றோரின் ஆசிர்வாதமும் - என்
நண்பர்களின் விருப்பமும் - என்னை
முன்னேற்றி விட வருவேன்
ஓர் ஆசிரியராய் அதுவே
என் உயர நிகரம் - என்
லட்சியம் ஆசிரியராதல்

கனவில் கண்டேன் ஆயிரம்
மாணவரை கொண்ட வகுப்பறையில்
கற்பிக்கின்றேன் தமிழ் பாடம்
விளங்குகிறதா தமிழ் உனக்கு?
தெரியவில்லை என்றால் சொல் எனக்கு
என பதுமையான குரல்களில்
உரைக்கின்றேன் சிறுவன்
ஒருவனுக்கு அவன்
புரிகிறது என்றான்
தலையசைவில்

கனவு கலைந்தது உண்மை
புரிந்தது எனக்கு
கனவா என்றார் என் அம்மா
ஆம் என்றேன் தலையசைவில்
சரி என்றார் கண் அசைவில்

தமிழ் என்றால் எனதுயிர்
வேண்டும் எனது ஆசிரியர் பணி
கனவும் நனவாக ஆசை தான்
கற்பிக்க ஆசை பெரிய ஓசையில் தான்
வரமே தருவாய் என் இறைவா
நல் ஆசிரியராகும் மகிழ்வின் வரம்

தேடல் மூலம் பணி கிடைக்கும்
வாடல் மூலம் பிணி பெருகும்
பிணியை வீசி பணி தொடர
செல்வேன் கல்வியின் படியில்
முதல் இடத்தில்.



பரீட்சையில் எனக்கு இறுதி இடம்
திட்டுக் கிடைத்தது அப்பாவிடம்
எப்படி ஆவாய் நீ ஆசிரியராய்
முட்டாளே என்றார் எனது அம்மா
வெட்கம் இல்லையா உனக்கு
என்றார் பாட்டி இருந்தும் சென்றேன்
சிகரம் நோக்கி....

வெற்றி நடை போட்டு ஏறு
பணி வாழ்வில் துலங்க சீறு
கடமையின் பயனே
வாழ்வில் கிடைக்கும் பணி
வாழ்வில் வேண்டும் இலட்சியம்
கிடைக்காது என்றும் பூச்சியம்
சென்று வருவோம் பணி மனைகள்
அங்கே வென்றிடுவோம் எம் பணியை
ஆசிரியர் நான் தானே
அது இல்லை என்றால் வீண் தானே
கனவில் கூட நீ ஆசிரியை
வெல்வாய் வெல்வாய் புதிய பணி

கனவில் கூட மாற்றம் நிகழாமல் காப்பாற்ற
கனவே காண மாட்டேனே
நிமிடத்திற்கு நிமிடம் ஆசை மாறுவது
இலட்சியம் என பொருள் படாது

தேவைக் கேற்ப கற்பிப்பேன்
மாணவரை உயர்த்துவேன்
பல்கலைக்கழகம்
செல்லு மகனே எனக்கூறி
வெல்லு என்பேன் இனிய குரலில்
கனவில் கூட நினைக்காதே
படிப்பு எனக்கு ஏறாதென்று.

சிகரம் நோக்கி விரைந்து செல்லு
ஆசிரியர் பணி கிடைத்தது என்று சொல்லு
இலட்சியமே உனது உயிர்.....



**அ.நேரோஜினி**
**தரம் - 09 றோ.க.மகளிர் கல்லூரி**

# சிகரம் நோக்கி....

1) சிகரம் நோக்கி எம் சிந்தனையில்
கல்வியை மறந்து விடாதே
கல்வியில் நீ உயர்ந்திடுவாய்
என்றும் வாழ்திடுவாய்

2) கல்வியின் அறிவை பயன்படுத்தி
பயிற்சிகள் செய்வாய்
உன் அறிவை பயன் படுத்தி
பரீட்சையில் சித்தி பெறுவாய்


3) பெற்றோர், ஆசிரியர் பெரியோர்
வழிகாட்டலால் நல்ல பிள்ளையாக
திகழ்வாலே என்றுமே புன்சிரிப்புடனே
வாழ்வாய்

4) இலட்சியத்தை நோக்கி கண்ணாக இரு
நீ நினைத்ததை சாதித்தே தீருவாய்
உயர்ந்திடுவேன் என்று நினைத்தால்
நீ வாழ்க்கையில் வெற்றி பெறுவாய்

5) சின்னஞ் சிறிய எறும்புகளாய்
இருந்தால் நாம் நினைத்ததை
சாதிப்போம் என்று நினைக்காதோ
உன்னால் முடியும் நம்பிக்கை
வைத்து செயற்படு.

6) சின்ன அறிவை பயன்படுத்தி
கல்வியில் முன்னேறுவாய்
கல்வியில் முன்னேறினால்
சிகரம் தொடுவாய்

7) பட்டப்படிப்பை முடித்து நீ
பல்கலைகழகம் செல்வாய்
என்று நினைத்து செல்
உனக்கு வெற்றி உண்டு




8) மணலில் இருந்து பாடம் படித்து
இப்போது கதிரையில் இருந்து படிக்கின்றோம்
நிலத்தில் படுத்து உறங்கினோம்
சிகரம் தொட கட்டில் வந்துவிட்டதே


9) தட்டிக் கேட்க யாருமில்லை
எமக்கு நடக்கும் குற்றங்களை
குற்றம் சாட்டி எம்மையும்
பொய் சொல்ல வைக்கின்றனர்

10) படிக்கும் பிள்ளை நாங்களும்
நல்ல பண்புகளை கடைப் பிடித்து வாழுவோம்
என்றும் தரணியில் உயர்ந்திடுவோம்
சிகரம் தொட்ட நாமும்

11) தேவையற்ற விசயங்களில் நாமும்
சேர்த்திடாமல் தேவையுள்ள



விசயத்தில் சேர்ந்து நாமும்
நல்ல பிள்ளை யாவோம்.



12) சிகரம் என்று என்று நினைத்து நாம்
எம் வாழ்வில் உயர்ந்திடுவோம்
திட்டம் ஏதும் செய்யாமல்
எம் வாழ்வில் உயர்ந்திடுவோம்

13) சட்டங்களை மதித்து நாம்
பட்டங்களை பெற்றிட
கட்டளைகள் சொல்லி நாம்
திட்டங்களை நிறை வேற்றுவோம்

14) மண்ணில் மாந்தர் வாழ விதிக்கும்
நல்ல சட்டங்களை மதித்து
சிகரம் தொட முயலவே
எம்முடைய சித்தம் நிறை வேறும்

15) சிகரம் தொட்டு நாமும்
உயர்ந்திடுவோம் வாழ்வில்
சிந்தித்திடுவோம் என்றும்
நல்ல பிள்ளை நாங்கள்

16) சிகரம் தொடுவேன் என்று
நினைத்து வாழ்வோம்
சிகரம் தொட்ட பின்னர்
எம் வாழ்வில் உயர்ந்திடுவோம்

17) என்னால் முடியும் என்று
தன்னம்பிக்கை வைத்து நாமும்
முயற்சி செய்து பார்ப்போம்

**ம.சபினா**
**தரம் - 09**
**நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**

# சிகரம் நோக்கி....




சிகரம் நோக்கி பறந்து வா
உன் இலக்கை நோக்கி பறந்து வா
பள்ளி சென்ற பருவத்தில் நீ
கண்ட கனவு பலவுண்டு அதில் நீ
எதை அடைய நினைக்கிறாய்
எனக்கு மட்டும் சொல்வாயா...

பள்ளி சென்ற பருவத்தில் நீ
செய்தவற்றை எல்லாம் நினைத்தாலே
போதும் என் கவலையெல்லாம்

தீர்ந்துவிடும் என் கவலையில்
கை கொடுத்தவன் நீ தான் நீ
கொடுத்த கைதான் என்னை....

இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு என்னை நன்றாக
உயத்தி செல்கிறது தமிழ் ஆங்கிலம்
கணிதம் போன்ற புரியாத பாடத்தை நீ நன்றாக
புரிய வைத்த நல்ல நண்பன் நீ தான்
உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று
எனக்கு புரியவில்லை....



எங்கள் வீட்டில் எல்லோரும் படிப்பை நிறுத்தச்
சொன்னாலும் அதனை கவனத்தில் கொள்ளாது நீ
எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அதனை எல்லாம்
எதிர்கொண்டு படி அப்போது உன் இலட்சியத்திற்குரிய
இடத்திற்கு நாங்கள் கொண்டு செல்லத்
தேவையில்லை உன் இலட்சியமே உன்னை
அங்கு கொண்டு செல்லும்....

எப்போது எல்லாம் பசி எடுத்தாலும் பசியை
பாராது படித்தால்த் தான் உன் இலக்கை நீ
அடைய முடியும் மின்சாரம் இல்லை
என்றாலும் அதனைப் பாராது விளக்கு ஏற்றி
இரவு இரவாக படித்தால் தான்
நீ உன் இலட்சியத்தை அடைய முடியும்......

ஒரு போதும் நீ ஏழை என்பதை நினைத்து
கவலை உறாதே பாடல் வரிகள் உண்டு
"ஏழை என்று ஒரு போதும் கவலை யுறாதே ஏனென்றால்
ஏழை ஒரு நாள் உயரத்தில் இருப்பான் பணக்காரன்
ஒரு நாள் தரையில் நிற்பான் பணக்காரனிடம்
பணம் மட்டுமே உண்டு ஆனால்
ஏழையிடம் படிப்பு மட்டுமே உண்டு....



பணக்காரனிடம் நல்ல பணம் உண்டு
அகங்காரியிடம் நல்ல கோபமுண்டு
அடக்கமில்லாதவளிடம் பணிவு இல்லை
பொய்காரனிடம் உண்மை இல்லை
தாழ்மை இல்லாதவனிடம் பணிவு இல்லை
ஆனால் ஏழையிடம் மட்டும் நல்ல படிப்புண்டு.....

ஆசை ஆசை என் இலக்கை நோக்கி
பறக்க ஆசை என்றும் என் இலக்கை நோக்கி
நான் பறப்பேன் ஆசை ஆசை என் இலக்கை
சிகரம் போல் நினைத்து பறப்பேன்....

**யோ.ஆன் வினுஸ்கா**
**தரம் 09**
**யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**

# சிகரம் நோக்கி....

சிகரம் நோக்கி நாம்
வளர்ந்தால் வாழ்க்கை என்பது
நம்மோடு வளரும்
நாம் சிகரம் நோக்கி
கத்தினால் யார் தாம் நம்மைத்
திரும்பிப்பார்ப்பார் ஆனால்
நாம் முயற்சி செய்தால்
சிகரத்தின் உச்சியில் நின்றும்
குதிக்க இயலும்

நாம் பிறக்கும் போது
நமக்கு பெற்றோர் உதவி கிடைக்கும்
நாம் நம் சொந்தக் காலில்
வளரும் போது யார் உதவியும் கிடைக்காது

நாம் இலட்சியத்தோடு வாழவேண்டும்
நாம் இலட்சியத்தோடு வாழ்ந்து
வெற்றி பெற்றால் யாராலும்
நம்மை அசைக்க முடியாது

நீ சிகரம் நோக்கி நிமிர்ந்து நில்
சிகரத்திற்கு அருகில் நிற்கும் நிலா
உன்னைப் பார்த்து சிரித்துக் கொண்டு
உன் நெற்றியில் பொட்டு இடும்

வானில் பறக்கும் பறவை
எந்தப் பயமும் இன்றி
அவ்வளவு உயரத்தில்
துணிவோடு பறக்கிறது.

அதே போல் நீயும்
உன் மேல் நம்பிக்கை கொண்டு
படித்துப் பார் அந்தப் பறவை போன்று
நீயும் வானில் பறப்பாய்

நாம் நம் இலட்சியக் கனவை
நனவாக்குவதற்கு ஒரே வழி
சிறுவயதிலிருந்தே கல்வி கற்று
முன்னேறினால் நம்
இலட்சியம் நிறைவேறும்

உன் இலட்சியம் சிகரம் தொட வேண்டும்
என்றால் நீ சிறுவயதிலிருந்தே
உல்லாசமான பறவை போன்றும் பயம்



இல்லாத சிங்கம், புலி போன்றும்
வாழ்ந்தால் நீ சிங்க நடை
போட்டு சிகரத்தில் ஏறுவாய்


சிகரத்தில் ஏறவேண்டும்
என நினைத்தால் - நீ
மின்சாரம் போல
இருக்க வேண்டும்
நீ சிகரம் நோக்கி உன் குரலை எழுப்பு



**அ.ரதனிஸ்ராலினி**
**தரம் 09**
**யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**

# சிகரம் நோக்கி....

பசுந்தீவாம் நெடுந்தீவில் பாரினில்
உதித்த எம்மை
நிழலென்று காட்சி தந்து
நம்மை வாழவைக்கும் இறைவன்
பற்பல பணிகளில் ஈடுபட்டு
பணி செய்து கொண்டிருக்கின்றோம்



கண்கள் திறந்து காரிருள் போய் - ஒளி
கண்டு சிரித்து மகிழும்
சிறுவர் கூட்டம் நாம்
பள்ளியில் வந்திடுவோம்
பாடந் தனை படித்திடவே
விளையாடியும் மகிழ்ந்திடவே

பள்ளிப் பருவத்தில் நாம்
பாடப் படிப்புடன் இணைந்திடுவோம்
படித்துப் படித்து வண்ண
மொட்டுக்களாய்
பறந்து பறந்து திரிந்திடுவோம்
சிரித்துச் சிரித்து ஆடி மகிழுவோம்

பண்பான பழக்கங்களைக் கொண்டு
பாடப் படிப்புடன் இணைந்து
பண் சொல்லும் சிறுவர் நாம்
பாரினில் உயர்ந்திடவே
பட்டுப் பாவாடை போல்
பரிதவித்துப் பறந்திடுவோம்.

பள்ளிப் பருவத்தில் பலருடனும் சேர்ந்து
படித்து ஆடி மகிழும்
இந்தத் சிறுவர் கூட்டம் - நாம்


பண்பான பழக்கங்களை
பள்ளியிலே கற்று மகிழ்ந்திட
பண்பு கொண்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்



பண்டிகைப் பெரு நாளாம் தனது
பண் கொண்ட திருநாளாம்
பள்ளியில் பயின்றிட பல
பண்டிகைகள் கொண்டாடப் படுகின்றனவாம்
இதைக் களித்து மகிழ்ந்திட
இனிய பிள்ளைகள் நாம்.

பன்னிரெண்டு புத்தகங்களைக் கொண்டு
பள்ளிப் பருவத்தில் இணைந்து - நாம்
பட்டப் படிப்புடன் தேர்ச்சி பெற
பயின்றிடுவோம் எம் கல்வியை
தொடர்ந்திடுவோம் எமது ஆற்றல்
பணியை நாம் மேற்கொள்ள

பட்டு இதயத்தைப் போல்
பறந்து ஆடி மகிழ
பல்கலைக் கழகத்துடன்
இணைந்து ஆடி மகிழ
வேண்டுங்கள் இனிதே இறைவனிடம்
ஆற்றுங்கள் அவர் சேவைக்கான பணியை




கல்வியிலே சிறப்புத் தேர்ச்சி பெற
பல்பெரும் கலைகளை படித்து மகிழ்ந்திட
பட்டப்படிப்புடன் பட்டம் போல்
இணைந்து பறந்திட
பசுந்தீவாம் நெடுந்தீவில்
பாரிய பணியை மேற்கொள்ள

இன்று தனை தொடங்கிடுவோம்
அன்று தனில் பயணித்திடுவோம்
எமது பல்கலைப் படிப்புக்கு
இன்று தனை ஆரம்பித்திடுவோம்
பயணம் செய்து மகிழ்ந்திடுவோம்
பல்கலைப் படிப்புக்கு ஆரம்பமாகிடுவோம்
எமது சிகரத்தை நோக்கி

**ப.மேரிபிரிந்தா**
**தரம் 09**
**யா/நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**

**தரம் - 8,9 கவிதைப் போட்டியில்**
**முன்னிடம் பெற்ற கவிதைகள்**

# சர்வதேச தினங்கள்



ஜனவரி 10 உலக சிரிப்பு தினம்
ஜனவரி 12 இளைஞர் தினம்
ஜனவரி 18 படைவீரர் தினம்


பெப்ரவரி 02 உலக திருமண தினம்
பெப்ரவரி 14 உலக காதலர் தினம்
பெப்ரவரி 28 தேசிய விஞ்ஞான தினம்



மார்ச் 08 உலக பெண்கள் தினம்
மார்ச் 13 உலக சிக்கன தினம்
மார்ச் 15 உலக நுகர்வோர் தினம்
மார்ச் 21 உலக வனதினம்
மார்ச் 22 சர்வதேச குடிநீர் தினம்
மார்ச் 24 உலக காசநோய் தினம்
மார்ச் 27 உலக நாடக தினம்

ஏப்ரல் 01 உலக முட்டாள் தினம்
ஏப்ரல் 07 உலக சுகாதார தினம்
ஏப்ரல் 12 உலக விண்வெளி தினம்
ஏப்ரல் 17 உலக பாரம்பரிய தினம்
ஏப்ரல் 18 சர்வதேச பண்பாட்டு தினம்
ஏப்ரல் 22 உலக பூமி தினம்
ஏப்ரல் 23 சர்வதேச புத்தக தினம்

மே 01 சர்வதேச தொழிலாளர் தினம்
மே 03 உலக ஆஸ்துமா தினம், சர்வதேச பத்திரிகை தினம்
மே 08 சர்வதேச சிலுவைத்தினம், செம்பிறை தினம், நூதனசாலை தினம்
மே 11 தேசிய தொழில் நுட்ப தினம்
மே 12 உலக தாதியர் தினம்
மே 15 சர்வதேச குடும்ப நல தினம்
மே 17 உலக தகவல் தொடர்பு தினம்
மே 24 பொதுநல வாய தினம்
மே 31 சர்வதேச புகைத்தல் மறுப்பு தினம்



ஜீன் 05 சர்வதேச சுற்றுச்சூழல் தினம்
ஜீன் 07 உலக தொல்பொருளியலாளர் தினம்
ஜீன் 14 உலக இரத்த வழங்குனர் தினம்
ஜீன் 26 உலக போதைப் பொருள் தினம்
ஜீன் 27 உலக நீரிழிவாளர் தினம்

ஜீலை 11 சர்வதேச சனத்தொகை தினம்
ஜீலை 26 சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு தினம்
ஜீலை 28 சர்வதேச அகதிகள் தினம்

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் | 03 | தேசிய நட்பு தினம் |
| ஆகஸ்ட் | 18 | உலக பூர்வீக மக்கள் தினம் |
| ஆகஸ்ட் | 19 | உலக படப்பிடிப்பாளர் தினம் |
| ஆகஸ்ட் | 29 | தேசிய விளையாட்டு தினம் |
| செப்ரெம்பர் | 02 | தென்னை தினம், வன்முறையற்ற தினம் |
| செப்ரெம்பர் | 08 | உலக எழுத்தறிவு தினம் |
| செப்ரெம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| செப்ரெம்பர் | 21 | உலக சமாதான தினம் |
| செப்ரெம்பர் | 26 | உலக செவிப்புலனற்றோர் தினம் |
| செப்ரெம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| ஒக்டோபர் | 01 | உலக முதியோர் தினம் |
| ஒக்டோபர் | 02 | உலக காந்தி ஜெயந்தி தினம் |
| ஒக்டோபர் | 03 | சர்வதேச மது ஒழிப்பு தினம் |
| ஒக்டோபர் | 04 | உலக மிருக நலன்புரி தினம் |
| ஒக்டோபர் | 05 | உலக ஆசிரியர் தினம் |
| ஒக்டோபர் | 09 | சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்டோபர் | 15 | வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்டோபர் | 16 | உலக உணவு தினம் |
| ஒக்டோபர் | 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| ஒக்டோபர் | 30 | உலக சிக்கன தினம் |
| நவம்பர் | 14 | சிறுவர் தினம் |
| நவம்பர் | 17 | உலக காக்கை வலிப்பு தினம் |
| நவம்பர் | 21 | சர்வதேச கடற்றொழிலாளர் தினம் |
| டிசம்பர் | 01 | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் | 03 | உலக ஊனமுற்றோர் தினம் |
| டிசம்பர் | 10 | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசம்பர் | 13 | சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம் |
| டிசம்பர் | 18 | சிறுபான்மை உரிமை தினம் |
| டிசம்பர் | 23 | சர்வதேச உளவு தினம். |








அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்து விடுங்கள்.

~ கில்ப்பின் ~

நம் காலுக்கடியிலேயே நாம் தேடும் சந்தோசம், அமைதி இருக்கிறது. ஆனால் அஞ்ஞானம் என்னும் இருட்டில் இருக்கும் நமக்கு அது தெரிவதில்லை.

~ சுவாமி சித்ரானந்தா ~

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

– ஆபிரஹாம் லிங்கன் –

கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்த பின் மனிதர் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்.

~ பிராங்க்ளின் ~

# நெடுந்தீவின் முடிசூடா மன்னன் நவரத்தின சிங்கம்

## அவரைச் சந்தித்தது...



1956ம் ஆண்டு ஆவணி மாதக்கடைக்கூறு என எண்ணுகின்றேன் நான் சென்னை கிறிஸ்தவக் கல்லூாயில் விலங்கியல் பட்டப்படிப்பு சிறப்புத் தேர்ச்சி வகுப்பின் இறுதி ஆண்டு மாணவன் நீண்ட கோடைக்கால விடுமுறை முடிந்ததும் வழமையாக விமானத்தளத்திலிருந்து மீனாம்பாக்கம் பயணம் செய்வது உண்டு. அக்காலத்தில் பலாலி விமான தளத்திலிருந்து திருச்சிராப் பள்ளிக்கும் சென்னை மீனம்பாக்கத்திற்கும் விமான சேவை இருந்தது.

மாணவர்கள் ஒரு சிலர் இம்முறை தலைமன்னார் சென்று கப்பல் மூலம் தனுஸ்கோடியை அடைந்து அங்கிருந்து சென்னைக்குப் புகையிரதம் மூலமாகப் போவது எனத் தீர்மானித்து செயற்பட்டோம். தனுஸ்கோடியில் புகைவண்டி ஏறினோம். நாம் அறுவர். புகையிரதப் பெட்டியின் ஒரு பகுதி நம்முடையதாகியது. நீண்ட பயணம். ஆகவே பலதும் பத்தும் பேசிப் பொழுது போக்கி கும்மாளமடித்தபடி சென்றோம். அப்பொழுது நமது பேச்சிலே பிரதானமாக அடிபட்டது அன்றைய பிரதமர் சேர். ஜோன்.கொத்தலாவல யாழ்ப்பாண வருகையும் அவரது நெடுந்தீவு நிகழ்ச்சியும். அதிபர் நவரட்ண சிங்கம் அதிபராக இருந்தார். அவரை எனக்கு முன் பின் தெரியாது. நெடுந்தீவில் சேர். ஜோன்.கொத்தலாவல நவரட்ண சிங்கம் அவர்களால் கௌரவிக்கப்பட்டது பற்றி அலசும் வாய்ப்பு எங்களுக்கு. சேர்.ஜோன்.கொத்தலாவல அவர்களுக்கு நெடுந்தீவின் மன்னர் என்ற கௌரவம் அதிபர் அவர்களால் வழங்கப்பட்டதாக கதை அடிபட்டுக் கொண்டிருந்தது. அக்காலத்தில் நான் தமிழரசுக் கட்சியின் தீவிர பற்றாளன். ஆகவே நான் ஆவேசமாக நவரத்தின சிங்கம் அவர்களை தாக்கிப் பலத்த குரலில் பேசினேன். தமிழனத் துரோகி ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பிரதமருக்கு அதிபர் கௌரவம் வழங்கியது, தமிழினத்துக்கு அவர் செய்த துரோகம் என நான் உரத்துக்கூறினேன். அனைவரும் தமிழின பற்றாளர்களாக இருந்தமையால் கண்டித்து பேசினோம். அதன் பின்னர் நாம் வேறு விசயங்கள் பற்றி பேசினோம். சிறிது நேரத்தின் பின்னர் எமது பகுதியின் வாசலின் முன் ஒருவர் வந்து நின்றார். ஆறடி உயரமிருக்கும் சிவந்த வட்ட வடிவான முகம் அகன்ற நெற்றி, நரையும் கறுப்பும் கலந்த சுருண்ட கேசம் தடித்த உதடு, புன்முறுவல் பூத்தார். வட்ட மண் நிற பிறேம் போட்ட கண்ணாடி என சற்றே கவர்ச்சியான தோற்றத்துடன் நின்றவர் எம்மைப் பார்த்து "தம்பி சென்னைக்கோ போகிறீர்கள்!" என்றார் எம்மில் ஒருவருக்குமே அவரைத் தெரிந்திருக்கவில்லை. "ஆமாம் நாங்கள் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் விடுமுறை முடிந்து கல்லூரிக்குப் போகின்றோம்" என்றோம். நான் மதுரைக்கு போகின்றேன் அங்கு அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் எனது மாணவர்கள் சிலரை சேர்க்க வேண்டியுள்ளது" என்றார் அட இவர் பெரும் ஆளாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கு ஏற்பட்டமையால், நீங்கள் யார்? என நான் அவரைக் கேட்டேன் என் பெயர் நவரத்தினசிங்கம் சிறிது நேரத்துக்கு முன்னர் உங்கள் வாயில் என் பெயர் தாராளமாக அடிபட்டதே அந்த பாக்கியசாலி நான் தான் என்றார் சிரித்தபடி எமக்கு திக் என்றது முழிபிதுங்க அவரைப் பார்த்தோம் என்ன சொல்வது எனத் தெரியவில்லை. "நாங்கள், நாங்கள்" என இழுத்தேன் "பரவாயில்லை இளைஞர்கள் சந்தித்தால் இத்தகைய உரையாடல்கள் நடை பெறுவது சகஜம். அதைப் பெரிது படுத்தலாகாது" என்றார். தான் நெடுந்தீவை சார்ந்த மாணவர்களை தமிழகத்திற்கு அழைத்து வந்து மேற்படிப்பு வசதிகள் செய்து கொடுப்பதாகக் கூறினார். இத்தனை நல்லவரா? ஊருக்கு உழைப்பவரா? இவரைப் பற்றி வாய் கூசாமல் அவச் சொல் கூறிவிட்டடேனே என் மனம் என்னை சாடியது. சிறிது நேரம் எங்களுடன் உரையாடி விட்டு சென்று விட்டார்.

அந்த நல்லவர் கொத்தலாவல சம்மந்தமாக அவரும் வாய் திறக்கவில்லை நாம் மறந்தும் ஒரு வார்த்தை கேட்கவில்லை. ஆனால் ஆசிரியத் தொழிலில் புகுந்த பின்னர் அவரது மாணவர்கள் எனது நண்பர்களாகினர். அவரைப் பற்றி அவர்களிடமிருந்து நிறையவே அறிந்து கொள்ள முடிந்தது. அந்த பெரியாரைப் பற்றி இழிவாகப் பேசியதற்காக இங்கு நான் அதை எழுதுவதன் மூலமாக எனது குற்ற உணர்வை போக்கிக் கொள்கின்றேன்.

அதன் பிறகு நான் அவரை சந்தித்ததில்லை. அவர் தனது சேவையின் கடைசிப் பகுதியில் ஏழாலை மகாவித்தியாலய அதிபராக இருந்தார். அவருக்குப் பின்னர் வேறு சிலரைத் தொடர்ந்து ஐந்து மாத காலம் அப்பாடசாலையின் அதிபராக நான் கடமையாற்றியுள்ளேன். அவரது நினைவைப் போற்றக்கூடிய விதத்திலே ஏதாயினும் செய்ய வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆனால் எனது குறுகிய காலச் சேவையில் எதுவுமே செய்யமுடியாது போய்விட்டது.

## எண்ணித்துணிந்தார் எடுத்த கருத்தில் வெற்றி பெற்றார்.

உடுப்பிட்டி எனும் கிராமத்தில் திரு.வில்லியம் சின்னையா அலிஸ் தம்பதியினருக்கு 1908ஆம்



ஆண்டு மாசி மாதம் ஆறாம் திகதி அவர்களது ஆறாவது பிள்ளையாக இவர் பிறந்தார். இவரின் தந்தையார் வில்லியம் சின்னையா ஒரு தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்ததுடன் அப்பகுதியில் பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணப் பதிவுக்காரராகவும் கடமையாற்றினார். இவரின் பெற்றோருக்கு நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக எட்டுப் பிள்ளைகள் இவரின் கடைசிக்கு மூத்த சகோதரியான செல்வி மேரி சின்னையா அவர்கள் பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியின் அதிபராக கடமையாற்றியுள்ளார். அவரின் அயராத உழைப்பால் அக்கல்லூரி சகல துறைகளிலும் முன்னேற்றம் பெற்றதோடு வடமாகணத்தில் புகழ் பூத்த மகளிர் கல்லூரியாகவும் மிளிர்ந்தது. அவரே தான் அக்கல்லூரியின் சேவையில் இருந்த இலங்கையைச் சேர்ந்த அதிபர்களில் முதலானவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு.நவரத்தின சிங்கம் அவர்கள் பண்டத்தரிப்பை சேர்ந்த சமய பக்தியும், கல்விச் சிறப்பும் உடைய குடும்பத்தை சேர்ந்த றெசீனா சொர்ணம் அவர்களைத் திருமணம் செய்தார். இவ் அம்மையாரின் மூத்த சகோதரர் திரு.வேதநாயகம் அவர்கள் பலாலி ஆசிரிய பயிற்சிக் காலாசாலையில் விரிவுரை யாளராகவும், இவரின் இன்னொரு சகோதரரான திரு.அமிர்தநாயகம் அவர்கள் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளனர். இவரின் கடைசி சகோதரரான வண.பிதா. பாக்கியநாதன் அவர்கள் தோலை கட்டி ஆச்சிரமத்தில் வண.பிதா தோமஸ் அவர்களுக்கு பின்னர் பொறுப்பாளராகப் பணியாற்றினார். இவரின் இளைய சகோதரனான திரு. அமிர்தநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தமையால் திரு.நவரத்தின சிங்கம் அவர்களின் மாணவர்கள் நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் போது அவர்களுக்கு பல உதவிகளைச் செய்து வந்தார்.

உயர் கல்வி மாணவர்கள் தங்கிச் செல்வதாயிருந்தால் இடவசதியளிப்பதிலும், ஆலோசனைகள் வழங்குவதிலும் இலவசமாக ஆங்கிலக் கல்வி புகட்டுவதிலும் பெரும் பணியாற்றினார். அவரின் துணைவியார் யாழ்ப்பாணக் கன்னியர் மடம் மகளிர் கல்லூரியின் ஆசிரியையாகப் பணியாற்றிய அலெக்ஸ் அவர்களும் உறுதுணையாக விருந்தார். மொத்தத்தில் நெடுந்தீவு மாணவர்களுக்கு நவரத்தினசிங்கத்தின் முழுக் குடும்பமே போட்டி போட்டு உதவியது அவர் மன்னராவதற்கு இவர்கள் துணை நின்றார்கள்.

திரு.நவரத்தினசிங்கம் அவர்கள் ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், பின்னர் தமது உயர் கல்வியியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் கற்றார். பின்னர் இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார் இப் பரீட்சை இலண்டன் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டது. அக்காலத்தில் இலங்கை அரசு சொந்தமாகத் தனது பரீட்சைகளை நடத்தாமையால் இங்கிலாந்துப் பரீட்சைகளுக்கே மாணவர்கள் தோற்ற வேண்டியிருந்தது.

பின்னர் இலங்கை அரசு சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை (Senior School Certificate Examination) என்ற பரீட்சையைத் தனது பரீட்சைத் திணைக்களத்தால் நடத்த தொடங்கியதும் அப்பரீட்சையில் Exemption பெறும் தகுதி இந்த மற்றிக்குலேசன் பரீட்சைக்கு ஈடானதாக கணிக்கப்பட்டது, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலே ஒரு பரீட்சாத்தி அதிக பட்சமாக எட்டு பாடங்களுக்குத் தோற்ற முடியும். இதில் ஆறு பாடங்களிலாவது சித்தி எய்தினால் தான் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சைச் சான்றிதழ் கிடைக்கும். ஐந்தில் சித்தியடைந்தால் பின்னர் ஆறாவதைச் சேர்த்துக் கொள்ளக் கூடியவாறு Referred சித்தி கிடைக்கும். 1950ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையுடன் இந்த Referred கொடுக்கும் முறை நிறுத்தப்பட்டுவிட்டது.


மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்த நவரத்தின சிங்கம் அவர்களை கத்தோலிக்க திருச்சபை அரவணைத்து ஆசிரியப் பணியில் அமர்த்தியது. அதன் விளைவாக பண்டாரவளை புனித யோசேப் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக ஆசிரியப் பணியில் காலடி எடுத்து வைத்தார். அதன் பின்னர் சில காலம் இளவாலையிலுள்ள புனித ஹென்றி அரசர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். புனித ஹென்றி அரசர் பாடசாலையில் கற்பித்தகாலம் மிக சிறிதாயிருந்தாலும், தனது திறமையை எடுத்துக் காட்ட அப்பாடசாலை தளம் அமைத்துக் கொடுத்தது.

அக்காலத்திலே ஐந்தாம் தரத்திலே பொதுப் பரீட்சை நடைபெறுவது வழக்கம். 1942ம் ஆண்டிலே நவரத்தினசிங்கம் அவர்கள் ஐந்தாம் தரத்தின் பொறுப்பாசிரியராக இருந்தார். 45 மாணவர்கள் பொதுப் பரீட்சையில் தோற்றினார்கள் அத்தனை பேரும் பரீட்சையில் சித்தியடைந்தார்கள் என்பதிலும் பார்க்க ஆச்சரியம் அதில் 22 மாணவர்கள் முதற் பிரிவில் சித்தியடைந்தவர்கள் என்பதாகும். அவர் ஒரு திறமையான ஆசிரியர் என்பது நிருபணமாயிற்று மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்த சித்தி ஒரு தகமைச் சான்றிதழைப் பெற்றுக் கொடுத்ததேயன்றி, தனது அபிலாசையாகிய ஆசிரியப் பணியாற்றுவதற்கு அத்தகைய சான்றிதழ் எவ்விதத்திலும் உதவமாட்டாது என்பதை அறிந்த நவரத்தினசிங்கம் ஆசிரியப் பணியாற்றுவதற்கு அத்தியாவசியத் தேவையான ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு முற்பட்டார். அதன் விளைவாக தான் கற்பித்த பாடசாலையை விட்டு விலகி அங்கிருந்து மஹரகம ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து கற்பதற்காக விண்ணப்பித்தார். அக்காலத்தில் இலங்கையில் ஒரேயொரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியே இருந்தது. அங்குதான் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி கொடுக்கப்பட்டது. அது மஹரகம ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி. அதில் தெரிவாகியவர் ஆங்கிலம் பயிற்றுவதற்கான பயிற்சி நெறியை தேர்ந்தெடுத்து இரண்டு வருடங்கள் ஆங்கில ஆசிரியர் ஆவதற்கான பயிற்சி பெற்றார். இரண்டு வருடப் பயிற்சியின் முடிவில் திரு.நவரத்தினசிங்கம் தகுதி பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியராக ஊர் திரும்பினார். தனது விருப்பத்திற்குகந்த ஆசிரியப் பயிற்சியை முடித்த திரு.நவரத்தின சிங்கத்தை இரண்டு மார்க்கங்கள் எதிர்கொண்டன. அக்காலத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கின்ற பாடசாலைகள் மூன்று வகையாக இருந்தன. அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் ஒரு வகை இப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அரச சேவையில் உள்ளோருக்கான அனுகூலங்கள் கிடைத்தன. இலவசக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்த

பின்னர் இந்த வகைப் பாடசாலைகளின் தொகை அதிகரித்தது. தனிப்பட்ட சைவப் பெரியார்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் இன்னொரு வகையாகவும், மதஸ்தாபனங்களால் தொடங்கப்பட்ட பாடசாலைகள் மூன்றாவது வகையாகவும் இருந்தன. இந்த இருவகைப் பாடசாலைகள் அரச நிதி உதவி பெறும் பாடசாலைகள், அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் இவ்வகை ஆசிரியர்களுக்கு கிடைப்பதில்லை. திரு.நவரத்தினசிங்கம் ஆசிரியப் பயிற்சி நெறி கற்கச் செல்வதற்கு முன்னர் கத்தோலிக்க பாடசாலை ஒன்றிலேயே ஆசிரியராக கடமையாற்றி வந்தார். ஆகவே மீண்டும் கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி போதிப்பதா? அல்லது அரச சேவையில் சேர்ந்து அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றுவதா? என்ற வினா அவருக்கு எழுந்தது. திருச்சபை பாடசாலைக்கு சென்று கல்வி கற்பித்தால் தனது மார்க்கத்தை சேர்ந்த சூழலில் கல்வி புகட்டலாம் என்பது உண்மையே ஆனால் ஒருவர் அரச சேவையில் புகுவதால் நிறையவே அனுகூலங்கள் அக்காலத்தில் இருந்தன. இலவசப் புகையிரதப் பிரயாண வசதி, ஓய்வூதியம் போன்ற பல சிலாக்கியங்கள் இருந்தமையால் அரச சேவையில் ஆசிரியப் பணியாற்றவே பெரும்பாலானோர் விரும்பினர். அதற்கு திரு.நவரத்தினசிங்கமும் விதிவிலக்காய் இல்லை. ஆகவே அவரும் அரச சேவையில் ஆசிரியப் பணியாற்றுவதையே தேர்ந்தெடுத்தார். அரச சேவையில் முதல் நியமனமாக வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக நியமனம் கிட்டிற்று 1945ம் ஆண்டு வரை அங்கு ஆசிரியராக சேவையாற்றினார்.

## திறமை மிக்க ஆசானாக அவர் துலங்கினார்.

அவர் ஆங்கிலம் மற்றும் கணிதம் கற்பிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். புதிது புதிதாய் நுண்ணிய முறைகளைக் கையாண்டு மாணவர் உள்ளங்களை ஈர்த்துச் சுவை யாக கற்பிப்பதில் சமர்த்தர். ஆங்கிலம் கற்பிக்கையில் உச்சரிப்பில் மிகவும் கவனமாக இருப்பார். மாணவர்கள் ஒவ்வொரு பதத்தினையும் அட்சரசுத்தமாக உச்சரிக்க வேண்டும் என்பதில் மிக சிரத்தையுடன் மீண்டும் மீண்டும் உச்சரித்துக் காட்டுவார். சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகம் ஒன்றைக் கற்பித்தார் என்றால் அவர் விளக்குகின்ற பாங்கு கேட்டுக்கொண்டிருக்கின்ற மாணவர் கண்களில் கண்ணீர் பெருக வைக்கும் என்கிறார். அவரிடம் ஹென்றி அரசர் கல்லூரியில் கல்வி கற்ற மாணவர் ஒருவர். அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீராகத் திகழ்ந்தார். உதைபந்தாட்டத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். மாணவர்களுக்கு சகல விளையாட்டுக்களிலும் பயிற்சி கொடுக்கும் வல்லமை உடையவர். பொதுவாகப் பயிற்சி கொடுப்பவரைப் போலல்லாது அவர் மாணவரோடு மாணவ ராய் நின்று விளையாடுவதால் மாணவர்களை சிறப்பாக நெறிப்படுத்த முடிந்தது. விளையாட்டில் கண்ணியம் பேண வேண்டும் எதிரணியினரையும் மதித்து அவர்களது திறமையைப் பாராட்டும் பண்பு வேணும் என்பதை மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் சொல்லத் தவறியதில்லை.




## புதிதாக தோன்றிய நெடுந்தீவுப் பாடசாலைக்கு ஒரு அதிபர் வேண்டியிருந்தது.

அன்றைய காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த C.W.W கன்னங்கராவினால் கொண்டு வரப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்தின் விளைவாக ஆங்கிலம் கற்க நாட்டம் கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால், தீவுப் பகுதியின் எல்லாத் தீவகங்களிலும் ஆங்கிலப் பாடசா லைகள் 1946ம் ஆண்டில் நிறுவப்பட்டன. இதன் விளைவாக நெடுந்தீவிலும், ஒரு ஆங்கில மொழி மூல கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பிக்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கிற்று. அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அப்பொழுது அதற்கான நிரந்தரக் காணியோ, கட்டிடமோ அங்கு இருக்கவில்லை. அச் சமயத்தில் அங்கு கிராமசபைத் தலைவராக இருந்த திரு.நாகேந்திரர் ஆங்கில மொழி மூலம் கல்வி புகட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவராக தற்காலிக உபயோகத்திற்கென ஒரு காணியினை

வழங்கினார். அது மட்டுமன்றி பாடசாலை நிறுவுவதற்கான உதவிகள் அனைத்தையும் செய்ததோடு ஆரம்பத்திலே ஒரு கொட்டிலையும் போட்டுக் கொடுத்தார். பாடசாலை உருவான போது அதை நிர்வகிப்பதற்கென ஒரு அதிபர் தேவை எழுந்தது. உள்ளூரில் தகுதியானவர்கள் இல்லாமையால் வெளியே இருந்தே அதிபர்கள் வரவேண்டி இருந்தது. அங்கே வருவதாயின் கடற்பிரயாணம் செய்ய வேண்டும். எனவே நெடுந்தீவிற்கு அதிபராக வருவதற்கு பிரயாண வசதி கருதிப் பலரும் பின் நின்றனர்.

அந்நேரத்தில் நெடுந்தீவின் கல்வி வரலாற்றில் ஒரு விடி வெள்ளியாக, உதய சூரியனாக திரு. நவரத்தின சிங்கம் அதிபராக வருவதற்கு முன்வந்தார். 1946இல் பாடசாலையின் அதிபராக தனது பொறுப்பையேற்ற நவரத்தின சிங்கம் கடமை வீரனாகப் பல சவால்களையும் ஏற்று தற்காலிக கொட்டிலில் 03 ஆசிரியர்களுடனும், 26 மாணவர்களுடனும் பாடசாலையை ஆரம்பித்தார். தொடங்கிய நாளிலிருந்தே பாடசாலையின் முன்னேற்றம் கருதி அரும்பாடு பட்டு உழைத்தார். அவரின் சேவையால் சொந்தமாக ஒரு அடி காணி கூட இல்லாத நிலையில் இருந்த பாடசாலை நிரந்தரக் காணியைப் பெற்றதோடு அழகான கட்டடங்களையும், பல் துறை சார்ந்த ஆசிரியர்களையும் ஆயிரக் கணக்கான மாணவர்களையும் கொண்ட உயர்தரப் பாடசாலையாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. அரசாங்கமும். திரு.நவரத்தின சிங்கத்தின் முயற்சிகளுக்கு தாராளமாக உதவியதைக் காண முடிகின்றது. கட்டடங்கள் எழுவதற்குரிய நிதியுதவியையும், தேவையான உபகரணங்களையும் கொடுத்து அவரது முயற்சிகள் திருவினையாக உதவியது. தற்காலிகமாக ஓலைக் கொட்டிலில் நடைபெற்ற பாடசாலையை எட்டுவருடங்களிலேயே சொந்தக் காணியில் நிரந்தரக் கட்டிடத்தில் நடைபெற வைப்பதற்கு அதிபர் நவரத்தினசிங்கத்தின் கடின உழைப்பு காரணமாயிற்று 1958ஆம் ஆண்டிலே பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக அரச அங்கிகாரம் பெற்றமை அதிபரது கடின உழைப்புக்கும் பெற்றோர்களது ஈடுபாட்டிற்கும் கொடுத்த அங்கிகாரம் என்றே கொள்ள வேண்டும்.

பாடசாலையைப் பொறுப்பேற்றமை பற்றி அவரே நினைவு கூறுகின்றார், "1946ம் ஆண்டிலே நெடுந்தீவு ஒரு வித்தியாசமான இடமாக விளங்கியது. நாட்டின் பிரதான பகுதியில் இருந்து பிரிக்கப்ட்டு கஷ்டமான கடற்பிரயாணம் மூலமாகத் தான் சென்றடையக் கூடிய ஒரு பெரிய தீவாக இருந்தது. சீதோஷ்ண நிலையோ மோசம் மூலவளங்களோ சொற்பம் மிகவும் குறைந்த சீவனம் நடத்தும் மக்கள் உணவுக்கே அல்லாடுகின்ற நிலமை. உடல் நலம், போக்குவரத்து, கல்வி அத்தனையுமே அரிதான நிலை. ஆனால் அவ்வூர் மக்களோ முயற்சியுடையவர்கள். கஷ்டத்தை எல்லாம் மனதிற்குள்ளே புதைத்தபடி வாழ்கின்றார்கள். ஆனால் எந்த விதமான வெறுப்புணர்வு அற்றவர்களாக நட்புடமையுடன் வந்தோரை அன்பொழுக வரவேற்று மகிழும் பெரு மனதுடையவர்கள். அவர்கள் உள்ளத்தின் பாரதூரமான ஏக்கம் தமது குலக்கொழுந்துகளுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பது மாத்திரமே. எனவே பதவி ஏற்ற எனக்கு அது ஒரு பெரும் சவாலாகவே அமைந்தது. இந்தச் சவாலை நான் மகிழ்சியுடன் ஏற்றேன். நான் எனது சவாலில் பெரிதும் வெற்றியீட்டுவதற்கு வேண்டிய அத்தனை காரணிகளும் அங்கே நிறைவேறியுள்ளன, என்பதைக் கண்டு கொண்டேன். மக்கள் புத்திக் கூர்மை உடையவர்களாக இருந்தார்கள். அவர்களின் திறமைகளை வளப்படுத்தி வழிகாட்டினால் பெரு வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்தேன் செயற்படுத்தினேன்" என்கிறார்.





கனிஷ்ட வித்தியாலயமாகவிருந்த பாடசாலை மிக விரைவிலேயே மகாவித்தியாலயமாக உயர்ச்சி பெற்றது. 03 ஆசிரியர்களுடன் தொடங்கிய பாடசாலை 30 இற்கு மேற்பட்ட அசிரியர்களைக்

கொண்டதாக வளர்ந்தது. மணற் தரையாகக் காட்சியளித்த பாடசாலைச் சூழல் பசுஞ் சோலையாக மாறியது. பாடசாலைச் சூழலில் பல்வேறு வகையான மரங்களையும், மலர் செடி கொடி வகை களையும் நாட்டி உருவாக்கியதுடன் மான், முயல் போன்ற வளர்ப்பு மிருகங்களையும் பறவை களையும் வெளியூரிலிருந்து கொண்டு வந்து வளர்த்து பசுஞ்சோலையாக மாற்றினார். மொத்தத்தில் நெடுந்தீவை தத்தெடுத்து விட்டார் எனலாம். விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வு கூடம், இந்து, கத்தோலிக்க சமய மாணவர்களுக்கான தனித்தனிப் பிரார்த்தனை மண்டபங்கள் என்பன பாடசலையை மேலும் அழகு படுத்தின. கல்வியிலும் மாணவர்கள், கலை விஞ்ஞானம், மரவேலை வர்த்தகம், பன்னவேலை எனப் பலதுறைகளிலும், பாட நெறிகளைத் தொடரவும், சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற கலைகளைக் கற்கவும் மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. விளையாட்டுப் போட்டிகள், கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பவற்றிலும் மாணவர் மாகாண ரீதியில் சிறந்து விளங்கினர். பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிலும் சித்தி பெற்று உயர் கல்வி பெறவும், அரச உத்தியோகங்கள் பெறவும் தகுதி பெற்றனர். மாணவர்கள் வாழ்க்கைப் பண்புகளிலும் சமூகப் பணிகளிலும் உயர்ச்சி பெற்றனர். அதிபரின் வழிகாட்டலினாலும் சில மாணவர் அதிபரின் உதவி பெற்றும் வெளிநாடு சென்று உயர் கல்வி பெற்றனர். இந்த அசுர சாதனை ஒரு நாளில் நடந்ததா? இல்லை பல வருடங்கள் எடுத்தன. ஒருவரின் வழிகாட்டலில் நடந்தது என்பது உண்மை ஆனால் பலரது ஒத்துழைப்பும் சேவையும், அவருக்கு வேண்டிய பலனைக் கொடுத்தன. அவர் 1946 தொடக்கம் 1964ம் ஆண்டு வரை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஆற்றிய சேவையின் பயனே இன்று உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழ்ந்த நெடுந்தீவு மாணவர்கள் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் சிறந்து விளங்குவதற்கு காரணமென்றால் அது மிகையாகாது.



நவரத்தினசிங்கம் அவர்கள் அதிபர், தந்தை, ஆசான், நண்பன் என்ற நிலை களில் மாணவர்களை வழி நடத்தினார். அவர் மாணவர்களது திறமைகளை இனம் காண்பதில் வல்லவர். ஒவ்வொரு மாணவனை யும் தனித் தனியே பல்வேறு சந்தர்ப்பங்களில் கூர்ந்து நோக்குவார் எடைபோடுவார். மனத்தளத்தில் பதிந்து வைத்துக் கொள்வார். மாணவர்களை மாத்திரம் அல்லாமல் ஆசிரியர்களையும் ஏன் நெடுந்தீவு வாசிகள் அனை வரினது குறை நிறைகளையும் இனம் கண்டார். அவர்களுக்கு ஏற்ற வகையில் உறவு பூண்டார். அல்லாவிட்டால் அந்த ஊரிலே அத்தனை சிறப்புடன் இத்தனை வருடங்கள் அதிபராக கடமையாற்றியிருக்க முடியுமா? ஒவ்வொரு மாணவன் பற்றி அத்தனை விபரங்களும் அதிபருக்கு அத்துப்படியாக இருந்தது. அதன் மூலமாகவே அவருக்கு அந்த மாணவனின் தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப உதவ முடிந்தது. போதியளவு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் உள்ளூரில் இல்லை ஆகவே குடாநாட்டின் பகுதிகளில் இருந்து தான் அங்கு வரவேண்டும். ஆகவே நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு ஆசிரியர்களாகவோ அல்லது இடமாற்றம் செய்யப்பட்டு வந்தவர்களோ அரை மனதுடன் தான் வருவார்கள். வந்தவர்கள் எத்தனை கெதியில் மாற்றம் எடுத்துப் போக லாம். என்ற நினைவிலேயே இருப்பார்கள். ஆகவே அவர்களிடம் வேலை வாங்குவதற்கு அசாத்திய சாதுரியம் வேண்டும். அது நிறையவே அதிபர் நவரத்தினசிங்கத்திடம் இருந்தது. எதனையும் சிரித்துக் கொண்டு சொல்வதால், ஆசிரியர்களை அவரால் வசியம் பண்ண முடிந்தது. உள்ளூர் மாணவர்களைப் பட்டதாரியாக்கினால் இந்தப் பிரச்சனைகளுக்கும் ஓரளவாவது தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையில் தான் S.S.C பரீட்சையில் நல்ல பெறு பேறுகள் பெற்ற மாணவர்களை அவர்களின் குடும்பத்தாரின் வசதியறிந்து தமிழகம் அழைத்துச் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ள அதிபர் நவரத்தினசிங்கம் உதவினார்.

தன் குடும்பத்தைப் பற்றி அவர் பேசியதை நான் கேட்டதில்லை. ஆனால் பாடசாலை பற்றி அவர் பேசாத நாள் பிறவாத நாளே. பாடசாலையையும், சமுகத்தினையும் அவர் இரண்டாகக் கண்டிலர். சமூகத்தின், குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உதவி ஆசிரியர்களையும் அழைத்துக் கொண்டு செல்வதற்கு தவறுவதில்லை. அங்கு சென்றதும், தனது வீட்டு நிகழ்ச்சி போன்று குடும்பத்தின் தலைவனாக நின்று செயற்படுவார் மக்கள் தமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகக் கண்டனர். தங்கள் கஷ்டநிலைகளைக் கூறி அதற்கான நிவாரணத்தையும் பெறுவதற்கு அவரை நாடிச் சென்றனர். மொத்தத்தில் அவரின் சேவைக் காலமாகிய பதினெட்டரை ஆண்டுகளும் நெடுந்தீவின் கல்வி வரலாற்றில் ஒரு பொற்காலம் ஆகும்." அவருடன் நீண்ட காலமாக ஆசிரியத் தோழனாக வாழ்ந்த திரு.சு.கந்தையா அவர்கள்.

"அரசாங்க ஆசிரியர் சேவையைத் தழுவிக்கொண்ட அமரர் தன் முழுத் திறமையையும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அதிபராக அமர்ந்த பொழுது வெளிக் கொணரலானார். கல்வித் துறையிலே பின் தங்கிய நிலையிலிருந்த பாடசாலையை மகாவித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தி கல்வி கலாசாரம், விளையாட்டு, கவின்கலை ஆகியவற்றில் ஈழத்தில் விளங்கும் ஏனைய கலாசாலை எவற்றிற்கும் சளைக்காத நிலையில் இக்கலைக் கூடத்தினை ஏற்றி வைத்த பெருமை இவரையே சாரும். தீவகத்தில் இவர் செயற்றிறனை வாயார வாழ்த்தி மனதார வியந்து உளமாரப் போற்றி நிற்பவர் பலர். அவர் அங்கு ஏற்றி வைத்த கல்வித் தீபம், தினகரனெத் திகழ்ந்து மலரென மணம் வீசி, தென்றலென இனிமையூட்டி தண்ணொளி பரப்பி நிற்பது பலரறிந்த உண்மையே" என வாயார வியந்துள்ளார் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராக இருந்த அருள் திரு. J.A பிரான்சிஸ் அவர்கள்.

கேடில் விழுச் செல்வம் கல்வியே என உணர்ந்தவர். தாம் இன்புறுவது உலகு இன்புறுவதைக் காண முயன்றார். தாம் பெற்ற செல்வம் மற்றோரும் பெற்றுய்ய அவருள்ளம் அன்பு இரக்கம், அரவணைப்பு, உழைப்பு, அறிவூட்டல், ஆதியாம் உச்சித பண்புகளுடன் யாவர்க்கும் உபகாரியத் தன்மையரானார். கல்வி வளர வறுமை தடையாக இருப்பதை தெரிந்து கொண்டதும், கற்க முன்வரும் வறிய பிள்ளைகளைத் தம் வளர்ப்புக் குழந்தைகளாகத் தம்மில்லத்திலேயே தாபரித்து பேணி வந்தார். சொந்தப் பிள்ளைகள் இருவரே ஆனால் வளர்ப்பு பிள்ளைகளோ குசேலருடைய குழந்தைகளிலும் கூடிய தொகையினராவார். "சோசலிச வாழ்வுக்கு வீட்டிலேயே வித்திட்ட வித்தகர் என்றால் மிகையாகாது" என்கிறார் அமரர் நவரத்தின சிங்கம் அவர்களுடன் மிக நெருங்கிப் பழகிய வைத்திய கலாநிதி க.பாக்கியநாதர், அத்தனாசியார் அவர்கள்.

## மாணவர்களைப் பற்றி மாத்திரமல்லாமல் மக்கள் உயர்வு பற்றியும் சிந்தித்தார்.

"காலம் சென்ற செல்வரசக்கு அவர்கள் கூட்டுறவு ஆணையாளராக இருந்த சமயத்தில், வெங்காயக் கூடை பின்னுவதற்கான பயிற்சி அளிப்பதற்கு இருவரை இந்தியாவில் இருந்து வருவித்திருந்தார். அவர்களைப் பொறுப்பேற்று பயிற்சியை நிர்வகிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். நெடுந்தீவு மக்கள் முயற்சி உடையவர்கள் ஆனால் போதிய மூலவளம் இல்லாமையால் வாழ்வில் முன்னேற முடியாமல் தவிக்கின்றார்கள் என்பதை அதிபர் அறிந்து வைத்திருந்தார். அவர்களது வாழ்க்கைத் தரம் உயர ஏதாவது செய்ய வேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்தவருக்கு நெடுந்தீவு வாழ் மக்களுக்கு இதன் மூலமாக நல்ல ஒரு சேவையை ஆற்ற முடியும் என்பதை உணர்ந்த வராகத் தாமாக வலிந்து சென்று அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பாடசாலை வேலையுடன் இந்த சீரிய முயற்சியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவரின் உழைப்பின் விளைவாக



ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஏன் பாடசாலை மாணவர்களும் கூட இக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டனர். இதனால் இலட்சக்கணக்கான ரூபாய்கள் அந்நிய செலாவணியாக இலங்கை அரசாங்கத்திற்கு மீதம் ஏற்பட்டது. ஆண்டு தோறும் இலட்சக் கணக்கான பணம் கண்ட நிலையில் உள்ள இக் கைத்தொழிலை மேற்கொண்ட வறிய குடும்பங்களுக்கு போய்ச் சேர்ந்து கொண்டது. அதன் விளைவாக நெடுந்தீவு வாழ் மக்களின் பொருளாதாரம் சீர்பெற்றது. ஆண்டு தோறும் எத்தனையோ ஏழைக்குடும்பங்களுக்கு வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடிந்தது.
இதன் பலனாய் இந்தியாவில் இருந்து வெங்காயக் கூடைகள் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டது." என்கிறார் அவரோடு ஆசிரியப் பணியாற்றிய மாதகல் வாசியான திரு.S.கந்தையா அவர்கள் பின்னாளில் சேகுவேரா கிளர்ச்சியை 1970இல் அழித்தொழித்த ஸ்ரீமாவோவின் அரசு கொண்டு வந்த தேசிய கல்வித்திட்டத்தில் புகுத்தப்பட்ட தொழில் முன்னிலைப் பாடங்கள் எனும் கற்கை நெறியினை திரு. நவரத்தினசிங்கம் அவர்கள் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் 1950களிலேயே புகுத்தி விட்டார்.

கல்வி கற்று சித்தியடைந்தோர் உயர் கல்வி பெற்று பல்கலைக்கழகங்கள் புகவும், அரசாங்க அலுவலக உத்தியோகங்கள் பெறவும் வாய்ப்புக்களைத் தேடி தேடி உதவினார். அதற்காக அவரது உழைப்பும் நிதியும் செலவிடப்பட்டதோடு ஊக்கமும் அளித்து வந்தார். பாடசாலையில் படித்தும் விலகி அரசாங்க துறையில் உத்தியோகம் பெற முடியாதவர்களுக்கு, வாலிப குடியேற்றத் திட்டங்களில் காணி பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். இதனால் மாணவர் பலர் மாத்திரமல்லாமல் பல ஏழைக் குடும்பத்தவர்களும் பலன் அடைந்தார்கள்" என முன்னாள் அதிபர் திரு.க.செல்லையா அவர்கள் நினைவு மலரில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார வசதியற்ற அன்றாடங்காய்ச்சிகளாக உள்ளூரில் பல பரம ஏழைக் குடும்பங்கள் இருந்தன. மக்களோடு மக்களாக வாழ்ந்து வரும் அதிபர் நவரத்தின சிங்கத்திற்கு இவர்கள் எல்லாம் பரீட்சயமானவர்கள் அவர்களில் சிலர் தமது பிள்ளைகள் கற்றுத் தேறவேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்தாலும் அதற்கான வசதிகள் அற்றவர்களாயிருந்தார்கள். அக் குழந்தைகளுக்கு நவரத்தின சிங்கத்தின் இல்லம் அங்கிகாரம் பெறாத ஒரு விடுதிச் சாலையாக அமைந்தது. அவர்களுக்கு உணவு முதல் சகல தேவைகளையும் தனது பொறுப்பில் எடுத்து அவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கு வழி வகுத்தார் அதிபர் அவர்கள்.

## வேறு பாடசாலைகளும் அவரது சேவையால் பயன் பெற்றன.

"தொட்டதெல்லாம பொன்னாகும்" என்பது நம்மவர் வாயில் புழங்கும் பழமொழி. ஆங்கிலத்திலேயேயும் அதற்கு ஒப்பான சொற்பிரயோகம் ஒன்றுண்டு அதனை "Midas Touch" என்பார்கள் அதிபர் நவரத்தினசிங்கம் அவர்களுக்கும் இந்த Midas Touch உள்ளது என்பது அவர் நிகழ்த்திய சாதனைகள் மூலம் அறிய முடிகிறது. 1964இல் நெடுந்தீவில் இருந்து மாற்றம் பெற்று ஏழாலை மகாவித்தியாலயத்தின் அதிபராக திரு.நவரத்தின சிங்கம் கடமையாற்றினார். இரண்டரை ஆண்டு காலமே அவர் அங்கே கடமையாற்றி உள்ளார்.
அந்தக் குறுகிய காலத்திலே அழகிய பிரார்த்தனை மண்டபம் ஒன்றை அங்கே நிர்மானித்து இருந்தார். பற்பல சமூக வகுப்பை சேர்ந்தவர்களும் முன்னேற அவரது நிர்வாகம் வழிவகுத்தது. அதனால் கல்வித் தரம் உயர்ந்தது. இங்கும் அவரின் சேவை எல்லோராலும் பாராட்டப் பட்டது. அதன் பின்னர் 1.1.1967 முதல் 3.2.1968 வரை சில காலம் மாதகல் புனித சூசையப்பர் பாடசாலை அதிபராகக் கடமையாற்றினார். அவர் அப்பாடசாலையின் பொறுப்பை ஏற்ற பொழுது அப் பாடசாலை கனிஸ்ட பாடசாலையாகவே இருந்தது. ஆனால் அவர் பதவியேற்ற ஒரு வருடத்தினுள் கட்டிடங்கள் அமைத்துக் கொடுத்து அப்பாடசாலையின் தரத்தை உயர்த்தி அதை ஒரு மகாவித்தியாலயத் தரத்திற்கு உயர்த்தினார். சொந்த வீடு அயலூரில் இருந்த போதும் மாதக் கணக்காய் பாடசாலையில் இரவும் - பகலும் தங்கியிருந்து பாடசாலையைக் கட்டியெழுப்பினார். சமானியர்களால் செய்ய முடியாதது ஒன்றினை இவர் சாதுரியமாக செய்து காட்டினார். அங்கு சேவையாற்றிய காலத்தில் அக் கல்லூரிக்கென ஒரு பெரிய கலையரங்கை நிறுவி மாணவர்களின் பொது நிகழ்ச்சிகள் நடைபெற வழிவகுத்தார்.

## நல்லோருக்கு ஓய்வு என்பது ஏது?

அவர் 1967ம் ஆண்டில் தனது அளப்பரிய கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இளைப்பாறிய பின்னர் பண்டத்தரிப்பு நகரசபைத் தலைவராகவும், சமாதான நீதவானாகவும், சிறப்பாக பணியாற்றினார். அவர் ஒரு சிறந்த மனித நேயம் படைத்த கல்வியியலாளர் துணிவும் ஆற்றலும் மிக்க அதிபர் அவரின் சேவையைப் பெறுவதே ஒரு பாக்கியமாகும்.

**தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு**
**சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்**
**சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்**
**தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்**
**கன்னலாட என்சிற்றூர் என்போனுள்ளம்**
**கடுகுக்கு நேர் மூத்த துவரையுள்ளம்!**

என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். சமூகத்தின் உயர்வினை மக்களின் நல் வாழ்வினை மனதிலே கொண்டு வாழும் பெரு மக்களுக்கு ஓய்வு என்பதில்லை தான் ஆற்றிய பணியிலிருந்து மாறி இன்னொரு அறப்பணியில் தன்னை அர்ப்பணிப்பார்கள். சீரியோர் தன் மனைவி தன் குழந்தைகள், தன் வீடு தனது தொழில் அதனால் வரும் சம்பாத்தியம் என்ற மன நிறைவுடன் வாழ்பவர்களை கவிஞர் கடுகு போன்ற உள்ளம் கொண்டவர்கள் என ஏளனம் செய்கின்றார். தான் இளைப்பாறிய காலதிலேயும் கல்விப் பணி, சமூகப் பணிகளுக்காகவே ஈடுபடுத்த விரும்பினார். திரு.நவரத்தினசிங்கம் அவர்கள் புனித. ஹென்றி அரசர் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர். பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதனால் அக்கல்லூரி சிறப்பாக இயங்குவதற்கு வேண்டிய அளவு பொருளாதார வசதி இருக்கவில்லை. ஓய்வு பெற்ற அதிபர் அவர்கள் பாடசாலைக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினை சீரமைத்தார். பல பழைய மாணவர்கள் நிதி உதவி செய்ய முன்வந்தனர். பாடசாலை பொருளாதார வசதியடைந்ததாயிற்று. பண்டத்தரிப்பு பட்டிண சபை அங்கத்துவத்தை ஏற்று தன் இறுதி மூச்சுவரை மக்கள் சேவையே மகேசன் சேவையெனக் கருதிச் செயலாற்றினார் அமரர் நவரத்தினசிங்கம் அவர்கள்.

"பத்திமா அன்னைக்கு ஒரு பேராலயம் எழுப்ப வேண்டும் அதில் பக்த கோடிகள் ஒன்று திரண்டு வழிபடும் உன்னதக் காட்சியைப் பார்க்க வேண்டும் என்ற பேராவலை பல தடைவை வெளிப்படுத்தினார். ஒற்றுமைக்கான முயற்சிகளிலும் ஏழைகளுக்கான முன்னேற்றப் பணிகளிலும் அவரது உதவியை நாடினேன். மிகவும் தாரள சிந்தையுடன் இதய பூர்வமான உதவியையும் ஒத்துழைப்பையும் காலொன்று வலுவற்றிருந்த நிலையிலும் கூட கார் வேண்டாம் எனக் கூறி கோலூன்றி நடந்து வந்து உதவினார். ஒரு முறையல்ல பல முறை இத்தகைய பொது நலச் சேவைகளில் அவர் காட்டிய வீரத்துவமான தியாக வாழ்வைக் கண்டு வியந்தேன்" என்கிறார் அருட்.திரு. ராசயோசேவ் அவர்கள்.

## நன்றி மறப்பது நன்றன்று

நெடுந்தீவு மக்கள் நன்றி பாராட்டுவதில் சிறந்தவர்கள் உயர்ந்தவர்கள். அதிபர் நவரத்தினசிங்கம் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றலாகியது 1965ம் ஆண்டிலே அவர் மறைந்தது 1974ம் ஆண்டிலே ஆனாலும் அவர் மறைந்து ஏறக்குறைய 24 ஆண்டுகளுக்கு பின்னர் அன்னாரது நூற்றாண்டை சிறப்பாக கொண்டாடியதோடு அல்லாமல் பாடசாலை முன்றலில் அவரது உருவச் சிலையை நிறுவுவதற்காக 06.02.2008 அடிக்கல் நாட்டப்பட்டு அவரது சிலை வைக்கப்பட்டுள்ளது போற்றுதற்குரியது.

**(இக்கட்டுரையானது திரு.பொ.கனகசபாபதி அவர்கள் எழுதிய "எம்மை வாழ வைத்வர்கள்" எனும் நூலில் இருந்து இச் சஞ்சிகையில் மறு பதிப்பு செய்யப்பட்டுள்ளது)**

ஒரு மனிதன் மிருகத்தைக் கொன்றால் அது வீரம். மிருகம் ஒரு மனிதனைக் கொன்றால் அது பயங்கரம். — பெர்னாட்ஷா —


அறிவுத் தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது. — சர்ச்சில் —

# இலங்கை பற்றிய விசேட தகவல்கள்

- இலங்கை வரலாற்றைக் கூறும் நூல்கள் - மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்
- இலங்கையின் பூர்வீக மாகாணங்கள் - ராஜரட்டை, மாயாரட்ட, றுகுணுரட்ட
- இலங்கையின் ஆதிக்குடிகள் - இயக்கர், நாகர்
- இலங்கையின் கௌரவங்களைப் பிரதிபலிப்பவை - தேசியக்கொடி, தேசிய சின்னம், தேசிய கீதம்



- இலங்கையின் தேசிய மரம் - நாகமரம் (விஞ்ஞானப்பெயர் நாகசூரியம்)
- இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம், எல்லே
- இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய மிருகம் - யானை
- இலங்கையின் குடியரசு ஆண்டு - 1972.05.22
- இலங்கையின் தேசபிதா - D.S. சேனநாயக்கா
- இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றியது - கி.பி 1505
- இலங்கையை ஒல்லோந்தர் கைப்பற்றியது - 1658
- இலங்கையின் தேசியக் கொடி - வாளேந்திய சிங்கம் 1972இல் ( இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.)
- தேசியக் கொடியை உருவாக்கியவர் - கேர்ணல் ஒல்கொட்
- இலங்கையின் தேசிய இனங்கள் நிறங்கள்



| | | |
|---|---|---|
| சிங்களவர் | - | காவிநிறம் |
| தமிழர் | - | செம்மஞ்சள் / இளஞ்சிவப்பு |
| முஸ்லீம் | - | பச்சை |

- இலங்கையின் தேசியக் கொடியின் உருவங்களும் அதன் கருத்துக்களும்.

| உருவம் | கருத்து |
|---|---|
| சிங்கத்தின் தலை | - நாட்டின் தலைவர் |
| சிங்கத்தின் உடல் | - வீரம் |
| சிங்கத்தின் வால் | - நீதி நேர்மையான ஆட்சி |
| வெள்ளரசு இலைகள் | - அன்பு, கருணை, அனுதாபம், சமத்துவம் |
| தேசிய நிறம் | - தேசிய ஒற்றுமை |

- தேசியக் கொடி ஏற்றப்படுவது - சுதந்திர தினம், தேசிய நிகழ்வு.
- தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடுவது - தேசிய துக்கம்.
- தேசிய சின்னம் உருவாக்கியவர் - மாபல கம விபுல சாரஹமி.
- தேசிய அடையாளங்களும் வெளிப்படுத்தும் கருத்துக்களும்.



| அடையாளம் | | கருத்து |
|---|---|---|
| சிங்கம் | - | வீரம் |
| கலசம் | - | சௌபாக்கியம் |
| சந்திர சூரியர் | - | உலக நிலைப்பாடு |
| நெற்கதிர் | - | சௌபாக்கியம் |
| தர்மச்சக்கரம் | - | தர்மமும் நீதியும் |
| தாமரை | - | தூய்மை |


- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
- இலங்கையின் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - பண்டிதர் மு.நல்லதம்பிப்பிள்ளை
- விஜயபாகு கொள்ளைய எனப்படுவது - 1521 ஆம் ஆண்டு கோட்டை இராச்சியத்தின் அரச உரிமையாளர்களான அரச குமாரர்கள் மூவர் 7ம் விஜயபாகுவான தமது தந்தையைக் கொன்று

கோட்டை இராச்சியத்தை மூன்றாகப் பிரித்துக் கொண்டமையைக் குறிக்கும்.

- இலங்கை சுதந்திரமடைய முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்கள்.
  1. 1833 கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம்.
  2. 1931 டொனமூர் அரசியல் யாப்பு
  3. 1947 சோல்பரி அரசியல் யாப்பு

- இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்கள்.
  1. 1972 1ம் குடியரசு அரசில் யாப்பு
  2. 1978 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு
  3. 1972ம் ஆண்டு ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பை உருவாக்கியவர் - கலாநிதி கொல்வின் R.D சில்வா

- இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை - 225. இதில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை - 29.
- இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பில் (1978) இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் - 19
- மாகாண சபை ஆட்சிமுறைகள் ஏற்படுத்தப்பட்டது -1987ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பின் 13ஆவது திருத்த மாகாணசபைச் சட்டத்தின்கீழ் ஆகும்.
- தமிழ்மொழி ஆட்சி மொழியாக்கப்பட்ட திருத்தச் சட்டமூலம் 16 ஆவது.
- நீதிமன்றங்களில் மிகவும் உயர்வானது - உயர்நீதிமன்றம்.
- நீதிமன்றங்களில் அடிப்படையானது - ஆரம்ப நீதிமன்றம்.
- நாட்டின் மிக உயர்ந்த சட்ட உத்தியோகத்தர் - சட்டமா அதிபர்.
- கிராமசபை, பட்டினசபை என்பவற்றை ஒன்றாக இணைத்து பிரதேச சபை எனும் உள்ளூராட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது – 1988
- நீதி வழங்குதல் செயற்பாடுகள் தோற்றம் பெற்றது - 1978ம் ஆண்டின் 2ம் இலக்க நீதிமன்ற ஒழுங்குகள் கட்டளைச் சட்டம்.
- கண்டியை ஆண்ட கடைசி மன்னன் - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்.
- யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் - சங்கிலியன்
- ஜனாதிபதியின் பதவிக்காலம் - 5 வருடங்கள்.
- ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறப் பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகள் 50% இதற்குக் குறைவாயின் விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.
- இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்மணி - புளொரன்ஸ் சேனநாயக்கா.



- உத்தியோகபூர்வ வதிவிடங்கள்


| | | |
|---|---|---|
| ஜனாதிபதி | - | ஜனாதிபதி மாளிகை |
| பிரதமர் | - | அலரிமாளிகை |
| சபாநாயகர் | - | மும்தாஜ்மஹால் |
| இசுறுபாய | - | கல்வி அமைச்சு |
| சிராவஸ்தி | - | பாராளுமன்ற உறுப்பினர் தங்குமிடம் |
| சௌசிரிபால | - | சுகாதார அமைச்சு |
| செத்சிரிபாய | - | திட்ட அமுலாக்கல் போக்குவரத்து அமைச்சு |
| சம்பத்பாய | - | காணி அமைச்சு |

- தாள் உலோக நாணயங்களை வெளியிடும் அமைப்பு - இலங்கை மத்திய வங்கி
- மத்திய வங்கியின் பிராந்திய பணிமனை உள்ள இடம் - அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை
- தற்போதைய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர
- தற்போதைய பாராளுமன்றக் கட்டடத்தை வடிவமைத்தவர் - ஜிப்ரிபாவா
- பாராளுமன்றத்தைச் சுற்றி ஓடும் ஆறு - தியவன்ன ஓயா
- கலாசார அல்லது பண்பாடு முக்கோண வலயங்கள் - அனுராதபுரம், பொலநறுவை, கண்டி

- தெங்கு முக்கோண வலயங்கள் - குருநாகல், சிலாபம், கொழும்பு
- புகழ்பூத்த குகை ஓவியம் - சிகிரியா
- சிகிரியா குகை ஓவியங்களை வடிவமைத்தவர் - காசியப்பன்
- மூவின மக்களும் வழிபடும் புனிதமலை – சிவனொளிபாதமலை
- ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம் - கன்னியா (திருகோணமலை)
- சிங்கள மொழித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றியவர் - பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர

- சமய மேம்பாட்டிற்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் ஈடுபட்டவர்
  1. இந்து மதம் - ஆறுமுகநாவலர்
  2. பௌத்த மதம் - அநாகரிக தர்மபாலா
  3. இஸ்லாமிய மதம் - M.C சித்திலெப்பை

- ஒரே ஒரு குடாநாடு - யாழ்ப்பாணம்
- வர்த்தமானி - அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகாரபூர்வமான ஏடு.
- ஹன்சார்ட் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்து நூல் வடிவில் சமர்ப்பிக்கப்படும் ஆவணம்
- வடக்கே உள்ள தீவு - அந்தமான் தீவு
- அநுராதபுரத்தைத் தலைநகரமாக்கிய முதலாவது அரசன் - பண்டுகாபயன்
- நீர்மின் சக்தியை உருவாக்கியவர் - விமலசுரேந்திரா
- இலங்கையர் கோன் எனப்படுபவர் - திரு. சிவஞானம்
- கலாவெவ வாவியைக் கட்டியவர் - தாதுசேனன்
- இலங்கை வரலாற்றில் முதல் மன்னன் - பண்டுகாபயன்
- தேவநம்பியதீச மன்னன் காலத்தில் இந்தியாவில் அசோக மன்னனால் பௌத்த சமயத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பப்பட்டவர் - அசோகனின் மகன் மகிந்ததேரர்
- பொலநறுவை காலத்தில் நீர்ப்பாசனத்தை நிர்மானித்து புகழ்பெற்ற மன்னன் - 1ம் பராக்கிரமபாகு
- தென்மேல் பிரதேச தலைநகரங்கள் தம்பதெனியா, யாப்பகூவா, குருநாகல், கம்பளை, றாகம, கோட்டை



- இலங்கையை தரிசித்த வெளிநாட்டவர்கள்

| | | |
|---|---|---|
| மார்க்கோபோலே | - | ஐரோப்பா |
| பாகியன் | - | சீனா |
| இபன்தூதா | - | மொரோகோ |

- சிரார்த்த சங்கிராய எனும் நூலை எழுதிய மன்னன் - புத்ததாசன்
- இலங்கையின் முதலாவது அரசதானியின் தலைநகரம் - கம்பளை
- நுகர்வோரைப் பாதுகாக்கும் சட்டம் - 1979ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
- குறிப்பிட்ட விலையிலும் பார்க்கக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் - 1956ம் ஆண்டின் விலைக் கட்டுபாட்டுச் சட்டம்
- இலங்கையில் வழங்கப்படும் விருதுகள் - ஸ்ரீலங்கா, அபிமான்யா, ஆதர். சி. கிளார்க், ஸ்ரீலங்கா ரத்னா
- புதிய கம்பனிச் சட்டம் - 2007ம் ஆண்டு 7ம் இலக்கக் கம்பனிச் சட்டம் ஆகும்.
- அரச கரும மொழிகள் சட்டம் அமுலாக்கப்பட்டது - 1956
- இலங்கை நிர்வாக அலகுகள் அறிமுகமானவை - 1963 ஆரம்பத்தில் (1948) சிவில் சேவை எனப்படும்.
- மாவட்ட செயலகங்களுக்குப் பொறுப்பான மாவட்டச் செயலாளர் எனும் பதவிப் பெயர் அறிமுகம் 1992 (ஆரம்பத்தில் 1800 இல் இறைவரி அதிபதி எனப்பட்டது)
- பிரதேச செயலகங்களுக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் எனும் பதவியில் பெயர் அறிமுகம் (ஆரம்பத்தில் 1924 வன்னிசை எனப்பட்டது) கிராமங்களுக்குப் பொறுப்பான கிராம சேவை அலுவலர் எனப்பட்டது. - 1977 (ஆரம்பத்தில் அரசர் ஆட்சியில் ராள அல்லது சுமராள எனப்பட்டது.)

- மாகாண மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது - அரசியல் அமைப்பின் 15வது திருத்தல் பிரகாரம்.
- ஜுசவை மனுக்களைப் பிறப்பிக்கும் அதிகாரம் கொண்டவை - மாகாண மேல் நீதிமன்றம்
- ஜுூரர்கள் எனப்படுவோர் - கற்பழிப்பு, கொலை ஆகிய குற்றச் சாட்டுக்களை இவர்கள் முன்னிலையிலே நடாத்தப்படும்.
- Trial at bar - ஜுூரர்களுக்குப் பதிலாக மூன்று மேல் நீதிமன்ற நீதிவான்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் கொலை, கற்பழிப்பு சம்பந்தமான வழக்குகள் நடைபெறுவதைக் குறிக்கும்.
- Divisional Bench மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 2 அல்லது 3 நீதியரசர்களைக் கொண்டு வழக்குகள் விசாரிக்கப்படுவதைக் குறிக்கும்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு 1991 நிறுவப்பட்டது. இது பயங்கரவாத தடைச்சட்டம், அவரசர காலச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் என்பன தொடர்பாக கண்காணிப்பில் ஈடுபடுகிறது.
- குறைகேள் அதிகாரி - ஓம்புட்ஸ்மன் நிர்வாகச் செயற்பாடுகளின் போது இடம்பெறும் அநீதிகள் புறக்கணிப்புக்கள் மீறல்கள் போன்ற விடயங்களை விசாரணைகளைச் செய்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பூரண சுதந்திரமான உத்தியோகத்தரராவர்.
- தற்போதைய அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மட்டுமன்றி பொருளாதார முன்னேற்றத் திட்டமாகவும் விளங்குவது - சமுர்த்தி
- உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகமானவை - 1979 (திருத்தங்கள் 2000 - 2002)



**தாராள மனம் படைத்த முதலாளி அவரது தொழிலாளி எவரையும் எந்நாளும் கைவிட மாட்டார்.**

~ ஜி.டி.நாயுடு ~

**நமது அறிவு என்பது எறும்பு என்றால் வாழ்க்கையும் இந்த உலகமும் யானை-யைப் போன்றன.**

~ சுவாமி சுகபோதானந்தா ~

**பரிந்துரை ஒருவரை அறிமுகம் மட்டுமே செய்யும். தகுதிதான் அவரை நிலை பெறச் செய்யும்.**

~வைரமுத்து ~

**தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம்.**

~சிம்மன்ஸ்~

# பிளாஸ்ரிக் பாவனையும் அதை தடுக்கும் வழி முறைகளும்



நாம் இப்பொழுது 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகம் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றது. அதில் முக்கியமாக தொழிநுட்பம் முன்னேற்றம் அடைந்துள்ளது நமது உலகியல் வாழ் அம்சங்கள் மாறி விட்டன. இப்போது நாம் என்ன கொண்டு செல்வதாயினும் பிளாஸ்ரிக் பொருட்களையே பாவிக்கின்றோம். முன்னைய காலங்களில் "பிளாஸ்ரிக் என்றால் என்னவென்று மக்களுக்குத் தெரியாது. இங்கு பிளாஸ்ரிக் இல்லாத வீடுகளே இல்லை" முன்னைய காலங்களில் பிளாஸ்ரிக் பயன்படுத்தாது இயற்கை சம்மந்தமான பொருட்களை பயன்படுதினர்.

தற்போதைய காலங்களில் உலகமயமாக்கல் காரணமாக பிளாஸ்ரிக் பாவனை அதிகமாகி உள்ளது இதனால் நன்மைகள் தீமைகள் என்று இரண்டு விதமாக கிடைக்கின்றன. இவற்றில் தீமைகள் அதிகமாக கிடைக்கின்றன. இவற்றினால் கிடைக்கும் நன்மைகளை பார்க்கும் போது இவற்றை உற்பத்தியின் போது பொதியிடப் பயன்படுத்துகின்றனர். மற்றும் கடைகளுக்கு கொண்டு செல்லப் பாவிக்கின்றனர். இவற்றை கொண்டு தான் எங்குசெல்ல வேண்டும். என்றாலும் செல்ல வேண்டும் உணவை உற்பத்தி செய்து விநியோகிக்கும் போது எல்லா உணவுப் பொருட்களுடனும் இந்த பிளாஸ்ரிக் செல்கின்றது. பிளாஸ்ரிக்கினால் உணவு நீண்ட நாட்களாக பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறாக சில நன்மைகள் காணப்படுகின்றன.

இவற்றினால் உண்டாகும் தீமையை உற்று நோக்கினால் இவை மனிதரால் சூழலுக்கு பல்வேறு உற்பத்திகளின் மூலம் கொண்டு வரப்படுகின்றன. இதனால் பல இடங்கள் அசுத்தமாகின்றன. இந்த பிளாஸ்ரிக் பாவனையின் பின்பு மக்கள் அதை வீதிகளிலே போட்டு விடுகின்றார்கள். இதனால் மனிதன் உட்பட ஐம்பூதங்களும் ஆபத்துக்கு உள்ளாகின்றன. இதனால் மண், நீர், வளி என்பன மிகவும் பாதிப்படைகின்றன. நிலத்தினால் பிளாஸ்ரிக்கை பிரிகையடையச் செய்ய முடியாததன் காரணத்தினால் பிளாஸ்ரிக் நிலத்தினுள் காணப்படுவதுடன் மிகவும் நிலம் பாதிப்படைந்து நிலம் ஒரு போசணை அற்றதாக மாறுகின்றது மற்றும் நீரினுள் பிளாஸ்ரிக்கை போடுவதினால் அவை நீரினுள் வாழும் மின்களால் தமக்கு உரிய உணவு என சாப்பிடப்படுகின்றது. இதனால் அவைகளின் உயிருக்கு மிகவும் ஆபத்து ஏற்படுகின்றது இதனால் நீர் மாசடைகின்றது முக்கியமாக வளி தான் கூடுதலாக மாசடைகின்றது.

பிளாஸ்ரிக் பொருட்களை மக்கள் பயன்படுத்தி விட்டு எரிப்பதினால் மனிதனுக்கு பல்வேறுபட்ட நோய்கள் உருவாகின்றன அவ்வாறான நோய்களாக கூடுதலாக சுவாசப் புற்றுநோய் ஏற்படுகின்றது. மற்றும் பிளாஸ்ரிக்கை எரிப்பதினால் உண்டாகும் வாயுவினால் படை மண்டலத்தில் காணப்படும்

படை மண்டலமான ஓசோன் படை மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இதன் காரணமாக அது தடுத்து வைத்திருந்த புற ஊதாக் கதிர்களை பூமிக்கு மிக கூடுதலாக விடுகின்றது. இதனால் மனிதர்களுக்கு பல நோய்கள் ஏற்படுகின்றன. மற்றும் சில வேளைகளில் மரணம் கூட சம்பவிக்கலாம் முக்கியமாக இந்த பிளாஸ்ரிக்கை சூழலில் காணக்கூடிய விலங்குகள் தமது உணவு என எண்ணி உண்பதினால் மரணமடைகின்றன. உதாரணமாக ஆடு, மாடு என்பன சூழலில் காணப்படும் பிளாஸ்ரிக் பொருட்களை உண்பதினால் உணவு ஜீரணம் அடையாமல் அந்த விலங்குகள் இறந்து போகின்றன. அவை இறப்பதற்கு உலகில் இவை கூடுதலான காரணமாகக் காணப்படுகிறது. அவற்றை தடுக்க பல வழிமுறைகள் காணப்படுகினறன நாம் பிளாஸ்ரிக் பாவனையை தடுக்க வேண்டும். இயன்றளவு நமது உலகில் காணப்படும் பொலித்தீன்களை, பிளாஸ்ரிக்குகளை குறைப்பதற்காக, தொழிசாலைகளில் பிளாஸ்ரிக் பயன்படுத்தப்படாமல் இயற்கையானவையை பயன்படுத்த வேண்டும். மற்றும் பிளாஸ்ரிக்குகளை இயன்றளவு நமது சூழலில் இருந்து கழிவு முகாமைத்துவம் செய்ய வேண்டும் பிளாஸ்ரிக் என்பது ஒரு அபாயகரமானது. மற்றும் அரசாங்கத்தினால் பிளாஸ்ரிக் பாவனையை குறைப்பதற்கான சட்டங்கள் கட்டாயம் அமுல்படுத்த வேண்டும். அவ்வாறான சட்டங்களாக வெளியில் செல்லும் போது அதாவது சந்தைக்கு பிளாஸ்ரிக் பொருட்கள் சம்மந்தமானவையை கொண்டு செல்லாது துணிகளில் செய்யப்பட்ட அல்லது இயற்கையான முறையில் செய்யப்பட் கொள்கலன்களை கொண்டு செல்லுதல் போன்றவற்றை அமுல்படுத்தல் மற்றும் பொலித்தீன்களை அரசாங்க உத்தரவு இன்றி பாவிப்பவர்களுக்கு வரி சட்டங்களை அமுல்ப்படுத்தல் சுற்றாடலில் உள்ள கழிவுகளான பிளாஸ்ரிக்களை தடுப்பதற்கு முன் சுற்றாடலில் காணப்படும் மற்றும் மக்கள் பிளாஸ்ரிக்களை ஏற்றுக் கொள்ளாது அவற்றை பாவிக்காது இருத்தல்

"பிளாஸ்ரிக் பாவனையால் இயற்கை பாதிக்கப்படுகின்றது. அது பின்பு நம்மை பாதிக்கின்றது" இதை தான் முன்னோர்கள் சொல்வார்கள் "தன்வினை தன்னைச் சுடும்" என்ற பழமொழியின் ஊடாக உணர்த்திருக்கின்றார்கள். ஆகவே நாம் பிளாஸ்ரிக் பாவனைகளை கட்டுப்படுத்தி வருங்கால சந்ததிகளுக்கான திட்டவட்டமான அழகான உலகை கட்டி எழுப்புவோம்.

**பீ.ஜெயக்குமார்**
**தரம் - 11**
**யா.நெடு.மகாவித்தியாலயம்**

# பிளாஸ்ரிக் பாவனையும் அதை தடுக்கும் வழிமுறைகளும்

இலங்கை இன்று நாடளாவிய ரீதியில் பெரிதும் பாதிக்கப்படுவது பிளாஸ்ரிக் பாவனையால் தான் பிளாஸ்ரிக் பாவனையால் நாடு பல்வேறு விதமான அசுத்தங்களுக்கு உள்ளாகின்றது. இதை தடுக்க அரசாங்கத்தால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அதை தடுக்க முடியவில்லை. அதற்கு காரணம் அவற்றின் பரம்பல். அது இலங்கை முழுவதும் பரவி காணப்பட்டதால் அவற்றை தடுக்கமுடியவில்லை.



பிளாஸ்ரிக் பாவனையால் வெளியேறும் நச்சு வாயுவான காபனீரொட்சைட்டு எமது பூமியை பாதுகாக்கும் ஓசோன் படையை பாதிப்படைய வைக்கிறது. இதனால் பல்வேறு விதமான பிளாஸ்ரிக் பொருட்களை முறையாக அகற்றாமையினால் பல பிரச்சினைகள் ஏற்படுகிறன. சூழல் மாசடைதல், சுத்தமான வளி கிடைக்காமை, சுவாசிக்க முடி யாமை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறன.

ஒருவன் உயிர் வாழ்வதற்கு மிக முக்கியமானது வளி. வளி இல்லாவிட்டால் சுவாசிக்க முடியாது. சுவாசிக்காமல் விட்டால் உயிர் வாழ முடியாது. அத்தகைய வளியில் இந்த பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் ஏற்படும் வாயு அதில் சேர்கின்றது இதனால் நமக்கும் பலநோய்கள் ஏற்படுகிறன. இதயம் சீராக செயற்படாமை, சிற்றறைகள் இயங்காமை இவற்றை நாம் ஏனோதானோ என்று விட்டுவிட்டால் எமக்கு உயிர் போவதற்கே வாய்ப்பு உள்ளது இவற்றை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

பிளாஸ்ரிக் என்பது ஒரு உயிர் கொல்லியாகத்தான் கருதப்படுகிறது. அதனால் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு உயிர் ஆபத்து ஏற்படுகிறது. இப் பிளாஸ்ரிக்கை தடுப்பது இலகுவான காரியமல்ல இது இந்த நாட்டில் நிலைப்படுத்தப்பட்டுவிட்டது. ஒரு மரம் எப்படி வேரினால் நிலைத்து நிற்கிறதோ அது போல தான் இந்த பிளாஸ்ரிக். இதை தடுக்க பல்வேறுபட்ட முயற்சிகள் எடுக்க வேண்டும். சிலர் பிளாஸ்ரிக் என்றாலே என்னவென்று தெரியாது.

பிளாஸ்ரிக் பொருட்களாக போத்தல்கள், பைகள், செருப்புகள் இப்படி பல்வேறு பொருட்களில் பிளாஸ்ரிக் கலந்துள்ளது. பிளாஸ்ரிக்கை நாம் தடுக்க வேண்டியது எமது கடமையாகும் ஏனென்றால் எதிர்காலத்தில் எமது பிள்ளைகளுக்குத் தான் ஆபத்தை ஏற்படுத்தும். ஒரு சிங்கக் குட்டியை வளரவிட்டால் சிங்கம் எத்தனை பேரை சாப்பிடும். அது போல தான் பிளாஸ்ரிக் பாவனையை வளர விட்டால் நம் பிள்ளைகளைத் தான் பாதிக்கும் பிளாஸ்ரிக்கால் நாம் மட்டுமல்ல விலங்கினங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பனவும் பாதிப்படைகிறது.

எவ்வாறு என்றால் நாம் கடல் பிரயாணத்தின் போது வாந்தி வந்தால் அதை பொலித்தீன் பைகளுள் எடுத்துவிட்டு கடலில் எறிகின்றோம். அந்த கடல் உயிரினங்கள் அதை தன் உணவாக உட்கொள்கிறது பின் கடல் ஓரங்களிலும் கடல்களிலும் இறந்து கிடக்கும் அது மட்டுமல்ல விலங்குகள் புல்களை தின்னும் போது அதனுடன் இருக்கும் பொலித்தீன் பொருட்களையும் தின்னும். அது சமிபாடடையாமல் கழுத்திலே இருந்து இவ் விலங்கின் உயிரை கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கும்.

பொலித்தீன் பாவனையை தடுக்க பல முயற்சிகளை மேற்கொள்ளலாம் அதற்கு அரசாங்கம்




எம்முடன் இருக்க வேண்டும் அப்போது தான் அது சாத்தியமாகும். புதிய சட்டங்களை உருவாக்கி பொலித்தீன் பாவனையை தடைசெய்யலாம். அதை மீறுவோருக்கு தண்டனைகள் வழங்கலாம். பொலித்தீன் பாவனைக்கு பதிலாக துணி பாவனைகளை உருவாக்கலாம். துணி பைகளையும்

துணி உடுப்புகளையும் உருவாக்கலாம். பைகளால் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. அதற்காக துணி பைகளை பாவிக்க வேண்டும் என்ற சட்டங்களை அமுல்படுத்தலாம்.

இதனால் நாட்டின் சுற்றுப்புற சூழல் பாதுகாக்கப்படுவது மட்டுமல்லாது, இந் நாட்டு மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். வன விலங்குகளும் கடல் உயிரினங்களும் சுதந்திரமாக நடமாடும். இவற்றையே அவையும் விரும்பும் இவற்றை நாமே அவற்றுக்கு வழங்க வேண்டும். பொலித்தீன் பாவிப்பின் தீமைகளையும், அதனால் ஏற்படும் நோய்களையும் அவற்றின் பின் தாக்கங்களையும் தெளிவுபடுத்தி அவற்றைத் தடுக்க வேண்டும்.

உயிரிடத்தில் அன்பு வேண்டும். ஏனென்றால் நாம் மட்டுமல்ல உயிர் விலங்குகளும் உயிர்கள் தான் அவற்றை பாதுகாப்பது எமது கடமை. எனவே பொலித்தீன் பாவனையை தடை செய்து எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைக்கு நாமும் ஒரு ஊன்றுதலாய் இருப்போம் நாட்டின் தூய்மையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக பேணிகாப்போம்.

யே.மைக்கல்
தரம் - 11
யா.நெடு.மகாவித்தியாலயம்



உண்மையான செல்வாக்கை நாம் தேடிக் கொள்ளக் கூடாது. அது நம்மைத் தொடர்ந்து வரவேண்டும்.
~ மான்ஸ்பீல்டு ~

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.
~அன்னை தெரசா ~

எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.
~ஜேம்ஸ் ஆலன் ~

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.
~பெர்னார்ட்ஷா ~

இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பிரம்மச்சாரியம் அவசியம். ஏனெனில் உடல் மீதான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் கிடையாது.
~ ஸ்ரீசாரதாதேவி ~

மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.
~ சாணக்கியர் ~

# தொலை பேசியும் மாணவர் சமூகமும்

இருபததோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும்நாம்நன்மை, தீமைகளை அறிவியல் வளர்ச்சியில் கண்டு கொண்டிருக் கின்றோம். அவ் வகையான விஞ்ஞான விந்தை கள் மற்றும் பல கண்டுபிடிப்புக்கள் மூலம் இப் பூமியானது ஒரு கிராமமாக சுருங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான கண்டுபிடிப்புக்களில் ஒன்றுதான் இத் தொலைபேசியும். தொலைபேசியின் பயன்பாடு எமக்கு நன்மை, தீமை பயக்கக் கூடியதாக இருந்தாலும் தற்காலத்தில் மாண-வர் சமூகத்திடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



தொலைபேசி மூலம் மாணவர்களுக்கு பல நன்மைகள் கிடைத்தாலும் அந்தளவிற்கு தீமையும் ஏற்படுகின்றது தொலைபேசியை மாணவர் பயன்படுத்தம் விதத்தை பொறுத்தே அவர்களிற்கு தீமை வந்து சேர்கின்றது. இளையோர் முதல் முதியோர் வரைக்கும் தொலைபேசி பற்றி அறியாதவர்களும் இல்லை! பயன்படுத்தாமல் இருப்போரும் இல்லை எனலாம். அந்தளவிற்கு தொலைபேசியின் பயன் வளர்ந்து வந்துவிட்டது. குறுந் தகவல்கள் அனுப்புவதும், கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்குகள், செய்திகள் என்பவற்றிற்குத் தொலைபேசி பெயர் போனதொன்றாகும். இவ்வாறான செயற்பாடுகளிற்கு நாம் பயன்படுததும் போது அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் தான் பின் விளைவுகள் தங்கியுள்ளன.

இவ்வாறு பல பயன்பாடுகளைத் தந்து கொண்டிருக்கும் தொலைபேசி மாணவர் மத்தியில் தற்போது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்கள் தமது கற்றல் நடவடிக்கைக்காகப் பயன் படுத்தி சில காலம் செல்லச் செல்ல தவறாகப் பயன் படுத்தும் நோக்கில் தள்ளப்படுகின்றனர். பாடசாலைகளில் இத் தொலைபேசி கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளிற்குப் பயன்பட்டு வந்தாலும் சில நேரங்களில் தவறான செயல்களிற்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. கற்றலுக்கு மட்டும் பயன் படுத்தும் தொலை பேசிகளில் மாணவர்கள் சமூக வலைத்தளங்கள் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் போன்றவற்றை பதிவு செய்து பயன்படுத்துகின்றனர்.

நன்றாகக் கற்கும் மாணவன் கற்றல் செயற்பாடுகளிற்கு மட்டும் தொலைபேசியைப் பயன்படுத்துவானாயின் அவன் கல்வியில் முன்னேறி உயர்வான்! அதே மாணவன் சமூக வலைத்தளம் போன்றவற்றைப் பயன் படுத்துவானாயின் அவன் கல்வியில் இழிவாக்கப்பட்டிருப்பான். ஏனென்றால் வளர்ந்து வரும் இளந் தலைமுறையினர்கள் இத்தொலைபேசிப் பயன்பாட்டால் அழிந்து கொண்டிருக்கின்றார்கள். மாண-வர் சமூகத்திற்கு தொலைபேசிப் பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகளை நோக்கினால் கற்றலிற்கு மட்டும் பயன்படுத்தினால் பரவாயில்லை அவர்கள் சமூக வலைத்தளங்களில் இணைந்து கொண்டு தவறானவற்றை அவதானிப்பதும் அவற்றிற்கு தம்மை உட்படுத்துவதும் போன்ற பல செயற்பாடுகள் மாணவர் மத்தியில் இடம்பெற்று வருகின்றன.

மாணவர்கள் போதைப் பொருட்கள் பயன்பாட்டிற்கு அடிமையாவற்கு இத்தொலைபேசியின் பயன் பாட்டை ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். சமூகவலைத் தளங்களில் பெருகி வரும் போதைப் பயன்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சிகள் (செயற்பாடுகள்) மாணவர்கள் அவதானிப்பதால் அதற்கு அவர்கள் கவரப்பட்டு தம்மையும் உட்படுத்திக் கொள்கின்றார்கள். மற்றும் தீய பழக்க வழக்கங்களோடே தீய நண்பர்களும் சேரும் வாய்ப்புக் கிடைத்து எதிர்கால சந்ததியின் கல்வி நிலை சீர் குலைந்து

போகின்றது. இவ்வாறு இன்னும் பல தீய செயற்பாடுகள் மாணவர் மத்தியில் இத் தொலை பேசியால் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது இதனால் கல்வி தடைப்பட்டு எதிர்காலம் அழிந்து சில வேளை களில் ஒரு சிறைக் கைதியாகவும் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

தனது பெற்றோரிடம் கல்வி நடவடிக்கைகளுக்காக தொலைபேசியைப் பெற்றுக்கொண்டு பெற்றோர்களை ஏமாற்றிக் கொண்டு பல மாணவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தொலைபேசியால் கவரப்பட்ட மாணவர்கள் மீண்டெழுந்து வரமுடியாது உள்ளனர். ஏனென்றால் காலையிலிருந்து இரவு முழுவதும் பயன்படுத்துபவர்களால், ஒரு போதும் தொலைபேசியைக் கைவிட்டு இருக்க முடியாமலிருக்கின்றது. தொலை பேசியால் ஏற்படும் பின் விளைவுகளை மாணவர்கள் ஒரு போதும் எண்ணிப் பார்ப்பதில்லை. விளைவுகள் தாக்கும் போது தான் அவர்கள் தமது செயல்களை உணர்வார்கள். சில மாணவர்கள் காலையில் எழுந்து பள்ளி செல்லுவதற்கு ஆயத்தமாகும் அந்த சொற்ப அளவு நேரத்தில் கூட தொலை பேசியைப் பயன்படுத்துகின்றார்கள். பள்ளி சென்றாலும் தொலைபேசியின் நினைப்பில் ஆழ்ந்து கல்வியைப் பயிலத் தவறுகின்றான். வீட்டிற்கு வந்தவுடன் உண்பது பாதி உண்ணாதது பாதியாக தொலை பேசியைப் பயன்படுத்துகின்றார்கள். இவ்வாறு சில நாட்கள் தொடர்ந்து செயற்பட்டார்களாயின் அவன் தனது குடும்பத்தின் தொடர்பையே துண்டிக்கும் அளவிற்கு வந்து விடுகின்றார்கள். எந் நாளும் தொலைபேசிப் பயன்பாட்டால் பெற்றோர்களுடன் சரியாகப் பேசும் அளவைக் கூடக் குறைத்து சமூகத்தில் ஒரு தீயவர்களாக வரும் அளவிற்கு சிலரைத்தள்ளுவதற்கு தொலை பேசியின் பயன்பாடுகள் பலம் வாய்ந்ததாகக் காணப்படுவதை உணரவேண்டும். இவ்வாறு ஒரு மாணவனின் வாழ்க்கையில் தொலைபேசி அவனது வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளதை அறியலாம். கல்வியூட்டுவதற்காக அவனிடம் வந்த தொலைபேசி அவனது கல்வியையே பாழாக்குகின்றது. கற்ற கல்வியானது இத் தொலைபேசிப் பயன்பாட்டால் அழிந்தும், கற்ற விடயங்கள் மறந்தும் வருகின்றன.



கல்வி கற்கும் பருவத்திலே கல்வியைத் தொடராது தொலைபேசியின் பயன்பாட்டிற்குள் நுழைந்தவன் வாழ்வில் நல்ல உயர்ந்த மாமனிதனாக வருவதற்கு வாய்ப்பில்லை. ஆதி காலத்திலே படிக்கும் பருவத்தினரிடையே தொலைபேசி போன்ற நவீன கண்டுபிடிப்புக்கள் இல்லை. அவர்கள் அதனைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களாகவே இருந்தார்கள். ஆனால் தம் காலத்தைப் பார்க்கும் போது நவீன வளர்ச்சியால் சிறு குழந்தைக்கு கூட தொலைபேசியின் அறிவு உட்புகுந்துள்ளது எனலாம். அந்தளவிற்கு வளர்ந்து வரும் நவீன தொழினுட்பம் காரணமாக வளர்ந்து வரும் சந்ததியினரும் முகம் கொடுத்து வருகின்றனர்.
மாணவர்களிடத்தில் பெரிதும் பயன்பாடுகள் காணப்படுவதனால் மாணவர்களிடத்து காணப்படும் தொலைபேசிப் பயன்பாட்டை அவர்கள் அதிகளவு குறைக்க வேண்டும். கல்வி நடவடிக்கைகளுக்கு மட்டும் தொலைபேசியைப் பயன்படுத்திக் கற்றலில் ஒவ்வொரு மாணவனும் ஈடுபடுவானாயின் மாணவர் சமூகத்தினரிடையே தொலைசேியின் பயன்பாடும் அதனால் ஏற்படும் தீய விளைவுகளும் குறைந்த நல்ல ஒரு மாணவனாக சமூகத்தில் திகழ்வான். மக்களிடத்தில் தொலைபேசி தீய விளைவை ஏற்படுத்தாது அதை எவ்வாறு பயன்படுத்துகின்றானோ அப்போதுதான் தொலை பேசியின் விளைவு அதிகமாகும். நல்லவற்றிற்குப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்களின் பயன்பாடு மாணவனிடத்து இருந்தாலும் அவற்றில் தீயவற்றை நோக்காது நல்ல செயல்களை நோக்கி மாணவர் சமூகம் செயற்பட்டால் தொலை பேசியின் பயன்பாடானது மாணவனது வாழ்க்கைப் பிணைப்பிலிருந்து விலகிச் செல்லும். அவன் கல்வியில் கவனம் செலுத்தி நல்ல மாணவனாக உருவாகுவான்.

**வி.டர்ஜினி தரம் 11**
**நெடு.சைவப்பிரகாச வித்தியாலயம்**

# பிளாஸ்ரிக் பாவனையைத் தடுக்கும் வழிகள்

தற்போதைய உலகத்தில் பிளாஸ்டிக் பாவனையானது அதிகம் காணப்படுகின்றது. இது ஒரு ஆபத்தான ஓர் விடயமாகும். பிளாஸ்ரிக் பாவனை தற்பொழுது எல்லாப் பொருட்களிலும் பாவனையை ஏற்படுத்தியுள்ளது. பிளாஸ்டிக் பாவனையால் அனுகூலங்களை விட பிரதிகூலங்களே அதிகம் உள்ளது. பிளாஸ்டிக் பாவனையால் நோய்கள் ஏற்படுகின்றன.

இவ்விடயம் தற்போதைய சமூகத்தில் அதிகம் காணப்படுகின்ற ஓர் பிரச்சினையாகும். இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக மாணவர்களே பெரிதும் துன்பப்படுகின்றனர். வீதியின் ஓரங்களில் பார்த்தால் பிளாஸ்டிக் பொருட்களே அதிகம் காணப்படுகின்றது. இவையெல்லாம் யாரால் வீசப்படுகின்றன? எம்மாலும் எம் நண்பர்களாலும் ஆகும். மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் செயற்பட்டாலே போதும் நம் சமுதாயம் சிறப்புடன் நீண்டகாலம் நீடிக்கும் பிளாஸ்டிக் பாவனையால் நோய்கள் பல ஏற்படுகின்றன. அதிலும் தொற்றுநோய் தொற்றாநோய் என்பனவே அதிகம். பிளாஸ்டிக் பாவனை தடைசெய்ய வேண்டும் என்பது என் கோரிக்கை அல்ல. மாறாக பிளாஸ்டிக் பாவனையை குறைத்து மீள் சுழற்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்பது தான் என் கோரிக்கை.



பிளாஸ்டிக் பாவனை மூலம் அவற்றை நாம் பாவித்த பின்பு தூக்கி குப்பையிலோ அல்லது வீதியிலோ தான் நாம் எறிகின்றோம். மாறாக அவற்றைக் குப்பை பெட்டியினுள் போடுவதனால் அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம். ஆனால் வீதியிலும் குப்பைகளிலும் எறிவதனால் அவற்றால் பற்பல பாதிப்புக்கள் உள்ளன. அவை உக்கலடையக் கூடியவை அல்ல. அதனாலே தான் நாம் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றோம். பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதனால் அவை முழுமையாக எரிவதில்லை அவை இறுதியில் ஓர் கட்டியாக வெளிவரும் அவற்றை எரிப்பதனால் பிளாஸ்டிக்கின் இரசாயனங்கள் எரிக்கும் இடத்தைச் சூழ்ந்து காணப்படும். சூழற் கூறுகளுடன் ஒன்று சேரும். மண்ணுடன் சேர்வதனால் அதைச் சூழவுள்ள தரைச் சூழலில் பூண்டுகள் கூட வளர்வதில்லை. அத்துடன் அப்பிரதேசத்தை அண்டிவாழும் மக்களுக்கும் நோய்கள் ஏற்படும் இவ்வாறு காற்றுடன் அவற்றின் புகை கலக்கும் போது அதி சீக்கிரத்தில் மனிதன் இறக்க நேரிடும்.

இது மட்டுமல்ல மனிதனின் இறப்பிற்குப் பின்பு பிராணிகளின் இறப்பு ஏற்படும் அப்போது தான் இன்னும் பெரும் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. உணவுச் சங்கிலியில் பாதிப்பு ஏற்படத் தொடங்கும் இதன் காரணமாகவே உயிர் இழப்புக்கள் ஏற்படும். பிளாஸ்டிக் ஓர் சிறிய ஓர் பொருளாக இருந்தாலும், எண்பது வருடத்திற்கு மேலாக வாழக் கூடிய மனிதனையே உடனுக்கு உடன் அழித்து விடுகின்றது. இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மாணவர்கள் மத்தியில் பிளாஸ்டிக் பாவனை தொடர்பான விழிப்புணர்வுகள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் பிளாஸ்டிக் போடுவதைத் தடுப்பார்கள். பின்னர் மறுபடியும் அவர்களே தங்களது கரங்களால் பிளாஸ்டிக் பொருட்களைப்

போடுவார்கள். இவையெல்லாம் ஓர் கோரிக்கையாகத் தான் அவர்கள் செய்வார்கள். இவர்கள் இந்த இரண்டு நாட்கள் செய்யும் வேலையை ஒரு நாள் ஒரு மனிதன் ஆகக் குறைந்தது ஒரு பிளாஸ்டிக் பொருட்களை எடுத்து குப்பைப் பெட்டியினுள் போட்டாலும் சரி குப்பையாகக் கிடக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் குறைவடைந்து செல்லும். ஆனால் அப்படியும் ஒருவர் ஒரு பிளாஸ்டிக் பொருளை எடுத்துப் போடத் தயங்கினால் அவன் மனிதநேயமுள்ளவன் அல்ல. மாறாக அவன் மனிதனுக்குள் ளும் பிராணிகளுக்குள்ளும் இருக்கமாட்டான். இப்படிப்பட்டவர்களுக்குத் தான் நன்றாக வாழ்கிறானோ வாழவில்லையோ அதெற்கெல்லாம் கவலையில்லை பிறரைப் பற்றியும் கவலையில்லை.

அவர்கள் பெரியவர்களாக இருந்தாலும் சரி சிறியோர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தங்களைப் பற்றியே கவலைப்படுவதில்லை. பிறகென்ன மற்றவர்களைப் பற்றி அக்கறைப்படுவது பிளாஸ்டிக் என்பது ஒரு கொடிய மிருகம். இது கொல்லப்படுவதில்லை மாறாக பிறப்பிக்கப்படுகின்றது. நம் உயிரை நாமே கொலை செய்ய கொடிய மிருகமொன்றை நம் கையாலே கூண்டிலிருந்து திறந்துவிடுகின்றோம். அது நம்மைக் கொலை செய்யும் என்று தெரிந்தும் இச் செயலைச் செய்கின்றோம். இதன் காரணமாக மரங்கள் அழிவடைகின்றன. பிராணிகள் இறக்கின்றன. பிராணிகள் இறப்பதனாலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மரங்கள் அழிவதனால் மழை இல்லாமல் போகின்றது மழை இல்லாவிடின் நீரியல் வட்டத்தில் பாதிப்பு ஏற்படும் அதாவது ஒரு பப்பாசிப் பழத்தினுள் ஒரு புழு ஓட்டை துளைத்து உட்செல்கின்றது எனில் அது சிறிது சிறிதாக அப்பழத்தையே அது அழித்து விடுகின்றது இப்போது அப்பழமே குப்பையில் எறியப்படும். குப்பையில் எறிந்தாலும் அப் புழு குப்பையிலிருந்து வெளி வந்து வேறு ஒரு பழத்திற்குள் செல்லும். இப்பொழுது பப்பாசிப்பழம் பூமி என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

அந்தப் புழுதான் பிளாஸ்டிக் பொருள் அது பூமியில் வாழும் சகல உயிரினங்களையும் அழித்து விடும். அப்போது பூமி குப்பையில் தூக்கி எறியப்படும். இது நடை பெறும் ஓர் செயலாகும். எனவே மாணவர்களுடன் மக்களாகிய நாம் ஒன்று சேர்ந்து செயற்பட்டால் பிளாஸ்டின் பாவனையைத் தடுத்து ஆரோக்கியமான சூழலைக் கட்டியெழுப்பலாம்.

**ஆ.சுஜீபன்**
**தரம் - 10**
**யா.நெடு.மகாவித்தியாலயம்**

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

~ஜான்மில்டன்~

உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது.அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை.

~ வோல்டன் ~

அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவர செய்வது மேல்.

~ஜெபர்சன் ~

நேரத்தைத் தள்ளிப் போடாதே தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்.


~ஷேக்ஸ்பியர் ~

நீ வெற்றி பெற்றால், நீ பிறகுக்கு நின்றுகொண்டு விளக்கத் தேவையில்லை. நீ தோற்றால் நீ அங்கு நின்று உன் தோல்விற்கான காரணங்களை விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

~ அடால்ஃப் ஹிட்லர் ~

# நெடுந்தீவு மக்களின் வாழ்வியல் கோலங்கள்

நெடுந்தீவு ஒரு நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பாகும். இவ் ஊரில் பல பிரசித்தி பெற்ற இடங்களும் பல உள்ளன. புறாக்கூடு, குயின்தா கோபுரம், வெடியரசன் கோட்டை, மீகாமன் கோட்டை, பெருக்குமரம், காற்றடம், குதிரையம், வளரும் கல் இவை அனைத்தும் நெடுந்தீவில் காணப்படுகின்றன. இவற்றோடு இம் மக்களின் வாழ்வும் சிறப்பாகவே உள்ளன. நெடுந்தீவில் காணப்படுகின்ற ஒருசில இளைஞர்கள் குடி, கொலை, கொள்ளை போன்ற சமூகப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எமது ஊரில் வாழ்கின்ற மக்களின் வாழ்வுகள் மிக எளிமையான வாழ்க்கை முறையாகும். எமது ஊர் மக்களின் வாழ்க்கை முறை அதில் இளைஞர்களின் வாழ்வு, பெண்களின் வாழ்வு, சிறுவர்களின் வாழ்க்கை முறை, எமது ஊர் முன்னோர் வாழ்ந்த முறைகள் சான்றாகும்.



இவர்கள் மிக எளிமையான வாழ்வு வாழ்ந்துள்ளார்கள் இன்றும் அவ்வாறே வாழ்ந்து வருகிறார்கள். உணவுகளும், உடைகளும் மிக எளிமையானதே. பழம் கஞ்சி, பாற்சோறு, சாறி, சட்டை என எளிமையான வாழ்வியல் கோலங்களுக்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள். பாதுகாப்பு என அவர்கள் தேடவில்லை. அது இயல்பாகவே அவர்களுக்கு இருந்தது. எமது ஊரில் கிடைக்கின்ற இயற்கை வளங்களிலிருந்து கிடைத்த உணவுகளையே கூடுதலாக உண்டு அவர்கள் நீண்ட ஆயுட் காலத்தோடு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் உருவாகி வருகின்ற வளர்ச்சி அடைந்து வருகின்ற நெடுந்தீவில் இவ்வாறு காணப்படுவதில்லை.

புராதன நெடுந்தீவு மக்களின் வாழ்க்கை முறை மிக வித்தியாசமானதாகும். ஆடையணிகள், உணவு கள் என்பன வேறுபட்டவையாகும். உடனடித் தயார் செய்த உணவுகளை உண்ணுதல், செயற்கை உணவுகளையே உண்ணுதல் இவ்வாறான பழக்க வழக்கங்களினால் எம் ஊர் மக்களின் ஆயுட்காலம் குறைவடைகிறது பாதுகாப்பான வாழ்க்கை இக்காலத்தில் வாழ்தலென்பது மிக கஷ்டமானதாகும். எமது பாதுகாப்பை நாங்கள் தான் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறானதொரு காலகட்டத்திலேயே நெடுந்தீவு மக்களின் வாழ்க்கைக் கோலங்கள் இன்று அமைந்துள்ளது.

எமது ஊரில் வாழ்கின்ற ஒவ்வொரு தந்தையர்களும் உழைத்து தமது குடும்ப நிலையைப் பாதுகாத்து வருகின்றனர். அதே போல் அவர்கள் குடித்து தமது வாழ்க்கையை சீரழித்தும் வருகின்றனர். இவர்களைப் பார்த்து எமது இளைஞர்களும் அவ்வாறான சீரழிந்த முறைக்குள் தமது வாழ்க்கையை

இட்டுச் செல்கின்றனர். போதை வஸ்துகளுக்கு அடிமையாதல், வீதிகளில் நின்று சத்தம் போடுதல், பொது இடங்களில் தேவையற்றவாறு சண்டைபிடித்தல், பெண்கள் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற வன் முறையான செயல்களைச் செய்தல். இவ்வாறு எமது நெடுந்தீவின் இளைஞர்கள் உருவாகி வருகின்றனர். எம் ஊரில் வாழ்கின்ற பெண்கள் தமது வாழ்வை பாதுகாக்க வேண்டியது அவர்களது பொறுப்பும் கடமையுமாகும்.

எமது ஊரில் வாழ்ந்து வருகின்ற, வளர்ந்து வருகின்ற சிறுவர்களும் தமது மூத்த சமுதாயத்தைப் பார்த்து பழகிவருகின்றனர். அவர்களும் எமது தந்தையர்களும் வாழ்ந்து காட்டிய சீரழிந்த வாழ்க்கை கோலத்தினுள் நுழைகின்றனர். சண்டை பிடித்தல், கெட்ட வார்த்தைகள் பேசுதல் போன்ற தவறான பாதைகளில் செல்கின்றனர். எமது நெடுந்தீவில் காணப்படுகின்ற கிறிஸ்தவ, இந்து மதத்தவர்கள் மிக ஒற்றுமையாக வாழ்கின்றனர். இன்றும் அவர்களிடம் பிற மதங்களை மதித்து வாழ்கின்ற தன்மையைக் காணலாம். எமது ஊரில் வாழ்கின்ற மக்கள் எதிர்காலத்தில் தமது வாழ்க்கை முறையை சிறப்பாக கட்டியெழுப்புவார்கள் என ஒரு நம்பிக்கை உண்டு. நம்பிக்கையே வாழ்க்கை. வாழ்க்கையே நம்பிக்கை. எமது முன்னோர்கள் வாழ்ந்ததைப் போல இவர்களும் தமது வாழ்க்கைக் கோலங்களை மாற்றியமைக்க வேண்டியது நெடுந்தீவு மக்களின் செயலாகும்.

**ஜோ.றீபா**
**தரம் - 10**
**நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**

**தரம் - 10,11 கட்டுரைப்போட்டியில் முன்னிடம் பெற்ற கட்டுரைகள் ஆகும்.**



***எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.***
***~ ஐன்ஸ்டைன் ~***

***காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செல்கிறது காற்றுடன் அல்ல***
***~ வின்ஸ்ட்டன் சர்ச்சில் ~***

***மனிதன் சுதந்திரமாகச் செயல்படுவதைக் காட்டிலும், மற்றவர்களைச் சார்ந்தே வாழ்கிறான்.***
***~ பெர்னாட்ஷா ~***

# விழித்தெழு எம் தீவே!



பண்டிதனாய் பாராளும் மைந்தனுமாய்
பட்டி தொட்டியெங்கும் பரவி வாழந்த எம் தீவான்
இன்று கொலை, களவு, கள் , காமம், சூது என
இன்னோரன்ன துன்பம் இனிதே இயற்றுகின்றான்.

வைத்தியனாய், ஆசானாய், சினிமாவின் நாயகனாய்
விதானையாய், நாட்டின் விடி வெள்ளியாய்
எட்டியும் பிடிக்க முடியாத உயரத்தை
சட்டெனப் படித்து தனியாட்சி செலுத்தியவன்.

நெடுந்தீவான் என்றால் நிலவும் பனி தூவும்
பசுந்தீவான் என்றால் பசுவும் பால் பொழியும்
நெடுந்தீவு ஓடியல், புழுக்கொடியல் பனாட்டு - இவற்றை
நிச்சயமாய் வேறூர் நெருங்க முடியாது.

வந்தவரை வாஞ்சையுடன் வரவேற்க
தஞ்செமென வந்தவரை தம்மவராய்ப் போற்ற
அச்சமேதுமின்றி அக மகிழ உபசரிக்கும்
அன்பு அவனை விட வேர்க்கும் கிடையாது.

பட்டினி என்ற நிலை பல்கபொழுது வந்தாலும்
பட்டென்று மனமுடையா பண்புடனே
பனாட்டு, ஒடியற் பிட்டும், கூழும் கைகொடுக்க
பறந்து ஓடும் பசி எம்மைவிட்டு அப்பால்



மூலிகையால் நோயை முற்றாக விரட்டி - நம்
மூதாதையர் பல்லாண்டு காலம் பலத்தோடு
சாதிகள் பல இருந்தாலும் எல்லோரும்
சகோதரராய் வாழ்ந்த பசுந்தீவும் இத்தீவே - இன்றோ

போட்டியும் பொறாமையும் சோம்பேறித்தனமும்
போர்வாள் போலவே பெருகி வரும்
போதை தலைக்கேறி போன பின்பு பிள்ளைகள்
பாதை தடம் மாறி பாழாகி போவதிங்கே?

காட்டிக் கொடுப்பும் வெட்டிக் கொலையும்
கற்பழித்துக் கொல்லுவதும் ஏன் இந்த அரக்க குணம்
பண்டிதன் வாழ்ந்த இம் மண்ணில் பண்பற்ற
பாமரனை ஏன் படைத்தாய் எம் தீவே

சாராயக் கடையில் தந்தை தவமிருக்க
சாகும் வேளையிலும் அன்னை கல்லுடைக்க
கல்வி கற்பதற்கு இடர்படும் குழந்தைகளாய்
கண்ணான எம் தீவே உன் நிலை தான் என்னே




மாதாந்தம் சமுர்த்திக் கூப்பன் வருவதனால்
சம்பளமும் தேவையில்லை, காசுழைக்கத் தேவையில்லை
வீட்டுத்திட்டமும் விரைவாய் வந்துவிடும் - என்ற
நித்தமும் இவ்வெண்ணத்தால் நிலை மாறிப் போச்சுதுவே

விவசாயம் செய்ய மழையில்லை இங்கே
தண்ணீரும் கூட காசாகிப் போச்சுதுவே
வடிவாகப் படிக்காவிட்டால் - இங்கு
வருமானம் இனியில்லை என்பதனை

வடித்திடாய் மனதில் எம் தீவே உம் பிள்ளைகற்கு
வசதியாய் வாழத் தேவையில்லை - நாமும்
மானத்துடன் வாழ வேண்டும் - இனி
நோய் நொடியின்றி வாழ வேண்டும் - என

விழித்தெழ கூறு எம்தீவே - நீயும்
விழித்தெழு தீவே இம் மண்ணில் - வாழும்
இளைஞர்களின் விடிவுக்காய் நீயும் விழித்தெழு
இவர் கல்வியில் கரைகாண விழித்திடு
கருணை கொண்டவராய் மாறிட விழித்தெழு
கல் நெஞ்சம் அகற்ற விழித்தெழு

பாவங்கள் நீங்கி பால் மனமாக
சாபங்கள் போக்கி சாதனைகள் செய்ய
வேதங்கள் கூறும் விதிகளைப் பின்பற்ற
விழித்தெழு எம் தீவே விழித்தெழு



சோகங்கள் வேண்டாம் சுமைகளும் வேண்டாம்
காகங்கள் போலக் கரைந்திடவும் வேண்டாம்
மேகங்கள் வானில் பெரும் மழை பொழிவது போல்
தேகங்கள் என்றும் தெளிவுடனோராக விழித்தெழு
எம் தீவே விழித்தெழு.

கடலன்னை தந்த இயற்கைக் காற்றும்
மூலிகை தந்த மாசில்லா நல்நுகமும்
இயற்கை யோடிணைந்து இயல்பாக வாழ
விழித்தெழு எம் தீவே விழித்தெழு

இஷ்டமில்லாமல் களவெடுத்து உண்ணும்
துஷ்டர்களை இம் மண்ணில் சுகமாக வாழாமல்
கஸ்டப்பட்டே அவர் காலம் கழிய
விழித் தெழு எம் தீவே விழித்தெழு

எம் ஊரின் பெயருக்குப் பங்கம்
விளைவிக்கும் மானிடனை
கோபத்துடன் சுட்டெரிக்க
விழித்தெழு எம் தீவே விழித்தெழு.

மாற்றானை வருத்தி சுகமாக வாழும்
மாபாதகனை மாற்றி நல்லவனாய்
வாழ வழி வகுக்கும் - எம் தீவே
விழித்தெழுந்து நீயும் வீரியத்தைக் காட்டிடுவாய்

பட்டங்கள் தன்னைப் பாரினிலே பெற்று
பண்பட்ட மக்களைப் பிரசவிக்க நீயும்
வழித்தெழுந்து வழிவிடுவாய் - எம்தீவே
விழித்தெழுந்து வழிவிடுவாய்


பாலகர் என்றும் கருதாது பால்மறவா
பாகிகளை என்றும் பாலியல் ரீதியில் துன்புறுத்தும்
கயவர்களை என்றும் காடாக்கினியில் தள்ளிவிட
வீறுகொண்டு விழித்தெழு எம் தீவே விழித்தெழு


பெண்களை அடிமையென நசுக்கம் - எம்தீவு
ஆண்களை அடக்கியாள என்றும்
பாவையர்க்கு வல்லமை தனைக் கொடுக்க
பாங்குடனே விழித்தெழுவாய் எம் தீவே

வேதனை மிகுந்த வாழ்க்கை தனை மாற்றி
எம்மவர்கள் சாதனை நிலைநாட்டி சரித்திரம் படைக்க
போதனை புரிய விழித்தெழுவாய் - இப்புவியின்
நாதனை வேண்டி நிதம் விழித்தெழுவாய்.

சாந்தியும் சமத்துவமும் சத்தியமும் நிலைத்திருக்க
எம் தீவின் புகழ் எட்டுத்திக்கும் செல்ல
விழித்தெழு எம் தீவே விழித்தெழும் - எம்
மக்களை விழித்தெழச் செய்திடு - எம் தீவே
அவரை விழித்தெழச் செய்திட வழிவிடு.

**கி.தனுஷா**
**4ம் வட்டாரம் நெடுந்தீவு**






# விழித்தெழு எம் தீவே!

சுற்றும் உலகமிது
சுதந்திரமாகி சுழல்கின்றது
மாற்றம் ஒன்றுதான்
மாறாமல் மாறிக் கொண்டு இருக்கின்றது
ஏற்றம் கொண்டு வரும் நீயோ
உறங்கிக் கிடப்பது தான் - ஏனோ
விழித்தெழு எம் தீவே



நீ எங்கெல்லாம் உறங்குகின்றாய்
உனக்கே அது தெரியாதா?
உன் பொருளாதாரம் உனக்கே
தெரியாமல் சுரண்டப்படுகின்றது
இதனால் தான் என்னவோ - உன்

குழந்தைகள் உணவு ஒறுப்புக்கு
உள்ளாகின்றார்கள் உன்
பிள்ளைகள் உன்னை விட்டு
செல்கின்றார்கள் - இதனால் தான்
சொல்கின்றேன் விழித்தெழு எம் தீவே
பசும் தீவே



பசும் தீவின் பாசமான மக்களின்
பசியை நீயே போக்கினாய் - நிறை வயிற்றுடன்
இப்போது போக்குகின்றாய் அரை வயிற்றுடன்
இனியும் போக்குவாய் கால் வயிற்றுடன்
பசிமட்டும் போக்கின்றாய் வயிறு
மட்டம் நிறைய விட்டு ஏன்? உன்
வளங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாலோ?
இதனால் தான் சொல்கின்றேன்
விழித்தெழு எம் தீவே பசுந்தீவே

நீ பல சிறப்பு கொண்டாள் தான்
ஆனாலும் துடுப்பு இழந்த படகாய்
உன் பிள்ளைகளை உன்னால்
காப்பாற்ற முடியவில்லையே
பால் சொரிந்த தீவு இது முருகைகள்
பாறைகளிலும் செல்வம் கொடுத்த தீவு இது
இவற்றை இழந்தால் உன்னை - விட்டு
செல்லும் உன் பிள்ளைகளை தடுக்க
இயலாமல் பரிதவிக்கிறாயா?




உன்னில் பிடிக்கப்படும் மீன்களை
விற்பனை செய்து விட்டு நீ மட்டும்
தன்னந் தனியாய் பணத்தை சேர்த்து
எதைக் கண்டாய் உன்னை
ரசிக்க உலகம் எல்லாம் இருந்து வருகின்றார்கள் - ஆனால்
நீ மட்டும் வறுமையாய் இருப்பது ஏனோ?
நீயும் உலகத்தை ரசிக்க வேண்டுமானால்
நீ விழித்தெழு எம் தீவே

உன்னை வளப்படுத்த உன்னால் மட்டுமே
முடியும் உன் கைகளை நீயே
பலப்படுத்திக் கொள் உன் மக்கள்
உன்னை சுற்றுவார்கள் - உன்னை
நீயே ரசிப்பாய்
எனவே தான் விழித்தெழு எம் தீவே

இந்து சமுத்திரத்தின் சுவர்க்கா புரியாம்
இலங்கையின் சுவர்க்கா புரியாக நீயே
திகழ வேண்டும் எனின் வழித்தெழும்
எம் தீவே - பசுந் தீவே

**இ.கார்த்தீபன்**
**ஆசிரியர், நெடுந்தீவு மகாவித்தியாலம்**

# விழித்தெழு எம் தீவே!



அலை கடல் தாலாட்டும் எம் தீவே
பார் போற்றும் பசுந்தீவே
பவனியில் எமையாளும் பரந்ததீவே
தீவகத்தில் நெடுந்தீவே நெடுந்தீவே

கவலைகள் இன்னல்கள் எம் கன்னித் தீவில் இல்லை
கல் வேலியே உண்டு எம்தீவில்
மூலிகைத் தீவே தீவகத்தின் முதன்மைத் தீவே
ஒல்லாந்தர் ஆண்ட தீவே

இலங்கையின் கடைக் குட்டியாம்
என் உயிரின் பிறப்பிடமாம்
எழுந்து வா தமிழா
என் உயிரின் தாய் தீவை வணங்க

தனி நாயகம் பிறந்ததிங்கே
தானியம் விளைவது நன்றே
பசுப்பால் உண்டு
பனங்கிழங்கு உண்டு
பட்டினியாய் யாரு உண்டு?

நாற் புறமும் கடலினாலும்
நம்மவர்க்கு வருமானமாகவும்
நம்மை அரவணைக்கும்
தெய்வமல்லவா - எம்தீவு

பசுமைகள் நிறைந்த எம்பால் தீவில்
பலர் சாதனை படைத்தார்கள் - பலர்
பதவி உயர்வார்கள் - பலர்
பட்டமும் வாங்குவார்கள்


தீவகக் கூட்டத்தின்
பெருந்தீவே - நெடுந்தீவே
கடலானது கேட்கும் - தேவதையே
உன்னை தேடி தினம் வருவோமே

கடலில் பயணமாம்
அது எம்மவர்க்கு
நிரந்தரமாம்
தினந் தோறும் பயணமாம்

பெருக்கு மரமும் குவிந்தா சிலையும்
பிறநாட்டவரை அழைக்கும்
பெருமை கொண்ட - நான் பிறந்த தீவே
நெடுந்தீவே

என்னவளம் இல்லை எம் தீவில்
என்ற கதை - இல்லை
கல்வியில் உயர்ந்த சிலர்கள் - பல கண்டங்கள்
ஆழ்வதும் உண்மையே

சாதி மதம் என்று
சண்டைகள் இல்லை
சந்திக்கும் இடங்களெல்லாம்
சந்தோசமே



எத்திசையிலும் கோயில்கள்
எத்துணை தெய்வங்கள்
எம்மவரின் நலன் காக்க
எந்நாளும் வழிபாடுகள்.

கல்வேலி பகிர்களினால்
கண்கொள்ளாக் காட்சி கொண்டு
வருவோரை வரவழைக்கும்
கருணைக் கடலம்மா

எம் தீவின் நீல கடலம்மா
எம்மவரின் நித்திய தேவையம்மா
வந்தோரை வரவேற்கும்
வஞ்சகமில்லா தெய்வமம்மா

கூட்டுக் குடும்பமாய்
சோறுண்டு வாழும்
சொந்தங்கள் உண்டே
பந்தங்கள் உண்டே

வெல்லையும் வேலியும்
வேறு நாட்டவரை - அவர்
தங்கிட உறங்கிட
கடல் காற்று வீசிடும்

எம் ஊரின் கோரக் கொலையாம்
குமுதினியாள் கொலையாம்
எம் ஊரின் உறவுகளை
அழிக்க நினைத்தானாம்.

விழித்தெழுந்து தமிழா
வீரியம் பேசிடு
தமிழை உணர்ந்திடு - அதை
தரணியில் போற்றிடு

வாழ்ந்து போகும் சமூகம் அல்ல
நாம் - விழித்தெழும் சமூகம்
பாதைகள் முட்களாயிருந்தாலும்
பயணங்கள் முடிவதில்லை

பயப்படும் சமுகம் அல்ல - நாம்
பறந்து செல்லும் ஸ்ரீ பாக்கியசாலிகள்
துன்பம் வரும் போது துவண்டு விடா
துணிச்சல் காரர்கள்

சந்திக்கு ஒரு கோயில் - நம்
சரித்திரம் படைக்கும் ஊரில்
சலித்தவர்கள் யாருமில்லை
சலனங்கள் ஏதுமில்லை.



கல்லெறி விழும் சமுகம் நாம் அல்ல
கல்வேலியால் சூழ்ந்த சமுகம்
துவண்டு விழுவோரை தூக்கி அணைக்கும்
துணிச்சல் காரர்கள் - நம்மவர்கள்

இழந்த தலை முறையே எழுந்துவா
இழப்பவையை உற்றுப்பார்
விழிப்புடன் நீயிருந்தால் - வீழ்த்த முடியா
நம்மவரை

கடுகதி புயலென்ன
சுனாமி யென்ன
சூறையாடும் அன்னியரென்ன
அன்போடும் அமைதியோடும்
பண்போடும் பாசத்தோடும் - குரு
விவேகமாய் விழித்தெழும்
வீரத்தீவே நெடுந்தீவே

**விசுவலிங்கம் ருத்திரன்**
**13ம் வட்டாரம்**
**நெடுந்தீவு**

**திறந்த போட்டியில் முன்னிடம் பெற்ற கவிதைகள்.**

---

**நாம் எப்போதுமே வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம் ஆனால் வாழ்வதில்லை**

~ எமர்சன் ~

**உலகம் எவ்வளவு பெரியதோ, அவ்வளவு பெரியதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்**

~விவேகானந்தர் ~

**நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகின்றோம்**

~ காந்திஜி ~


**கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறன்.**

~ ராபர்ட் பிராஸ்ட் ~

**ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய, தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.**

~ லியோ டால்ஸ்டாய் ~

# எங்கே நிம்மதி



காற்றுக்கு இல்லை நிம்மதி
கடலுக்கு இல்லை நிம்மதி
நாட்டுக்கு இல்லை நிம்மதி
நமக்கு எங்கே? நிம்மதி

மானுக்கு காட்டில் நிம்மதி
மீனுக்கு கடலில் நிம்மதி
தேனிக்கு கூட்டில் நிம்மதி
மனிதனுக்கு எங்கே? நிம்மதி

குழந்தைக்கு உண்டு நிம்மதி
ஞானிக்கு உண்டு நிம்மதி
சொர்க்கத்தில் உண்டு நிம்மதி
சொல்லடா எங்கே? நிம்மதி

கலைஞனுக்கு கலை ஒரு நிம்மதி
அறிஞனுக்கு அறிவு ஒரு நிம்மதி
கவிஞனுக்கு கவி ஒரு நிம்மதி
இவர்களுக்கும் எங்கே? முழு நிம்மதி

வீட்டிலோ இல்லை உறவினரால் நிம்மதி
றோட்டிலோ இல்லை ஊராரால் நிம்மதி
கோட்டிலோ இல்லை வக்கீலால் நிம்மதி
நாட்டிலோ இல்லை மொத்தத்தில் நிம்மதி

பணத்தினால் வாங்கவும் முடியாது
பட்டப்படிப்பினால் வாங்கவும் முடியாது
இனத்தினால் வாங்கவும் முடியாது
இதற்குப் பெயர் என்ன? நிம்மதி

ஆசைகள் அதிகமாய் இருக்குது
ஆணவம் அதிகமாய் இருக்குது
கோபமோ அதைவிட இருக்கிறது - அடா
கொஞ்சமும் இல்லையே நிம்மதி

வைகறைப் பொழுதிலே விழித்த - நான்
வானொலிப் பெட்டியைக் கேட்டேனே
வானத்து சூரியன் உச்சியில்
தொலைக் காட்சிப் பெட்டியைப் பார்த்தேனே

மாலையில் கதிரவன் மறைகையில்
மைதானம் சென்று விளையாடினேன்
வானத்தில் மதியவன் வருகையில்
கைத்தொலைப்பேசியை வருத்தினேன்

இத்தனை செயலுக்கும் இடையிடை
இதமான பண்டங்கள் புசித்தேனே
அத்தனை செயலிலும் கிடைக்கல்ல
ஆண்டவா எங்கே நிம்மதி

பணமது கோடி கோடி இருந்தாலும்
பகலது மாறி மாறி வந்தாலும்
அறிவது மித மீதி இருந்தாலும்
அரிதான வெகுமதி நிம்மதி

கண்ணதாசன் கண்டதில்லை நிம்மதி
கம்பன்கூட அடைந்ததில்லை நிம்மதி
வைரமுத்து வாங்கவில்லை நிம்மதி
வாடா மச்சான் பார்ப்போம் எங்கே நிம்மதி

வெற்றியில கொஞ்சம் உண்டு நிம்மதி
பதவியில கொஞ்சம் உண்டு நிம்மதி
பணத்தில கொஞ்சம் உண்டு நிம்மதி
உண்மையில இவை இத்துலுண்டு நிம்மதி

அன்பினில பண்பினில அமரும் கொஞ்சம் நிம்மதி
அன்னையால தந்தையால கிடைக்கும் கொஞ்சம் நிம்மதி
போதும் என்ற மனதினால கிடைக்கும் கொஞ்சம் நிம்மதி
போடா எங்கே கிடைக்கும்? முழு நிம்மதி

மழையினால் இல்லை நிம்மதி
வெயில் என்றால் போச்சு நிம்மதி
காற்றென்றால் காணோம் நிம்மதி
கடவுளே எங்கே நிம்மதி

குயிலுக்கோ பாடினால் நிம்மதி
மயிலுக்கோ ஆடினால் நிம்மதி
அணிலுக்கோ கத்தினால் நிம்மதி
மனிதனுக்கு எங்கே நிம்மதி

சந்திரனுக்கே இல்லை அந்த நிம்மதி
சூரியனுக்கும் இல்லை அந்த நிம்மதி
இந்திரனுக்கே இல்லை என்றால் நிம்மதி
இருக்குமோ எங்களுக்கு இந்த நிம்மதி

கவிதை அர்த்தம் புரிந்தால் கொஞ்சம் நிம்மதி
கணக்கின் விடை தெரிந்தால் கொஞ்சம் நிம்மதி
விஞ்ஞானியாய் நீ இருந்தால் கொஞ்சம் நிம்மதி
விடை சொல்லு கிடைக்கிறதா முழு நிம்மதி



தாவரங்கள் அறியுமாம் அந்த நிம்மதி
பறவைகள் புரியுமாம் அந்த நிம்மதி
மிருகங்கள் உணருமாம் அந்த நிம்மதி
மனிதர்கள் பெற்றிடாத இந்த நிம்மதி
மாணவர்க்கு பாடசாலையில் நிம்மதி இல்லை
வைத்தியருக்கு வைத்தியசாலையில் நிம்மதி இல்லை
விஞ்ஞானிக்கு ஆய்வுகூடத்தில் நிம்மதி இல்லை
தொழிலாளிக்கு தொழிலிலே நிம்மதி இல்லை

காதலர்கட்கு காதலிலும் நிம்மதி இல்லை
நண்பர்கட்கு நட்பிலும் நிம்மதி இல்லை
ஜனாதிபதிக்கு நாட்டிலும் நிம்மதி இல்லை
எங்களுக்கு என்றுமே நிம்மதி இல்லை

கல்வி இல்லை என்றால் நாளை கிடைக்கும்
காசு இல்லை என்றால் நாளை கிடைக்கும்
பெருமை இல்லை என்றால் நாளை கிடைக்கும்
நிம்மதி இல்லை என்றால் நாளை கிடைக்கும்

அண்ணன் நிம்மதி தம்பி எடுத்தால்
கணவன் நிம்மதி மனைவி எடுத்தால்
நண்பன் நிம்மதி நண்பன் கொடுத்தால்
நண்பா நிம்மதி எங்கே நிம்மதி?

ஜனாதிபதி நிம்மதி பிரதமர் கெடுத்தால்
பிரதமர் நிம்மதி அமைச்சர் கெடுத்தால்
அமைச்சர் நிம்மதி பிரஜை எடுத்தால்
பிரஜை உனக்கு எங்கே நிம்மதி

இனத்தால் இல்லை நிம்மதி
மதத்தால் இல்லை நிம்மதி
நாட்டில் இல்லை நிம்மதி
உலகத்தில் எங்கே நிம்மதி



**கு.இராஜேஸ்வரன்**
**05ம் வட்டாரம்**
**நெடுந்தீவு**

(திறந்த போட்டியாக நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெறப்பட்ட கவிதை)

**ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது.**

~ ஷாம்பர்ட் ~

**கோபம் என்னும் அமிலம் எறியப்படும் இடத்தைவிட அதை வைத்துக் கொண்டிருக்கும் கலத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்**

~ கிளெண்டல் ~

# இலங்கை நதிகளின் வரலாற்றுப் பெயர்களும் இன்றைய பெயர்களும்

| வரலாற்றுப் பெயர்கள் | | இன்றைய பெயர்கள் |
|---|---|---|
| கதம்பநதி / அருவிஆறு | - | மல்வத்து ஓயா |
| கங்கா நதி | - | மகாவலி கங்கை |
| சப்ரகந்த | - | மாணிக்க கங்கை |
| கோணநதி | - | கலாஓயா |
| கல்யாணி | - | களனி |
| வஜ்ராநதி | - | தெதுறு ஓயா |
| குடிகந்த நதி | - | கும்புக்கன் ஓயா |
| ஆளிசார கங்கை கால்வாய் | - | எலஹரக்கால்வாய் |

# இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டவை

- பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1866
- புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது - 1870
- உபதபால் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1921
- அஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது - 1832 பிரித்தானியர்
- அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது - 1957
- இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1876
- தேயிலை செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1839 கலாநிதி கிணேசர்
- கோப்பிச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1823 எட்வேட்பான்ஸ்
- பயங்காரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது - 1979
- கிராமசேவகர் முறை அறிமுகமானது - 1963
- கொழும்பு கண்டி வீதி திறந்து வைக்கப்பட்டது - 1802 எட்வேட்பான்ஸ்
- பண்டா - செல்வம் ஒப்பந்தம் கைச்சாத்தானது - 1957.07.26
- ஐ.நா சபையில் உறுப்புரிமை பெற்றது - 1955
- டட்லி சேனநாயக்க ஒப்பந்தம் கைச்சாத்தானது - 1965
- ஐ.நா பாதுகாப்பு சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்றது - 1962
- அச்சு நூல் (சிங்கள மொழியில்) உருவாக்கப்பட்டது - 1737
- ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியது - 1796
- ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியது - 1658
- போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியது - 1505
- இலங்கை போக்குவரத்துச் சபை ஆரம்பிக்கப்பட்டது - 1958
- ரூபவாகினி கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது - 1982
- வரித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1932
- தொலைத்தொடர்புத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1982 (ஸ்ரீலங்கா ரெலிகொம் - 1997)
- கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது - 1943 - பொல்கொல்ல
- கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது - 1912 - மாத்தறை
- காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது - 1962
- மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1961
- தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1972

- இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1939 1961இல் தேசிய மயமாக்கப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியின் பணிமனை உள்ள இடங்கள் - மாத்தளை, மாத்தறை, அனுராதபுரம்
- இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1950
- போயா நாட்கள் விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டது - 1966
- தேசிய அடையாள அட்டை (NIC) வழக்கம் அறிமுகமானது - 1972
- தேச வழமைச்சட்டம் அறிமுகமானது - 1707
- சனத்தொகை கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது - 1871
- அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது - 1802
- எயர் லங்கா ஆரம்பிக்கப்பட்டது - 1979

# இலங்கையில் முக்கிய நிலையங்கள்

- உல்லாசப் பிரயாணிகள் வருகை தரும் இடம் கிக்கடுவை
- பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் குமணக்காடு
- நன்னீர்கேணி அமைந்துள்ள இடம் கீரிமலை.
- நிலையான ஊற்று காணப்படும் இடம் நிலாவரை
- மிருகங்களின் சரணாலயம் அமைந்துள்ள இடம் வில்பத்து, யால ஆகிய காடுகள்
- சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடம் கட்டுநாயக்கா.
- தலதாமாளிகை அமைந்துள்ள இடம் கண்டி.
- குகை ஓவியங்கள் அமைந்துள்ள இடம் சிகிரியா தம்புள்ள.
- இலங்கையின் தலைநகரம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் கொழும்பு
- இலங்கையின் பிரதான வியாபார நகரம் கொழும்பு
- இலங்கையின் துறைமுகங்களாவன கொழும்பு, திருகோணமலை, காலி, காங்கேசன்துறை
- இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் கட்டுநாயக்கா, ரத்மலானை, பலாலி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை
- இலங்கையின் சுதந்திர வர்த்தக நிலையத்திற்கு பொறுப்பான அமைப்பு இலங்கை முதலீட்டு சபை ஆகும்.
- இங்கையின் மிருகக்காட்சிச்சாலை அமைந்துள்ள இடங்கள் தெகிவளை.
- இலங்கை புற்றுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் மகரகம, தெல்லிப்பழை
- தொழுநோய் வைத்தியசாலை அமைந்துள்ளது மாந்தீவு ஆகும்.
- காசநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் வெலிசற. காங்கேசன்துறை
- மேல்நாட்டு வைத்தியசாலை அமைந்துள்ள இடம் கொழும்பு.
- ஆயுள்வேத வைத்தியசாலை அமைந்துள்ள இடம் நாவின்ன
- அரசின் சுதேசம் வைத்தியசாலை பொறலையில் உள்ளது.
- இலங்கையில் ஆழமில்லாத கிணறு காணப்படுவது நிலாவரை.
- இலங்கையின் சுனாமி கண்காணிப்பு மையம் அமைந்துள்ள இடம் கிக்கடுவ (காலி)

# இலங்கையின் பிரதான உற்பத்திகளும் சேவைகளும் நடைபெறும் இடங்களும்


- தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கல
- தெங்கு ஆராய்ச்சி நிலையம் - லுணுவில
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்த

- தாழ்நிலத் தேயிலை ஆராய்ச்சி நிலையம் - கம்கம்பொல
- பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்ட
- உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரெலியா
- சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல
- விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் - பதல்கொட, ஹிங்குராங்கொட, மகாஇலுப்பல்லாம
- வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு
- விவசாய ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பல்லாம
- செய்மதி தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
- பறவைகள் சரணாலயம் - குமண
- வனவிலங்குகள் சரணாலயம் - றுகுணு, உடுவளவ, லகூகல, யால, வில்பத்து
- யானை சரணாலயம் - பின்னவெல
- ரயர் ரியூப் தொழிற்சாலை - களனி
- சீமெந்து தொழிற்சாலை - புத்தளம், காலி, காங்கேசன்துறை
- காகித தொழிற்சாலை - ராஜங்கன, வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய
- மண்பாண்ட பீங்கான் தொழிற்சாலை - பிலியந்தல, கொழும்பு
- உலோக மண்வெட்டி ஆலை - யக்கல
- புடவை ஆலை - துல்கிரிய, பூகொட, வியாங்கொட, வெள்ளவத்தை
- தோற்பொருட்கள் - மட்டக்குளிய
- கட்டிப்பால் தொழிற்சாலை - பொலநறுவை
- பாற்பதனிடல் தொழிற்சாலை - அம்பேவல
- பால்பவுடர் தொழிற்சாலை - வெலிசர
- இறப்பர் பால் தொழிற்சாலை - மாவனல்ல
- கனிப்பொருள் சுத்திகரிப்பு ஆலை - புல்மோட்டை, சீனித் தொழிற்சாலை
- சீனித் தொழிற்சாலை - கந்தளாய், ஹுரீங்குரான, பெலவத்த
- இரசாயனத் தொழிற்சாலை - பரந்தன்
- உருக்குத் தொழிற்சாலை - ஒறுவெல
- எண்ணெய் சுத்தரிப்பு ஆலை - சப்புகஸ்கந்த
- ஒட்டுப்பலகை தொழிற்சாலை - ஜின்தோட்டை
- பிறிமா ஆலை - திருகோணமலை
- இரத்தினக்கற்கள் - இரத்தினபுரி, எலஹுரா
- அபதைட் கிடைக்குமிடம் - எப்பதவல
- இல்மனைட் கிடைக்குமிடம் - புல்மோட்டை
- கைத்தொழில் பேட்டை - ஹக்கல, அச்சுவேலி
- சுதந்திர வர்த்தக வலயம் - கட்டுநாயக்கா
- கைத்தொழில் கூட்டுத்தொகுதி - ஏக்கல

# இலங்கையின் பிரதான வீதிகளின் பெயர்கள்

- A1 கொழும்பு - கண்டி
- A2 கொழும்பு - வெள்ளவாய
- A3 போலியாகொட - புத்தளம்
- A4 கொழும்பு - மட்டக்களப்பு
- A5 பேராதனை - செங்கலடி
- A6 அம்புபேபுஸ்ஸ - திருகோணமலை
- A7 அவிசாவெல - இரத்தினபுரி
- A8 பாணந்துறை - இரத்தினபுரி
- A9 யாழ்ப்பாணம் - கண்டி
- A10 கண்டி - புத்தளம்

| | | | |
|---|---|---|---|
| A11 | மரதன்கடவெல | - | திருகண்டிமடு |
| A12 | புத்தளம் | - | திருகோணமலை |
| A13 | அநுராதபுரம் | - | கல்கமுவ |
| A14 | மதவாச்சி | - | தலைமன்னார் |
| A15 | மட்டக்களப்பு | - | திருகோணமலை |
| A16 | பேரகல | - | ஹாலிஎல |
| A17 | காலி | - | மாதம்பே |
| A18 | பெல்காவெல | - | நோனகம |
| A19 | பொல்காவெல | - | கேகாலை |
| A20 | அநுராதபுரம் | - | ரம்பாவ |
| A21 | கேகாலை | - | கலவனல்ல |
| A22 | பாசறை | - | மெனராகலை |
| A23 | வெள்ளவாய | - | எல்ல |
| A24 | மாத்தறை | - | அக்குரஸ்ஸ |
| A25 | சியம்பலன்தவ | - | அம்பாறை |
| A26 | கண்டி | - | படியத்தலாவ |
| A27 | அம்பாறை | - | மகாஓயா |
| A28 | அநுராதபுரம் | - | பதவியா |
| A29 | வவுனியா | - | ஹொரவபொத்தான |
| A30 | வவுனியா | - | பறையனாளங்குளம் |
| A31 | காரைதீவு | - | அம்பாறை |
| A32 | நாவற்குழி | - | மன்னார் |
| A33 | ஜாஎல | - | யக்கல |
| A34 | மாங்குளம் | - | முல்லைத்தீவு |
| A35 | பரந்தன் | - | முல்லைத்தீவு |



# விழித்தெழு எம் தீவே

நாற்புறமும் கடல் சூழ்ந்து தனித்துவமாய் நில வென தோன்றும் அழகிய தீவாம் நெடுந்தீவு இதுவே என் அழகிய தீவு - தவத்திரு தனிநாயக முதலிய பரம்பரையும், தமிழ் உணர்வால் உலகை வியக்கச் செய்த இராயப்பு ஜோசேப் பிறந்ததும் எம் தீவே - பண்பாடும் மரபும் மாறாது கட்டிக்காதத்தும் இவ்வூரே தீவில் பெரிதும் கடல் பயணத்தில் பெயர் பெற்றதும் இத் தீவே எதிரி மன்னர்கள் வாழ்த்தும் வரலாற்றுத் தடயங்கள் பதிந்ததும் இத் தீவே - இயற்கையான சூழல் நிறைந்ததும் இனிமையான உறவுகள் நிலைப்பதும் இவ்வூரே என்று புகழ்ந்து போனாலும் காலத்தின் கோலமோ மனிதர்களின் கோபமோ கடவுளின் சாபமோ விழித்தெழ வேண்டும் மிக விரைவில் பசுமைத் தீவென்று இருந்த எம் தீவு. பசுக்கொலையால் தான் பசுமையற்று கிடக்கிறது என்று சொல்கிறார்கள் பசு வதையை எதிர்ப்போம்.



எம் மண்ணை மீள பசுந்தீவாய் மாற்றுவோம் மனித உணர்வுகளை மதித்த இந்த மண்ணில் தான் மனிதக் கொலைகளும் இலை மறை காயாய் அரங்கேறும். இந் நிலையில் இரத்த வெறி பிடித்தவர்களை சட்டத்தக்கு முன் கொண்டு செல்ல உண்மை உரைத்து மனித மாண்பினை வளர்த்தெடுக்க விழித்தெழுவோம் காலம் தாழ்த்தாது.

கல்வியிலும் விளையாட்டுத்திறனிலும் புகழ் பூத்த எம் மண்ணில் முகப் புத்தகமும் இணையமும் இளையோர் மனங்களில் ஆழப்பதித்து இவர்களின் மனங்களை மாற்றி அறிவினை மழுங்கடித்து போனமையால் எதிர்கால சந்ததிகள் அறிவற்ற சந்ததியாய் மாறிடாமல் நல்லதை பரு கிடவும் தியதை அகற்றிடவும் விழித்தெழுவோம்; எம் சந்ததியை மீள வளர்த்தெடுப்போம்; அறிவுடனே. நாட்டில் மின்சார பாவனை உயரிய எல்லை அடைந்திருந்தாலும் எம் தீவின் தெருவோரங்கள் இருட்டில் மிதக்கிறது என்று பலவாய்கள் உரைத்திருந்தும் சிலரின் அசமந்த போக்கினால் எம் தீவே இருளுக்குள் புதைந்து போய்விடும் இன்று விழித்தெழுவோம்.

எம் கலாசார சீரழிவினை தடுப்பதற்கு - வெளிச்சம் காண்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறையும் பெற்றோர் அக்கறை இன்மையும், சின்னஞ்சிறார்களின் எதிர்கால இலட்சியங்களை பூச்சியப்படுத்த இதனையெல்லாம் கண்டும் காணாது போல உலாவி வரும் உயரிய பதவி வகிப்போரே இனியாவது விழித்தெழுங்கள் எம் தீவின் கல்வி வளர்ச்சிக்காக வழித்தெழுவோம். பிரதான வீதி புராதன வீதியாகவும் நகர்புறம் கூட நலிவுற்றுக் கிடக்கிறது. தேர்தல் காலங்களில் கேட்கும் பிச்சைபோல எத்தனை ஒருங்கிணைப்பு கூட்டங்களில் கேட்டிருந்தும், ஊமையாகிப்போன பேச்சுக்களை மீள உயிர்த்தெழச்செய்வோம், விழித்தெழுவோம். எம் மூரின் வளர்ச்சிக்காக விழித்தெழுவோம். உல்லாச பிரயாணிகள் வருகிறார்கள், உல்லாசமாய் உலவுகிறார்கள் உள்ளூரின் பண்பாடு வெளியூர் மோகத்தில் அடிமைப்படாமல் எம்மூரை விழித்தெழச்செய்வோம் நாமும் விழித்தெழுவோம். வறியவர்கள் வளர்க்கப்படும் இந் நாளில் வருமான வழிகளை பல வழிகளில் இனங்காட்டி வறுமையை ஒழித்திடவும் விழித்தெழுவோம் பொருளாதாரத்தினை உயர்த்திடவும் விழித்தெழுவோம். சாதி, மதம் பேதம் பாராது மனித மாண்பினை பேணிப் பாதுகாக்கவும் சிறார்களுக்கு எதிரான வன் முறையினை இல்லாது ஒழித்திடவும் மது போதை குடிபோதை இல்லாத புதுத் தீவாய் எம் தீவை மாற்றிடவே விழித்தெழுவோம் விழித்தெழுவோம். வரலாற்று பொக்கிசங்கள் களவு போகாமலும் பாரம்பரிய கலைஞர் காணாமல் போகாமலும் பாரினில் எம் தீவின் புகழ் மங்கிப் போகாமலும் கலை வளர்த்து கலைஞர்களை ஊக்குவித்து ஆவணமாக்கி புதுமை படைத்திடவே விழித்தெழுவோம்.

எம் தீவின் புகழ் காக்கவும் ஆன்மிகம் வளரவும் அறிவினால் இவ்வுலகை வெற்றி கொள்ளவும் விழித்தெழுவோம். எம் ஊரில் பாதுகாப்பு கமராக்கள் இல்லாமை கண்டு - வருகின்ற கூட்டத்தில் நரிகளும் இருப்பதை உணர்ந்து கொண்டே எம்மூரை பாதுகாக்க திடம் கொள்வோம். திறனால் எம் தீவை பாதுகாக்க ஒவ்வொருவர் பார்வையிலும் விழித்தெழுவோம்: விழித்திருப்போம் எம் தீவை தாண்டி போனதும், கலை தவிர்த்து விஞ்ஞானம், கணிதம் வர்த்தகம் என்றே பல தெரிவுகள் அங்கிருக்க கலைத் தொகையும் குறைந்திட, கல்வி பொலிவிழந்து போவதற்கு இடப் பெயர்வுகள் காரணமாகிறது. இம் முறை மாறிடவே இன்னொரு துறையாவது எம் கல்விச் சாலைகளில் துளிர்விட எம் கல்விமான்களே விழித்தெழுங்கள் எம்மூரின் தனித்துவம் போகவே அரசியல் பொய்ப்பட இங்கு அறிவுதான் மெய்ப்படும் என்று எம்மூரின் புலம்பெயர் உறவுகளும் கைகொடுத்து எம்மூரின் கனவுகள் வெற்றி வாகை சூடிடவே விழித்தெழுவோம். போக்குவரத்துக்கள் சீர் பெறவும் குளங்கள் பெருகிடவும் புதுக்கேணிகள் தோன்றிடவும் குதிரை என்பன நலிந்திடாமல் எம்மூரின் புகழ் சேர்க்க புது உலகம் படைத்திடவே விழித்தெழுவோம்.

**செ.ராஜ்குமார்**
**14ம் வட்டாரம் நெடுந்தீவு**




## வாழ்க்கை தத்துவங்கள்....

- புரியாத வார்த்தை இருந்தும் பயன் இல்லை! புரியாத வாழ்க்கை வாழ்ந்தும் பயன் இல்லை....

- அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்....ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!


- உனது வாழ்க்கைக்கு எல்லை அமைத்து வாழ்! ஆனால் எல்லைக்குள் ஒரு போதும் வாழ்க்கையை அமைத்து விடாதே....!

- இதுவரை ஆராய்ச்சிக்கு உட்படுத்தாத ஒன்று எது தெரியுமா அன்பு. காரணம் அன்பென்றால் அகிலமும் அடங்கிவிடும் என்பதனால்.

- ஒருவனின் வார்த்தை தரும் வலியை விட அவன் செய்யும் செயலின் வலி அதிகம்.

- அன்பானவர்களிடம் உன் மனதை மறைத்து விடாதே. உன் மனதில் உள்ளதை மறைப்பதாயின் அன்பாய் இருப்பது போல் நடித்து வாழாதே.

# மனநலமும் மனநோயும் — ஓர் நோக்கு



ஆரோக்கியம் என்பது உடல், உளம், சமூகம், ஆத்மீகம் ஆகிய நான்கும் நல்நிலையில் இருத்தல் வேண்டும் உலக சுகாதார திணைக்களம் (WHO) கூறுகின்றது "ஆரோக்கியமான மனிதர் என்பவர், உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி மனநலமும் பெற்றிருத்தல் அவசியமாகும்." ஆரோக்கியம் என்ற தற்கால கருதுகோள் உடலில் முறையான (சீரான) இயக்கத்தை மட்டும் குறிக்கவில்லை. அது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவல்ல மனத்திண்மையும் (வலிமை) உள்ளடக்கியதாகும். உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாத அடிப்படைக்கூறு மனநலமாகும். மனநலம் இரு முக்கிய கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, மனநலமுள்ளவர் தன்னுடனேயே ஒத்திசைவும், நல்லிணக்கமும் உடையவராக இருப்பர். இரண்டாவதாக, மனநலமுள்ளவர் தாம் வாழும் சமூக அமைப்பிலிருந்து தன்னம்பிக்கை பெறுவார். இத்தகைய சமூக அமைப்பு ஒத்திசைவையும், நல்லிணக்கத்தையும் வளர்க்கிறது. சமூக சக்திகள் மாறும் தன்மை கொண்டமையால் சகிப்புத்தன்மை, பொருத்தப்பாடு, வளர்ச்சி போன்றவற்றை உள்ளடக்கிய நல்லிணக்கத்திலிருந்தே மனநலம் உருவாதல் வேண்டும்.

### உளநலத்தின் வரையறை

நாம் வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சூழ்நிலைகளினால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கு நாம் மனநிறைவுடன் பொருத்தப்பாடு (adjustment) மேற்கொள்ளும் திறமையே மனநலம் என்று என்.இ.கட்ஸும், என்.மோஸ்லியும் வரையறை செய்துள்ளனர். உளநலவியல் என்பது இந்தப் பொருத்தப்பாடு நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையாகும். தன்னுடன் ஒத்திசைவையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஒருவரின் திறமைதான் மனநலம்.

### உளநலமுள்ளவரின் குணநலன்கள்

உள நல முள்ளவர்கள் வாழ்க்கையிலும் மக்களிடத்தும் சாதகமான மனப்போக்கினைக் கொண்டுள்ளனர். அவர்கள் மிகுந்த நல்லிணக்கம் உடையவராக, பிறரைப்பற்றிக் குறைகூறாமல், மன நிறைவுடையவராக இருப்பர். தம்முடைய நிறைகளையும், குறைகளையும் அறிந்திருப்பர். மேலும் நிலைத்திருக்கக்கூடிய மனவெழுச்சியும், மகிழ்ச்சியும் உடையவராக இருப்பர்,

சகிப்புத்தன்மையும் பெற்றிருப்பர்.

## உளநோயும் சமூக அணுகுமுறையும்

பொதுவாக மன நலப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களை நம் சமூகம் வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றது. குறிப்பாக நண்பர்களாலும், வீட்டில் உள்ளவர்களாலும் வேலைக்கு செல்லுமிடத்திலும் கூட மனநலத்தால் பாதிப்புக்குள்ளானவர்களை "பைத்தியம்"என்ற முத்திரை குத்தப்படுகிறது. இதனால் அவர்கள் நன்றாக குணமடைந்தாலும் சமூகத்திலிருந்து சற்று விலகி, தன்னைப் பற்றிய ஒரு தாழ்வு மனப்பான்மையுடனேயே வாழ்கின்றனர்.

இது போல் அவர்கள் முத்திரை குத்தப்பட்டு மிகவும் மோசமாக நடத்தப்படுவதால் குணமான நிலையிலிருந்து மீண்டும் அவர்களுக்கு மனநோய் பாதிக்கப்படுவதாக பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மனநல பிரச்சனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து குணமாக்குவது என்பது மிகவும் எளிதானது. ஆனால் குணமானதும் அது மீண்டும் அவர்களைத் தாக்காமல் பாதுகாப்பது தான் மிகவும் கஸ்டமாக இருக்கிறது.

நம் சமூகத்தில் சுமார் 17மில்லியன் மக்கள் தொகையினர் ஏதோ ஒருவகை மனநோயால் பாதிக்கப்படுகின்றனர். இது புற்றுநோய் மற்றும் பல நீண்ட நாள்பட்ட வியாதிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் அளவை விட மிகவும் குறைவு ஆனால் பெரியதாக நம் சமூகத்தில் பேசப்படுவது மன நோயால் பாதிக்கப்பட்டவர்களையே என்பது குறிப்பிடத்தக்கது.

சில பிரதேசத்தில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் குடும்பத்தினரே மீண்டும் குணமானவர்களை வீட்டில் சேர்த்துக் கொள்ளத் தயங்கி, மனநோய் விடுதிகளில் சேர்க்கவே விரும்புகிறார்கள். இதன் பிரச்சனையை உணர்ந்து பல மனநல மருத்துவர்கள், சமூக பணியாளர்கள், சமூக ஒத்துழைப்புடன் கூடிய பல நிறுவனங்களை ஆரம்பித்து. இதனால் குணமடைந்த பல நோயாளிகளின் மனதில் தங்களாலும் இந்த சமூகத்தில் கௌரவமாக நடமாட முடியும் என்ற தன்னம்பிக்கைக்கு வித்திட்டடு அவர்களுக்கு மறுவாழ்வு தரும் மையங்களாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.




ஆனால் இவ்வளவு முன்னேற்றங்கள் இருந்தும் நம் சமூகத்தினர், மனபிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்க காரணம் தான் என்ன? மன நோய் பற்றிய தவறான கருத்துக்கள் தான் காரணம் எனக் கூறலாம். பெரும்பாலானோர் மனநோய் என்பது மிகவும் ஆபத்தானது, சரி செய்ய முடியாது, எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என நினைக்கின்றனர். எனவே சங்கிலியால் கட்டி வீட்டின் ஒரு அறையில் அடைத்து வைக்கும் பழக்கம் இன்றும் பலர் வீட்டில் இருக்கிறது. இது தவறான கருத்து. மனநோய் பலவகையானது. தக்க சமயத்தில் சிகிச்சை அளித்தால் எளிதில் குணமாக்க முடியும்.

நம்மிடையே ஒரு சிலரின் கருத்து மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றது. மனநோய் என்பது

தனக்குத்தானே வளர்த்துக் கொள்வது. அதிகமாக சிந்திப்பவர்கள், மத்தியில் காணப்படுவதாக கருதுகின்றனர். மற்றும் பேய்கள்,ஆவிகள் போன்ற தீயசக்திகளால் வருவது என எண்ணுகின்றனர். பெரும்பாலான மன நோய்கள் ஆரம்பத்தில் நம்மால் இனம்கண்டு கொள்ள முடியாமல் போவதாலும், பூசாரி, பேய் ஓட்டுபவர், மாந்திரீகன் எனச்சென்று பார்த்துவிட்டு நோய் நன்றாக முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வருவதால், பல நேரங்களில் உள நோய் வைத்தியத்தை நீண்டகாலம் தொடர வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மனநோயாளிகள் மிகவும் முரட்டுத்தனத்துடனும், வெறித்தனத்துடனும் சில சமயங்கள் ஒதுங்கி இருந்தும் நடந்து கொள்வார்கள். இதனால் நமக்கு எப்பொழுது ஆபத்து ஏற்படும் என சொல்ல முடியாது. இவர்கள் எதற்கும் தகுதியற்றவர்கள் என்னும் எண்ணம் எல்லோர் மனதிலும் உண்டு.



இது போன்ற தவறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவ கட்டுக்கதைகள், சினிமாவும் தொலைக்காட்சி நாடகங்களும் ஒரு விதத்தில் காரணமாக அமைகின்றன.

பொதுவாக உடம்பில் ஏற்படும் இரசாயன மாற்றங்களினாலும், அதன் குறைபாடுகளினாலும் தான் பெரும்பாலான மன வியாதிகள் ஏற்படுகின்றன. மூளையின் செல்களில் ஏற்படும் நோய்கள், போதைப் பொருட்களின் உபயோகம், பரம்பரை வியாதிகள், குடும்பத்தில் ஒருவர் வளரும் சூழ்நிலை, சமூக கலாசார சூழ்நிலை ஆகியவற்றால் கூட ஏற்படலாம்.

### உளநோயினை தடுப்பதற்கான வழிகள் (Prevention)

உளநோய்களைத் தடுப்பதில் நாம் இருபணி களை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். முதலாவதாக, மனநோய்களுக்கான காரணங்களைக் கண்டு பிடித்து, அவற்றை நீக்குதல். அடுத்து, தன்னுறுதியுள்ள அல்லது ஆரோக்கியமான மனநலத்தை (Positive Mental Health) வளர்க்கக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்துதல். உளநோய்களைத் தடுப்பதில் நான்கு தடுப்பு முறைகளை நாம் கையாளலாம்.

### 1. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் (Physical Health Measures)

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் திட்டமிட்ட குடும்பத்தில் தொடங்கி, குழந்தை பிறப்பதற்கு முன்னரும், குழந்தை பிறந்த பின்னரும் கடைப்பிடிக்கவேண்டிய பாதுகாப்பு முறைகள் அனைத்தும் அடங்கியதாகும். இங்கு திட்டமிட்ட குடும்பத்தின் முக்கியத்துவம் அறிவுறுத்தப்படுகிறது. அதாவது குடும்பம் எத்தனை குழந்தைகளைப் பெற்றிருக்கவேண்டும், குடும்பச்சூழல், திருமணநிலை இவற்றைக் கவனத்திற்கொண்டு எப்பொழுது குழந்தை பெறலாம், மேலும் குழந்தை அவசியம்தானா என்பனவற்றைச் சிந்தித்தல் வேண்டும். இந்த முறையில் மரபுநிலை பற்றிய அறிவுரை (Genetic Counselling) பெறுதலும் அடங்கும். மரபுநிலை சார்ந்த அறிவுரையில் பெற்றோருக்குப் பல புதியவகைச் சோதனைகள் செய்து அவர்கள் உடல் ஊனம் அல்லது உடல் குறைபாடு உள்ள குழந்தைகள் பெற சாத்தியக்கூறு உள்ளதா என சோதித்து அறியப்படுகிறது.

### 2.உளச்சமூகசார்புடைய பாதுகாப்பு முறைகள் (Psychological Health Measures)

உளச்சமூக சார்புடைய பாதுகாப்பு முறைகளில் வாழ்வின் உண்மைநிலை, நடைமுறை சாத்தியக்கூறுகள், மதிப்பீடுகள் போன்றவற்றைப்பற்றி நாம் சரியான

கருத்துக்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஒருவன் தன்னைப்பற்றியும் உலகத்தைப்பற்றியும் தவறான கருத்துக்கள் கொண்டிருந்தால் அவருடைய பொருத்தப்பாடும் தவறானதாக இருக்கும். அதுபோன்றெ அர்த்தமுள்ள, மனநிறைவான வாழ்க்கை அமையும் வண்ணம் சிறந்த சமூக மதிப்பீடுகளைப்பெற இயலாதவர் தவறான பொருத்தப்பாடுகளையும், மனக்கோளாறுகளையும் எதிர்கொள்வார்.

3. **சமூக- பண்பாடு சார்ந்த பாதுகாப்பு முறைகள் (Socio- Culture Measures)**

பொதுமக்களுக்குக் கல்வி புகட்டுதல் மற்றும் சமூக பாதுகாப்பு அளித்தல் முதலாக, பொருளாதார திட்டம் வகுத்தல், சமூக சட்டதிட்டங்களை அமுல்படுத்துதல் வரையிலான பரந்த விரிவான சமூகபாதுகாப்பு வழிமுறைகள் எல்லா மக்களுக்கும் போதிய உளநலம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

4. **ஆன்மீகம் சார்ந்த பாதுகாப்பு முறைகள் (Spiritual - Measures)**

பாரம்பரிய விழாக்கள், சமய கொண்டாட்டங்கள் (கோவில் திருவிழாக்கள், இஸ்லாமிய, கிறிஸ்தவப் பெருநாட்கள் போன்றன சமூதாய உறவுகளைப்பலப்படுத்த உதவும். பொது விழாக்கள் தனிநபருடைய உளநல மேம்பாட்டுக்கு மட்டுமல்லாது, சமுதாயத்தின் உளநலப் பிரச்சினைகளுக்கு உதவுகின்றது. மேலும் வாழ்க்கையைத் தொடர்வதற்கும், எதிர்காலத்திற்குரிய எதிர்பார்ப்புக்களை உருவாக்கவும் ஊர்த் திருவிழாக்கள் நல்ல சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுக்கின்றன.

மேலும் இதனை சரிசெய்ய இப்பொழுது பல சக்தி மிகுந்த மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனைச் சாப்பிடுவதால் எந்த விதமான பிரச்சனையோ அவமானமோ கிடையாது. இரத்தக்கொதிப்பு, சிறுநீரகப்பிரச்சனைகளுக்காக நாம் ஆயுள்வரை மாத்திரைகள் சாப்பிடுவதில்லையா? அல்லது சிகிச்சை எடுத்துக் கொள்வதில்லையா? அப்பொழுது ஏற்படாத தயக்கம் இதில் மட்டும் ஏன்? ஏனென்றால் இதனை ஒரு பெரிய அவமானமாக கருதி வீட்டில் உள்ளவர்களும், நோயாளிகளும் மாத்திரையை தொடர்ந்து எடுப்பதை சலிப்பின் காரணமாக பாதியிலேயே நிறுத்தி மீண்டும் நோய் தொடர வழி கோலுகின்றன.நோயால் பாதிக்கப்பட்டவர்களை மட்டும் நம் சமூகம் கேவலமாக பார்ப்பதில்லை. இவர்களின் குடும்பத்தினருக்கும் கூட சில சமயங்களில் வேலை வாய்ப்பு, திருமணம் ஆகியவை தடைப்படுகின்றன.

இந் நிலை ஏன்? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். பெரியதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. உங்களுக்கு தெரிந்தவர்கள் மன நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனே தகுந்த மனநல மருத்துவர்களை அணுகச் சொல்லுங்கள். மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு மனிதனாக மதியுங்கள். அவர்களுடன் சரி சமமாக பழகுங்கள். இது அவர்களின் முன்னேற்றத்திற்கு நீங்கள் அமைக்கும் முதற்படிக்கட்டாக அமையும்.

## வாழ்க்கை தத்துவங்கள்....

- **கற்பனையில் சித்திரத்தை வரைந்து விடலாம், ஆனால் ஒருவனின் மனதை புரிந்து கொள்ளாமல் நண்பன் ஆகி விட முடியாது.**
- **ஒரு மனிதனின் அதீத அன்பானது தாயிடம் மட்டுமே உள்ளது..**
- **ஒன்றை நாம் பார்க்கும் விதத்தில் அது சரி தப்பு என்று முடிவு எடுத்து விடுகிறோம். அதை நாம் எப்போதும் சரியா தவறா என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை. அப்படி நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால் சந்தேகங்கள் மனிதர் இடையே தோன்றாது.**
- **ஆயிரம் தடவை உன் சந்தேகத்தை நேரே கேள். அது சிறிய கோபத்தை உருவாக்கும் ஆனால் பதில் கிடைத்து விடும், ஆனால் உன் சந்தேகத்தை நேரே கேட்காமல் உன்னுள் வைத்து மறை முகமாய் ஒருவனைக் காயப்படுத்தாதே அது உனக்கு எல்லையற்ற துன்பத்தை தந்துவிடும்...**
- **இழப்பு அல்லது பிரிவின்றி எவரும் ஒன்றின் அருமையை உணருவதில்லை.**
- **நான் என்று சொல்லும் போது எனது அகத்தில் இருப்பதையே கூறுகிறோம், எனது என்று சொல்லும் போது எனக்காக புறத்தில் இருப்பதை கூறுகிறோம். இதை எல்லாம் தாண்டி நாம் என்று கூறும் பொழுதே வெளியில் எமக்காக காத்திருக்கும் வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கிறோம்.**

# நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும்

யாழ் மாவட்டத்திலே வடமாகாணத் திலே நெடுந்தீவு என்ற ஒரு அழகான பெயரில் ஒரு சிறு குட்டித்தீவு ஒன்று காணப்படுகின்றது. இந்த நெடுந் தீவானது ஒரு சிறிய தீவாக இருந்தாலும் பல வளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இந்த நெடுந்தீவில் கிடைக்கும் வளங்களைப் போல் வேறு இடங்களில் கிடைப்பது மிகவும் அரிது என்றே கூறமுடியும் அவ்வாறாக பல வளங்களைக் கொண்டு செழித்து காணப்படுகின்றது. தூய்மையான காற்று, நீர்வளம், உலர் பொருட்கள், பனை, தென்னை உற்பத்தி, சுற்றுலாத்துறை போன்ற பல வளங்களை கூறிக்கொண்டே போக முடியும். முன்னோர் காலத்தில் தற்போது காணப்படுகின்ற பல வளங்கள் பெரிதும் காணப்படவில்லை. எமக்கு தேவைகள் எதுவும் ஏற்படுகின்ற போது அவற்றை நகரத்தில் சென்று பெறக்கூடியதாகவே இருந்தது.



தற்போது 21ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் அனைத்து வளங்களுமே இச் சிறிய தீவாக நெடுந்தீவில் வந்துவிட்டன. ஆனால் மிகவும் கவலைக்குரிய விடயமாக காணப்படுவது யாதெனில் இவ்வாறான பல வளங்கள் காணப்பட்டாலும், அதனை சிறந்த முறையில் பயன்படுத்துவோர் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றனர். இதனால் எம் நெடுந்தீவின் எதிர்கால இருப்பானது எவ்வாறாக அமையும் என்பது மிகவும் கேள்விக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையில் மிகவும் சிறந்த தீவுகளில் ஒன்றாக எம் நெடுந்தீவு காணப்படுவது எமக்கு மிகவும் மகிழ்ச்சியானதொன்றாகவே காணப்படுகின்றது. இந்த நெடுந்தீவில் பல வரலாற்றுப் பாரம்பரியங்கள் தொல் பொருட்கள் போன்ற மூலாதாரங்கள் காணப்படுகின்றன. நெடுந்தீவின் சுற்றுலாத்துறைக்குள் ஒல்லாந்தர் கோட்டை,வெடியரசன்கோட்டை, புறாக்கூடு, நாற்பது அடி மனிதனின் காற்தடம், குயின்ரவர், குதிரை லயம், 16 வட்டுப்பனை பெருக்குமரம், மணற் கடற்கரை போன்ற பல நினைவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் அன்று தொடக்கம் இன்று வரை அழிந்து போகாமல் நினைவுச் சின்னங்களாக காணப்படுகின்றன. இவற்றை பார்ப்பதற்காக நாளுக்கு நாள் வெளி நாடுகளில் இருந்தும் வேறு பல தூர இடங்களில் இருந்தும் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே செய்கின்றது. இவ்வாறு சுற்றுலா துறையில் வளம் மிக்கத் தீவாக எம் அழகிய நெடுந்தீவு காணப்படுகின்றது.

நெடுந்தீவில் காணப்படுகின்ற வளங்கள் மேலும் கூறிக்கொண்டே போகமுடியும். பனை - தென்னை போன்றவற்றிலிருந்து பல ஏற்றுமதி செய்யப்படுகின்ற கிழங்கு, சிரட்டைக்கரி, பனை தென்னை ஓலை அலங்காரப் பொருட்கள் சட்டம், சிலாகை போன்றன ஏற்றுமதிக்காக பயன்படுத்துகின்றன. மற்றும் இயற்கை மூலிகைகள் பெருமளவு எம் தீவில் கிடைக்கின்றன. முற்பட்ட காலத்தில் எந்த வித நோயாக இருந்தாலும் கை வைத்தியங்களே பயன்படுத்தப்பட்டன. இதற்கான மூலிகைகள் வளங்கள் எம் தீவில் பெருமளவு கிடைக்கக்கூடியதாக காணப்பட்டன. நெடுந்தீவின் கல்வி வளமும் தற்போது சிறந்த நிலைக்கு வந்துவிட்டது என்று கூறமுடியும். ஆனால் அதை பயன்படுத்துவோர் குறைவாகவே காணப்படுகின்றனர். எம் முன்னோர் காலத்தில் தற்போது காணப்படுகின்ற கல்வி வளங்கள் கிடைக்கவில்லை. ஆசிரியர் பற்றாக்குறை, பொருளாதாரப் பிரச்சினை, சூழல் பிரச்சினை மேற்படிப்புக்களுக்காக வேறு இடங்களுக்கு செல்லல் போன்ற பிரச்சினைகள் காணப்பட்டன. தற்போதைய காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எதுவும் பெரிதும் காணப்படவில்லை.

அனைத்து பாடசாலைகளிலும் நிறைந்த ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். ஆனால் இவ்வாறான கல்வி

வளத்தை பயன்படுத்துவோர் மிகவும் குறைவாகவே உள்ளனர். எம் நெடுந்தீவில் இத்தனை வளம் இருந்தும் இன்று இளையோர்கள் படிப்பை நிறுத்திவிட்டு வீடுகளில் இருக்கின்றார்கள். நெடுந்தீவில் காணப்படுகின்ற மற்றுமோர் சிறந்த வளமாக கடல் வளம் காணப்படுகின்றது. மீன் பிடியிலே சிறந்த இடமாக நெடுந்தீவு காணப்படுகின்றது. கடற்கரைப் பொருட்களைப் பயன்படுத்தி பல அலங்காரங்கள் செய்து மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறன. இத்தீவில் குடிநீர் மட்டுமே ஒரு பிரச்சினையாக காணப்படுகிறது.

கடல் நீரை சுத்திகரித்தே மக்கள் தமக்கான நீரைப் பெறுகின்றனர். விலங்குகள், பறவைகள் போன்றவற்றிற்கு குடி நீர் இல்லா பிரச்சனையால் பல இனங்கள் இன்று அழிவடைந்து விட்டன. தற்போதும் அழிவடைந்து கொண்டு வருகின்றன. இவ்வாறான பல பிரச்சனையாலும் எம் எதிர்கால இருப்பு எவ்வாறு அமையும் என்பது கவலைக்குரியதாகவே காணப்படுகின்றது. எம்மிடையே இருக்கின்ற வளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி எதிர்கால சமூகத்தை நன் நிலைக்குகொண்டு வரவேண்டும் சுற்றுலாத்துறையின் வளங்கள் அழிந்து போகாவண்ணம் பாதுகாக்க வேண்டும். நெடுந்தீவின் எதிர்காலம் எம் ஒவ்வொருவரின் கைகளிலும் தான் காணப்படுகின்றது. எதிர்கால இருப்பானது நல்லமுறையில் அமைய வேண்டுமெனின் நாம் ஒவ்வொருவரும் தான் இன்றிலிருந்து முயற்சிக்க வேண்டும். எந்த வெளிநாடுகள் போன்ற பெரு நாடுகளுக்கு சென்றாலும் நாம் பிறந்து வளர்ந்த எம் தீவை மறக்கவே கூடாது "சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா...." என்ற பாடலடி கூட இருக்கின்றது. அது போல் எங்கு சென்றாலும் எம் தீவான நெடுந்தீவை மறந்து விடாது நெடுந்தீவின் எதிர்காலத்திற்கு உழைத்து சிறந்த முறையில் எம்தீவை கட்டியெழுப்புவோம்.

**றொ.சுலக்சினி**
**தரம் - 12**
**நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி**

# நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும்

நெடுந்தீவு, யாழ். குடாநாட்டின் கரையோரத்தில் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவுகளிலே பெரிய தீவாக காணப்படுகின்றது. இத் தீவின் வளங்கள் எண்ணுக் கணக்கற்றவை: இத்தீவு பசுந்தீவு, பாற்த்தீவு, மூலிகைத்தீவு போன்று பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது. இத்தீவு பசுந்தீவு என அழைக்கப்படுவதற்கான காரணம் இத்தீவை கண்டவுடனே பச்சைப் பசேல் என காட்சியளிக்கும், பார்ப்பவர்கள் மனதை ஈர்க்கும் தன்மை கொண்டது. அடுத்து பாற்தீவு என அழைக்கப் படுவதற்கான காரணம் பசுக்கள் நிறைந்ததாகவும் அப் பசுக்கள் மூலம் பால் பெற்றதாகவும் காணப்படுகின்றது. அடுத்து மூலிகைத் தீவு என அழைக்கப்படுவதற்கான காரணம் பல மூலிகைகள் நிறைந்த தீவாகவும் எங்கு கண் கொண்டு பார்த்தாலும் மூலிகைகளாலே நிறைந்து காணப்படுகின்றது. அக்கால மக்கள் தமது நோய்களுக்கெல்லாம் வைத்தியசாலையை நாடாது தமது தீவில் உள்ள மூலிகைகளைப் பறித்தே நோய்களை குணமாக்கி உள்ளனர்.

இத்தீவிற்கு தனித்துவமான வரலாறு காணப்படுகின்றது. இங்கிருந்து பால் வேறு இடங்களிற்கு கொண்டு சென்றதாகவும் ஆலயங்களிற்கு பால் வழங்கப்பட்டதாகவும் இத்தீவின் தனித்துவமான மகிமையை அறிய முடிகின்றது. இத்தீவில் வாழ்ந்த முறையை மூதாதையர்கள் தீவை நேசித்ததாகவும் அத்தீவின் இயற்கையோடு வாழப் பழகியதாகவும் அவர்கள் ஆரோக்கியம் மிக்கவர்களாகவும் நீண்ட ஆயுளை கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். நெல், திணை, வரகு, சாமி போன்ற பயிர்களை விவசாயம் செய்து வாழ்ந்தவர்களாகவும், தமது வீடுகளிலே வீட்டுத் தோட்டம் அமைத்து தமது அன்றாட உணவுக்குத் தேவையான பொருட்களை இராசயனப் பசளைகள் இடாது இயற்கைப் பசளைகளான மாட்டெரு, ஆட்டெரு, கோழி எச்சம் போன்ற பசளைகளை இயற்கையாக இட்டு தமது வாழ்க்கையை நகர்த்தினார்கள். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டதால் நாங்கள் மறுகரைக்கு சென்று வரக்கூடிய ஓடங்கள் பல காணப்பட்டன.

மற்றும் இங்கு இயற்கை அன்னை தந்த கொடைகளால் மீன் பிடிப்பவர்கள் விவசாயம் செய்பவர்கள்

என்று தமக்குத் தேவையான தொழில்களை தாமே மேற் கொண்டு வந்துள்ளனர். அடுத்து பனைகள் நிறைந்து காணப்படுவதால் அதன் மூலம் பனங்காய் பெற்று அதனை பயன் படுத்தி பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல், ஒடியல்பிட்டு, பனங்காய் பலகாரம் போன்ற பல உணவுப் பொருட்கஎள பெற்றுள்ளனர் இவ்வாறு பல வளங்களைப் பெற்றுள்ள நாட்டை நாமே நமது கவனயீனத்தால் எமது தீவினை நாம் சிறிது சிறிதாக இழந்து வருகின்றோம். நாம் எமது சுய நலத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் மரங்களை வெட்ட ஆரம்பித்தவுடன் மழை அற்று வரட்சியான தீவாக மாறியது.

மழை அற்றுப் போனதால் குளங்கள், குட்டைகள், கிணறுகள் போன்றன மழையைத் தேக்கி வைக்க முடியாது போனமையால் விவசாயம் செய்வது குறைந்ததாக காணப்பட்டது. பசுமையாக காணப்பட்ட தீவு இப்போது காய்ந்து பசுக்கள் உண்பதற்கு புற்கள் கிடையாது. கால்நடை விலங்குகள் இறக்க நேரிட்டது. மூலிகைகள் எல்லாம் சிதைந்து சின்னா பின்னமாகப் போனது. அடுத்து வெளி நாட்டவர்கள் வந்து எமது தீவிலுள்ள வளங்களை பார்வையிட்டு போவது மட்டுமின்றி எமது தீவில் உள்ள மருந்து மூலிகைகளை பறித்து செல்கின்றனர். மீன் பிடிக்க செல்பவர்கள் மீன் பிடிப்பதுடன் நின்று விடாது முத்துக் குளித்தல், இரத்தினக்கல் அகழ்தல் என்பவற்றினூடாக மண் அரித்து சென்று இயற்கை அனர்த்தம் ஏற்படுவதற்கு நாமே தூண்டுதலாக உள்ளோம்.

இத்தீவு 16-30 வயதிற்குட்பட்ட இளைஞர்கள், சிறுவர்கள் போதைவஸ்திற்கு அடிமையாகி இத்தீவினை நிலைநாட்ட வேண்டியவர்களே தீவினை அழித்து வருகின்றனர். நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுகின்றனர் ஆரோக்கியம் அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

இத்தீவு பல வியக்கத் தக்க காட்சிகள் காணக் கூடிய வளம் மிக்க தீவாக காணப்படுகின்றது அதாவது வெடியரசன் கோட்டை, மீகாமன் கோட்டை, பெருக்கு மரம், புறாக்கூடு. இராணி மாளிகை, குதிரைலயம், நாற்பதடி மனிதனின் பாதம் போன்ற பல அதிசயங்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் முன்னைய காலத்தில் அழியாமல் இன்று வரையும் அமைந்துள்ளதை காணமுடிகின்றது. இப்போது மக்கள் தோட்டம் செய்யாது வெளி நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களை உணவுகளாக அருந்தி வருகின்றனர். பிரதான பாதைகள் பல சீரழிவிற்கு உள்ளாகியிருப்பதனை நாமே காண்கின்றோம்.




மேற்கு பிரதேசத்தில் இருந்து கிழக்குப் பிரதேசம் பயணம் செய்யும் பாதையில் துவிச்சக்கர வண்டியிலே சென்று வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்து நீர்ப் பற்றாக்குறை காணப்படு கின்றது. நீர் எடுப்பதற்காக பல கிலோமீற் றர் தூரம் சென்று வரவேண்டி உள்ளது. இவ்வாறு பல காரணங்களினால் எமது தீவினை நாமே இழக்க நேரிடுகிறது. இக்காலத்தில் வாழ்பவர்கள் எமது தீவு எமது பிரதேசம் என்று ஒரு கணம் கூட நினைத்துப் பார்பதில்லை. தாம் உண்டு தமது வேலை உண்டு என்று நினைப்பதனால் தான் இத் தீவு சீரழிந்து வருகின்றது. பாடசாலை சிறார்களை தமது பிரதேசத்தில் பாடசாலை அமைந்தும் கூட வேறு பிரதேுசத்தில் தமது பிள்ளைகளை சேர்க்கின்றனர். இவ்வாறு தமது பிரதேசத்தில் தமக்கே நம்பிக்கை இல்லையென்றால் வெளி இடத்தில் உள்ளவர்கள் எவ்வாறு இங்கு வருவார்கள்.

நாம் இன்னும் யோசிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் எமது தீவில் கொலை இடம் பெறுகின்றது. இவ்வாறு நடந்தால் நமது தீவு மக்கள் பயப்படச் செய்வார்கள். இவற்றிற்கெல்லாம் நாம் பல

தீர்வுகள் மேற்கொள்ள வேண்டும். வளர்ந்து வரும் சிறார்களுக்கு இது எனது தீவு என பற்று ஏற்பட வைக்க வேண்டும். எதிர்கால இருப்பைப் பற்றி யோசனை கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் மாற்ற முயல வேண்டும் போதை வஸ்திற்கு அடிமையாகும் சிறுவர்கள், கொலை செய்யத் துணியும் பாவிகள் போன்றவர்களுக்கு ஏற்ற தண்டனைகளை கொடுக்க வேண்டும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற வகையில் நெடுந்தீவின் எதிர்கால இருப்பில் கவனம் மேற்கொள்ள வைக்க வேண்டும்.எமது பிரதேச மக்களையும் எமது பிரதேசத்தில் பற்றும் நம்பிக்கையும் வைக்க செய்ய வேண்டும்.

எமது கண்ணை எவ்வாறு இமை காக்கின்றதோ அவ்வாறே எமது தீவினையும் கண்ணாக நினைத்து நாம் இமையாக இருந்து காப்பாற்ற வேண்டும். ஒரு கண்ணை இழந்தால் எவ்வாறு பார்வை அற்றவர்களாக இருக்கின்றோமோ அதே போல எமது தீவினையும் இழக்க கூடாது. தீவினை நேசிக்க தவறினால் கண் இருந்தும் குருடர்களாகவே வாழலாம்.



எமது தீவின் எதிர்கால இருப்புக்கு நாமே முடிவெடுக்க வேண்டும். அக்காலத்தில் நெடுந்தீவு எவ்வாறு காணப்பட்டதோ அவ்வாறே உருவாக்க வேண்டும். முக்கியமாக மரங்களை அழிப்பவர்களை அதற்குரிய தண்டனைக்குள் கொண்டு வந்து முடிவெடுக்க வேண்டும். மரங்கள் வைத்து மழை கிடைக்குமாயின் தீவும் பசுமையாக மாறும் கால் நடை விலங்குகளுக்கு உணவும் நீரும் கிடைக்கும் விவசாயம் செய்வதற்கு நீர் கிடைக்கும். நீருக்கு வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படாது. எமது தீவினை கட்டியெழுப்புவது எமது பொறுப்பே நெடுந்தீவின் கலாசாரங்கள், பண்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து தனித்துவமான தீவாக உருவாக்குவோம்.

**ஜெ.ஜிவிர்த்தனா தரம் -12**
**யா.நெடு.சைவப்பிரகாச வித்தியாலயம்**


# நெடுந்தீவின் வளமும் எதிர்கால இருப்பும்

இந்துமா சமுத்திரத்தின் முத்து எனவும் சிவனடியார் திருமூலரின் சிவபூமி எனவும் அழைக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டின் அணிநகர் யாழ்ப்பாணத்தின் அலைகடலின் மத்தியில் அமைந்துள்ள அழகான தீவுக்கூட்டங்களில் புராதன சின்னங்களை உள்ளடக்கியதும் புவியியல் ரீதியான வித்தியாசமான அமைப்பினைக் கொண்ட கிராமமே நெடுந்தீவாகும். இதற்கு பால்தீவு, பசுத்தீவு, பசுந்தீவு, புட்கரம் எனவும் சிங்களத்தில் 'அவுகதலோகய' எனவும் அதாவது அவுகத லோகய என்றால் சிரஞ்சீவி உலகம் எனப் பொருள்படும். டெல்ப்ற் எனவும் பெயர்கள் காணப்படுவதாக பல்வேறு இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். இங்கு 4856 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் விவசாயம் மற்றும் கடற்றொழிலை அதிகமாக மக்கள் செய்கின்றனர். இந்துசமயம் சார்ந்தவர்கள், றோமன் கத்தோலிக்க சமயம் சார்ந்தவர்கள், றோமன் கத்தோலிக்க சமயம் சாராத கிறிஸ்தவர்கள் என வாழ்ந்து வருகின்றனர்.


27 இந்துக்கோயில்களும் 10 கிறிஸ்தவ தேவாலயங்களும் 2 தேவசபைகளும் காணப்படுகின்றன. இங்கு பனை வளமும், தென்னை வளமும், கடல் வளமும் அதிகம் காணப்படுகின்றன. இந்த வகையில் பனை வளத்தையே மக்கள் அதிகமாக பயன்படுத்துகின்றனர். பனை வளத்தினூடாக பனாட்டு, புழுக்கொடியல், ஒடியல், கள், பதநீர், பனங்கட்டி என்பன நெடுந்தீவு மக்களால் உற்பத்தி

செய்யப்பட்டு விநியோகம் செய்து தமது அன்றாட வாழ்க்கைச் செலவாணிகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். மேலும் நெடுந்தீவு மக்கள் சித்திரை புதுவருடத்தினை புழுக்கொடியல் விற்று அதனால் வருகின்ற வருமானங்களைக் கொண்டே புத்தாடைகள் வாங்கி சிற்றூண்டி வகைகள் செய்து கொண்டாடுவர்.

தென்னை வளத்தை நோக்குமிடத்து நெடுந்தீவின் பிரதேசங்களான பனங்காணி, தொட்டாரம், முருக்குச்சி பகுதிகளில் அதிகளவாக தென்னைமரங்கள் காணப்படுகின்றன. இப்பகுதி மக்கள் நயினைநாகபூசணியம்மன் ஆலயத்திருவிழா, நல்லூர் கந்தசுவாமியார் ஆலயத்திருவிழா என்பவற்றில் மகோற்சவ காலங்களில் தேங்காய்களை ஏற்றுமதி செய்வர். அத்துடன் தேங்காய் எண்ணெயும் ஊற்றி விற்பனை செய்வார்கள். மேலும் தென்னை ஓலையில் கிடுகு வேய்ந்து மீனவர்கள் வாடி அமைப்பதற்கு அவர்களுக்கும் விற்பனை செய்வார்கள். அத்துடன் தென்னை ஈர்க்குகளை வார்ந்து விளக்குமாறுகள் தத்தமது தேவைகளுக்காக பயன்படுத்துவார்கள். அத்தோடு தேங்காய்ச் சிரட்டைகளை எடுத்து கம்மாளர்கள். பொற்கொல்லர்களின் தேவைகளுக்காக "கரி." வடிவில் விற்பனை செய்வார்கள்.



அடுத்து நெடுந்தீவின் பேசுபொருளாக கடல்வளமே காணப்படுகின்றது. அதிக மக்களின் வாழ்வாதாரமாக கடல்வளமே காணப்படுகின்றது. நெடுந்தீவுக் கடல-ில் கிடைக்கின்ற நண்டு, மீன், இறால் என்பவை சர்வதேச சந்தையிலும் கேள்வியாகவுள்ளதால் அதனை நெடுந்தீவில் இயங்குகின்ற கடல்வள தனியார் நிறுவனங்களால் பெறப்பட்டு சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனால் நெடுந்தீவு மீனவர்களின் வாழ்வாதாரம் சிறப்பாக காணப்படுகின்றது. மேலும் கம்பனிகளால் பெறப்படாத மீன்களை மீனவர்கள் கருவாடு போட்டு விற்பனை செய்கின்றனர். நெடுந்தீவின் கருவாடுகளையே சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டவர்களும், எமது புலம்பெயர் வாழ் உறவுகளும் அதிகம் விரும்புகின்றனர்.



மேலும் வேப்பம்பூ காலத்தில் வடகம் செய்து அவற்றினை விற்பனை செய்து தமது தேவைகளை நெடுந்தீவு மக்கள் நிறைவேற்றிக் கொள்கின்றனர். பசுக்களை வைத்திருப்பவர்களும் பாலை லீற்றர் கணக்கில் விற்பனை செய்தும் மிஞ்சியதை மோர், தயிர் வடிவில் உருவாக்கியும் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளுவர். அத்துடன் ஆடுகள் வளர்ப்போரும் இறைச்சிக்காக ஆடுகளை விற்று தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளுவர். கோழி வளர்ப்பில் ஈடுபடுவோரும் முட்டைகளை விற்று, இறைச்சிக் கோழிகளை விற்று தமது வருமானங்களைப் பெறுவர். இவ்வாறு நெடுந்தீவு மக்கள் தத்தமது இயல்புக்கேற்ப தமது வளங்களை உருவாக்கி தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

வந்தாரை வாவென வரவேற்று உபசரித்து அன்புள்ளம் கொண்டு வாழும் நெடுந்தீவு மக்கள் உண்மையிலே யாரையும் சுரண்டியோ அல்லது நோகடித்தோ வாழ்வதில்லை. தமது உழைப்பிலே தம்மை மேம்படுத்துவர். தமது உற்பத்திகள் மூலமே தமது வருமானத்தை ஈட்டுவர். தமது வருமானத்துக்கு ஏற்றவகையில் தமது வாழ்க்கைச் செலவுகளை கையாள்வார் இத்தகைய நெடுந்தீவு மக்களின் எதிர்கால இருப்பானது சற்று கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. தமது சொந்த

முயற்சியினால் உழைத்து வாழும் மக்கள் இயற்கையின் சீற்றத்துக்கு முகம் கொடுக்கின்றனரெனில் அது அவர்களின் விதியாகும்.

நெடுந்தீவு மக்கள் தமத எதிர்கால வாழ்க்கையை மேற்கொண்டு செல்வதற்கு நீர்ப் பிரச்சினை முக்கிய காரணமாக இருக்கின்றது. இது இயற்கையின் கோளாறு எனில் ஆளுமையற்ற நெடுந்தீவு பிர தேசபையின் கவனக்குறைவில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வீதிகளைக்கூட செப்பனிட முடியாமையும் இதனால் தமது வாழ்வாதாரங்களான தமது உற்பத்திகளை மேற்கொண்டு விநியோகிக்கின்ற மக்கள் செல்ல முடியாமையினாலும் தமது தேவையை கருத்திற்கொண்டு மக்கள் வெளியேறவும் வாய்ப்புக்கள் அதிகம். மேலும் உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் கவனம் எடுக்காமையினாலும் தமது நலன்கருதி மக்கள் வெளியேற வாய்ப்புக்கள் அதிகம்.
மேலும் தமது உற்பத்திகளை சரியான முறையில் விநியோகிக்க முடியாத நிலமையால் நெடுந்தீவு மக்கள் வெளியேற வாய்ப்புக்கள் அதிகம். அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆளுமையற்ற தன்மையினால் பல விடயங்களை மக்கள் மத்தியில் சென்றடையாமல் இருக்கின்றன. மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கமானது இயங்காநிலையில் காணப்படுவதால் பல்வேறு ஏழைமக்கள் தமது பொருட்களை கொள்வனவு செய்வதில் சிரமப்படுகின்றனர்.

தமக்கென்ற கலை, கலாசாரம், பண்பாடு, அடையாளம், மானம், திமிர் என இன்னோரன்ற தலையாய தனித்துவமிக்க பண்புகளைக் கொண்ட நெடுந்தீவு மக்கள் தமது விருப்பங்களுக்கும், தேவைகளுக்குமென சொந்த வியர்வையில் தமது உற்பத்திகளை மேற்கொண்டு வருபவர்கள். தமது பூர்வீக மண்ணின் வளங்களும், ஆட்சிப்பீடங்களும் குன்றிப் போகுமிடத்து அவர்களின் எதிர்காலமும் இருப்பும் அவர்களின் கைகளில்தான் இருக்கின்றது. எமது தீவுமக்களின் தன்மானத்தையும் கொள்கைகளையும் யாராலும் பறிக்க முடியாது.

**செல்வன் கு.நிஷாந்**
**தரம் - 13**
**நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்**

**தரம் - 12,13 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முன்னிடம் பெற்ற கட்டுரைகள் இவையாகும்.**

## வாழ்க்கை தத்துவங்கள்....

**கோபம் வருகின்ற பொழுது வார்த்தையின் அளவுகள் அதிகரிக்கின்றன. அன்பானவர்களைக்(அன்பானவரைக்) கூட எதிர்த்து விடுகின்றது..**

**கெட்டவனாக இருந்து கொண்டு நல்ல பெயர் எடுப்பதைவிட.. நல்லவனாய் இருந்து கெட்ட பெயர் எடுப்பது எவ்வளவோ மேல்..**

**கடற்கரையில் இருக்கும் கப்பலை விட கடலினுள் இருக்கும் படகின் பெறுமதி அதிகம். அது போல் மனிதா நீ உருவாக்கும் பொருள் உபயோகமானால் சிறப்பு.**

**பெருங் கடலுக்கு எல்லை சிறிய நிலப்பரப்பு..
உனக்கு எல்லை உனது பெற்றோர்.**

**கடல் எல்லையைத் தாண்டினால் நிலம் அழிந்துவிடும்.
நீ எல்லையைத் தாண்டினால் நீ
அழிந்து விடுவாய்.**

# பசுந்தீவாம் நெடுந்தீவு



பசுந்தீவாம் நெடுந்தீவு
எம்மை அரவணைக்கும் பசுந்தீவு
என்றுமே அழியாப் புகழ் கொண்ட நெடியதீவு
எம்தீவு நெடுந்தீவு பால்தீவு பசுந்தீவு

அழகொளிரும் வெடிஅரசன் கோட்டையும் உண்டு
அவன் அகழ்ந்து வைத்த குடி தண்ணீர் கிணறுகள் உண்டு
அசுவமனை கட்டி வளர்த்த லயங்களும் உண்டு
அதன் அருகில் ஆதிகால மனிதனது காலடி உண்டு

ஆயுள் வேத மூலிகைகள் அனைத்துமே உண்டு
அறுநூறு அகவைக் கொண்ட பெருக்குமரமது உண்டு
பாயும் புரவி நிரைகளோடு பசு நிரை உண்டு
பல்லாயிரம் அடிகளோடு ஆல்மரம் உண்டு

கல்லினால் அடுக்கிவைத்த வேலிகள் உண்டு
அன்று கட்டுவித்த ஒல்லாந்தர் கோட்டையும் உண்டு
கலங்கரை விளக்காம் குயீன்ரவரரும் உண்டு
தமிழ்காவலன் தனிநாயகத்தின் சிலையது உண்டு

எங்கள் வெட்டுக் குளத்திலே வெளி நாட்டு பறவைகள் விழுந்து
வேடந்தாங்கல் போல காட்சி தருவதனாலே
இட்டமுடன் உல்லாசப் பயணிகள் வந்து
இன்பலோகம் எனக்கூறி ஏகிடுவாரே

அறிவு ஒளி ஏற்ற கல்விச்சாலைகள் உண்டு
ஆண்டவனின் அருள்பெற ஆலயம் உண்டு
மழலைகள் சொல்கேட்டிட முன்பள்ளிகள் உண்டு
அறிவு நூலகம் உண்டு, வைத்தியசாலை உண்டு

ஆழி உணவாம் மீன்வகைகள் அதிகமாய் உண்டு
அக்குவாட்டின் படகினோடு சமுத்திரா தேவி அவற்றோடு
அக்கால குமுதினியாள் சேவையும் உண்டு அவற்றோடு
நெடுந்தாரகையும், வடதாரகையும், அம்புலன்ஸ்சும் உண்டு

அங்கையாரும் அணியிழையாரின்
அமுத மாத்தொலி கேட்டு
அங்கன வானத்தமர் அணுக
அமுத நால்வரும் நெடுந்திரு நாடு

பொங்கும் வெல்லை மணல் கோட்டைக்காடு
புனித நீர் சாரப்பிட்டி தொட்டாரம்
வங்க இயந்திர ஓடம் விளங்கும்
மாவலித்துறை நாடே எங்கள் நாடு

பசளி, முட்டையும் எமதூரில் உண்டு
ஆசையாய்த் தேடி அவற்றினை உண்டு
கீரை வகை எமது ஊரில் உண்டு
இவற்றை உண்டு பல ஆண்டுகளாக வாழ்ந்திடுவோம்




தொண்டு செய்யும் குரு பெயர்ச்சி
தனிநாயகம் அடிகளார் போற்றும் சுகந்திரவாஜி
கண்டு மகிழ்தரு நாடு
பசுந்தீவாம் நெடிய நகர்
நெடுந்தீவு வாழ் மக்கள்
வாழும் பசுந்தீவு

பட்டணத்து மக்கள் எல்லாம்
பார்க்கவென்று வந்தாலே
பாசியாரும் எம்தீவு நெடுந்தீவு
பால்தீவு, பசுந்தீவு

**ச.தயானந்தன்**
**யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்**

# நெடுந்தீவின் தனித்துவம்

கடலன்னை தாலாட்டிட - கடல்
நடுவில் ஒரு தீவு
நெடுந்தீவு எனும் பெயருடன் - நெடுங்
காலமாக சிறப்புடன் விளங்கிறது
பசுந்தீவு, பாற்தீவு எனும்
வரலாற்று சிறப்புடையது.

எங்கு பார்க்கினும் இயற்கை வளமும்
இயற்கை அன்னையின் கைவண்ணமும்
பகிர் எனும் கல்வேலியும் - தலை
நிமிர்ந்து நிற்கிறது நெடுந்தீவு
கற்பகத் தருக்களும் தென்னையும் நிறைந்திட
சோலை வனமென காட்சி தருகிறது



வெடியரசன் கட்டிய வீரத்தின் கோட்டை
ஒல்லாந்தரின் கோட்டையும்
தூதனுப்பின புறாக்கூட்டுடன்
தூரமாக ஒரு தீவாம் நெடுந்தீவு
ராணியின் நினைவாக ராணி கோபுரம்
நாற்பதடி மனிதனின் கால் தடமும்

வியாபாரம் செய்திட குதிரைகளும் - அன்று
குதிரைக்கு உணவாகிட்ட பெருக்கு மரமும்
வெள்ளை நிற மணலுடன் - மணல்
கடற்கரையும் - வெல்லை எனும்
பெயருடைய கடலும் - இவை

அனைத்தும் இழுத்தனவே - வெளிநாட்டவர்
தன்பக்கம்.



கற்றாளை, வேம்பு எனும் - பல
மூலிகைகளுடன் - மருத்துவ
குணம் கொண்ட துளசி செடிகளும்
நோயற்ற நெடுந்தீவை
உருவாக்கிட வழி சமைத்தன
இத்தனை மூலிகைகளால் - மூலிகைத்தீவு
எனும் சிறப்பு பெயருடனுமே

வடதாரகை, நெடுந்தாரகை - எனும்
வண்ணப் படகுகளுடன்
குறிகட்டுவான் சென்றிட குமுதினியும்
பயணிகளை பாதுகாப்புடன்
கரை சேர்க்கும் - எம்
தீவின் காவல் தெய்வங்களும்
இவை யாவும் - நெடுந்தீவின்
தனித்துவமே.

தந்தி அனுப்பிட தபாலகமும்
கொடுக்கல் வாங்கலுக்கு வங்கியுடன்
மருத்துவ உதவிக்கு ஒரு வைத்திய சாலையும் - ஆங்கே
ஒரு ஆயுள்வேத மருந்தகமும்
பாதுகாப்புக்கு ஒரு காவல் நிலையமும் - என
சிறப்புடன் விளங்கும் நெடுந்தீவு

ஆங்காங்கே ஆலயங்களும்
வழிபட்டிட தேவாலயமும்
வணக்க ஸ்தலங்களால் நிரம்பிய
வளம் மிக்க நெடுந்தீவு
எண்ணற்ற மக்களின் - ஆன்மீக
தேவையை நிறைவேற்றிட
சமய பெரியார் பலருடனும்.


நெடுந்தீவின் பெருமை சொல்லிட
என் பேனா முனையோ துடிக்கின்றது - ஆனால்
நேரமோ பறக்கின்றது - எனவே
என் இச்சிறு கவிதையின் வரிகளை
படித்து நெடுந்தீவின் தனித்துவத்தை
உணர்வீர்களாக!!!!!

**க.தக்ஷாயினி**
**தரம் 12**
**யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**

## வாழ்க்கை தத்துவங்கள்....

- தந்தையின் நம்பிக்கை இருக்கும் வரை தனயன்(மகன்) வழிதவறான்.
- தாயின் அன்பு இல்லையானால் தனபதியாய்(குபேரன்) இருந்தும் பயன் இல்லை.
- சகோதரர் துணையிருப்பின் ஒரு போதும் தனியன்(தனித்த ஆள்) ஆகான்.
- இத்தனையும் என்னிடம் உண்டு... உன்னிடம் உண்டா??
- வாழ்ந்தவனுக்கு அனுபவம் பதில் சொல்லும்
- வாழ்பவனுக்கு காலம் பதில் சொல்லும்
- வாழப் போறவனுக்கு மனம் பதில் சொல்லும்.

# தாகம்



சுட்டெரிக்கும் சூரியனே
தாகத்தில் தவிக்கிறது தமிழகமே
ஏரிகளும் குளங்களும் வறண்டு
வாடுகின்றது இங்கே தமிழினமே

குடி தண்ணீர் கிடைக்காதா என்று
காத்திருக்கின்றது காலி குடங்கள்
தண்ணீர் வேண்டித்தான் தாகம் தணியுமா
காலடியில் கிடக்கின்றது தண்ணீர் குடங்கள்

கலர் கலராய் காத்திருந்து
கண் கலங்கும் அளவு கண்ணீர் போல்
காலடியில் விழுகிறது மழைத்துளிகள்
இவை மட்டுமா தாகங்கள்

தலைவனின் தாகம்
மக்களை நல் வழிப்படுத்தும்
தொண்டனின் தாகம்
தலைவர் வழி மட்டும் செல்லும்

ஆசிரியரின் தாகம்
மாணவர்களை நற்பிரஜையாக்கும்
மாணவரின் தாகம்
சாதனைகள் பல படைக்கும்




விஞ்ஞானியின் தாகம்
அரிய கண்டு பிடிப்புக்கள் அளிக்கும்
ஞானியின் தாகம்
ஆழ்ந்த சிந்தனைகள் படைக்கும்

மருத்துவரின் தாகம்
தீராத நோய்களை போக்கும்
போதகனின் தாகம்
தீமையை மனம் விட்டு நீக்கும்

மீனவரின் தாகம்
ஆழ் கடல் மீன்களை பிடிக்கும்
உழவனின் தாகம்
விவசாய உற்பத்தி பெருக்கும்

கவிஞனின் தாகம்
புதுப் புது கவிதைகள் படைக்கும்
சிற்பியின் தாகம்
பலவகை சிற்பங்களை செதுக்கும்

வீரனின் தாகம்
வெற்றிகள் பல குவிக்கும்
இளைஞனின் தாகம்
இலட்சியம் ஜெயித்திட உதவும்



இயக்குனரின் தாகம்
நிறைய படங்களை தொகுக்கும்
இசையமைப்பாளரின் தாகம்
இனிய இசைகளை கொடுக்கும்

குயவனின் தாகம்
மட்பாண்டங்களை உருவாக்கும்
தச்சனின் தாகம்
தளபாடங்கள் பல செய்யும்

அன்னையின் தாகம்
பிள்ளைக்கு அன்பை கொடுக்கும்
தந்தையின் தாகம்
பிள்ளையைத் தலைவன் ஆக்கும்

சிறுவர்கள் தாகம்
குறும்புகள் பல படைக்கும்
முதியோரின் தாகம்
வாழ்க்கையை கொடுக்கும்

வாழ்க்கையின் தாகம்
பல தடைகளை உடைக்கும்
மரணத்தின் தாகம்
மற்றவரை அழ வைக்கும்

இலட்சிய தாகமே
என்றும் எல்லோருக்கும் வேண்டும்
முயற்சியின் வேகமே
அதை அடைந்திட உதவும்.

**ஜோ.ரீனா**
**தரம் - 12**
**யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**



# நெடுந்தீவின் தனித்துவம்

ஈழத்தின் செந்தமிழ்
இயங்கிடும் தீவாம்
எம் இதய பாசத்தில்
வளர்ந்திடும் தீவாம்.
பாசமலர் தூவும்
பண்பாட்டு தீவாம்
பாலூட்டி வளர்த்திடும்
பசுந்தீவாம் நெடுந்தீவு

ராணி கோபுரம் அரச மரமும்
குதிரை லயம் அத்துடன்
40 அடி மனிதனின் கால் தடயத்தையும்
கொண்ட தனிபெரும் தீவாம்.

நான்கு பக்கமும் நீலப் பெருங் கடலால்
சூழப்பட்ட பசுமை நிறை தீவாம்
அத்துடன் ஒல்லாந்தர் கோட்டையும்
வெண்ணிற மணற் தரையும் கொண்ட தீவாம்


நான்கு பக்கமும் தெய்வத்தை காவல்
நகராக கொண்ட தீவாம்
இந்து மற்றும் கிறிஸ்தவ
மதங்கள் விளங்கும் தீவாம்

புலவனும் கவிஞனும்
நிறைந்துள்ள தீவாம்
அவற்றுடன் இலக்கியமும்
பண்பாடும் நிறைந்துள்ள தீவாம்

கல்வேலி நிரையாக அடுக்கப்பட்டவையும்
குடிசை மற்றும் கல் வீடுகளையும்
கொண்டு சிறப்புற்ற தனிப்பெரும் தீவு
எங்கள் பசுந்தீவாம் நெடுந்தீவு.

வெடி அரசன் மன்னனின் கோட்டையும்
மூலிகை கேணியும் மற்றும் புறாக்கூடும்
அழகுற அமையப் பெற்றுள்ள கல்வேலியும்
கொண்டமைந்த தீவாம் - நெடுந்தீவு

பனைவளமும் கள்ளும் அத்துடன்
புளுக்கொடியல் மற்றும் ஒடியற் கூழ்
என்பன நிறைந்து
வளம் பொருந்தி காணப்படும் தீவாம்





வந்தோரை வரவேற்கும் தீவாம்
தவத்திரு தனிநாயகம் அடிகள்
பிறந்த ஊராம் எம் பசுந்தீவு
வெள்ளையர்கள் நடமாட்டம்
நிறைந்த தீவாம்
சுற்றுலா வளர்ச்சியும்
வளம் பெற்ற தீவாம்

வெண்மையான மணலில்
வெள்ளையர்கள் உருண்டு விளையாடும் தீவாம்
அத்துடன் நிழற் குடைகளும்
ஊஞ்சலும் அமையப் பெற்ற தீவாம்


அழகான துறைமுகமும்
இயற்கை அழகுடன் விளங்கும்
ஆரவாரிக்கும் கடல் வளத்தையும்
கொண்ட தீவாம்.

கிறிஸ்தவத்துடன் இந்துமத
ஆலயங்களை கொண்ட தீவாம்
பலகோடி பக்தர்களை
கொண்டு விளங்கும் தீவாம்.

சாறாப்பிட்டி வெல்லை போன்ற
நன்னீர் கிணறுகளையும்
அழகுற அமைந்திருக்கும்
ஆலயங்களையும் கொண்ட தீவாம்

வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழியவே
வாழிய வாழிய எம்
தீவு வாழியவே.

**யோ.குஜின்றேயினி**
**தரம் - 13**
**யா.நெடு.றோ.க.மகளிர் கல்லூரி**



# தாகம் (தமிழ்த் தாகம்)

தமிழுக்கு தமிழ் இனத்திற்கும் தலை வணங்கி
தமிழன் நான் தாகமென்னும் தலைப்பெடுத்து
தொடர்கின்றேன் தமிழ்க் கவிதனை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன் தோன்றிய மூத்த தமிழ் - எங்கள் தாய்த் தமிழ்
பைந்தமிழ், பூந்தமிழ், செந்தமிழ், தேன்தமிழ், மழலைத்தமிழ்
என பல்வேறு பேர்பெற்று பாரெங்கும்
புகழ் பெற்றது நம் பசுந்தமிழ்.

தமிழரசர் கால முதல் தரணியெங்கும் தமிழ் மணம்
பரப்பி தமிழின் பெருமையினை தலை தூக்கச்
செய்து தமிழ் நூல்கள் பலவற்றை தந்திட்ட காலமது
தமிழகமும், தமிழீழமும் தமிழின் பால் பற்றுக்கொண்டு
தமிழை வளர்த்தெடுத்த காலம் அது அக்காலம்

இக்காலம் இது மேல்நாட்டு மோகத்தால் தமிழர்கள்
பண்பாடுகள், பாரம்பரியங்கள் பாழ்பட்டுப் போக
பறங்கியர் தம் பகட்டெடுத்து பழுது பட்டுப் போகின்றோர்
மேல் தேச நாட்டவரது பழக்கவழக்கங்களை
கீழ் நாட்டவர் நாம் பின்பற்றி தமிழத்துவேசம் செய்கின்றோம்.

மேல்நாட்டுத் தாக்கத்தால் போதைப் பொருட்கள், அபாசக்
காட்சிகள் முதல் அனைத்தும் இங்கு வந்து எம் இனத்தை
அழிப்பதை தமிழர் நாம் தாங்கிக் கொள்ளலாமா?
பெண்களைத் தெய்வமாகப் போற்றிய தமிழினம் நாம்
அவர்களைத் தலை குனியச் செய்யலாமா?

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா
என்று சொன்ன காலம் போய் தமிழினத்தையே
தலை குனியச் செய்யும் தரங்கெட்ட சம்பவங்கள்
தமிழ்த் தேசமெங்கும் தலை விரித்தாடுகின்றன
கொலை, கொள்ளை, கற்பழிப்பென்று தமிழினத்திற்கு
ஊறு விளைவிக்கும் வன் செயல்கள் வளர்கின்றன.

ஆட்டைக் கொன்று மாட்டைக்கொன்று தற்போது
மனிதர்களையே கொல்லும் தரங்கெட்ட செயல்கள்
தம் தமிழ்த் தீவிலேயே நிகழ்வதைக் காணலாம்
இதுவா தமிழ்க் கலாசாரம், இதுவா தமிழர் தம் பாரம்பரியம்
வெட்கித் தலைகுனிய வேண்டியது தனி ஒருவரல்ல - தமிழர்நாம் அனைவருமே.

போதைப் பொருள் பயன்பாட்டில் தமிழரும் முதலிடமாம்
தமிழர்தம் முன்னேற்றம் தமிழுலகம் பெருமை கொள்ளும்
கேவலம் கேடு கெட்ட சிந்தனையால் கேள்விக்
குறியாகிய நம்வாழ்க்கை மட்டுமல்ல நம் எதிர்கால
சந்ததியினரின் வாழ்க்கையுமே.

கூடிக், குலவி குமைந்திருந்த எம் சமூகம் கள்வரின்
கொடுஞ் செயலால் கேடுற்றுக் கிடக்கின்றது
நாற்பது ஆண்டுகளில் நம்நாட்டில் நடந்த யுத்தம்
நம் இனத்தை பூண்டோடழிக்க நம் பகைவர் செய்த திட்டம்
நாட்டிற்குள்ளே நம் பகைவரும் வேறு நாட்டுப் பகைவர்களும்
அவர்கள் தம் நாடுகளில் நம் மக்கள் படும் அல்லல்களும்
கேட்டும் அறிந்தும் நாம் படும் துயரங்கள் சொல்ல வழியில்லை
சொல்லிவிட்டால் வாயில்லை இவ்வாறு எமக்குள் நாம்
துயரங்களை அடக்கிக் கொண்டு துணிவோடு வாழ்கின்றோம்
துயர் நீங்கும் ஒருநாள் என்று.....

தமிழ் நன் நூல்கள் வழிகாட்ட அறநெறியின் பாற் சென்ற
தமிழ் மக்கள் காலப் போக்கில் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு
அநீதியின் பால் செல்கின்றோம் இவற்றையெல்லாம்
விட்டு விட்டு தமிழினத்தின் எழுச்சிக்காக அதன் வளர்ச்சிக்காக
அடங்காத தாகத்துடன் எழுந்திடுவோம் தமிழ் உணர்வுடனே

காட்டுப் புலிக் குலம் வாழக் குகை உண்டு
சிறு நண்டு வாழ அணை உண்டு
சிலந்தியினம் வாழ சிலந்தி வலை உண்டு
இவையெல்லாம் தாம் வாழ தமக்கென அவை அமைத்துக் கொண்டவை
நம் தமிழினம் வாழ தனிநாடென்று நம்மால் அமைக்க
முடியாதா? தமிழனுக்கொரு தனி நாடொன்று உருவாக்கு
தமிழ் மகனே! தமிழினத்திற்கு நாடில்லை தமிழ் மகனே
இதுவே என அடங்காத தாகம்! அடங்குமா என்று தெரியாத தாகம்
அடைய முடிவெடுப்போம் முயற்சி செய்வோம்.

தமிழனுக் கொரு நாட்டில்லை, தரணி யெங்கும் அகதிகளாய்
தமிழினம் படும் அல்லல் தமிழர் நாம் தனி நாடெடுத்து தகர்த்தெறிவோம்
அத்தாகத்தை, தண்ணீர்த் தாகத்தைக் கூட தணித்து விடலாம்
தமிழ் நாட்டுத் தாகத்தை யாரால் தணிக்க முடியும்
தன்கையே தனக்குதவி கிளர்ந்தெழு தமிழ் மகனே
எம் தணியாத் தமிழ்த் தாகத்தை தீர்த்திட..........

**பே.பிரஷாந்**
**தரம் - 13**
**யா.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்**

# நெடுந்தீவின் தனித்துவம்



பசுந்தீவாம் என்று போற்றப்படும் தீவாம்
பால்தீவு என்று வர்ணிக்கப்படும் பேரழகு மிக்கதாம்
வளம் ஒரு புறம் வாழும் வாழ்க்கை இன்னோர் புறம்
வரம் தந்த அன்னை போல் மாவிலி வாசலிலே
வீரம் கொண்டு புகழ் மிக்க அவர்தான் தனிநாயகம் அடிகளார்
எம் தீவின் வம்சத்தில் தோன்றி நெடுந்தீவு எனும் நாமம்
எம் மக்கள் மனமின்றி எல்லோர் மனங்களில் இடம்பிடித்தவர்
அவர் வாசலிலே வரவேற்க வாவென்று அழைக்கின்றது எம் தீவு

வளங்கள் நிறைந்த இத் தீவிலே பச்சைப்புல் மேல்
வெள்ளையாய் அதிகாலை படர்ந்து காணப்படும் பனித்துளிகள்
பச்சைக் கம்பளம் போல் பனிப்பாய் விரித்தாற்போல் விதி அருகிலே
பட்டுப்பட்டாய் மிளிர்கின்றது
பண்டைய மன்னர்கள் வாழ்ந்ததை இன்னும் நிலை நாட்டுகின்ற
சிறப்பு மிக்க இடங்களிலே எம் தீவே முக்கிய இடத்தை பெறுகின்றது
ஒல்லாந்தர் கால புறாக் கோட்டையாம் அதின் மேலே சில ஜன்னல்கள்
சிறுவர் எமக்கு சில கதைகள் சொல்லுவார்கள் - அதிலே ஒல்லாந்தர்
புறாக்களை வளர்த்தார்களாம் - அதில்


கோபுரம் கீழால் ஒரு பொருளை வீசினால் மேலால் வெளியில் வருமாம்
ஆச்சரியமாக உள்ளதோ - ஆனால் அதிசயம் ஆனால் உண்மை போல்
இதுவும் உண்மை வியக்கத்தக்க உண்மை

மணம் வீசும் மலர்கள் கொள்ளை கொள்ளும் அழகுடன்
மணம் வீசியே மலர்கள் விருந்தினரை ஒரு புறம் வரவேற்க
தெளிவாக வீசுகின்ற தென்றல் காற்று
தெளிந்த மனங்களை மெதுவாக வருடிச் செல்கின்றது
இயற்கை அன்னை தந்த சொத்தாக விளங்கும் எம் தீவு
எந்த ஊர் தீவிற்கும் இணையாகாது என்றே கூறலாம்.
எங்கு பார்த்தாலும் பனைமரங்கள், தென்னை மரங்கள்
பூங்கனிச் சோலைகள் போல் பூங்கா நிறைந்த வளங் கொண்ட தீவே நம் தீவு
கல்வியே கண்ணும் கருத்தும் வளர்க்கும் எம் தீவு
எட்டு கல்விச் சாலைகளை தன்னகத்தே கொண்டுள்ளது
புகழ் பெற்று விளங்கும் பண்டைய அழியா சொத்துக்களில்
நாற்பதடி மனிதனின் கால் என்ற ஒன்று
கல்லிலே கால் வைத்தால் பதியுமா - ஆனால் இங்கே
மனிதனின் காலடி கல்லிலே உள்ளதென்றால்
ஆச்சரியம் வேறொன்றுமில்லை அது வைரமிக்க மனிதனின் காலடி

இது ஓர் புறம் இன்னோர் புறத்திலோ
சாறாப்பிட்டி என்று வர்ணித்த வடிவமைக்கப்பட்டு
வழங்கும் இடத்திலே நீருக்கோ பஞ்சமில்லை
அள்ள அள்ளக் குறையாது கல்விபோல - இங்கு
எப்போதும் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும் நீர்க் கிணறுகள்
எம் தீவில் என்ன இருந்தாலும் பக்தி என்ற ஒன்று
என்றும் நிலைத்து காணப்படுகின்றது
உதாரணமாக வளரும் அம்மன் கல் ஆலயமொன்றில்
அருகாமையில் இறைவன் போல் உருவம் கொண்டு வளர்கிறதாம்
இன்னும் இங்கே மன்னர்கள் போருக்காக பயன் படுத்திய குதிரை
தம் பாதுகாப்பிற்காக கட்டிய பாதுகாப்பு அரண்கள்
அந்த மன்னர்களையே எம் தீவே பாதுகாத்துள்ளது.

பால்த்தீவு மூலிகைத்தீவு அபிசேகத்தீவு, பசுந்தீவு இப்படி
எத்தனை எத்தனை திருநாமங்கள் எம்தீவிற்கு
சொல்லடங்காத பெருமைகள் சொல்ல முடியாத தனித்துவங்கள்
கதையெல்லாம் சொல்ல என் வார்த்தைகள் மட்டுமல்ல எதனாலும்
முடியாது அத்தனை சிறப்பு மிக்கது எம்தீவு
ஸ்ரீஅனுமார் மலை (மூலிகை மலை) தன்கைகளிலே தாங்கிச்செல்லும்
போதே சிறு துண்டு மூலிகை நம் தீவில் விழுந்து
மூலிகைக்கே பெயர்போன சிறந்த இடமும் எம்தீவு

இது மட்டுமா? எம்தீவின் தனித்துவங்கள்
எம் தீவிற்கு சொல்லிடங்காத தனித்துவமே உண்டு
பதினாறு வட்டுப் பனை ஒரு புறம், பெருக்கு மரம்
என்று இன்னும் பல வரலாற்று சின்னங்கள்
இன்றும் அழியாமல் உள்ளதே எம் தீவின் தனித்துவம்
யாழ். குடா நாட்டிலே சப்த தீவுகளிலே மிகப் பெரிய தீவு தான் எம் நெடுந்தீவு



இங்கு சிறுகைத் தொழிலும் நடைபெறுகின்றது
மீன் பிடி கைத்தொழில் பனைசார் உற்பத்தி கைத் தொழில் என்பனவாம்
இலங்கையிலே கிராம சேவகர் பிரிவு ஆரம்பிப்பதும்
எம் தீவின் ஆரம்பத்திலிருந்தே
அதிலும் முதலாவதாக பெயர் விளங்குகின்றது எம் தீவு

எனக்கோர் கவலை எம் தீவின் தனித்துவம்
எம்மோடு அழிந்திடுமோ? என்றும் எம் வாழ்விலும்
எம் நெஞ்சிலும் நீங்கா இடம் பிடித்து எம்தீவு பெயரோடும் புகழோடும்
செழிப்புற்று விளங்க வேண்டும் என்பதே என் ஆசை
இத்தனையும் என்றும் நடக்கும் என்று எதிர்பார்த்தபடி
என்றும் எம் தீவை ஓர் சுற்றுலா மையமாகவும்
சுற்றுலா பயணிகளின் மனதை கவரும் இடமாகவும்
மாறும் என்ற முழு நம்பிக்கையுடன்....

ச.மதுஷா
தரம் - 12
யா.நெடுந்தீவு

**தரம் - 12,13 மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் முன்னிடம் பெற்ற கவிதைகள் இவையாகும்.**

# வாழ்க்கை தத்துவங்கள்....

- அன்பின் ஆழம் தெரியாத மனிதா.

  நீ உன் தாயின் அரவணைப்பை அறிந்திருக்க மாட்டாய்.

  நட்பின் ஆழம் தெரியாத மனிதா.

  நீ உன் தந்தையின் பாசத்தை அறிந்திருக்க மாட்டாய்.

  காலப் போக்கில் உன் வாழ்வே தெரியாது இருந்து விடுவாய்....

- கண்ணை மூடும் போது தூங்குகிறோம். கண்ணைத் திறக்கும் போது எழுகிறோம். அது போல் விழுகிற போது எழுந்துவிடு எழும் போது விழுவது சகஜம் அதற்காக விழுந்த படியே இருந்து விடாதே..

- குறை உடலில் இருந்தால் அதை நீ பொருட்படுத்தாதே. உள்ளத்தில் உள்ளதா முதல் அதை நிவர்த்தி செய்து விடு நீ உன்னை நேசிப்பாய் பின் மற்றவர்கள் உன்னை நேசிப்பர்.

- கனவு இல்லம் கனவாகலாம்... ஆனால் இல்லம் ஒரு போதும் கனவாகி விடக்கூடாது..

- இமைகள் திறக்கின்றன நீ பார்ப்பதற்கு, இமைகள் மூடிவிட்டால் பார்வையை இழந்துவிடுவாய்

  உதடுகள் திறக்கின்றன மனதில் இருப்பதை வெளியிட, உதடுகள் மூடிவிட்டால் ஊமை யாகிவிடுவாய்.

  பிரிவுகள் ஏற்படும்போதே நீ வெளிச்சத்தை சந்திக்கிறாய் வாழ்வில்.

- ஒருவன் எப்பொழுது தனக்கு ஏற்படும் தடைகளையும் துன்பங்களையும் கருத்திற்கொள்ளாமல் வாழ்கிறானோ அவனே வாழ்வில் நிறையத் தோல்விகளைச் சந்தித்தவனாவான். வெற்றி பெற்றவன் துன்பத்தையும் தடங்கலையுமே வாழ்வில் கொண்டவனாக இருப்பான். பல தடவை தோற்றுவிடு, நீ உன் வாழ்வை வென்று விடுவாய்.

# இலக்கியம் காட்டும் வழிகள்


"மனிதன் மனிதனாக வாழவேண்டும்" என்ற கூற்றிற் கிணங்க பூவுலகில் பிறந்த மானிடர்களாகிய நாம் ஒவ்வொருவருக்கும் நம் வாழ்க்கையை இலக்கியவடிவத்திற்கூடாக மேம்படுத்துவது சாலவும் சிறந்தது ஆகும்.

தமிழரின் ஆரம்பகால சுவடுகளான கி.பி1 - 3ம் நுற்றாண்டு காலப்பகுதியில் சங்ககாலம் தோன்றிவிட்டது.

எனினும் இக்காலத்திலே இரு வகையான இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

01. எட்டுத்தொகை இலக்கியம்
02. பத்துப்பாட்டு இலக்கியம்


என்பனவாகும். இவ் இரு இலக்கியத்திற்கூடாகவும் மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்தினர் மக்கள் மேம்பாடான சமூகமொன்றிற்கு அடிப்படை காரணி "இலக்கியம்" ஆகும். ஒவ்வொரு அடிப்படை காலத்திலும் அதாவது சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரையிலான




ஏழு கால கட்டப்பகுதியிலும் அறிஞர்கள், புலவர்கள், சிற்பிகள், மாபெரும் கவிகளாகிய பாரதியார் திருவள்ளுவர் போன்றோர் இலக்கியத்தை வளர்த்துள்ளனர் பாரதியார் "பாட்டுக்கொரு புலவன் பாரதி" என்ற சிறப்பை பெற்றதும் கவிதைகளின் தொகுப்புக்களால் என்றால் மிகையாகாது! கவிஞர் மட்டுமல்ல இந்தியாவின் பாரத நாட்டிற்காகவும் மக்களுக்காவும் விடிவொன்றை திகழ வைத்தவர் பல சமூகத்தினரால் போற்றப்பட்டவர். இவர் பெண்களின் அடிமைத்தனம் தேவைகள் என்பவற்றை அடைய உறுதி பூண்டவர். சுமித்திரன், விஜயா இந்தியா போன்ற பத்திரிகைகளில் தனது இலக்கிய தொகுப்புக்களை தொகுத்து அவ்வாறான பத்திரிகை மூலம் வெளியிட்டு மக்களுக்கு மட்டுமல்லாது நாட்டிற்க்கும் ஒரு நீதியை நிலை நாட்டியவர்.

இவர் மட்டுமல்லாது திருவள்ளுவர் உலக நெறிகளில் ஒன்றாகிய திருக்குறளை வெளியிட்டு மக்கள் அறிவு, ஆற்றல், ஒற்றுமை, பகிர்ந்துண்ணல், சகோதரத்துவம், நீதி கல்வி போன்ற பல நற்கருத்துக்களை வழங்கியுள்ளார். இதன்மூலம் நாம் ஒவ்வொருவரும் எமது அன்றாட வாழ்வில் நற்பிரைஜையாக மணி முடியாக திகழ வழி சமைக்கின்றது எனலாம்.

நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியில் ஒவ்வொரு இலக்கியமும் கற்பனை நயமும் கவினுறு சொல்லாட்சியும், பழமையுடன் புதுமையை சேர்க்கும் உத்தியும் இசை நயமும் பொருந்தி தமிழ் இலக்கிய செழுமையை விரிவூட்டுகின்றன இவற்றின் மூலம் நாம் ஒவ்வொருவரும் கற்றுணர்ந்து நல் பிரைஜையாக திகழ வழி காட்டுகின்றது.



புலவர்களின் அறிவின் பால் நாம் திகழ இலக்கியங்கள் பல உண்டு. அவ்வாறான இலக்கியங்களாக ஆற்றுப்படை இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கம்பராமாயணம் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களும் இலக்கிய செழுமையை வலுவூட்டுகின்றன கவியரசர் கம்பர் அவர்களால் "கம்பராமாயணம்" தமிழ் மொழியில் பாடப்பட்டது. இவ் இலக்கியம் திருமாலின் அவதாரமான இராமபிரானின் வரலாற்றை கூறும் காப்பியமாக தமிழில்வந்த இராமாயணத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் வாழவேண்டும் என்ற நீதிக் கருத்தை வலியுறுத்துகின்றன.

இது மட்டுமல்லாது "இளங்கோ அடிகளால்" இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலும் மூன்று நீதிக் கருத்துக்கள் உள்ளடக்கப்படுகின்றன. "ஊழ்வினை வந்து உறுத்தும்", "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்", உரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுவார்" என்ற கருத்துக்கள் இலக்கிய வாழ்விற்கும் சான்றுபகிர்கின்றன.

தமிழ் மூதாட்டியான ஔவையாரின் அறக் கருத்துக்கள், நீதிக் கருத்துக்கள், ஆத்திசூடி போன்ற இலக்கியங்கள், மக்களின் அன்றாட வாழ்வியலுக்கு துணை புரியும் சாதனமாக விளங்குவதோடு புலவர்பால் கருத்துக்களும் எம் வாழ்க்கைக்கு துணை புரியும் சாதனமாக திகழ்கின்றன.

தமிழரின் வரலாற்றைக் கூறுவது இலக்கியமே ஆகும். இலக்கியம் என்பது "இலக்கியத்திற்கூடாக தமிழரின் வரலாற்றைக் கற்பதைக் குறிக்கும்" என்பதே ஆகும். எமது எதிர்கால வாழ்க்கைக்கு அடி அத்திவாரமாக திகழ்வது இலக்கியம் என்ற சாதனமே!

ஒவ்வொரு மத, இனத்தவர்களின் வாழ்க்கையை உறுதுணையூட்டுவதற்கு தமிழ் மொழி இலக்கியங்கள் மட்டுமல்லாது வெவ்வேறு மதத்தவருக்கும் உதாரணமாக தமிழ் மொழி இலக்கியத்திற்கு தமிழ் மொழி நூல்கள், புராணங்கள், இதிகாச கதைகள், சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற இரட்டைக் காப்பியங்கள், கம்பராமாயணம், திருக்குறள் என்பன சான்று பகிர்கின்றன. சிங்கள மொழி நூல் இலக்கியங்களை வெளிப்படுத்துவதற்கு "சந்தோச நூல்கள்" பாளிமொழி இலக்கியங்களை வெளிப்படுத்துவதற்காக மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலியம், பூஜாவலியம் போன்ற நூல்களும் கல்வெட்டுக்கள், ஓவியங்கள், சிற்பங்கள், பிற நாட்டு அறிஞர்களது குறிப்புக்கள் போன்றன இலக்கியத்தை அறிந்து கொள்ள உதவும் சாதனங்களாகும். மானிடர்களாகிய நாம் இலக்கியங்களிற்கூடாக இலக்கிய கற்கையை கற்று அறிந்து எமது வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் சமூகத்திற்க்கும் நற்பிரைஜையாக திகழ்ந்து இலக்கியத்திற்கூடாக எமது எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்புவோம்.

**ச.ஜெயப்பிரியா**
**தரம் 12**
**யா.நெடு.மகாவித்தியாலயம்**

# சூழலும் நாமும்



*சூழல் என்றால் என்ன?*
*சூழலில் மனிதன் பங்கேற்கும் விதம்*
*சூழலை மாசுபடுத்துதலால் ஏற்படும் விளைவுகள்*
*சூழலில் காணப்படும் இயற்கைக் காரணிகள்*

எம்மைச் சுற்றியுள்ள சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்
எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சூழல்/சுற்றாடல் எனப்படும். சூழலில் மனிதன், விலங்குகள், பறவகள், சிறுசிறு உயிரினங்கள் என்பன வசித்து வருகின்றன. தற்போதய காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சி கண்ட அளவுக்கு சூழல் வளர்ச்சி காணவில்லை. இதற்குக் காரணம் மனிதன் சூழலை எவ்வாறு பாதுகாக்கிறான் என்பதே ஆகும். சூழலில் காணக்கூடிய இயற்கைக் காரணிகளாவன: நிலம், நீர், காற்று, மண் கனிமங்கள் ஆகும். இவற்றை நாம் இரண்டு வகையாக வகைப்படுத்துகின்றோம். புதுப்பிக்கக்கூடிய வளங்கள், புதுப்பிக்க முடியாத வளங்கள் ஆகும்.

முதலாவதாக நாம் காற்றை கவனத்தில் கொள்வோம். காற்று எமக்கு குளிர்ச்சியையும் சுவாசிக்கக்கூடிய வளியில் காற்று அமையப்பெற்றுள்ளன. காற்று மனிதனுக்கு நன்மைகளை வழங்குகின்றது. ஆனால் மனிதன் காற்றை இயற்கை வளமாகப் பயன்படுத்துவதில்லை குப்பைகளை எரிக்கின்றான், பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவற்றை எரிக்கின்றான். இதனால் காற்று பெரும் விளைவுக்குள்ளாகின்றன. தற்போதய சூழலில் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றன அதிகம் பெருகிக்கொண்டு வருகின்றது. இதுவும் காற்று மாசுபடுவதற்கு பிரதான காரணமாக அமைகின்றது.

அடுத்ததாக நீரைப்பற்றி உற்று நோக்குவோம் நீர் மனிதனுக்கு அத்தியாவசிய ஒன்றாகக் காணப்படுகின்றது "நீரின்றி அமையாது உலகு" என்ற கருத்திற்கிணங்க நீரின்றி விலங்குகள், பறவைகள், தாவரங்கள், மனிதன் போன்றவை யாவும் உயிர் வாழ முடியாது நீரைப் பற்றி பல கவிஞர்கள் பாடியுள்ளனர், நீரைப் பாதுகாப்பது மனிதர்களாகிய எங்களது கடமையாகும். நீரை மூன்று வகையாக வகைப்படுத்தலாம். நன்னீர், உவர் நீர், சவர் நீர் ஆகும். நன்னீர் 0.03% ஆக காணப்படுகின்றது. பெருமளவாக சூழலில் உவர் நீர் காணப்படுகின்றது. நீரை அசுத்தப்படுத்துவதும்

மனிதர்களாகும். நீரை வீண்விரயம் செய்தல் நீரைத் திறந்து விடுவதால் குப்பைகள் கொட்டுதல், நீரினை திறந்து வைப்பதன் மூலம் 'உயிரினங்கள் விழுதல் என்பனமூலம் நீரை மாசடைய வைக்கின்றது. இதன் மூலம் அசுத்தமான நீரைப் பருகுவதன் மூலம் வாந்திபேதி, வயிற்றோட்டம், வயிற்றுளைவு போன்ற நோய்கள் உண்டாகின்றன.

அடுத்ததாக மண்ணைப் பற்றி சிந்திப்போம், மண் இயற்கை வளமாகக் காணப்படுகிறது. மண்ணை அகழ்வது இந்த மனிதனேயாவான். மண்ணை அகழ்வதால் மண்ணரிப்பு மண் வளங்குன்றுதல் போன்ற இயற்கை அழிவுகள் ஏற்படுகின்றன.

அதேபோல் நிலமும் அமைந்துள்ளது. நிலத்தில் மனிதர்களாகிய நாம் நடந்து திரிகின்றோம் நிலமும் ஒரு காரணியாக அமையப் பெற்றுள்ளது. நிலத்தில் நாம் குப்பையை எரிக்கின்றோம். குப்பையைக் கொட்டுகின்றோம் போன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மனிதன் சூழலுக்கு என்னென்ன தீங்கு விளைவிக்கின்றான் குப்பை எரித்தல் , கொட்டுதல், தொழிற் சாலையிலிருந்து நீரை விடுவிக்கின்றான் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையை அதிகரிக்கின்றான் போன்ற தீய செயற்பாடுகளை சூழலுக்குச் செய்து வருகின்றான்.

மாசுபடுத்துதலால் ஏற்படும் விளைவுகள் சூழலில் மனிதன், உயிரினங்கள் சுவர்சிக்க இயலாமற் போதல் போன்றவை ஏற்படுகின்றன.

"சுத்தம் சுகம் தரும்" என்ற வாக்கிற்கிணங்க சூழலை சுத்தமாக பாதுகாத்து சூழலும் நாமும் என்ற எண்ணக்கருவுடன் செயற்பட்டு சூழலை பேணிப்பாதுகாக்க நாம் அனைவரும் பேரார்வத்துடன் அணிதிரள்வோம்

**ப.மேரி பிரிந்தா**
**தரம் - 09**
**யா/நெடு/றோ.க.மகளிர் கல்லூரி**

# பூகோளமய மாதலின் விளைவுகள்

**முகவுரை (அறிமுகம்)**
**பூகோளமாதல் என்றால் என்ன?**
**ஏற்படும் நன்மைகள்**
**தீமைகள்**
**முடிவுரை**

இன்று வளர்ந்து வரும் நவீன யுகத்தினால் உலகம் சுருங்கிவிட்டது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் வளர்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும். உலகம் சுருங்கியதால் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. உலக நாடுகளுக்கிடையே சமூக, பொருளாதாரம், கலாசாரம் என்பனவற்றுக்கிடையே ஏற்படும் நெருக்கடியே பூகோளமயதலாகும். பூகோளமயமாதலினால் நன்மைகளும் ஏற்படுகின்றன. அதேவேளை அதற்கெதிராக பல தீமைகளும் ஏற்படுகின்றன.

உலக நாடுகளுக்கடையே ஏற்படும் தொடர்புகள், அதாவது சமுகத் தொடர்புகள் கலாசார தொடர்புகள், பொருளாதாரத்தின் மூலம் ஏற்படுத்திக் கொள்கின்ற தொடர்புகள் என்பவற்றினூடாக நாடுகளிற்கிடையே நிலவும் நெருக்கடிகளே என பூகோளமயமாதல் என வரையறுக்கப்படுகின்றது. பூகோளமயமாதல் என்றால் என்ன என்பதைப் பார்த்த நாம் இனி பூகோள மயமாதலினால் ஏற்படும் விளைவுகளை பார்ப்போம்.

இன்று நாட்டில் பல பிரச்சனைகள் உள்ளன. எனினும் அதே பிரச்சனைகளுக்கேற்ப நன்மைகளும் நடைபெறுகின்றன. அந்த வகையில் பரந்து விரிந்து உலகம் இன்று சுருங்கி ஒரு கைபிடியளவில் சுருங்கி விட்டது. தகவல் தொடர்பாடல் சாதனங்களே முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. உதாரணமாக வெளிநாட்டில் உள்ள ஒவ்வொருவரும் நாம் உரையாடுவது தொலைபேசி மூலம். அவ்வாறு தொலை பேசியில் உரையாடுவது அருகில் இருப்பது போன்று இன்று உள்ளது. அதைவிட இன்று முகம் பார்த்து அருகிலிருந்து கதைப்பது போன்று முகம்பார்த்து தொலைபேசியில் கதைக்கும் அளவிற்கு உலகம் எவ்வாறு சுருங்கிவிட்டது அடுத்து உற்பத்தி பொருட்களை நம் நாட்டிலிருந்து இன்னோர் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் இலகுவாக இருக்கும் எவ்வாறெனில் வெளி நாடுகளில் கிடைக்காத பொருட்கள் நம் நாட்டிலும் நம் நாட்டில் கிடைக்காத பொருட்கள் வெளி நாட்டிலும் கிடைக்கும் எனவே தான் ஏற்றுமதி இறக்குமதி பொருட்களுக்கு தட்டுப்பாடு கிடைக்கும் போது விற்பனை மூலம் அதிக பண வருமானத்தை ஈட்டித்தருகின்றது இதனால் நாடுகளுக்கிடையே நட்புறவு வளரும். அடுத்ததாக நம் நாட்டிலோ அல்லது வேறொரு நாட்டிலோ அனர்த்தம் அல்லது பேரிழப்புகள் ஏற்படும்போது இன்னோர் நாட்டிலிருந்து உதவிகள் கிடைக்கும். உதாரணமாக ஏப்ரல் மாதம் இருபத்தோராம் திகதி ஏற்பட்ட பேரிழப்புக்களுக்கு இலங்கை நாட்டிற்கு வெளிநாடுகள் உதவி செய்ததை எடுத்துக்கொள்ளலாம்.

அடுத்து கலாசார ரீதியில் உற்று நோக்கும் போது நன்மைகள் பல காணப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவில் காணப்படும் சமய நம்பிக்கைகள் இலங்கை மக்களால் பின்பற்றப்படல் இவ்வாறாக சமயம் என பல வெளிநாட்டு பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் எம் நாட்டிலும் பேணப்பட்டு பின் பற்றப்படுகின்றது. சமூகங்களுக்கடையே நல்லுறவுகளும் ஏற்படுகின்றன. வெளிநாடுகளில் உறவு கொள்வதன் மூலம் வேலைவாய்ப்புகள் ஏற்படுகின்றன. வெளிநாட்டு கம்பனிகள் உற்பத்திச் சாலைகள் உள் நாட்டிற்குள் உற்பத்தி செய்யும் போது உள் நாட்டு பிரஜைகளுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறுகின்றன.

நன்மைகள் பல ஏற்பட்டாலும் அதே சமயம் பல்வேறு தீமைகளும் ஏற்படுகின்றது. எம்நாடு இலங்கை அது ஓர் திறந்த பொருளாதார நாடாகும் திறந்த பொருளாதாரம் ஆகையால் அனைத்து பொருட்களும் ஏற்றுமதி - இறக்குமதி செய்யப்படும். இதில் முதலாவது தீமையாக போதை விற்பனை. தற்போது நாட்டில் பாரிய பிரச்சினையே போதை பாவனை ஆகும். மது பாவனையால் மதுவினை பாவிப்பவர்கள் எதிர்கால பாவனையாளர்கள், விற்பவர்கள் ஆகியோர் பெரிதும் பாதிப்படைகின்றனர். போதை ஒரு உயிரை எளிதாக கொல்லும் மிகப்பெரிய ஊன்றுகோலாகும். போதைக்கும் பூகோள மயமாக்கலுக்கும் என்ன சம்மந்தம் என்ற கேள்வி நிலவலாம். எங்கே இருந்து போதைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து தான் இறக்குமதி செய்யப்படுகின்றது. இறக்குமதி செய்வதை தடைசெய்ய முடியாது. அதற்கு காரணம் எமது நாடு திறந்த பொருளாதாரக் கொள்கையுடைய நாடாகும்.

தொழிற்சாலைகள் மூலம் சூழல் மாசடைகின்றது. பூகோளமயமாதலில் சூழல் மாசடைதலும் பிரதான பங்கு வகிக்கின்றது. தொழிற்சாலைகளின் மூலம் ஏற்படும் நச்சு வாயுக்கள் சூழலிலுள்ள வளியுடன் சேர்வதால் புவியை பாதுகாக்கும் ஓசோன் படையானது பல சிதைவுகளுக்குள்ளாகின்றது புவியை பாதுகாக்கும் ஓசோன் படையே சிதைவடைகின்றது எனின் பூகோளமயமாதலினால் எவ்வாறான பெரிய பாதிப்பு ஏற்படுகின்றது என்பதனை நம்மால் உணர முடிகின்றது. அடுத்ததாக பூகோளமயமாதலினால் ஏற்படும் தீமைகளுள் மூளைசாலிகளின் வெளியேற்றம் என்பதும் முக்கிய இடம் பெறுகின்றது. பூகோள மயமாதல் ஏற்படுவதால் வெளிநாடுகளின் சிறப்பினை அறிவார்கள் அதாவது 'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என்ற பழமொழிக்கு இணங்க மூளைசாலிகள் நம் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு தஞ்சம் புகுகின்றனர்.

அடுத்ததாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதன் படி வல்லரசு நாடுகளின் கீழ் அடிமை நாடுகளாக சில நாடுகள் காணப்படுவதும் பூகோள மயமாதலினால் ஏற்படும் விளைவேயாகும். சமூக பொரு ளாதார கலாச்சாரங்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுகின்றது. உதாரணமாக தகவல்

தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக தொழிநுட்பங்கள் எண்ண முடியாத அளவின் உச்சிக்கு வளர்ந்துவிட்டது. இதனால் உள் நாட்டில் வேலையில்லாமல் திரியும் வாய்ப்பு ஏற்படுகின்றது. உதாரணமாக:- பஸ் (பேருந்துகளில் ) பயணச்சீட்டு முதலில் தாளிலே பயணிகளுக்கு வழங்கப்படும். ஆனால் இன்று கையில் ஏதோ ஒரு சிறிய இயந்திரத்தை வைத்து பயணச் சீட்டை கொடுக்கின்றனர். எங்கு பார்த்தாலும் புத்தகமும் கையுமாக திரியும் பள்ளி மாணவர்கள் கூட போனுடன் (தொலைபேசி) திரிகின்றனர். இதனால் உலகம் சீரழிந்து செல்கின்றதே தவிர எந்த முன்னேற்றமும் இல்லை.

அடுத்ததாக வெளிநாட்டிலிருந்து சுற்றுலா பயணிகளாக உள்நாட்டுக்கு வரும் பயணிகள் தமது கலாசாரம் பாவனை பொருட்கள் என்பனவற்றை உள்நாட்டு பிரஜைகளுக்கு பழக்கப்படுத்தி விட்டு செல்கின்றனர். இலங்கையை உதாரணமாக பூகோளமயமாதலினால் பாதிப்படையும். நாடு என்ற ரீதியில் உள்ளெடுக்கலாம். நம் நாட்டின் சிறந்த குடி மகனாகிய நாம் எல்லோரும் எம் நாட்டை பூகோளமயமாதலின் நன்மையில் இட்டு தீமையை தவிர்த்து நன்மையை பெற்று கொடுப்போம்.

ச.மதுசா
தரம் - 12 ,
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்

# வாழ்க்கை தத்துவங்கள்....

- காற்றின்றி படகுகள் அசைவதில்லை
- தாயே நீ இன்றி எனக்கு முன்னேற்றம் ஏது?
- கடல் அலையே அசையாதிருக்கும் படகை மூழ்கடிக்காதே.
- உனக்கு ஒரு பொருள் பிடித்திருந்தால் உன் பெற்றோரைத் தானே முதல் கேட்கிறாய்.. ஏன் நீ வளர்ந்த பிறகு அவர்களிடம் கேட்பதை விட்டு உன்வழி போகிறாய். நீயும் ஒரு நாள் பெற்றோர் ஆவாய் என்பதை மறந்து விட்டாயோ?...
- பெற்றோரின் பெறுமதி என்ன தெரியுமா? நீ வாழும் வரை அவர்களுக்கு துன்பம் கொடுக்காது அவர்களது மரியாதையை இழக்க விடாது காப்பது. இல்லையேல் உன் பெறுமதி உன்னை விட்டு சென்று விடும்...
- காதலிப்பதால் ஏற்படும் நன்மையை விட அக் குறுகிய காலத்தில் ஏற்றப்படும் தீமை அதிகம்...நான் காதலித்தவனும் அல்ல காதலிப்பவனும் அல்ல..
- கனவே உன் கடலில் என்னை மூழ்கடித்து விடாதே, எனக்கு நீந்த தெரியும். அவ்வாறு நான் நீந்தித் தப்பி விட்டால் நீ தோற்று விடுவாய்.
- நம்பிக்கை நற்கனவை நனவாக்கிவிடும். அவநம்பிக்கை உன் வாழ்க்கையையே கனவாக்கிவிடும்.....
- ஒருவரின் அன்பு பற்றி நீ அறிய வேண்டுமா, ஒரு முறை பிரிவை சந்தித்து விடு...
- பொய்யை அறிந்து கொள்வதை விட உண்மையை அறிந்து கொள்வது இலகு.
- தோல்வி ஏற்படின் தோற்று விட்டோமே என்று எண்ணாதே, நீ ஒரு நாள் வென்று விடுவாய், ஆனால் நேரத்தை வீணாக்காதே அது உன் தோல்வியை பல மடங்கு அதிகரித்து விடும்.
- உனது பொறுமையே உன் வயதினை சித்தரிக்கும்..
- இரவில் கண்ணை மூடிய போது கனவுகள் தோன்றுகிறது. உண்மையில் நடப்பது போன்று மனதில் தோன்றும். கண் விழித்த பிறகுதான் தெரிகிறது கண்டது கனவு என்று. அக் கனவு நிஜமாக வேண்டுமெனின் நம் முயற்சி பல மடங்காக வேண்டும்.
- கனவு காண் அது நற்கனவாயின் நிகழ்த்தி முடி....
- தோல்வி உன்னை சந்திக்க சிந்திக்கிறாயா? ஒரு கணம் நீ ஏன் தோற்றாய் என்று சிந்தி. அதன் பிறகு உன்னை தோல்வி சந்திக்க சிந்திக்கும்.

# பாட்டி வைத்தியம்

1) முருங்கை கீரையை காம்புடன் சேர்த்து ரசம் வைத்து அடிக்கடி சாப்பிட்டு வந்தால் அசதி குறையும்.
2) கண்களில் எந்த நோய் தென்பட்டாலும் அண்ணாசிபழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குணமாகும்.
3) அகத்திக்கீரையை சூப் செய்து அடிக்கடி சாப்பிட்டு வந்தால் கண்களில் நீர் வடிதல், கண் நோய்கள் குணமாகும்.
4) ஆவாரம் பூவை இரவு படுக்கும் முன் கண்களில் கட்டிக்கொண்டு படுத்தால் கண் நோய்கள் குணமாகும்.
5) வல்லாரை கீரை, தேங்காய் பால், மிளகு, சீரகம், சேர்த்து சமைத்து அடிக்கடி சாப்பிட்டு வந்தால் மூலம் குணமாகும்.
6) முருங்கைக்காய் நசுக்கி சாறெடுத்து அதில் சம அளவு தேன் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டால் சளி நீங்கும்.
7) இஞ்சி சாற்றை கொதிக்க வைத்து அதே அளவு தேன் ஊற்றி ஆற வைத்து தினசரி உணவுக்குப் பின் சாப்பிட்டு வந்தால் பருத்த உடல் குறையும்.
8) சுக்கு, ஆவாரம் பட்டையும் சம அளவு எடுத்து சிறிதளவு நீர் விட்டு காய்ச்சி ஆற வைத்து சாப்பிட்டால் கை, கால் வலி குணமாகும்.
9) ஏலக்காயைப் போடி செய்து தினமும் காலை, மாலை நெய் கலந்து சாப்பிட்டு வந்தால் சளி விரைவில் நீங்கும்.
10) பசும்பால், சிறிதளவு ஓமம் போட்டு காய்ச்சி அடிக்கடி காலையில் குடித்து வந்தால் தொண்டை வலி, தொண்டை அடைத்தல் நீங்கும்.



# மருத்துவக் குறிப்புகள்

**1. கண் எரிச்சல் தீர:**

நந்தியா வட்டம் செடியில் பூத்த பூவைக் கொண்டு ஒத்தடம் கொடுத்தால் கண் எரிச்சல் தீரும்.

**2. ரத்தக்கொதிப்பு குணமாக:**

நெருஞ்சியை நன்கு நீரில் கொதிக்கவிட்டு அந்தச்சாற்றை எடுத்து அருந்தி வந்தால் ரத்தக் கொதிப்பு குணமாகும்.

**3. தொண்டைக் கட்டு நீங்க:**

சுக்கை எடுத்து வாயில் இட்டு, மெல்ல உமிழ்நீரில் ஊறவைத்து அந்நீரைக்குடித்து வந்தால் தொண்டைக்கட்டு நீங்கும்.

**4. சுளுக்கு வலி தீர:**

புளிய இலையை நன்கு சுடுநீரில் இட்டு, அவித்து அதைச் சூட்டோடு சூட்டாக சுளுக்கு உள்ள இடத்தில் ஒத்தடம் தந்தால் சுளுக்கு வலி குணமாகும்.

**5. நரம்பு பலம் பெற:**

சேப்பங்கிழங்கை சாப்பிட்டு வர நரம்புகள் பலப்படும்.

**6. வயிற்றுப்புண் தீர:**

வாழைப்பூவை வாரம் 1 நாள் கூட்டு செய்து சாப்பிட்டு வர வயிற்றுப்புண் குணமாகும்.

**7. வயிற்றுவலி குணமாக:**

அகத்திக்கீரையை நன்கு வேக வைத்துத் தேன் கலந்து சாப்பிட வயிற்றுவலி தீரும்.

**8. இடுப்புவலி தீர :**

வெள்ளைப் பூண்டுடன் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர இடுப்புவலி குணமாகும்.

**9. உடல் பருமன் குறைய:**


பொன்னாவரைக் கீரை விதையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும்.

**10. முடி நன்கு வளர:**

காரட், எலுமிச்சைப் பழச்சாறு கலந்து தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலையில் தேய்த்துவர முடி நான்கு வளரும். வாழைக்குறுத்தைப் பிரித்துச் சுட்ட தீப்புண் மீது கட்டினால் தீப்புண் கொப்பளங்கள் குணமாகும்.



# கலங்கரைத் தீபத்துக்கான ஆக்கங்கள்





கலங்கரைத் தீபம் இதழ் - 01 சஞ்சிகை தொடர்பான விமர்சனங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம் அத்துடன் இச் சஞ்சிகை தொடர்ச்சியாக 04 மாதத்திற்கு ஒரு தடவை (வருடத்திற்கு 03 சஞ்சிகைகள்) வெளியாகும் என்பதால் தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

எமது கலங்கரைத் தீபத்தின் இதழ் இரண்டு, டிசம்பர் மாதத்தின் கடைசிப் பகுதியில் வெளியாகும். இச் சஞ்சிகை உருவாக்கத்தின் நோக்கம் சிறந்த எழுத்தாளர் களுக்கான களம் அமைத்துக்கொடுப்பதும், அதற்கூடாக பல்வேறு விடயங்களையும் ஆவணப் படுத்தி அதனை எதிர்காலச் சந்ததியினருக்கு கொண்டு செல்வதாகும்.

# தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

1. கவிதை
2. கட்டுரை
3. சிறுகதை
4. ஆய்வுரைகள்
5. நெடுந்தீவு தொடர்பான வரலாற்று ஆவணப்படுத்தல்கள் போன்ற
   பல்வேறு ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்காலம்

**நெடுந்தீவைச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி அனைவரது ஆக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்**




**அனுப்ப வேண்டிய முகவரி**

**திரு.கு.ஜனேந்திரன்**
இணைப்பாளர் - நூலாசிரியர்
நண்பர்கள் வட்டம்
நெடுந்தீவு

தொலை பேசி இலக்கம் - 0094 - 771816052
E-Mail Address - delftfriendsgroup@gmail.com

# நன்றி



வெளியீடு
நெடுந்தீவு நண்பர்கள் வட்டம்

தொலை பேசி இலக்கம் - 0094 - 771816052
E-Mail Address - delftfriendsgroup@gmail.com